2

பொதிகை

பொதிகை

மலர் இரண்டு

மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல்வழித் தமிழ்த் துறையின் சார்பில் நடைபெற்ற 'பொருள் இலக்கணக் கருத்தரங்கு'களில் படிக்கப் பெற்ற ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு.

தலைமைப் பதிப்பாசிரியர் :

இராம. பெரியகருப்பன்

இணைப் பதிப்பாசிரியர் :

ச. சாம்பசிவன்

தமிழ்த்துறை

அஞ்சல்வழித் தொடர் கல்வித் துறை

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பல்கலைநகர், மதுரை-625 021.

மதுரை காமராசர் பல்கலைக் கழக

அஞ்சல்வழித் தொடர்கல்வித் தமிழ்த்துறை வெளியீடு : 2

முதற் பதிப்பு : மார்ச்சு 1980

© தொகுப்பு உரிமை பதிவு

விலை ரூ. 14-00

கட்டுரைகளிற் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் கட்டுரையாளர்களுடையன. அவை பதிப்பாசிரியர்களையோ, தமிழ்த் துறையினையோ, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தையோ சாரா.

Title	:	'Pothikai' —2nd Volume.
Editors	:	Dr. Rm. Periakaruppan and S. Sambasivan, M. A.,
Language	:	Tamil
Contents	:	Essays on 'Porul Ilakkanam'.
Call Number	:	P 31, D x 1, 14x.
First Edition	:	March 1980
Number of Copies	:	1000
Pages	:	282
Size	:	21½ × 14 c. m.
Letters used	:	10 pt.
Paper used	:	White Printing Paper : 15 kg.
Binding	:	Card Board
Copy right	:	With the authors
Printed at	:	Konar Printers, Madurai–1.
Published by	:	Department of Tamil, I. C. C. & C. E., Madurai Kamaraj University, Madurai–625 021.

அச்சு : கோனூர் பிரிண்டர்ஸ், மதுரை-1. தொலைபேசி : 25154

அணிந்துரை

துணைவேந்தர் அறிஞர் வ.சுப. மாணிக்கம்

ஆய்வு என்பது மனிதப் பிறப்புக்கேயுரிய ஓர் அறிவுச் செய்கை. இச்செய்கை இயல்பாகவே எல்லா மாந்தரிடத்தும் காணப்படும். இதனைத் தக்க சூழ்நிலையமைத்தும் உரங் கொடுத்தும் வளர்ப்பது கல்வி நிலையங்களின் கடமை. கல்வி நிலையங்களுள்ளும் பல்கலைக்கழகமே இவ்வாய்வுத் துறையில் பல புதுக் கோள்களைக் காணமுடியும். பல்கலைக் கழகம் உயர்ந்த கலை பலவற்றைக் கற்பிப்பதோடன்றி, கலைக் கூர்மைகளைக் காட்டவல்ல பல்லாய்வுக் கழகமாகவும் இலங்க வேண்டும்.

இதனை மனத்துட்கொண்ட மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் அஞ்சல்வழிக் கல்வித்துறையினர் ஆய்வுமணம் பொதிந்த பொதிகை மலர்களை வெளியிட்டு வருகின்றனர். பண்டையிலக்கியம், தொல்காப்பியம் போன்ற பழமலர்கள் இப் பொதிகையில் என்றும் வாடா மலர்களாகப் பூத்து ஆய்வு மகரந்தப் பொலிவு பெற்றுள்ளன.

பல்வேறு மையங்களைப் பாடஞ் சொல்லும் மையங்களாகவே விட்டுவிடாமல் அரங்கு மையங்களாகவும் பயன்படுத்திக் கொள்ளும் புலமை சான்ற எம் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை மாந்தர்களைப் போற்றுவல்.

'பொதியிலாயினும் ஒடுக்கங்கூறார்' என்ற இளங்கோவடிகளின் பொய்யாமொழி தொடர்ந்து வரும் இப் பொதிகை மலர்களால் இன்றும் தொய்யாமொழி யாகின்றதன்றோ?

6-3-'80 வ. சுப. மாணிக்கம்

பொதிகைப் பாயிரம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் அஞ்சல்வழித் தமிழ்த் துறையாசிரியர்கள், தம் மாணவர்களுக்காகக் கீழ்க்கண்ட ஐந்து மையங்களிலும் படித்தளித்த பொருளிலக்கணக் கருத்தரங்கக் கட்டுரைகள் இதன்கண் உள. ஐந்து தமிழ்ப் பேராசிரியர்களின் தலைமையில், இவ்யாண்டு கீழ்க்கண்டவாறு கருத்தரங்கு நடைபெற்றது:

திருச்சி	23-2-1980	அறிஞர்	கு. திருமேனி
நெல்லை	1-3-1980	அறிஞர்	வி.மி. ஞானப்பிரகாசம் அடிகளார்
சென்னை	9-3-1980	அறிஞர்	சி. பாலசுப்பிரமணியன்
கோவை	15-3-1980	அறிஞர்	ம.ரா. போ. குருசாமி
மதுரை	23-3-1980	அறிஞர்	முத்துச் சண்முகனார்

மதுரை மையத்தில் இப்பொதிகை இரண்டாம் மலர் வெளியிடப் பெற்றது. சென்ற ஆண்டு திருச்சிமையத்தில் பொதிகை மலரை வெளியிட்டு, அஞ்சல்வழித் தமிழ் முதுகலைத் தேர்வில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்ற முதல் மூவர்க்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்வாண்டு முதன்மையாகத் தேர்ச்சி பெற்றவர்களில் கீழ்க்கண்ட முதற் பதின்மருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன:

திருவாளர்கள் எம். செயபாலன் (பரமனந்தல்); சி.அப்பாகுட்டி (புதூர்); எஸ். சந்தனவடிவு (விருதுநகர்); எஸ். செல்லத்துரை (திருமூர்த்திநகர்); சி. இராசு(திண்டுக்கல்); கே.ஜே. உஷாராணி (டெல்லி); எஸ். சுலோசனா (பெரியகுளம்); எம். இரத்தினம் (தும்மல்பட்டி); டி. இராமச்சந்திரன் (எரக்குடி); ஜி. இராசாராம் (விசுவநாதப்பேரி)

இதன்கண் இடம்பெற்றுள்ளவை இலக்கணத்தொடர்பானவை. அஞ்சல்வழி மாணவர்களின் பாடத்திட்டத்தையும் மனத்துட் கொண்டு எழுதப்பட்டவை. அதே சமயம் பொது ஆய்வு நோக்கில், அனைவருக்கும் பயன்படுமாறு, சில ஆய்வு முறைகளையொட்டி இவை எழுதப்பட்டவை. இவை அரங்கிலே படிக்கப்பெற்ற காலத்தில் மாணவர்கள் காட்டிய ஆர்வம் போற்றுதற்குரியது. இவை எழுத்துருவம் பெற்றதால் கருத்தரங்குகளுக்கு வர இயலாது போனவர்களுக்கும் பயன்படுவனவாயின. மேலும் ஒருசில கால இடைவெளிக்குப் பிறகும், இப் பொதிகையைக் கண்ணுறுங்கால் எம் மாணாக்கர்க்கும் எமக்குமிருந்த அறிவாராய்ச்சித் தொடர்பு நினைவு கூரப்படுமன்றோ? அது கருதியே எம் மாணவர்களனைவரும் இப் 'பொதிகை'யைப் பொருள் கொடுத்து வாங்கிப் பொன்போற் பொதிந்து போற்றுகின்றனர்.

'கருத்தரங்கில் அளிக்கப்படும் கருத்துக்கள் காற்றில் போய்விடக் கூடாது ; நூலாக்கம் பெறவேண்டும்' என்று அறிஞர் மு. வ. அடிக்கடி வற்புறுத்துவார். அதற்கிசைய இப் பொதிகை உருவாக உதவி வருகின்ற பல்கலைக் கழகத்தார்க்கு யாம் நன்றியுடையோம். இப் பொருளிலக்கணக் கருத்தரங்கப் பொதிகைக்கு அணிந்துரை தந்துதவிய துணை வேந்தர் அறிஞர் வ. சுப. மா.விற்குக் கடப்பாடுடையேம்.

கருத்தரங்குகளுக்குத் தலைமைதாங்கிச் சிறப்பித்த பேராசிரியப் பெருமக்களுக்கும், இக்கருத்தரங்குகள் சிறப்புற நடைபெற உற்றுழியெல்லாம் உதவிகள் புரிந்து உறுதுணையாயிருந்த கூடுதல் நெறியாளர் திரு. கு. வெற்றிவேல் அவர்களுக்கும் எம் நன்றி உரியதாகும். உரிய நாளில் வெளியிடுதற்கு விரைந்து அச்சிட்டுத் தந்த கோனூர் அச்சக உரிமையாளர் திரு. சீ. சடகோபன் அவர்களுக்கு எம் நன்றியைக் கூற விழைகின்றோம். இந்நூல் உருவாகுங்கால் உடனிருந்து பல்லாற்றானும் உதவிய திரு. மா. வண்ணமுத்து, டாக்டர் இரா. மோகன் ஆகிய இருவரின் ஒத்துழைப்பு இவண் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும்.

எம்மிடம் தமிழ் பயின்று தமிழார்வமும் பற்றும் கொண்டு செல்லும் மாணாக்கர்கள் அனைவருக்கும் இப் பொதிகை மலர் சிறப்புத் தருவதாக அமையும். எழிலார்ந்த பொருள் இலக்கணத்தின் எண்ணிறந்த சிறப்பியல்புகளில் ஒரு சிலவற்றை எண்ணிப்பார்க்க இடந்தரும் இக் கருத்துரைகளைக் கற்று, அறிவு வளர்ச்சியும் பட்டச் சிறப்பும் பதவியுயர்வும் இன்னோரன்ன பிற சிறப்புக்களும் பெற்று, எம் மாணாக்கரனைவரும் பெருமை பெற அருமை மிகும் தமிழ்த்தாயின் தண்ணருள் பாலிப்பதாகுக.

23-3-'80
மதுரை-21.

இராம. பெரியகருப்பன்,
ச. சாம்பசிவன்

உள்ளுறை

பக்கம்

துணைவேந்தர் அணிந்துரை ... 3

பொதிகைப் பாயிரம் ... 5

உள்ளுறை ... 7

ஆய்வுரை வழங்கியோர்—ஓர் அறிமுகம் ... 9

1. தொல்காப்பியம் உணர்த்தும் இலக்கிய வகைமைப் பண்புகள் ... 17
— 'தமிழண்ணல்' இராம. பெரியகருப்பன்

2. தொல்காப்பியப் பொருளதிகார உரைப் போக்கில் சில வேறுபாடுகள் ... 29
— தே. ஆண்டியப்பன்

3. பொருளதிகாரமும் கலித்தொகையும் ... 37
— மீனாட்சி முருகரத்தனம்

4. 'சொல்லா மரபும் செய்யா மரபும்' ... 43
— ச. சாம்பசிவன்

5. பாடாண்திணை : தொல்காப்பியம் — புறப்பொருள் வெண்பாமாலை ஓர் ஒப்பீடு ... 59
— ந. சொக்கலிங்கம்

6. தொல்காப்பியர் கூறும் தலைவி ... 73
— ப.பா. இராசேந்திரன்

7. தொல்காப்பியம் - நம்பி அகப்பொருள், களவு-கற்பு கூற்றுவகை, துறை ஒப்பீடு : தலைவன் கூற்று ... 87
— இரா. காசிராசன்

8. புறப்பொருளில் தெய்வத்துறைகளும் சில விளக்கங்களும் ... 107
— சோதிபாய் தேவதாஸ்

9. கைக்கிளை - மரபு மாற்றமும் வளர்ச்சியும் ... 129
— ந. சாந்தா ஆப்தே

10. அகப்பொருளில் பிரிவுகளுக்கும் கூற்றுகளுக்குமுள்ள இயைபு ... 143
— அ. விநாயக மூர்த்தி

11. காஞ்சித் திணை—ஓர் ஆய்வு ... 149
— பிலமினு மேரி

12. இறைச்சி எனும் இலக்கிய உத்தி ... 157
— துரை. சீனிச்சாமி

13. அகமும் புறமும் — ஓர் ஒப்பீடு ... 169
— கதிர். மகாதேவன்

14. தொல்காப்பியர் காட்டும் அகத்திணைக் கற்பனை மரபுகள் ... 179
— மா. வண்ணமுத்து

15. வரைவும் வரைவு நிமித்தமும் ... 189
— மு. பாலகிருஷ்ணன்

16. தொல்காப்பியர் குறிப்பிடும் அகத்திணைத் துணைமாந்தர்கள் ... 203
— விசயலக்குமி நவநீதகிருட்டிணன்

17. நெஞ்சொடு கிளத்தல் ... 225
— இரா. மோகன்

தலைமையுரைகள்

1. திணை இலக்கிய உணர்வுகள் ... 245
— அறிஞர் கு. திருமேனி

2. தொல்காப்பியரும் வீரமாமுனிவரும் ... 251
— அறிஞர் வி.மி. ஞானப்பிரகாச அடிகளார்

3. தொல்காப்பியப் பொருளதிகாரம் முதல் 5 இயல்கள் —ஓர் ஆய்வு ... 257
— அறிஞர் சி. பாலசுப்பிரமணியன்

4. பழம்பணியும் புதுப் பணியும் ... 271
— அறிஞர் ம.ரா. போ. குருசாமி

5. தொல்காப்பியப் பொருளதிகாரம் ... 277
— அறிஞர் முத்துச்சண்முகனார்

ஆசிரியர் பெயர் அகர நிரல் 281

ஆய்வுரை வழங்கியோர் - ஓர் அறிமுகம்

குறிப்பு விளக்கம்

(அ) பெயர் (ஆ) பிறந்த நாளும் ஊரும் (இ) கல்வித் தகுதி-கள் (ஈ) சிறப்புத் தகுதிகள் (உ) பணி (ஊ) நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் முதலியன.

1. (அ) இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்). (ஆ) 12-8-1928; நெற்குப்பை (இராமநாதபுர மாவட்டம்) (இ) தமிழ் வித்துவான்; பொருளியல் பி.ஏ., எம். ஏ., பிஎச். டி. 'சங்க இலக்கிய மரபுகள்' பற்றிய ஆராய்ச்சிக்காகப் பட்டம் அளிக்கப் பெற்றது. ஈ) 'மீனுட்சி' பற்றிய 101 அடிகளாலாய கவிதைக்குத் தமிழக அரசு — அறநிலையத் துறையினரின்சார்பான பொற்கிழிப் பரிசு. உ) உயர்பள்ளி — 13 ஆண்டு; கல்லூரி — 10 ஆண்டு; பல்கலைக் கழகம் — 8 ஆண்டு. ஆக 31 ஆண்டுகள்; (ஊ) சங்க இலக்கிய ஒப்பீடு, ஆய்வியல் அறிமுகம், வாழ்வரசி முதலான பல நூல்கள்.

2. (அ) தே. ஆண்டியப்ப பிள்ளை (ஆ) 13-4-1934; நாகர்கோயில் (இ) வேதியல் பி. எஸ்சி., எம். ஏ., பிஎச்.டி. (ஈ) 1974-75-இல் அமெரிக்க நாட்டுப் பிலடெல்பியா பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைப் பேராசிரியர். (உ) உயர் பள்ளி — 3 ஆண்டு: கல்லூரி — 6½ ஆண்டு; பல்கலைக் கழகம்— 9 ஆண்டு. ஆக 18½ ஆண்டுகள். (ஊ) குறள்கண்ட நாடும் வீடும், காப்பியர் நெறி, கவிமணியின் கவிதைத் தேர், கங்கைக் கரையில் முதலான 9 நூல்கள்; இறைச்சி, குறிப்பு வினை, கூத்தர் தமிழ் முதலான கட்டுரைகள்.

3. (அ) திருமதி மீனுட்சி முருகரத்தனம். (ஆ) 1-11-1945;, கண்டனூர் (இராமநாதபுர மாவட்டம்) (இ) எம். ஏ., பிஎச்.டி., 'கல்கியின் சிறுகதைகள்' ஆய்வுக்காகப் பட்டம் அளிக்கப்-பட்டது. 'மொழியியல்' சான்றிதழ் (ஈ) (உ) கல்லூரி — 2 ஆண்டு; பல்கலைக்கழகம் — 8 ஆண்டு. ஆக 10 ஆண்டுகள். (ஊ) 'கல்கியின் சிறுகதைக்கலை' என்ற நூல். கதைகளின் பிடியிற் கவிஞர், துறை எனல் முறையா, சிறுகதையில் நீ முதலான 13 கட்டுரைகள்.

4. (அ) ச. சாம்பசிவன் (ஆ) 29-9-1929; வள்ளல் நதி (மதுரை மாவட்டம்) (இ) பண்டிதம், வித்துவான், பண்டிதப் பயிற்சி, முதுகலை. ('நாவலர் சோமசுந்தர பாரதியாரின் தமிழிலக்கியப் பணிகள்' குறித்து 'டாக்டர்' பட்டத்திற்கான ஆய்வுமேற் கொள்ளல்.) (ஈ) மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ் முதுகலையில் முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்றுப் பல்கலைக் கழக முதற் பரிசு (University award) பெற்றது; மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் பல்லாண்டுகளாகச் செயலராக இருந்து தொண்டாற்றியதற்குத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்களால் பொன்னுடை போர்த்திச் சிறப்பிக்கப் பெற்றது; 'நாவலர் ச. சோ. பாரதியார் கல்வி அறப்பணிக்குழு' முதலான அமைப்புக்களைத் தோற்றுவித்தது. (உ) உயர்பள்ளி - 9 ஆண்டு; கல்லூரி - 10 ஆண்டு; பல்கலைக் கழகம் - 4 ஆண்டு. ஆக 23 ஆண்டுகள். (ஊ) தமிழ் இலக்கியத்தில் நெய்தல் திணை, மாநகர் மதுரை, கல்வெட்டுக் கருவூலம் முதலான 30க்கு மேற்பட்ட நூல்கள்; 'சிவனூர் உரை' நூல்கள்; 100 க்கு மேற்பட்ட கட்டுரைகள்.

5. (அ) ந. சொக்கலிங்கம் (ஆ) 3. 3, 1942; மீனாட்சிபுரம்(நெல்லை). (இ) முதுகலை; காந்தியச் சிந்தனையில் டிப்ளமா. ('வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளின் இலக்கியக் கோட்பாடுகள்' பற்றி ஆய்வு மேற்கொள்ளல்.) (ஈ) நெல்லைத் தனித்தமிழ் இலக்கியக் கழகம், சென்னை மாணவர் மன்றம் ஆகியவற்றின் கட்டுரைப் போட்டிகளில் தங்கம், வெள்ளிப் பதக்கங்கள் பெற்றமை; அழகப்பர் கலைக் கல்லூரிக்கு இரு சுழற் கோப்பைகளை வெற்றி பெற்று அளித்தமை. (உ) கல்லூரி - 8 ஆண்டு; பல்கலைக் கழகம் - 3 ஆண்டு. ஆக 11 ஆண்டுகள் (ஊ) 'பாரதிதாசன் பாடல்களில் மரபும் புதுமையும்' நூல். 'தமிழ்ப்பொழில்', 'செந்தமிழ்ச் செல்வி' முதலான திங்களிதழ்களில் கட்டுரைகள்.

6. (அ) ப. பா. இராசேந்திரன் (ஆ) 15.4.1934; மதுரை (இ) முதுகலை, ('திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இலக்கியக் கோட்பாடுகள் பற்றி ஆய்வு மேற்கொள்ளல்.) (ஈ) (உ) கல்லூரி-4 ஆண்டு; பல்கலைக் கழகம் - 8 ஆண்டு. ஆக 12 ஆண்டுகள். (ஊ) அ. இ. ப. கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கு மலரிலும், 'பொதிகை'யிலும் கட்டுரைகள்.

7. (அ) இரா. காசிராசன் (ஆ) 30-5-1946; மீனாட்சிபுரம் (இராமநாதபுர மாவட்டம்). (இ) எம்.ஏ., பிஎச்.டி. 'தமிழ்க்காப்பிய

வளர்ச்சியும் மதிப்பீடும், பற்றிய ஆய்வுக்காகப் பட்டம் "மொழியியல்', 'மலையாளம்' இவற்றில் சான்றிதழ். (ஈ) (உ) கல்லூரி-1 ஆண்டு; பல்கலைக்கழகம் — 3 ஆண்டு. ஆக 4 ஆண்டுகள். ஊ) சிலப்பதிகார ஆய்வடங்கல், காப்பியத் தமிழ், உலகக் காப்பியங்கள் எனும் 3நூல்கள். 30க்கும் மேற்பட்ட கட்டுரைகள்.

8. (அ) (திருமதி) சோதிபாய் தேவதாஸ். (ஆ) 26-7-1942: மதுரை (இ) எம்.ஏ. ('சங்கப் புறப்பாடல்களின் திணை துறை அமைப்புப் பற்றி' 'டாக்டர்' பட்டத்திற்கு ஆய்வு மேற் கொள்ளல்) (ஈ) (உ) கல்லூரி — 5 ஆண்டு; பல்கலைக் கழகம் - 8 ஆண்டு. ஆக 13 ஆண்டுகள். (ஊ) 'கடைப் பால் தரும் சுவை', 'சிலம்பில் புறத்திணைக் கூறுகள்' முதலான ஆய்வுக் கட்டுரைகள்.

9. (அ) (திருமதி) ந. சாந்தா ஆப்தே. (ஆ) 27–3–1938; மதுரை. (இ) எம். ஏ., பி.டி., 'மொழியியல்' 'காந்தியச்சிந்தனை' இவற்றில் சான்றிதழ், ('தமிழ்ச் சிறுகதைகளில் காந்தியத்தாக்கம்' பற்றி டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு மேற்கொள்ளல்) (ஈ) (உ) உயர் பள்ளி 9½ ஆண்டு; கல்லூரி-2ஆண்டு;பல்கலைக் கழகம் 8–ஆண்டு ஆக 19½ ஆண்டுகள். (ஊ) 'காந்திவழி 'ஓர் அறிமுகம்'; 'கம்பர் படைப்பில் மாரீசன்' 'செயங் கொண்டார் படைத்த பேயுலகம்' முதலான ஆய்வுக் கட்டுரைகள்.

10. (அ) அ.விநாயகமூர்த்தி. (ஆ) 15. 11. 1935; காட்பாடி. (இ) வித்துவான்; எம்.ஏ., எம்.,ஃபில். (ஈ) வித்துவான் தேர்வில் தங்கப் பதக்கம் பெற்றமை. (உ) உயர்பள்ளி -11 ஆண்டு; பல்கலைக்கழகம்–8 ஆண்டு ஆக 19 ஆண்டுகள். (ஊ) சைவ-இலக்கியக் கோவை, மதுரை வீரன் அம்மானை, மூலபாட ஆய்வியல் முதலான5நூல்கள்; 'குமரகுருபரன்','ஞானசம்பந்தம்' 'புலமை' முதலான இதழ்களில் கட்டுரைகள்.

11. (அ) (திருமதி) பிலமினுமேரி(ஆ).1933; திருச்சி.(இ)எம்.ஓ,எல். ('வீரமாமுனி அடிகளாரின் நூல்கள்' பற்றி டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு) (ஈ) (உ)கல்லுரி—5 ஆண்டு; பல்கலைக் கழகம் 9 ஆண்டு,ஆக 14 ஆண்டுகள்.(ஊ)'காஞ்சித்திணை-ஓர் ஆய்வு', 'நெய்தற்கலி முதலும் கருவும்' எனும் கட்டுரைகள்.

12. (அ) துரை. சீனிச்சாமி (ஆ)15- 6- 1944; சிந்தாமணி(நெல்லை மாவட்டம்) (இ) எம்.ஏ., பி எச். டி., 'மொழியியல்' சான்றிதழ். ('கம்பராமாயணத்தில் இயற்கை' என்ற பொருளில் பிஎச்.டி.

பட்டம்) (ஈ) (உ)கல்லூரி-1 ஆண்டு; பல்கலைக்கழகம் 5-ஆண்டு. ஆக 6 ஆண்டுகள் (ஊ) அந்தி, இலக்கியத்தில் இயற்கை எனும் 2 நூல்கள்; பல இதழ்களில் புதுக்கவிதைகள், ஆய்வுக் கட்டுரைகள் சில.

13 (அ) கதிர். மகாதேவன். (ஆ) 15.9.1936; கடலூர் (தெ.ஆ மாவட்டம்) (இ)எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி. ('பழந்தமிழர். வீர-நிலைக்காலப் பண்பாடு' பற்றிய ஆய்வுக்காகப்பட்டம்)(ஈ) தகுதி நிலை-மேஜர். மதுரைப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறைப்பதிப்-பாளர்.(உ)கல்லூரி 8ஆண்டு; பல்கலைக் கழகம்-3ஆண்டு. ஆக21-ஆண்டுகள்.(ஊ)'ஒப்பிலக்கிய நோக்கில் சங்ககாலம்,''பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' (மொ.)எனும் 2நூல்கள். பல ஆய்வுக்-கட்டுரைகள்.

14. (அ) மா. வண்ணமுத்து (ஆ) 22.2.1944; கம்பம் (மதுரை மாவட்டம்) (இ) எம்.ஏ., ('சங்க இலக்கியத்தில் ஆசிரியப்பா' என்ற பொருளில் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு) (ஈ) (உ) உயர்பள்ளி — 1 ஆண்டு; கல்லூரி — $1\frac{1}{2}$ ஆண்டு; பல்கலைக்-கழகம் —$3\frac{1}{2}$ ஆண்டு. ஆக 6 ஆண்டு. (ஊ) 'அம்மூவனுர் பாடல்களில் ஓர் ஆய்வு' என்ற நூல்; பல கட்டுரைகள்.

15. (அ)மு. பாலகிருஷ்ணன்(ஆ)7-4-1934; வேலூர்(வ.ஆ.மாவட்டம்) (இ) எம். ஏ., ('தமிழ்க்காப்பியங்களில் சமணம்' பற்றி டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு மேற்கொள்ளல்) (ஈ) (உ) கல்லூரி $3\frac{1}{2}$, பல்கலைக் கழகம் 10-ஆண்டுகள் (ஊ) 'சதுரகராதி-ஓர் ஆய்வு' 'திவாகரம்- ஓர் ஆய்வு' முதலான கட்டுரைகள்.

16. (அ) (திருமதி)விசயலக்குமி நவநீதகிருட்டிணன்.(ஆ) 20.6.1946. இராசபாளையம். (இ) எம்.ஏ., காலிகட் பல்கலைக்கழகத்தில் நாடகப் பயிற்சிச் சான்றிதழ் ('ஆழ்வார் பாடல்களில் அகம்' பற்றி டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு) (ஈ) 'இளங்கலை'யில் மாநில முதன்மைக்கு ஜி.யு. போப் 'மெடல்' பெற்றது; அனைத்-துப் பல்கலைக்கழக ஆசிரியர் நாடகப் போட்டியில் முதற் பரிசு; மதுரை வட்ட மகளிர் ரங்கோலிப் போட்டியில் முதற் பரிசு. (உ) கல்லூரி—10 ஆண்டு; பல்கலைக்கழகம் 3-ஆண்டு. ஆக 13 ஆண்டுகள். (ஊ) 'சாரல்', 'மலரத் தவித்த மொட்டு' என்ற 2 நூல்கள்; 18 ஆய்வுக் கட்டுரைகள்.

17. (அ) இரா. மோகன். ஆ) 22.4.1950; மதுரை. (இ) எம்.ஏ., பிஎச்.டி., 'மொழியியல்', 'மலையாளம்' இவற்றில் நிறை சான்றிதழ். ('கு.ப. ராஜகோபாலன் சிறுகதைகள்' என்ற பொருளில் பிஎச்.டி., பட்டம்) (ஈ) (உ) கல்லூரி — 4 திங்கள்; பல்கலைக் கழகம்-3½ ஆண்டு. ஆக 4 ஆண்டுகள். (ஊ) டாக்டர் மு.வ. வின் நாவல்கள், யான் கண்ட மு.வ., கு.ப.ரா. சிறுகதைகள், புனைகதைத் திறன் முதலான 1, 2 நூல்கள்; 10க்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள்.

கருத்தரங்கத் தலைவர்கள் - ஓர் அறிமுகம்

1. (அ) கு. திருமேனி (ஆ) 1925; தென்னிலக்குடி (தஞ்சை மாவட்டம்) (இ) புலவர்; பி. ஓ. எல்., எம். ஏ., பிஎச். டி. (ஈ) பல்கலைக் கழகங்களில் விரிவுச் சொற்பொழிவுகள், கருத்தரங்கத் தலைமையுரைகள், வானொலிக்கு நாடகங்கள், (உ) உயர்பள்ளி— 2 ஆண்டு; அண்ணாமலைப் பல்கலைக்கழகம் — 1ஆண்டு; கல்லூரி- 26 ஆண்டு. ஆக 29 ஆண்டுகள். (ஊ) நாடகச் சிலம்பு, கோ-வூர்கிழார், தூயசிந்தையாள் முதலான 11 நூல்கள்; பல ஆய்வுக் கட்டுரைகள்.

2. (அ) வி. மி. ஞானப்பிரகாசம் (ஆ) 9.12.1922; இராசகெம்பீரம் (இ) எம். ஏ., பிஎச். டி., 'மொழியியல்' சான்றிதழ். (ஈ) கோலாலம்பூரிலும், பாரிசிலும் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டுக் கருத்தரங்குகளிற் பங்கு கொண்டமை. (உ) சென்னை இலயோலாக் கல்லூரியில் பேராசிரியர்; கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரியில் முதல்வர்; பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி முதுகலைப் பேராசிரியர். (ஊ) வீரமா முனிவரின் திருக்குறள் மொழிபெயர்ப்பின் தமிழாக்கம், வீரமா முனிவரின் வாழ்க்கை வரலாறு எனும் நூல்கள்: 'இதோ தமிழ் நூல்கள்' பதிப்பு; பல இதழ்களில் பல கட்டுரைகள்.

3. (அ) சி. பாலசுப்பிரமணியன் (ஆ) 1935; செஞ்சி (தெ. ஆ. மாவட்டம்) (இ) எம். ஏ., எம். லிட்., பிஎச்.டி., (ஈ) தமிழக முன்னுள் ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்களின் தமிழாசிரியர்; 'புலவரேறு', 'செஞ்சொற்புலவர்', 'சங்க நூற் செல்வர்' எனும் பட்டங்கள்; தமிழ்ப்பண்பாட்டு மன்றத்தின் துணைத்தலைவர்; தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச்சங்க இயக்குநர்; தமிழக அரசின் தமிழ் ஆராய்ச்சிக்குழு. தமிழகப் புலவர் குழு முதலான பல

அமைப்புக்களில் உறுப்பினர். (உ) சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்—தமிழ்த் துறைத்தலைவர். (ஊ) தமிழ் இலக்கிய வரலாறு, உருவும் திருவும், பெருந்தகை மு. வ. முதலான 10 நூல்கள்; கட்டுரைகள் ஏறத்தாழ ஒருநூறு.

4. (அ) ம. ரா. போத்திலிங்க குருசாமி. (ஆ) 15—6—1922; மமுசாபுரம் (இராமநாதபுரமாவட்டம்) (இ) எம்.ஏ., எம். லிட்., பிஎச். டி., (ஈ) 'சக்தி' காரியாலயத்தில் நூல்பதிப்பாசிரியர்; 'தமிழ்முரசு' துணையாசிரியர். (உ) பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியிலும், அரசினர் கல்லூரிகளிலும் பணி; கோவை பூ. சா. கோ. கலை அறிவியற் கல்லூரியில் நிறைகலைப் பேராசிரியர் — தமிழ்த் துறைத் தலைவர். (ஊ) சிலப்பதிகாரச் செய்தி, சிலம்புவழிச் சிந்தனை, சங்ககாலம், சங்ககாலத்திற்கு முன், மு.வ. முப்பால் எனும் நூல்கள்; பல ஆராய்ச்சிக் கட்டுரைகள்.

5) (அ) மு. சண்முகம்பிள்ளை. (ஆ) 4 - 1 - 1920; புரவசேரி (குமரி மாவட்டம்) (இ) பி. எஸ்சி., எம். ஏ; எம். லிட்; பிஎச். டி, கன்னடத்தில் நிறை சான்றிதழ். ராக்பெல்லர் நிறுவனத்தில் 'மொழியியல்' ஆய்வு; இதாகா (நியூயார்க்) கார்னெல் பல்கலைக் கழகத்திலும், பெர்க்லி கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்திலும், ஆய்வு, எம். ஃ பில்; பிஎச். டி., மாணவர்கள் பலரை உருவாக்கியமை (ஈ) அமெரிக்க ராக்பெல்லர் நிறுவனத்தின் உறுப்பினர்; பல்கலைக்கழக மானியக்குழுவின் தேசிய விரிவுரையாளர் எனப்பல. (உ)அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளர், மொழியியல் இணைப்பேராசிரியர், மொழியியல் துறைத்தலைவர்; ஒகியோ, பிலடெல்பியா முதலான வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும்; மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழியல்துறைத்தலைவர். ஊ) இக்காலத்தமிழ், தமிழிலக்கியக் கோட்பாடுகள் முதலான பலநூல்கள்; 100க்குமேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள்.

அடக்கப் பாயிரம்

குழந்தை மண்ணைக் குவித்து மகிழும் ;
இழைத்த மண்ணில் இல்லமுங் காணும் ;
பழமைக் குப்பை பயன்படா வெனினும்
கிழமை யென்னுங் கேண்மை விடுமோ?
என்றே தொடுத்த இத்தமி ழரும்புகள்
பொன்றுத லின்றிப் புகழு மின்றி
ஒன்றுதல் படூஉம் ஊழைப் பெற்றன ;
அடுக்கிக் கொடுத்தால் அச்சுப் பொறிக்கு
மறித்துத் தள்ளும் மானமும் உண்டுகொல்?
தொன்மைப் பொருள்கள் சொல்விலை போகும்
நன்மையும் வணிக நடப்பில் உண்டே ;
புரட்சி வீசும் புதிய பறவையும்
திரட்சிக் கூட்டில் சேர்ந்தன காண்க ;
ஊனக் குழந்தை ஒன்று பிறந்தால்
ஏனக் குழவியென் றெறியாள் தாயவள் ;
என்னைப் பெற்ற என்தமி ழன்னை
என்னிற் பிறந்த இதனைத்
தன்னிற் பேரரெனத் தழுவுவள் பெரிதே.

— வ. சுப. மா.வின்
'மாமலர்களி'லிருந்து

1

தொல்காப்பியம் உணர்த்தும் இலக்கிய வகைமைப் பண்புகள்

'தமிழண்ணல்' இராம. பெரியகருப்பன்

தமிழ்மொழியில் தோன்றுதொட்டு இலக்கியவுழவு நடைபெற்று வருகிறது. தொல்காப்பியருக்கு முன்னரே பல இலக்கிய வித்துக்கள் பண்பட்ட தமிழ்நிலத்திற் பயிராக்கப்பட்டன. அவ்விலக்கியப் பயிர் முளைதோன்றி வளர்ந்த காலந்தொட்டு, 'நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்த்த' (நற். 172) பெருமை தொல்காப்பியருக்கு உண்டு

மகளிர் விளையாடுங் காலத்தில் போட்டுவிட்டு மறந்துபோன புன்னைவிதை, முளையாகித் தலைநீட்டிப் பார்த்தது. அதனிடம் அன்பு பூண்ட தலைவி தனக்குத் தாய்தந்த தேன்நெய் பெய்த இனிய பாலையே அதற்கும் நீராக வார்த்து வளர்த்தாள். இவ்வாறு இனிமை யோடும் ஊட்டத்தோடுங் கூடித் தன்னைவளர்த்த பெண்ணோடு போட்டிபோட்டுக்கொண்டு அப்புன்னையும் வளர்ந்தது.

> "விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
> மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
> நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப"

என்ற அந் நற்றிணைச் செய்தி, தொல்காப்பியம் இலக்கிய வகைகளுக்குத் திட்டமும் வரன்முறையும் தந்து வளர்த்தமைக்கும் பொருந்தும். இசையுடன் ஆடிப்பாடும் கலைஞரும் புலவரும் போட்ட வாய்மொழி, வரிவடிவ வகைமை வித்துக்கள் முளைவிட்டுத் தலை-நீட்டிய காலம் அது. அப்போது தம் அறிவுடைமையாகிய தீம்பாலை-யும் தமிழின் இனிமையாகிய தேனெய்யையும் ஊற்றி அவ்விலக்கியப் பயிரை வளர்த்துத் தழைக்கச் செய்த சிறப்புத் தொல்காப்பியருடைய தாகும்.

தொல்காப்பியர் காலத்திலேயே பல்வேறு இலக்கியவடிவங்கள் உருப்பெறத் தொடங்கிவிட்டன. அவற்றை நன்கறிந்து ஒரு திறனுய்வாளனின் மனநிலையோடும் படைப்பாளியின் அனுபவ உணர்வோடும் தொல்காப்பியர் அவற்றிற்கு உடலும் உயிரும் கொடுத்துள்ளார். புனையா ஓவியங்கட்கு அவர் கண்கவர் வண்ணம் தீட்டியுள்ளார். தமிழ்த்தாய் கோயிலில் காலத்தால் அழியாத சிற்பங்களைக் கலை நுணுக்கத்தோடு திருச்சுற்றுகளில் திகழ்ந்திடச் செய்துள்ளார்.

காப்பியமும் நாடகமும்

அவர் அரிஸ்டாடிலைப்போல நாடகம்பற்றிக் குறிப்பிடவில்லை. காப்பியம் பற்றியும் பேசவில்லை. அதற்கு அவர் காரணமாகார். அவர்காலத் தமிழ் இலக்கியநிலையே அவர் எழுத்துக்களிற் பொலிகிறது. கிரேக்கநாட்டிற்போல இங்கு, துன்பியல் நாடகங்கள் முழுமை பெற வளர்ச்சிபெறவில்லை. அரிஸ்டாடில் தன்னுணர்ச்சிப் பாக்கள்பற்றி விரிவாகப் பேசவில்லை. காப்பியங்கள் பற்றியும் உய்த்துணர, விளக்கவுரை கூறவே இடந்தருகிருர். அவர் சிறப்பாக நாடகங்களுக்குக் கூறியவற்றிலிருந்தே நாம் பொதுவான இலக்கியப் பண்புகள் பலவுங்குறித்து, அவர் என்னென்ன கருதினுர் என அனுமானம் செய்கிரேம். தமிழில் அகம், புறம் என்ற இலக்கிய வகைகளே பெருவளர்ச்சி கண்டன. அகத்திலும் அகநாடகம், அகக்காப்பியம், அகத்தன்னுணர்ச்சிப்பாவுண்டு; புறத்திலும் புற நாடகம், புறக்காப்பியம், புறத்தன்னுணர்ச்சிப்பாவுண்டு.

புலன் என்றதொரு வனப்பு நாடகப்பாங்கினை நினைவூட்டவில்லையா? பண்ணத்தி என்பது அதனேடு தொடர்புடைய பாடல்களை உணர்த்தவில்லையா? "நாடக வழக்கினும்..." என்று அவரே குறிப்பிடவில்லையா? 'உறுப்புடையதுபோல் உணர்வுடையது போல் மறுத்துரைப்பதுபோல் நெஞ்சொடு புணர்த்துப்' பேசுவது மிகச் சிறந்த நாடகமரபாகும். 'சொல்லா மரபின் அவற்ருெடு கெழீஇச் செய்யா மரபின் தொழிற்படுத்தடக்குவது' நாடகப் பாங்கேயாம். ஏன்? அவர் கூறும் கூற்றுமுறையனைத்தும் ஒரு முழுநாடகத்தின் உறுப்புக்களனையவைதானே? அவற்றுட் பல ஓருறுப்பு நாடகமாதற்குரியன. தமிழில் நாடகவியல்புடைய இலக்கியப்பகுதி மேலோங்கியதால், தனிநாடகம் மேலோங்கவில்லை. அதற்காக மக்கள் நாடகமே அறியார் எனல் தவறு. கூத்து நிகழிடங்கள், அரங்கம், திரை, ஒப்பனை, உரையாடல், அவையினர், நாடக நடிகர், பாட்டு, பின்னணி வாத்தியம், காட்சி மாறுதல் பற்றியெல்லாம் அகத்திலும் புறத்திலும் குறிப்புக்கள் இடம்பெறுகின்றன. தொல்காப்பியர்

தொன்மை, தோல், விருந்து எனக் குறிப்பிடும் பொழுதும் இயைபு பற்றிப் பேசும் பொழுதும் காப்பியப் பண்புகள் பற்றியே அவர் நினைவு ஓடுவதாக நாம் உய்த்துணர்கிறோம். ஆனாலும் தண்டி-யாசிரியர் போல அவர் காப்பிய இலக்கணத்தைத் தனியே தந்தி-லர். உலக இலக்கியங்கள் தனித்தனி இயல்புடையன. தமிழிலக்கி-யம் அகம் புறம் என்ற நீர்மையுடையது. நாடகமாயினும் காப்பிய-மாயினும் புராணமாயினும் இதிகாசமாயினும் அவை அனைத்தும் இவ்வகப்புறங்களுள் ஒடுங்கி ஒன்றிவிடுகின்றன.

பகுப்பும் பண்பும்

தொல்காப்பியர் கூற்று வகைகளையும் துறைத் தொகைகளையும் ஒருபடித்தாகப் பட்டியலிடவில்லை. சிலவற்றை விரித்தும், சிலவற்-றிற்குத் தனி நூற்பாக் கொடுத்தும், மற்றும் சிலவற்றை அழுத்தம் பெறச் சுட்டியும் செல்கிறார். இவ்வாறு அவை தனிக் கிளையாக வளர உதவுகிறார்.

ஆற்றுப்படைத் துறைவிளக்கத்திலும் அஃதோர் துறை விளக்க-மாக மட்டும் அமையாமல், தனிவகை விளக்கம் போலவே அமையக் காண்கிறோம். ஆற்றுப்படை ஆற்றுப்படுத்தப்படும் மாந்தர் பெய-ராலேயே அமைகிறது. அதில் முன்னர்ப் பரிசு பெற்று வருபவர் சிறப்பும் பரிசில் பெற நாடுபவர் வறுமையும் முரண்சுவையுற நிலை நிறுத்திக் காட்டப்படுகின்றன. அதனையே ஆற்றுப்படையின் உயி-ரோட்டம் எனலாம். பெற்ற பெருவளம் யாது என விளக்கிக் கூறுதல் அடுத்த பகுதியாகும். அங்ஙனம் நல்கும் தலைமகன் யாரெனவும், அவன் ஆற்றலும் ஈகையும் எத்தகைய எனவும். அவன் எங்குள்ளான் எனவும் கூறி ஆண்டுச் சென்று பயனடையச் சொல்லுதல் அதன் குறிக்கோட் பகுதியாகும். ஒவ்வொரு நூலுக்கும் மேலை நாட்டார் கருத்துப்படி அடிக்கருத்தும் தலைமைக் கருத்துக்-களும் (Theme and Motif) என இரண்டு அடிப்படைகள் உண்டு. ஆற்றுப்படை பற்றிய துறைவிளக்கத்தில் தொல்காப்பியர் ஆற்றுப் படைத் தொடர்பான தலைமைக் கருத்துக்களையெல்லாம் கூறிவிடு கிறார் எனலாம். ஏனெனில் ஒவ்வோராற்றுப்படையிலும் அதில் இடம் பெறும்.

மாந்தர் அறிமுகம் (கூத்தரோ பாணரோ அல்லது பிறரோ)
ஆற்றிடைக் காணுதல்
பெற்றவர் வளம்
பெறுதவர் வறுமை

தலைமகன் சிறப்பு
தலைமகன் இடம்
சென்று பயனடையக் கூறுதல்
வழிவகைகளை அறிவுறுத்தல்

என்ற இத்தகைய தலைமைக் கருத்துக்கள் — ஆற்றுப் படுத்து-தலாகிய அடிக்கருத்திற்குத் (Theme) துணைமையாக அமைதல் வேண்டும். ஒரு துறை விளக்கம் — ஒரு நூற்பாப் பகுதியில் அமைந்து — ஓர் இலக்கியவகை விளக்கமாக நிலைபெற்று விடுகிறது.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" (நூற்பா. 1037)

அவர் காலத்திலேயே ஆற்றுப்படைத்துறை நன்கு வளர்ச்சி பெற்றுப் பல புலவர்களால் விரும்பிப் பாடப் பெற்றிருக்க வேண்டும். மக்களும் பிற பாடல்களைவிட, ஆற்றுப்படையைக் கேட்டுச் சுவைத்திருக்கவேண்டும். புலவர்களும் ஒரு மன்னனைப் பற்றிப் பிற துறைகளிற் பாடுவதைவிட, ஆற்றுப்படை வடிவிற் பாடினால் மிகு-தியான கருத்துக்களை அழுத்தம் பெறக் கூற முடிகிறது என எண்ணி யிருக்க வேண்டும். மன்னர்களை மட்டுமன்றி, அம் மன்னராட்சிக்-குட்பட்ட மக்களை, சமுதாயத்தைக் காட்ட இப் பாடல்களில் இட மிருப்பதைப் புலவர்களின் உள்ளுணர்வு போற்றியிருக்க வேண்டும். அம்மன்னர்களேகூடத் தம்மைப் பிறபல துறைகளிற் பாடுவதினும் நாடகத்திறனும் காப்பியவுத்தியும் பொருந்த ஆற்றுப்படைத் துறை-யிற் பாடுவதை விழைந்திருக்கவேண்டும். இன்னோரன்ன காரணங்-களை நன்குணர்ந்த தொல்காப்பியர், அத்துறைக்கு ஒரு வகைமைக்-கான உட்பகுப்பையே தந்து இலக்கணம் வடித்துள்ளார்.

'அறத்தொடுநிலை' ஆற்றுப்படையளவு வளர்ச்சிபெறு விட்-டாலும் அகத்துறைகளில் குறிப்பிடத்தக்கதாகவுளது. 'குறிஞ்சிப் பாட்டு' அத் துறைக்கு ஓர் இலக்கியவகையாகும் சிறப்பிடத்தை நல்கவே முந்துகிறது. இதற்கான தொல்காப்பிய நூற்பாப் பகுதிகளை ஒப்பிட்டு நோக்கும் பொழுது அதனியல்பு எவ்வாறமையவேண்டும் எனக் கூறுவது புலனாகிறது.

'முன்னிலை அறன்எனப் படுதல்என்று இருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்' (நூற்பா 1060)

'அறத்தொடு நிற்கும் காலத் தன்றி
அறத்தியல் மரபிலள் தோழி என்ப' (1152)

'எளித்தல், ஏத்தல், வேட்கை யுரைத்தல்,
கூறுத லுசாஅதல், ஏதீடு, தலைப்பாடு,
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
அவ்வெழு வகைய என்மனுர் புலவர்' (1153)

'உற்றுழி யல்லது சொல்லல் இன்மையின்
அப்பொருள் வேட்கைக் கிளவியின் உணர்ப' (1154)

'செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான' (1155)

அறத்தொடுநிலையில் தோழிதான் முழுக்கமுழுக்கச் சிறப்பிடம் பெறுகிருள். நனிநாகரிகத்தின் உச்சியை நாம் இத்துறைப் பாடல்களில் காண்கிருேம். தோழி தாயிடம் அறத்தொடுநிற்பாள்; அவள் பேச்சுப் புரைதீர் கிளவியாகும். 'புரைதீர்ந்த நன்மை' என்ற குறட்கருத்தை இங்கு ஒப்பு நோக்குக. தோழி இங்கு படைத்து மொழிதலும் உண்டு; உண்மை செப்பலுமுண்டு. எங்ஙனமாயினும் 'ஆயிரம் பொய்சொல்லி ஒரு கலியாணத்தை முடிக்கலாம்' என்ற பழமொழி இவ்வாறு தோன்றுகிறது போலும்! தோழி காலங்கனியும் போதுதான் அறத்தொடுநிற்பாள். தலைவியிடம் அவள் வேட்கைக் கிளவிகளை வரவழைத்து, உய்த்துணர்வாளே தவிர அவளுடைய பெண்மைக்கு ஊறுபட நடக்கமாட்டாள். எளித்தல், ஏத்தல் முதலியன தோழி தன் நாவன்மைத்திறம்படப் பேசும் கூற்றில் இடம் பெறுவன. இது ஒருவகையில் பொருட்பாகுபாட்டையும் சுட்டுகிறது. குறிஞ்சிப்பாட்டுரையில் இனியர் ''எளித்தல் ... புலவர் என்னும் சூத்திரத்து ஏழனுள், கூறுதலுசாதல் ஒழிந்து ஆறுங்கூறி அறத்தொடுநிற்கின்ருள் என்றுணர்க'', எனக் கூறுவதுடன் அவை இடம்பெறும் பகுதிகளையும் தம் உரைப்போக்கில் குறிப்பிட்டுச் செல்கிருர். ''செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும் பெண்பாலான'' என்னுமிடத்துப் பெண்மைக்கே இலக்கணம் வகுப்பதுபோல் பேசுகிருர் ஆசிரியர். தோழி அறத்தொடு நிற்கும் கருத்து அவ்வளவு பதமானது; மிக நாகரிமாகக் கூறவேண்டியது; சிறிது பிறழ்ந்தாலும் பெண்மைச்சிறப்புக்குக் குறையேற்படுத்தக் கூடியது. எனவே அவள் எவ்வாறு பேச வேண்டும், எங்ஙனம் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் தலைவி எவ்வாறு நடந்து கொள்ளுதல் வேண்டும் என்பதையும் பெண்பாற்கெல்லாம் பொதுவாகவைத்து இங்கு ஆசிரியர் வரையறைப்படுத்துகிருர். இலக்கியம் போற்றும் பண்பு நலனையும் இலக்கியத்தில் இடம்பெறும் மாந்தரின் பண்பு

நலனையும் இவ்வாறு வரையறைப் படுத்துகிருர். குறிஞ்சிப் பாட்டினைக் கற்பார் இவற்றை நன்குணர்வர்.

'நெஞ்சொடு கிளத்தலா'கிய துறை பலநெறிப்படக் கிளைத்து அக இலக்கியத்தில் வளர்ச்சிபெற்றுள்ளது.

தலைவன் தலைவியின் காமவுணர்வை — இன்ப துன்பத்தை அஃது எடுத்துக்காட்டுகிறது. தோழி கூற்ருகவோ, தாய் கூற்ருகவோ நெஞ்சொடு கிளத்தல் இடம் பெறுவதில்லை. மெய்ப்பாடு எட்டும் பொருந்த, நெஞ்சினை உறுப்பும் உணர்வுமுடையது போல் தலைவன், தலைவியர் விளித்துப் பேசும் மரபு சிந்தித்தற்குரியதாகும்.

"நோயும் இன்பமும் இருவகை நிலையிற்
காமங் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும் ..." (1142)

அஃறிணைப் பொருள்களை விளித்துப் பேசுவதும் இதனேடு ஒத்ததேயாம். அவையும் தம்மைப் போல் துன்பங்கட்கு ஆட்பட்டு வருந்துவதாகவும், அவற்றிற்கும் அறிவும் புலன் உணர்வுகளும் இருப்பதாகவும் கொண்டு—தம்மைப் போலவே அவற்றை உவமவாயிற் படுத்தி — உயர்திணைப்பெயரும் அஃறிணைப் பெயரும் உடையனவாகக் காட்டிச் செயலாலும் பண்பாலும் பயனுலும் ஒரு தன்மையுடையனவாய்ப் புனைந்து செல்வது ஒருபாற்கிளவியாகும். இவையனைத்தையும் ஒப்பு நோக்குபவர் தூது இலக்கிய அடிப்படை மரபுகள் - பண்புகள் - இதன்கண் மிளிர்வதை எளிதிலுணர்வர். இங்ஙனம் இலக்கிய வகைமைக்கான பண்பு நலன் ஓங்கத் தொல்காப்பியர் கூற்று, துறை விளக்கங்களைக் கூறிச் சென்றமையால், பிற்கால ஆசிரியர்கள் காட்டிய ஆர்வம் மிக்க தமிழிலக்கிய வளர்ச்சிக்கு அது தூண்டுகோலாயிற்று.

மக்களின் பங்கு

இலக்கியவகை வளர்ச்சியில் படைக்கும் புலவர்களைவிடப் படைப்பைச் சுவைக்கும் மக்களின் பண்பு முக்கியமானதெனத் தொல்காப்பியர் கருதுகின்ருர். அவர்களையும் உள்ளிட்டு, "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின், நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும் யாப்பு" (1336) என்ற அவர் கூற்ருல் இஃதுறுதிப்படும்.

மேலும் மக்கள் இலக்கியமாகிய கதை (உரை), பிசி, முதுசொல், பண்ணத்தி, புலன் போன்றவற்றை அவர் இலக்கிய வகைமைப்படுத்துவதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

வாய்திறந்து பாடும் பாட்டும் வாயால் உரைக்கப்பட்ட கதையும் இரண்டும் இரண்டு அடிப்படை இலக்கிய வகைகள் ஆகும். பாட்டை அடிவரையறையுடையதெனவும் பிற ஆறு யாப்புக்களையும் அடிவரையறையில்லாதன எனவும் அவர் கூறுவது சிந்தனைக்குரியது.

வாய்மொழி இலக்கியத்திலிருந்து வகைமை கிளைத்தது என்பதை, ஓரளவு எழுவகை யாப்புப் பற்றிய நூற்பாக்கள் நமக்கு உணர்த்தவே செய்கின்றன. 'குறித்த பொருளை முடிய நாட்டுவது' வகைமையில் முக்கியம். யாப்பு என்பது தொல்காப்பியர் கருத்துப்படி செய்யுளாகாமல், யாக்கப்படும் வகைமையாகின்றது.

பிரிவும் உட்பிரிவும்

ஒரு வகைமை சார்ந்த இலக்கியத்தில் ''ஒரு குடும்பம் பற்றிய தோற்றம், சாயல், பண்பு ஒப்புமைகள் போன்ற'' ஒற்றுமைகள் காணப்படும் என்று கூறுவர். ஒன்றிலிருந்து இரண்டாகப் பலவாகக் கிளைப்பதையும் தொல்காப்பியப் போக்கில் ஆங்காங்கு உய்த்துணர முடிகிறது. தொல்காப்பியர் வாகைத் திணையைத் துறைப்படுத்து முன் 'ஆங்கெழு வகையின் தொகைநிலை பெற்றது' எனத் தொகைப்படுத்துவார் (1021). பாடாண்திணையை அவர் பல உட்பகுப்புக்களாக்க முயலுகின்றார்.

'வழங்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்
முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின் றாங்கே'

'காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்'

'குழவி மருங்கினும் கிழவதாகும்'

'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' (1028–31)

இனைய நூற்பாக்கள் மேல்நோக்கி வளரும் வகைமைத் தோற்றத்தைக் காட்டுகின்றன எனப் பலரும் பலவாறு ஆய்ந்து மதிப்பீடு செய்கின்றனர். அவர்கள் முடிந்த முடிவுக்கு வந்திலரெனினும் தொல்காப்பியரின் வகைமை நோக்கு நன்கு புலனாகிறதன்றோ?

முருகியல் உத்திகள்

இலக்கியவகைகள் மேன்மேலும் நுட்பமாய், சிறப்பாய் வளர்கின்றன. படைப்போனுக்குத் தெரிந்தனவும் வாசகர்கள் அறிந்தனவுமான முன்னைய முருகியலுத்திகளின் தொகுதியே ஒருவகையாக உருப்பெற்று ஓர் இலக்கியவகையாக வளர்கிறது. தொல்காப்பியர் வனப்புப்பற்றி விளக்கும் பொழுது இம் மனநிலையுடன் தம் கருத்துக்களைக் கூறிச் செல்லக் காணலாம். வனப்புக்கள் எட்டும் மொழி நடை, சொல்லாட்சி, தொடைநலன், அடியளவு, பொருள்விழுப்பம், பழைமை போற்றல், புதுமை புகுத்துதல், சீர்பெறப் புனைதல் என்றினைய பண்புகளைக் கொண்டுள்ளன. இலக்கியவகையாதற்கு வேண்டும் தகுதிப்பாடாக நாம் இவற்றைக் கருதலாம்.

அடிவரையறை — எண்ணிக்கை

தமிழ் இலக்கியவகை வளர்ச்சியில் அடிவரையறைக்கும் பாஎண்ணிக்கைக்கும் நிறைய இடமுண்டு. தொல்காப்பியர் பாக்களுக்குச் சிற்றெல்லை வரம்பும் பேரெல்லைவரம்பும் விதிக்கிறார், முற்கூறியாங்கு யாப்புக்களை அடிவரையறை உடையன; இல்லன என இரண்டாகப் பிரிக்கிறார். வனப்பில் அடி நிமிர்வின்மை, அடிநிமிர்ந்தொழுகல், குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்தல் போன்றவற்றுக்கு இடமளிக்கிறார். ஆனால் எண்ணிக்கை பற்றி அவர் யாண்டும் பேசவில்லை. நாற்பது, நானூறு, பத்து, முப்பது என்றெல்லாம் எண்ணிக்கையுடன் கூட்டித் தமிழ் நூல்கள் பேசப்படும். தொல்காப்பியர் இவைபற்றிச் சிறுகுறிப்பும் தரவில்லை.

பாட்டும் பொருளும் பற்றிய வகைமை

இன்னதற்கு இன்னபா அமையவேண்டும் என்ற விதியைச் சிலவிடங்களில் அவர் வற்புறுத்துகிறார். புறநிலை வாழ்த்து கலிவகையும் வஞ்சியும் பெறாது; பிறவற்றால் வருமென்பார் (1367). "கைக்கிளை தானே வெண்பாவாகி, ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே" (1376) என்பது அவர் கூற்று. அங்கதம், கைக்கிளை, வாழ்த்துவகை பற்றிய குறியீடுகள் அவர் பொருள் அடிப்படையில் இலக்கிய வகைப்படுத்துவதை விளக்கும். 'யாப்பினும் பொருளினும்' என (1406) வடிவம், பொருள் பற்றிய வேறுபாட்டை நன்குணர்ந்து, அதனடிப்படையில் இலக்கிய வகைமைக்கு வளர்ச்சிப் போக்கமைத்த பெருமை அவர்க்கு உண்டு.

கூர்தலறக் கோட்பாடு

ஒப்பீட்டறிஞர் கூர்தலறக் கோட்பாட்டின்வழி இலக்கியவகை

வளர்ச்சியை ஆராய்ந்தனர். பருப்பொருட்களின் பரிணும வளர்ச்சிக்கொப்பவே நுண்பொருட்களின் கூர்தலற வளர்ச்சியும் அமைவதாக அவர்கள் எண்ணினர். தமிழில் தொல்காப்பியர் குறிப்பிடும் பல கூற்றுவகை, துறைவகைகள் தாம் பிற்காலத்தே பற்பல இலக்கிய வகைகளாகப் பல்கியுள்ளன. தொல்காப்பியர் கூறிய 'துயிலெடைநிலை' பின்பு திருப்பள்ளி எழுச்சியாயிற்று. அவர் கூறிய மடல் பிற்காலத்தே வளமடல், உலாமடல், பெரிய திருமடல், சிறிய திரு மடல் என்று பலவாருக வளர்ந்தது. அவர் குறித்த களவழி பரணியிலக்கியவளர்ச்சிக்குதவியது. அவர் குறிப்பிட்ட மகட்பாற்காஞ்சி மறம் எனக் கலம்பக உறுப்பாகவும் தனிநூலாகவும் வளர்ந்தது. அவர் கூறும் குடை, செங்கோல், வேல், வாள் பற்றிய துறைகள் தனித்தனி விருந்தவகைகளாகவும் தசாங்கமாகவும் வளர வழிகோலின.

96 வகை என்ற பட்டியலில் காணப்படும் பல நூல்கள் தொல்காப்பிய வழிப்பட்டனவே. அகப்பொருட் கோவை, அரசன் விருத்தம், ஆற்றுப்படை, இயன்மொழி வாழ்த்து, உலா, உழிஞைமாலை, ஊர்நேரிசை, குடைநிலை, கண்படைநிலை, கலம்பகம், காஞ்சி மாலை, காப்புமாலை, கைக்கிளை, கையறுநிலை, சின்னப்பூ, செருக்களவஞ்சி, செவியறிவுறூஉ, தசாங்கத்தயல், தசாங்கப்பத்து, தானை மாலை, தும்பைமாலை, துயிலெடைநிலை, தூது, நொச்சிமாலை, பரணி, பவனிக்காதல், பிள்ளைக்கவி, புறநிலை, பெயர்நேரிசை, பெருமங்கலம், போர்க்கெழுவஞ்சி, முதுகாஞ்சி, மெய்க்கீர்த்திமாலை, வாகைமாலை, வாயுறை வாழ்த்து, விருத்தம், விளக்குநிலை, வீரவெட்சிமாலை, வெற்றிக்கரந்தை மஞ்சரி என்றாற் போல்வன அனைத்தையும் அவற்றின் இலக்கணத்துடன் அவை உருப்பெற்றுள்ள திறத்தையும் நுட்பமாய்க் கண்டு ஆராய்ந்தால் தொல்காப்பியத்திலிருந்து அவை கூர்தலற முறையில் கிளைத்து வளர்ந்து வந்துள்ளமை புலனுகும்.

தொல்காப்பியர் பொருளதிகாரம் என ஓரியல் வகுத்தது வெறும் இலக்கிய ஆய்வாக மட்டுமல்லாமல் இலக்கியவகை ஆய்வாகவும் வளர இடங்கொடுத்திருக்கிறது. இலக்கியத்தைச் சமுதாயப் பின்னணி, உலக வழக்கு, வாய்மொழிச் செல்வாக்கு, இயல்பான வளர்ச்சி இவற்றினடிப்படையில் அவர் அணுகிச் சிந்தித்து எழுதுவதால் கூர்தலற முறையின்படி இலக்கியம் வளர்ந்தோங்க அவர் கூற்றுக்கள் பெரிதும் உதவியுள்ளன.

பிற்கால வகைமைவளர்ச்சி

இடைக்காலத்தும் பிற்காலத்தும் ஏற்பட்ட வகைமைகளின் வளர்ச்சியில் தொல்காப்பியர் குறிப்பிட்டபடியான பண்புநலன்கள்,

முருகியலுத்திகள் பின்பற்றப்படவில்லை. தொல்காப்பியர் சொன்ன வகைமைகளைப் பெயரளவில் தொட்டுக் கொண்டார்களே தவிர, அவர் இவ்வகைமைகளை எவ்வாறமைய வேண்டும் என உய்த்துணர்ந்து செயற்படவில்லை. அதனால் இவ்விலக்கிய வளர்ச்சியில் ஏற்ற இறக்கத்தை மிகுதியாகக் காணமுடிகிறது.

தொல்காப்பியம் உணர்த்தும் இலக்கிய வகைமைப் பண்புகளில் தலைமையானவற்றை மட்டும் இக் கட்டுரையில் கண்டோம்.

1) தொல்காப்பியர் தமிழ் இலக்கிய வகைகளை வலுவோடும் பொலிவோடும் வளருமாறு தம் வகை தொகைகளையும் விளக்கத்தையும் அளித்துள்ளார்.

2) காப்பியம், நாடகம் பற்றி அவர் வகைமை நோக்கில் வரையவில்லை. தமிழில் அகப்புற வளர்ச்சியே அடிப்படையானது. அகமும் புறமும் நாடகமாய்க் காப்பியமாய்த் தனிநிலைப் பாடலாய் வளர்ந்தன.

3) 'ஆற்றுப்படை' இலக்கணத்தின் மூலம் அடிப்படைக் கருத்தும், தலைமைக் கருத்துக்களும் கூடி ஓர் இலக்கியவகை உருவாகிறதென அறியமுடிகிறது.

4) 'அறத்தொடுநிலை' இலக்கணத்தின் மூலம் இடம்பெறும் மாந்தர் திறன், அவர் பண்புநலன், பேச்சுவன்மை போல்வன ஒரு வகைமையின் பண்புகளாய் — பொருட்சிறப்பாய் அமைகின்றன என உய்த்துணர்கிறோம்.

5) நெஞ்சொடு கிளத்தல், அஃறிணைகளை உவமவாயிற் படுத்தல் இரண்டும் தூது பற்றிய வளர்ச்சிக்கு அடிப்படைகள். ஓர் இலக்கியவகை எவ்வெத் திறன்களுடன் — கற்பனை நயத்துடன் உருவாக்கப்பட வேண்டும் என்பதை அவை சுட்டுகின்றன.

6) மக்களின் பங்கு - சமுதாய ஒத்துணர்வு ஓர் இலக்கிய வகையானது வளர்ச்சி பெற உதவும் முக்கியமான கூறு எனலாம். மக்கள் சுவைக்கேற்பவே வகை வளர்கிறது.

7) மக்கள் இலக்கியமாகிய வாய்மொழி இலக்கியமே இலக்கிய வகை வளர்ச்சிக்கு வித்துக்களைப் பாவுகிறது.

8) வகைமை பிரிவும் உட்பிரிவுமாய் வளர்ந்தோங்கும் என்பதைத் தொல்காப்பியரின் பல்வேறு விளக்கங்கள் மெய்ப்பிக்கின்றன.

9) முருகியல் உத்திகளின் உருவாக்கமே இலக்கிய வகையாகப் பரிணமிக்கிறதென்ற ஒப்பீட்டறிஞர் கூற்றைத் தொல்காப்பியரின் வனப்புப் பற்றிய விளக்கங்கள் மெய்ப்பிக்கின்றன.

10) தமிழ் இலக்கிய வகை வளர்ச்சியில் அடிவரையறைக்கும் பா எண்ணிக்கைக்கும் மிகுந்த இடமுண்டு. இவற்றுள் அடி வரையறை பற்றிக் கூறும் தொல்காப்பியர் பா எண்ணிக்கை பற்றிக் குறிப்பிடவில்லை.

11) வகைமையில் புறவடிவிற்கும் உட்பொருளுக்கும் முக்கிய இடமுண்டு என்பதை அவர் இலக்கணத்தின் போக்கில் காணமுடிகின்றது.

12) தார்வினுடைய கூர்தலறக் கோட்பாட்டு வழிப்படிதான் இலக்கிய வகை வளர்ச்சி அமைகிறது என்பர் ஒப்பீட்டறிஞர். தொல்காப்பிய அடிப்படையில் வளர்ந்துள்ள பல்வேறு வகைகளை ஒப்பிடும்போது இவ்வறிவியற் கோட்பாட்டைத் தமிழில் நிலைநிறுத்த முடியும் என்று தோன்றுகிறது.

13) இன்று 96 வகை என்றும் அதனிலும் பலவென்றும் கூறப்படுவனவற்றுள் மிகுதியானவை தொல்காப்பிய வழிப்பட்டனவே.

14) பிற்காலத்தார் பலர் தொல்காப்பியர் சுட்டிய இலக்கிய வகைகளின் பெயரையும் பொருளையும் எடுத்துக் கொண்டார்களே தவிர, அவ்வகைமைகளின் பண்பு நலன்களாக அவர் சுட்டியவற்றைப் பின்பற்றப் பெரிதும் தவறிவிட்டனர். இதனால் தமிழ் இலக்கிய வகைமை வளர்ச்சியில் ஏற்ற இறக்கங்களை மிகுதியாகக் காண்கிறோம்.

இவற்றைப் போல், இன்னும் நுட்பமாகத் தேடித் தொல்காப்பியரின் இலக்கிய வகைமைத் தொடர்பான சிந்தனைகளைத் தொகுத்துப் புதிய நோக்கில் ஆராய வேண்டும். தமிழ் இலக்கியச் செழுமையையும் வளமையையும் அறியவும் வளர்க்கவும் போற்றிக் காக்கவும் அவ்வாராய்ச்சி பெரிதும் உதவும்.

2

தொல்காப்பியப் பொருளதிகார உரைப்போக்கில் சில வேறுபாடுகள்

தே. ஆண்டியப்பன்

நூலோ நிலையானது; நூலுள் ஊடுருவிக் கிடக்கும் கருத்தும் நிலையானது. ஆனால் உரையெழுதும் போது உரையாசிரியர்கள் வேறுபடுகிறார்கள். காலவேறுபாடும் கருத்துவேறுபாடும் அதற்குக் காரணமாகலாம் என்று விடைகூற முடியும். இருந்தாலும் அக்கருத்து வேறுபாடும் நூலையொட்டி அன்றோ தோன்ற முடியும்; நூற்பாவை ஒட்டியன்றோ நிற்க முடியும். எனவே வேறுபாட்டிற்கு வேறுசில துணைக் காரணங்களும் இருக்க முடியுமா என்று ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இளம்பூரணருக்கு முன்பே வேறு பல உரைகள் இருந்திருக்க வேண்டும். அவ்வுரைகளையும் சிலபோது எடுத்துரைத்து ஏற்பதறிந்து கொள்க என்பார் இளம்பூரணர்.

''நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே''

எனும் நூற்பாவிற்குப் பொருள் கூறும்போது எழுதிணையுள் நடு எனப்பட்ட பாலையொழிய நடுவணதாகி நின்ற ஐந்திணை ஒலிக்-கின்ற திரைகடல் சூழ்ந்த உலகம் பகுக்கப்பட்ட இயல்பு என்-பார் அவர். இச் சூத்திரத்துள் 'ஒழிய' எனும் வினையெச்சம் எவ்வாறு முடிந்தது என்றால் அது 'பாத்திய' எனும் பெயரெச்சத்தோடு பண்பு எனும் பெயர் கொண்டு ஐந்திணை என்னும் எழுவாய்க்குப் பயனிலை-யாகி நின்றது எனவுரைப்ப. இதனை முன்னோர் கருத்தாகவே எடுத்துரைக்கிறார். ''இவ்வாறு உரைக்கவே ஐந்திணை பண்பு என வரூஉம் காலத்துப் பயன்பட நில்லாமையின் அது உரையன்று என்பார் உரைக்குமாறு'' எனப் பிறரது உரையையும் குறிப்பிடுகிறார்.

அவர்கள் ஒழிய என்பதனை எச்சப்படுத்தாது முற்றுப்படக் கூறிப்-'படுதிரை வையம் பாத்திய பண்பு நடுவணதொழிய' எனப் பொருள் உரைப்ப. அவர்தம் உரையை இளம்பூரணர் புறக்கணிக்கவில்லை. ஏற்று மதித்து இலக்கண முறையில் சீர்தூக்கியும் பார்க்கிறார். அஃதேல் வினையெச்ச வாய்பாட்டால் வரும் முற்றுளவோ எனின் வினையெஞ்சு கிளவியும் வேறுபல்குறிய எனும் நூற்பாவைச் சான்று காட்ட முற்படுகிறார். வினையெச்ச வாய்பாட்டால் முற்று வருஉம் என்ற நிலையில் அமைத்துக் கொள்ளப்படும் என்று எழுதிய பிறகு இவ்வுரை இரண்டினும் ஏற்பது அறிந்து கொள்க என்பார். இங்கு ஒரே நூற்பாவிற்கு இருவேறு விளக்கம் ஏற்படக் காரணம் இலக்-கண உணர்வோடு தொடரை ஆராயும் வேறுபாடே ஆகும்.

தொடர்களைப் பிரித்துணர்த்தும் வகையாலும் பொருள் மாற்றம் வருவதுண்டு. களவியல் தலைவியின் கூற்றுநெறி பற்றிய செய்திகளில் ஒருபகுதி பின்வருமாறு அமைகிறது:

"உயிராக் காலத்து உயிர்த்தலும் உயிர்செல
வேற்றுவரைவு வரினது மாற்றுதற் கண்ணும்" (களவி. 109)

இதில் 'உயிர்செல' எனும் சொல்லைப் பிரித்து முதற்பகுதியோடு இணைத்துப் பொருள் கூறுவார் இளம்பூரணர். ஆனால் இனியரோ உயிர்செல வேற்றுவரைவுவரின் என்று பிற்பகுதியோடு பிணைத்துப் பார்க்கிறார். இறந்துபாடு பயக்குமாற்றால் தன்திறத்து நொதுமலர் வரையக் கருதிய ஞான்று அதனை மாற்றுதற்கண்ணும் என்று எழுதிச் செல்வார். இவ்விடத்தில் இனியரின் போக்கே இயல்பாக அமைகிறது. மாறாக இனியர் பிரித்துணர்த்தும் இடங்களும் உண்டு.

"சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்
அல்ல கூற்றுமொழி அவள்வயி னான"

எனும் பகுதியைப் பிரித்து எதிர்சொல் அவள்வயின் மொழிதல் அருமைத்து அல்ல ஆதலின் கூற்றுமொழி ஆன என்று, கொண்டு-கூட்டுவார். நாணும் மடனும் நீங்கிய சொல்லைத் தோழியிடத்துக் கூறுதல் அருமையுடைத்தன்று; ஆகையினாலே குறிப்பான் அன்றிக் கூற்றாற் கூறும் மொழி தலைவிக்குப் பொருந்தின என்பார். இளம்-பூரணரின் உரையோ இவ்விடத்தில் இயல்பாக அமைகிறது. தலைவன் இயற்கைப் புணர்ச்சி கருதிக் கூறும் சொல்லெதிர் தான் வேட்கைக் குறிப்பினளாயினும் அதற்குடம்பட்ட நெறியைக் கூறுதல் அருமை-யுடைத்தாதலான் அதற்கு உடம்பாடல்லாத கூற்றுமொழி தலைவி-யிடத்தன என்றவாறு, என்றது இசைவில்லாதாரைப் போலக்

கூறுதல். இங்ஙனம் தொடரைப் பிரித்துக் காட்டும் போக்கால் பொருள் மாற்றம் இயல்பாகிவிடுகிறது.

பாடபேதங்களும் உரைவேறுபாட்டை நிச்சயம் உருவாக்கும். "இறைச்சி தானே உரிப்புறத் ததுவே" என்று பாடம் கொண்ட இளம்பூரணர் இறைச்சிப் பொருள் என்பது உரிப்பொருளின் புறத்ததாகித் தோன்றும் பொருள் என்பார். நச்சினார்க்கினியர் "இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" என்று பாடம் கொண்டு இறைச்சியாவது உள்ள பொருள் ஒன்றனுள்ளே கொள்வதோர் பொருள் என்று கருதுவார்.

தெளிவின்மையும் உரைவேறுபாட்டிற்குக் காரணமாகும்; சொற்கள், தொடர்கள், நூற்பாக்கள் என்பன தெளிவற்று நிற்கும்போது அனைவரும் வேறுவேறு பொருள் கூறி விடுவர். இறைச்சி என்ற சொல் இக்காலத்திலும் ஆய்வாளருக்கு ஒரு பிரச்சனையே ஆகும். பூரணர், இனியர், பேராசிரியர், சங்க யாப்புடையார், யாப்பருங்கல ஆசிரியர் அனைவரும் வேறுபடுகின்றனர். அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம் போல்வன இன்னும் தெளிவு பெறவில்லை. இட்டுப் பிரிவிரங்கினும் (களவி. 109), புகாக்காலைப் புக்கெதிர்ப் பட்டுழி (கள. 105) என்னும் பகுதிகளை விளக்கும் போது பூரணரும் இனியரும் பொருந்திப் போகவில்லை. இட்டுப் பிரிவு இரங்கினும் என்பது-தலைவன் இட்டு வைத்துப் பிரிவன் என அஞ்சியதற்கு இரக்கமுறினும் என்றவாறு என்பார் பூரணர். சேணிடையின்றி இட்டிதாகப் பிரிந்துழித் தலைவி இரங்கினும் என்பார் இனியர். இட்டு என்பதன் பொருளை இருவரும் விளக்க முற்படவில்லை. இருந்தாலும் இட்டிடை நோக, இட்டுக்கரை கான்யாறு போன்ற வழக்காறுகளை நோக்கும் போது இட்டுப் பிரிவு என்பது சிறு பிரிவே எனலாம்.

'புகாக்காலை' எனும் பகுதியில் இளம்பூரணர் 'புகுதற்குத் தகுதியில்லாக் காலம்' என்பார். இனியரோ 'உண்டிக் காலம்' என்று பொருள் தருவார். "மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே" (அக. 29) என்ற நூற்பாவில் மேலோர் என்பதும் பொருள் வேறுபாட்டிற்கு இடமளிக்கும். 'மேல் அதிகாரப் பட்டு நின்ற வாணிகர்' என்பார் இனியர். 'மேலோராகிய தேவரது முறைமை' என்பார் பூரணர். 'முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை' (அக. 37) என்னும் பகுதியில் "முந்நீர்" என்பதைக் கடலென்று கருதிய நிலையில் கலத்தில் பிரிவு தலைமகளுடன் இல்லையென்பார் பூரணர். ஓதலும் தூதும் பொருளுமாகிய மூன்று நீர்மையால் செல்லும் செலவு

என்பார் இனியர். இவ்வாறு சொற்கள் பலபொருட்கு இடம் தருவதாலும் உரைப்போக்கில் வேறுபாடு தோன்றலாம்.

ஒரு நூற்பாவை வேறுவேறு நூற்பாக்களோடு தொடர்புபடுத்திக் கூறும் போதும் உரைவேறுபட்டுவிடும். ''முன்னைய நான்கும் முன்னதற் கென்ப'' (அகத்.55) என்ற நூற்பாவை ''ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்'' எனும் முந்திய நூற்பாவோடு இணைத்தே பொருள் சொல்ல முனைகிறார் பூரணர். அதனால் ஏறா மடல்திறம், இளமை தீராத் திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகாத்திறம், மிக்க காமத்தின் மாறுகாத்திறம் என்பன முன்னைய நான்கு என்று விளக்குவார். இனியரோ இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னிகழ்ந்த காட்சியும் ஐயமும் தெரிதலும் தேறலும் என்ற குறிப்பு நான்கும் கைக்கிளையாதற்கு உரிய என்பார்; களவியலில் வரும் நூற்பாவோடு இணைத்துப் பேசுவார். இது ''முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே'' (கள. 102) எனக் களவியலுள் கூறும் சிறப்பில்லாக் கைக்கிளை போலன்றிக் காமஞ்சாலா இளமையோள்வயிற் கைக்கிளைபோல் இவையும் சிறந்தன; எனவே எய்தாதது எய்துவித்தது என்பார். இங்ஙனம் தொடர்பு படுத்தும் நூற்பாவின் தாக்கம் மற்றோர் நூற்பாவின் உரைப் போக்கை மாற்றிவிடலாம்.

மரபின் தொடர்பின்மையாலும் பொருள் கொள்ளும் முறை ஆளுக்கு ஆள் வேறுபடலாம். ''அமரர்கண் முடியும் அறுவகையானும்'' எனவரும் பாடாண் பகுதியில் அமரர் என்பதற்குப் போர்க்களத்து மாண்ட வீரர் என்று பொருள் கொள்ளாமல் பிற்காலச் சிந்தனையோடும் வேதமரபோடும் பொருள் கூறத் தொடங்கினர். அறுவகை என்பதிலும் தெளிவில்லை; ஆதலின் அமரர்கண் முடியும் கொடிநிலை கந்தழி வள்ளி புலவராற்றுப்படை புகழ்தல் பரவல் என்பார் பூரணர். இனியரோ அறுமுறை வாழ்த்து என்பார். அவை முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகுமாம் என்பார்.

''ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப'' எனும் பகுதிக்கு விளக்கம் தரும்போது ஊரின்கண் காமப்பகுதி நிகழ்த்தலும் உரித்தென்பார் பூரணர். ஊரில் பொதுமகளிரொடு கூடிவந்த விளக்கமும் பாடாண் திணைக்கு உரித்தென்று கூறுவர் ஆசிரியர் என்பார் இனியர். இவற்றோடு கொடிநிலை கந்தழி வள்ளி என்பனவும் தொடர்பின்மையால் உண்மைப் பொருளைத் தரவில்லை. கொடிநிலை - கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம்;

கந்தழி - ஒரு பற்றுக் கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள்; வள்ளி - தண்கதிர் மண்டிலம் என்பார் இனியர். இளம்பூரணர் தெளிவாகப் பொருளைக் கூறவில்லை. கொடிநிலை முதலாகச் சொல்லப்பட்ட முற்பட்ட மூன்றும் என்பார். இருந்தாலும் அவர் சான்றுகாட்டும் பாடல்களால் கொடியையும் அரண் அழித்தலை-யும் அறிகிறோம். வள்ளியிற் சார்ந்து வருமாறு வந்தவழிக் கண்டு கொள்க என்பார். இங்கும் தமிழ் மரபின் தொடர்பறுந்த காரணத்-தால் இந்நிலை ஏற்பட்டது.

ஒரு நூற்பாவிற்கு வேறுவேறு துறைகளைச் சுட்டிக் காட்டும்-போதும் பொருள் வேறுபடும்.

"முந்நாள் அல்லது துணையின்று கழியாது
அந்நாள் அகத்தும் அதுவரை வின்றே" (களவி. 122)

நச்சினார்க்கினியர் இது தலைவிக்கு எய்தியதோர் இலக்கணம் கூறு-கின்றது என்பார். இளம்பூரணர் பாங்கற் கூட்டத்தின் பகுதியாக நினைத்துப் பொருள் எழுதுவார். மேல் தோழியிற் கூட்டத்தின் விகற்பம் கூறினாராதலின், ஈண்டுத் துணை என்றது பாங்கன் ஆயிற்று எனத் தருக்கநெறியிலும் சிந்திப்பதால் பொருட்போக்கில் மாற்றம் ஏற்படுவதாயிற்று.

பிற்காலச் சிந்தனையோடு நூற்பாவை அணுகும்போதும் பொருள் வேறுபடலாம்.

" மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோற் கில்லை"

இந் நூற்பாவில் ஓரை எனும் சொல்லைக் கண்ட இனியர் தமது சாத்திரப் புலமையோடு விளக்கம் அளிக்க முயல்கிறார். தீய இராசியின் கண்ணும் தீய நாளின்கண்ணும் கூட்டத்தைத் துறந்த ஒழுக்கம், தலைவற்குக் களவொழுக்கத்தின்கண் இல்லை; எனவே கற்பின்கண் உள என்பார். மேலும் விளக்கம் தரும்போது ஒழுக்கமாவது சீலமாதலின் சீலக் காரணத்தால் துறப்பது தீதாகிய இராசியும் நாளும் என்பது பெற்றாம். நாளாவது அவ்விராசி மண்டிலம் முழுவதும் கிழத்தி துறந்த ஒழுக்கம் முந்நாளல்லதென முற்கூறிற்று. இதனால் அன்பு மிகுதி கூறினார். இதற்குப் பிராயச்சித்தம் அந்தணர் முதலிய மூவர்க்கும் உண்மை 'வந்தகுற்றம் வழிகெட ஒழுகலும்' எனக் கற்பியலில் கூறுப என்பார். இங்கு ஓரை எனும் சொல்லால் ஈர்க்கப் பெற்றதும் சாத்திரப்புலமை-யைக் காட்டி வேறோர் நூற்பாவிற்கும் பிராயச்சித்தம் போன்ற

கொள்கையைத் திணிக்க முயல்கிருர். இளம்பூரணர் இப்பகுதிகளில் தமது புலமையைக் காட்டிக் கொள்வதில்லே. சிலபோது தெளிவற்ற பகுதியை மேலும் குழப்ப வேண்டாம் என்றும் கருதியிருக்கலாம். களவொழுக்கத்து முழுத்தமும் நாளும் துறந்து ஒழுகும் ஒழுக்கம் தலேவற்கு இல்லே என்பதோடு நிறுத்திக் கொள்கிருர்.

இனியரின் சிந்தனேப் போக்கும் பல்வேறு இடங்களில் வேதம், சாத்திரம், சாதி, ஒழுக்கம் என்ற முறையில் செல்வதால் நூற்பாவின் உண்மைப் பொருள் மறைக்கப்பட்டு விடுகிறது.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்ற நூற்பா இனியரை எங்கெல்லாமோ அழைத்துச் செல்கிறது. இது வேதத்தில் கரணம் ஒழிய ஆரிடமாகிய கரணம் பிறந்தவாறும் அதற்குக் காரணமும் கூறுகின்றது என்பார். ஆதி ஊழி கழிந்த முறையே அக்காலத்தந்தம் தொடங்கி இரண்டாம் ஊழி முதலாகப் பொய்யும் வழுவும் சிறந்து தோன்றிய பிற்காலத்தே இருடிகள் மேலோர் கரணமும் கீழோர் கரணமும் வேறுபடக் காட்டினர் என்று கூறுவர். ஈண்டு என்ப என்றது முதனூல் ஆசிரியரையன்று. வடநூலோரைக் கருதியது என்பார். இது சாத்திரப் புலமையின் விளேவு. மேலும் தமிழ் இலக்கிய மரபிற்கு வேறு மரபினே ஆதாரமாக்கும் முயற்சி என்றும் கூறலாம். மேலோர், உயர்ந்தோர், ஐயர், ஏஞேர், பார்ப்பார் போன்ற சொற்களும் காரணமாகலாம். இளம்பூரணரும் வணிகர், அந்தணர், அரசர், வேளாளர் எனும் முறையில் சிந்திக்கிருர்.

ஆற்ருெழுக்காகக் கருத்தை ஏந்திவரும் அளவில் நூற்பா அமையாத குறையும், வரிசைபெற அமைத்துக்கொள்ளாத குறையும் உரைகூறுவோர்க்கு இடர்ப்பாட்டைத் தந்திருக்கும். நூற்பாவின் எளிமையும் விளக்கம் பெறஇயலா நிலேயும், புதிதாகக் கூறவேண்டுமே என்ற கட்டாயமும் பொருள் மாற்றத்திற்குக் காரணமாகலாம். 'குழவி மருங்கினும் கிழவ தாகும்' என்ற சிறு நூற்பாவிற்கு எவ்வாறு பொருள் கூறுவது. முந்திய நூற்பாவில் காமப் பகுதி கடவுளும் வரையார் என்பதால் குழவிப் பருவத்தும் காமப்பகுதி உரியதாகும் என்றனர். இந்நூற்பா இடமாறி அமைந்திடின் விளக்கம் பெறுவது எவ்வாறு? நேற்றுத்தானே அயினியும் அயின்ருன்; சிறுவன் இன்று போர் நோக்கிச் செல்கிருனே என்ற கருத்தைப் புறநானூற்றில் பார்க்கிருேமே, அதுவும் பாடாண் ஆகாதோ, அத்தகைய மரபுப் பொருளே ஏன் தரமுடியாது போயிற்று? காமப்பகுதி கடவுளும் வரை-

யார் என்றபோது ஏன் புறநானூற்றுமரபு நினைவிற்கு வரவில்லை? திரண்டு நீடு தடக்கை என்னை இளையோர்க்கு இரண்டு எழுந்தனவால் பகையே; ஒன்றே பூப்போல் உண்கண் பசந்து தோள் நுணுகி நோக்கிய மகளிர்ப் பிணித்தன்று; ஒன்று துறைநீர்க் கைமான் கொள்ளுமோ என உறையுள் முனியும் அவன் செல்லும் ஊரே என்று எழினியை ஔவை பாராட்டும்போது காமப்பகுதியும் வருவதுண்டே. அச்செய்தியை நமக்களிக்காமல் தெய்வம் பற்றிய செய்தியைத் தருவதேன்? பக்தி இயக்கம் போன்ற புதுப்போக்கினால் பழைய மரபுகளை ஊன்றி நோக்கும் கவனம் குறைந்தது என்றே சொல்ல வேண்டும். இக்காலம் ஆய்வுணர்வு வளர்ந்த பின்னும் போதிய விளக்கமற்ற இடங்கள் பலவற்றைக் காண்கிறோம். சங்க இலக்கியத்தையும் தொல்காப்பியத்தையும் மீண்டும் நேருக்கு நேர் வைத்து ஆய்வு செய்ய வேண்டிய தேவை இன்றும் மறையவில்லை. மரபின் வளர்ச்சியென்று இடையில் புகுந்த செய்திகளை நீக்கி மீண்டும் ஆய்வு செய்ய வேண்டும்.

1. இலக்கணப் பார்வை
2. தொடர்களைப் பிரித்துணர்த்தும் பாங்கு
3. பாட பேதங்கள்
4. தெளிவின்மை
5. பலபொருள் தரும் சொற்கள்
6. மரபின் தொடர்பின்மை
7. வேறுவேறு துறைகளோடு இணைத்து நோக்குதல்
8. நூற்பாக்களை வேறுவேறு நூற்பாவோடு தொடர்புபடுத்தல்
9. புலமை, புதிதாகக் கூறும் ஆர்வம்
10. சிந்தனைப் போக்கு

என்பன உரைப்போக்கில் வேறுபாட்டை ஏற்படுத்தினாலும் உரையாசிரியர்கள் விளக்கேற்றி வைத்த இடங்களை மறக்கமுடியாது. இருப்பினும் முழுநிறைவு பெறவும் அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம், இறைச்சி, உள்ளுறை, உடனிலை, சிறப்பு, சுட்டு, மெய்ப்பாடு, கந்தழி, வள்ளி, கொடிநிலை போன்றவற்றைத் தெரிந்து விளக்கவும் உரைப் போக்கில் மேலும் புதுமை ஏற்பட வேண்டும்.

துணை நூல்கள்:

1) தொல்காப்பியம் — இளம்பூரணர் உரை

2) தொல்காப்பியம் — நச்சினார்க்கினியர் உரை

3) தொல்காப்பியர் பொருட்படலப்புத்துரை — ச.சோமசுந்தர பாரதியார்

4) Validity in Interpretation - E. D. Hirsch. Jr.

3

பொருளதிகாரமும் கலித்தொகையும்

மீனாட்சி முருகரத்தினம்

கலித்தொகை, பிற சங்க இலக்கியங்களினின்றும் மாறுபட்டிருப்பது வெள்ளிடை மலை, யாப்பு, சொல்லாட்சி, புராணச் செய்திகளின் அளவு முதலியன மட்டுமல்ல, நுணுகிநோக்கின் உரிப்பொருளிலேயே மாற்றம் உண்டு ஓர் இலக்கியத்தில் திறனாய்விற்குரியன, உள்ளடக்கம், உருவம் என்ற இரண்டும் ஆகும். சொல்லுகின்ற பொருள், அதன் உள்ளடக்கம். சொல்லப்படும் முறை, அதன் உருவம். இந்த இரண்டுமே கலித்தொகையில் தனித்தன்மையுடன் விளங்குகின்றன.

தமிழ் இலக்கியத்தின் பொருள்,வடிவம் ஆகியனபற்றித் தொல்காப்பியம் பேசுகிறது. அகப்பொருட்பாடல்களின் பொதுவிலக்கணம் கூறும் அகத்திணையியல் முதலில் 'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த' எழுதிணையைச் சுட்டுகிறது. நடுவண் ஐந்திணை நடுவணது ஒழிய நான்கு திணைகள் என்கிறது. நடுவண் ஐந்திணைகள் யாவை என்பது சுட்டப்பெறவில்லை. அடுத்துப் பாடலுட் பயின்றவை நாடுங்காலை, முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றும் முறை சிறந்து வருமென்பது உணர்த்தப்படுகிறது. முதல் என்பது நிலம், பொழுது என்ற இரண்டன் இயல்பு என்று அறிகிறோம். அடுத்து, அவ்வத் திணைக்குரிய நிலம் சுட்டுகையில்

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

எனப்படுகிறது. எனவே திணைசுட்டுங்கால் முல்லை, குறிஞ்சி, (நடுவண் திணையான) பாலை, மருதம், நெய்தல் என்ற முறை

தொல்காப்பியத்தில் பின்பற்றப்படுகிறது. பொழுது சுட்டுங்கால் இதே முறை தொடர்கிறது. அடுத்து உரிப்பொருள் சுட்டுங்கால்,

'புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே'

என்னும்போது எத்திணைக்கு எவ்வுரிப்பொருள் என்பது சுட்டப்படவில்லை. எனவே, முன் நூற்பாவிற் 'சொல்லிய முறையே சொல்லவும்' படுதலே பொருத்தம். அவ்வாறாயின் முல்லைக்குப் புணர்தலும், குறிஞ்சிக்குப் பிரிதலும்,பாலைக்கு இருத்தலும், மருதத்திற்கு இரங்கலும் நெய்தலுக்கு ஊடலும் உரிப்பொருள் என்று ஆகும். வழக்கு அவ்வாறில்லை என்பது தெளிவு. எனவே, உரிப்பொருள் கூறுங்கால் தொல்காப்பியர் உரிப்பொருள்களை மட்டுமே அடுக்கிக் கூறி, எத்திணைக்கு எது உரிப்பொருள் எனக் கூறாமல் விடுக்கின்றார். முதற்பொருள்களுக்குக் கூறிய முறையன்றி வேறு முறையில் உரிப்பொருள்கள் திணையொடு பொருத்திக் காட்டப்பட்டுள்ளன. தொடர்ந்து அகத்திணையில் கருப்பொருள்களின் பட்டியலொன்றைக்கூறிவிட்டுப் பிற செய்திகளைத் தொடர்கிறது நூல். பின்னர்ப் பிரிவுக்குரிய கூற்றுக்கள் கூறப்படுகின்றன. களவியலிலும் கற்பியலிலும் எந்தெந்த நிலையில் யார் யார் கூற்றிற்குரியர் என்பது கூறப்படுகிறது. திணைவாரியாகக் கூற்றுக்கள் பிரித்துக் கூறப்படவில்லை. களவிற்குரிய கூற்றுக்கள், கற்பிற்குரிய கூற்றுக்கள் என்று காண்பதே காப்பியரின் கண்ணோட்டம் என்பது புலனாகிறது.

அவ்வாறாயின், களவு கற்பு என்னும் கைகோள்கள் இரண்டிலும் தனித்தனியே ஐந்திணையும் வரப்பெறலாம் என்றே தோன்றுகிறது. தொல்காப்பியரின் பொருட் பாகுபாட்டைக் கீழ்க்காணுமாறு வகுத்துக் காட்டலாம் :



எனவே, புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்னும் உரிப்பொருள்கள் ஐந்தும் களவிலும் நிகழும்; கற்பிலும் நிகழும் என்பதும், ஒரு பாடலுக்குத் திணை கூறுங்கால் உரையாசிரியர்கள் எடுத்துரைப்பதுபோல முப்பொருளும் இடம் பெற்றால் முதலாலும், கருவும் உரியும் மட்டும் வரின் கருவாலும், உரி மட்டும் பேசப்படின் அதனாலும் திணை கூறப்படும் என்பதும் பெறப்படும்.

இவ்வாறன்றி ஒரு சாரார் கருதுமாறு போல முல்லை, மருதம் ஆகியன கற்பிற்கே உரியன எனக் கொண்டால்[1] கலித்தொகைப் பாடல்களில் முல்லைக்கலியிலும் களவு வாழ்க்கை பேசப்படுவது, காப்பியர் கருத்திற்கு முரண் எனக் கொள்ள நேரும். முப்பொருளும் இடம்பெறின் முதலால் திணை கூறுக என்ற இலக்கணப்படி முல்லைக்கும் நெய்தலுக்குரிய முதல், கருப்பொருள்கள் இடம் பெற்றமையால் கலித்தொகையில் அப்பாடல்கள் முறையே முல்லைக்கலி என்றும் நெய்தற்கலி என்றும் தொகுக்கப்பட்டனவாதல் வேண்டும்.

இங்ஙனம் கொண்ட பின்னும் தொல்காப்பியத்திலும் பிற சங்க இலக்கியத்திலும் பேசப்படாத செய்திகள் சில முல்லைக் கலியில் உரிப்பொருளாகக் காண்கிறோம். குறிப்பாக, ஏறுதழுவுதல் பற்றிய செய்திகள் மிக விரிவாகப் பேசப்படுகின்றன. அன்றியும் ஏறு தழுவுதல் மணமுறைகளில் ஒன்றாகவே கொள்ளப்பட்டதோ என எண்ணவும் ஆண்டு இடமிருக்கிறது :

"ஓஓ இவள், பொருபுகல் நல்லேறு கொள்பவரல்லால்
திருமாமெய் தீண்டல ரென்று கருமமா
எல்லோரும் கேட்ப அறைந்தறைந் (து) எப்பொழுதும்
சொல்லால் தரப்பட்டவள்" (கலி - 102)

"கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்.
....
....
விலை வேண்டார் எம்மினத் தாயர் மகளிர்
கொலையேற்றுக் கோட்டிடைத் தாம்வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின்" (கலி. 103)

"அவ்வழி, முள்ளெயிற் றேஎ ரிவளைப் பெறுமிதோர்
வெள்ளேற் றெருத்தடங்கு வான்.
....

நேரிழாய், கோளரிதாக நிறுத்த கொலேயேற்றுக்
காரி கதனஞ்சான் பாய்ந்த பொதுவற்கே
ஆர்வுற் றெமர் கொடை நேர்ந்தார்'' (கலி.104)

இங்ஙனம் ஏறுதழுவி வீரத்திற்கு விலையாக மகளிரை மணப்பது, வடநாட்டில் நிலவிய எண்வகை மணங்களில் ஆசுரம் என்ற வகையைச் சேர்ந்ததாகும் என்று தெரிகிறது.

மணவகையாக இன்றேனும் வேறெவ்வகையிலும் கூடத் தொல்காப்பியத்தில் குறிக்கப்படாத இவ் வீரவிளையாட்டை முல்லைக் கலி பெரிதும் விவரிப்பது சிந்தனைக்குரியதாகிறது.

தொல்காப்பியம் கூருத இதுபற்றி நம்பியகப்பொருளும் முத்துவீரியமும் பேசுகின்றன. முதல் நூலின் ஒழிபியலில், அகப்புறப் பெருந்திணை என்ற தலைப்பில்,

''மடலே றுதலொடு விடைதழால் என்ரு
குற்றிசை தன்ஞெடு குறுங்கலி என்ரு
சுரநடை தன்ஞெடு முதுபாலை என்ரு
தாபத நிலையொடு தபுதார நிலையெனப்
புகன்றவை இயற்பெயர் பொருந்தா வாயின்
அகன்ற அகப்புறப் பெருந்திணைக் காகும்''

என்று கூறப்படுகிறது. பின் இணைப்பில், ''விடை தழாலாவது, வெல்லும் திறலுடையஞகிய தலைமகன் தான் விழைந்த தலைமகளை மணத்தற் பொருட்டுக் கொல்லும் திறலமைந்த ஓர் எருத்தினைப் பிடித்துத் தழுவி அடக்குதல்'' என்று விளக்கமும் தரப்படுகிறது.

முத்து வீரியத்தில், வரைவு கடாதல் வகைகள் பல கூறப்படுகையில் ஏறுகோள் கூறி வரைவுகடாதல் என்பதொன்று பேசப்படுகிறது. ''எம் ஐயன்மார் அவளது முலையின் பெருமையும் இடையின் சிறுமையும் கண்டு, எம்மூர்க்கண் விடையின் மருப்பைத் திருத்திவிட்டார். இனி அடுப்பன அறியேமென ஏறுகோள் கூறி வரைவு கடாவி'' நிற்றல் என்று விளக்கம் தரப்படுகிறது.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கூறல் மரபாதலின் இப் பின்னூல்கள் ஏறுதழுவுதலை ஏற்றன எனலாம். வேருரு விளக்கமும் பொருந்திவரும். தொல்காப்பியர் காலத்திற்கு முன்போ அவரது காலத்திலேயோ அவருக்குச் சற்று மாறுபட்ட கோட்பாடுடைய வேறு இலக்கணநூல் வழக்கில் இருந்திருக்கலாம். பன்னிரு படலம்,

அவிநயம் என்ற இரண்டும் அங்ஙனம் நிலவின என்பது டாக்டர் அறவாணன் அவர்களால் நிறுவப்படுகிறது. எனவே, அகப்பொருளை-யும் புறப்பொருளையும் ஏழேழு திணைகளாகப் பகுத்தது தொல்-காப்பியர் நெறியென்றும், அகப்பொருளை, அன்பின் ஐந்திணை-களடங்கிய அகத்திணை, கைக்கிளை பெருந்திணைகளான அகப்-புறத்திணை என இரண்டாகவும் புறப்பொருளைப் பன்னிரு திணை-களாகவும் பகுத்தது பன்னிரு படல நெறியென்றும் தோன்றுகிறது. இந்நெறிகளைப்பற்றி ஆராயும் டாக்டர் அறவாணன் தொல்காப்பியம் வைதிக நெறி என்றும் மற்றது அவைதிக நெறி என்றும் கூறுகிறார். தொல்காப்பியத்துக்கு மாறுபட்ட கருத்துக்கள் பன்னிரு படலத்-தினின்று பெறப்பட்டனவாதல் வேண்டுமென்றும், தாம் அறிந்தி-திருந்தும் மாறுபட்ட கருத்துக்களைக் கூறாததாலேயே பாயிரத்தில், ‘முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்தோனே போக்கறு பனுவல்’ என்று கூறப்படுகிறது என்றும் தெரிவிக்கிறார்.[2] எனவே, கலித்தொகை ஒரு வேளை பன்னிரு படலத்தை அடியொற்றி எழுதப்பட்டதாதல் கூடும். அன்றியும் முல்லைக்கலியில் மதுரையும் பாண்டிய வேந்தனும் போற்றப்படுவதால் ஏறுதழுவல் தமிழர்க்கே உரிய வீரவிளையாட்டாதல் கூடும்.

ஏறுதழுவல் மட்டுமன்றி,‘கடிவரையில புறத்து’என (அகத்.23), தொல்காப்பியரால் ஒதுக்கப்பட்ட அடியோரும் வினைவலரும் மருதக் கலியில் கிளவித் தலைவராதல் காண்கிறோம்.எனவே யாப்புத் தொடங்கி உரிப்பொருள் வரை பல்லாற்றானும் பிற சங்க இலக்கியங்களி-னின்றும் மாறுபட்டுள்ள கலித்தொகை, பன்னிரு படலத்தை அடி யொற்றிஎழுதப்பட்டதோ என்ற எண்ணம் எழுகிறது. பன்னிரு படல நூற்பாக்கள் கிடைக்காமையால் இக்கருத்தை உறுதியாகக் கூறுதற்-கில்லை.

அடிக்குறிப்பு

1. வீரசோழியம், பொருட் படலம், முல்லை நடையியல்.

2. ஜைனர் தமிழ்க் கொடை, டாக்டர் க.ப.அறவாணன்,

4

சொல்லா மரபும் செய்யா மரபும்

ச. சாம்பசிவன்

முன்னுரை

"பிற உயிர்க்கு வரும் துன்பத்தைத் தமக்குற்ற துன்பமாகக் கருதிப் பாதுகாக்காவிடில், அறிவினுல் பயனேதும் உண்டோ?" என்று வினத் தொடுக்கின்ருர் வள்ளுவர்.

" அறிவினு னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்ருக் கடை"[1]

என்பது திருக்குறள் "பிற உயிரின் இன்ப துன்பத்தைத் தம் இன்ப துன்பம்போல் உணரும் இந்த உணர்ச்சியை ஒத்துணர்வு(Sympathetic feeling) எனக் குறிப்பர். இது கலைஞரிடத்தில் சிறந்து விளங்குகிறது. இதனுல்தான், புலவர் தம் துன்பத்தைப் பாடுவதோடு மட்டுமல்லாமல், மற்றவர்கள் உறும் துன்பத்தையும் கற்பனைசெய்து பாடவல்லவராக விளங்குகிருர்!"[2] என்பர் டாக்டர் மு. வரதராசனுர். இவ்வுணர்வுகளின் அடிப்படையில் எழுந்தனவே சொல்லா மரபும், செய்யா மரபும்! இவற்றைக் குறித்துத் தொல்காப்பியர் யாங்ஙனம் மொழிகின்ருர், நம் தமிழ் இலக்கியங்கள் எவ்வாறு எடுத்துரைக்கின்றன என்பதை ஓரளவு விளக்க எழுந்ததே இவ் ஆய்வுக்கட்டுரை.

காப்பியர் காட்டுவன

உள்ளத்து உணர்வுகளை யாரிடமாவது எடுத்துரைக்கவேண்டும்; 'நவில்தொறும் நூல்நயம்போலப் பயில்தொறும்' இனிமைதரும் நல்ல நண்பர்கள் அமைந்தால் அவர்கள்பால் உரைத்தல் ஒல்லும். ஆங்ஙனம் அமையாத போது என் செய்வது? கீழ்மைக் குணம் கொண்டோர்பால் தம் உணர்வுகளை வெளிப்படுத்தினுல் ஒருகால் தீமையாக முடிந்தாலும் முடியும்! எனவேதான், **சொல்லா மரபினவாகிய-செய்யா மரபினவாகிய** அஃறிணைப் பொருள்களிடத்துத் தம் உணர்ச்சிகளைத்

கொட்டித் தீர்த்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டது எனலாம். சிலபோது, அஃறிணைப் பொருள்களைக் கண்டு பேசும் வாய்ப்பும் ஏற்படவில்லை யென்றால், தம் நெஞ்சிற்குத் தாமே சொல்லிக் கொள்ளும் நிலையும் உண்டு! அங்ஙனமும் சொல்லாமற் போனால், உள்ளத்தே அத்துன்ப உணர்வு, சுமைதாங்கமாட்டாமல் வெடித்துச் சுக்குநூறாகப் போய்-விடும்; முடிவு? சாவுதான்! இவ்வுளவியலின் நுட்பத்தை நன்குணர்ந்த ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர், தம் செய்யுளியலில் 'கைகோள்' என்றவோர் உறுப்பினைக் கூறி அதன்கண் 'கூற்று' என்பதனையும் மொழிந்தார். அவ்வாறே அக்கூற்றினைக் கேட்பதற்குக் 'கேட்போர்' என்றவோர் உறுப்பினையும் இயம்பினார்.[3] 'கேட்போர்' எனும் பட்டியலில் 'பார்ப்பான், பாங்கன்' முதலான பலரும் இடம் பெறுவர்.[4] இவர்கள் மட்டுமன்றி 'ஞாயிறு, திங்கள்' முதலாய பொருள்களும் இடம்-பெறுகின்றன.

"ஞாயிறு திங்க ளறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுதலிய நெறியாற்
சொல்லுந போலவுங் கேட்குந போலவுஞ்
சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்"[5]

"ஞாயிறு, திங்கள், அறிவு, நாண், கடல், கானல், விலங்கு, மரம், பொழுது, புள், நெஞ்சு எனும் பதினொன்றும், அத்தன்மைய பிறவுமாகிய மக்களல்லாத பொருட்கள் தாம் கருதிய நெறியினானே **சொல்லுவன போலவும், கேட்குந போலவும்** சொல்லி அமையப் பெறும் என்பர் புலவர்" என்பது இதன் பொருள். இவற்றுள் "புலம்புறு **பொழுது** என்பது மாலையும் யாமமும் எற்பாடும் காரும் கூதிரும் பனியும் இளவேனிலும் போல்வன; பிறவும் என்றதனால் புல், புதர் முதலியனவும்"[6] ஆம்!

சொல்லா மரபும் செய்யா மரபும்

மேற்கூறிய நூற்பாவோடு பெரிதும் தொடர்புடையதாக விளங்குவது, தொல்காப்பியப் பொருளியலில் வரும் நூற்பாவாகும்.

"நோயும் இன்பமும் இருவகை நிலையிற்
காமம் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்துஞ்

சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்
செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்
அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்
அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்றும் உரிய வாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்
ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற் கிளவி''[7]

என்பதே அது! " 1) துன்பமும் இன்பமும் ஆகிய இருவகை நிலையினையுடையது காமம்; இக் காமத்தைக் குறித்த மரபு இடையீடு படுதலால், 'நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை' எனும் எண்வகை மெய்ப்பாடும் விளங்கப்பொருந்தும்; அப்போது உறுப்புடையது போலவும் உணர்வுடையது போலவும் மறுத்துரைப்பது போலவும் நெஞ்சொடு புணர்த்துச் சொல்லப்படும். (Personification) (2) சொல்லாத மரபினையுடையவற்றோடு பொருந்தி, அவை செய்யாத மரபை ஆண்டுப் படுத்தியவற்றையும் நெஞ்சினைப் போல அடக்கிச் சொல்லப்படும். (3) யாவர் சிலர் யாதொரு பிணியுற்றுர் அவருற்ற பிணியைத் தாமுற்ற பிணிபோலச் சேர்த்திச் சொல்லப் படும். (4) அறிவையும் அறியப்படும் பொருளையும் வேறுபட நிறுத்தி, 'உவமைப் பெயரும் உவமிக்கும் பெயரும்' ஆகிய இருவகைப்பட்ட பெயரும், 'தொழிலும் பண்பும் பயனும்' என்ற மூவகைப் பட்ட பொருட்கும் உரித்தாக உவமம் பொருந்துமிடத்து உவமவாயிற் படுத்திக் கூறப்படும் — இங்ஙனம் தலைமகனுக்கும் தலைமகளுக்கும் உரிய கிளவிகளாக இயம்பப்படும்.''[8]

இவற்றுள், இக்கட்டுரைக்கண் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட பகுதி 'சொல்லா மரபும் செய்யா மரபும்' ஆகும்!

'சொல்லாமரபின' என்பதற்கு இளம்பூரணர் 'புள்ளும், மாவும், மரனும், கடலும், கானலும் முதலாயின' என்றும், **'செய்யா-மரபின'** என்பதற்குத் 'தூதாகச் சேறலும் வருதலும் உளபோலக் கூறும் அவைபோல்வன பிறவும்' என்றும் உரை கூறுவார். எனி-னும், செய்யுளியலில் செப்பப்படும் 'ஞாயிறு திங்கள்' முதலான-வற்றையும் இவண் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

சங்க இலக்கியத்திலிருந்து இக்கால இலக்கியம் வரையிலும் இவ்விருவகை மரபுகள் இடம் பெற்றுள்ளமை காணலாம்.

சங்க இலக்கியங்களில்

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அக-

நானூறு முதலான சங்க இலக்கியங்களை நோக்குமிடத்து அவற்றில் 'சொல்லா மரபினவும் செய்யா மரபினவும்' ஆகிய பொருள்கள், 'சொல்வன போலவும், செய்வன போலவும்' இயம்பப்படுவன காண-லாம். நோயும், இன்பமும் ஆகிய இருவகை நிலையிலும் தலைவன், தலைவி முதலானோர் பேசுவன கேட்கலாம்.

'குறுந்தொகை'யில் தும்பி, நெஞ்சு, நிலவு, முல்லை, கடல், வாடைக்காற்று, யாறு முதலான அஃறிணைப் பொருட்கள் விளிக்-கப் படுகின்றன. 'ஐங்குறுநூற்'றில் நெஞ்சு, மாலைப்பொழுது, கிள்ளை, மாந்தளிர், காக்கை, முல்லைநிலம் ஆகியன பேசப்படுகின்றன. 'நற்-றிணை'யில் நெஞ்சு, குருகு, கிளி, திங்கள், மேகம், கூகை, தும்பி, வாடைக்காற்று முதலிய பொருட்கள் மொழியப்படுகின்றன. 'அக-நானூற்'றில் நெஞ்சு, யாறு முதலாயின சொல்லப்படுகின்றன. ,கலித்தொகை'யில் மாலைப் பொழுது, நெஞ்சு, கடல், அன்றில், சிறு கழல், ஞாயிறு, திங்கள், வளி, மேகம், மாந்தளிர் எனப் பல்வகைப் பொருட்கள் பகரப்படுகின்றன.

இவற்றுள் ஒன்றிரண்டு சான்று மட்டும் இவண் சுட்டலாம்.

தலைவன் ஒருவன், வரைவிடைப் பிரிந்து நீட்டித்துழித் தலைவி பிரிவாற்றகில்லாது நாணு வரையிறந்து கலங்கி மொழியலானுள். அஃது ஓர் புலம்பற் பாட்டாக உருவெடுத்தது.

" திங்களுள் தோன்றி இருந்த குறுமுயால்!
எங்கேள் இதன்அகத்து உள்வழிக் காட்டீமோ?
காட்டீயாய் ஆயின், கதநாய் கொளுவுவேன்;
வேட்டுவர் உள்வழிச் செப்புவேன்; ஆட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன்; மதிதிரிந்த
என்அல்லல் தீராய் எனின்!"[9]

தன் தலைவன் இருக்குமிடத்தைக் காட்டாமற் போனுல், திங்களில் வாழும் குறுமுயலுக்கு என்ன தண்டனை உண்டு என்பதை அவளது வெகுளிப் பேச்சுக் காட்டி விடுகின்றது. முயலோடு விட்டாளில்லை அவள்!

" வளியே! ....
உண்மை நலன்உண்டு ஒளித்தானைக் காட்டீமோ?
காட்டாயேல், மண்ணகம் எல்லாம் ஒருங்கு சுடுவேன், என்
கண்ணீர் அழலால் தெளித்து"[10]

"காற்றே! என் நலம் உண்டு ஓடி ஒளித்த என் தலைவனைக் காட்டா-விட்டால், என் கண்ணீர்த் தீயைத் தெளித்து இவ்வுலகத்தையே சுட்டு எரிப்பேன்" என்கிறாளே, எத்தகைய துயரம்? காற்றோடு விட்டாளா? கடலை நோக்கிக் கதறவும் தலைப்பட்டுவிட்டாள்!

"பேணுன் துறந்தானை நாடும்இடம் விடாய்ஆயின்
பிறங்குஇரு முந்நீர்! வெறுமணல் ஆகப்
புறங்காலின் போக இறைப்பேன்!"[11]

என்று, தன் தலைவனைக் கொண்டுவந்து சேர்க்காவிட்டால் தன்புறங் காலினாலேயே நீரை இறைத்து வெறும் மணலாகச் செய்துவிடுவ-தாகக் குமுறுகிறாள்.

இவ்வாறெல்லாம் திங்கள் முயலையும், வளியையும், முந்நீரையும் நோக்கிப் புலம்பியவளின் துயரம் தீர அவளின் காதலனும் வந்து சேர்ந்தான்; அவளது நுதலின் பசப்பும் ஓடியது. இந்நிலையை நேரிற் கண்டவர்கள் விரிவாக எடுத்துரைத்தனர் என்கின்றார் **நெய்தற்கலி பாடிய ஆசிரியர் நல்லந்துவனார்**. ஒரே பாடலில் திங்கள், காற்று, கடல் இம்மூன்றினையும் அமைத்துப் பாடிய இப் புலவர் திறம் போற்றத்தக்கதன்றோ?

வரையாது பிரிந்து வரும் **தலைவன்** ஒருவன், வாடைக் காற்றுக்கு உரைப்பானாய்ப் பாகற்குப் பின்வருமாறு உரைக்கின்றான்:

"ஓம்புமதி வாழியோ வாடை! பாம்பின்
தூங்குதோல் கடுக்குந் தூவெள் ளருவிக்
கல்லுயிர் நண்ணி யதுவே நெல்லி
மரையின மாரு முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோ ளூரே?"[12]

வாடையால் துன்புறும் தன் தலைவிக்காகப் பரிந்து பேசும் தலைவனின் பேச்சினைக் கேட்க முடிகின்றது. **குறுந்தொகை** கூறும் தலைவன் இவன்!

ஐங்குறுநூற்றில் கிளியைப் பற்றிய பத்துப் பாடல்கள் **'கிள்ளைப் பத்து'** எனப்படும். கிளியை நோக்கி மொழிகின்றான் தலைவன்:

"வெள்ள வரம்பி னூழி போகியுங்
கிள்ளை வாழிய பலவே யொள்ளிழை
யிரும்பல் கூந்தற் கொடிச்சி
பெருந்தோட் காவல் காட்டி யவ்வே!"[13]

ஆயத்தோடு விளையாட்டு விருப்பினுற் பொழிலகம் புகுந்த தலைவியை எதிர்ப்பட்டு ஒழுகுகின்ற தலைமகன், அவள் புனம் காப்பதற்கு உரியளாய் நின்றது கண்டு மகிழ்ந்து பேசிய பேச்சு இது! கபிலர் பாடிய இப்பாடலில், ''கிளியே! வாழிபலவூழி! நீ இருப்பதனுலன்றோ என் காதலி, இத்திணைப்புனத்தைக் காக்க வருகின்ருள்; அவள் வருவதனுலன்றோ யான் அவளைக் கண்டு இன்பம் நுகர முடிகின்றது!' என்ற பொருள் பொதிந்து நிற்றல் காணலாம்.

நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடிய மருதத்திணைப் பாடல் ஒன்றில் 'வெள்ளாங் குருகு' விளிக்கப்படுகின்றது. 'காமம் மிக்க கழிபடர் கிளவி' எனுந் துறையைச் சார்ந்தது. தலைமகனின் பிரிவினுலே காமநோய் மிகுதியுற்ருளான தலைவியொருத்தி, குருகினை நோக்கிப் பேசுகின்ருள் :

''சிறுவெள்ளாங் குருகே! சிறுவெள்ளாங் குருகே!
துறைபோகு அறுவைத் தூமடி அன்ன
நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே!
எம்மூர் வந்தெம் உண்டுறைத் துழைஇச்
சினைக்கெளிற்று ஆர்கையை அவரூர்ப் பெயர்தி;
அனையஅன் பினையோ, பெருமற வியையோ
ஆங்கண் தீம்புனல் ஈங்கண் பரக்கும்
கழனி நல்லூர் மகிழ்நர்க்குஎன்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே!''[14]

''என் தலைவரைப் போல் நீயும் நன்றிகொன்ருயோ? அன்றி மறதியை உடையையோ?'' எனக் குருகினை நெருக்கிக் கேட்கும் இவளது பேச்சில், தலைவன் செய்த கொடுமை தென்படுகிறதல்லவா?

தலைவனும், தலைவியும் தம் நெஞ்சினை விளித்துக் கூறியனவாக வந்துள்ள பாடல்கள் எண்ணிறந்தன! அகநானூற்றில் நெஞ்சிற்குக் கூறிய பாக்களின் தொகை பரந்துகாணப்படுகின்றது. ஆலம்பேரி சாத்தனுர் பாடிய அகப்பாடல் ஒன்று, தலைமகன் இடைச்சுரத்து அழிந்த நெஞ்சினை நோக்கிக் கூறுவதாக வந்துள்ளதை மட்டும் இங்குக் குறிப்பிடலாம்.

'' அழிவி லுள்ளம் வழிவழிச் சிறப்ப
வினையிவண் முடித்தன மாயின் வல்விரைந்து
எழுவினி வாழிய நெஞ்சே! ...''[15]

இங்ஙனம் தலைவனும், தலைவியுமாகிய இவ்விருவர் மட்டுமே, 'சொல்லா மரபி னவற்ரெடு கெழீஇச், செய்யா மரபில்

தொழிற்படுத் தடக்கியும்' கூறுவர் என்பதைத் தொல்காப்பியர் நுவலும் 'இருவர்க்கும் உரியபாற் கிளவி' என்னுந் தொடரால் தெளி-யலாம். ஆனால் சங்க இலக்கிலத்தை ஊன்றி உணர்ந்தால், தோழி, தாய் முதலானோரும் இங்ஙனம் அஃறிணைப் பொருள்களை விளித்துப் பேசும் நிலையினைக் காணலாம்.

தலைவி வரைவு நீட்டித்தானாக அவன் சிறைப்புறத்தே நிற்-குங்கால் தோழி, வண்டினை (தும்பியை) நோக்கிக் கூறுவாளாகித் 'தலைவி இன்னும் வீட்டிலேயே உறைகின்றாள் என்று சொல்வா-யாக!' என்பதுபட வரும் குறுந்தொகைப் பாடல் இது:

"அம்ம வாழியோ வணிச்சிறைத் தும்பி!
நன்மொழிக் கச்ச மில்லை யவர்நாட்
டண்ண னெடுவரைச் சேறி யாயிற்...தங்கை
தமரிற் றீரா ளென்மோ...கிழவோர்க்கே!"[16]

"தும்பியை விளித்துக் கூறியாக அமைத்தமையின் இச்செய்யுளைப் பாடிய புலவர் "தும்பிசேர்கீரனார்" என்னும் பெயர் பெற்றார் போலும்" என்பர் தமிழ்த்தாத்தா உ.வே சாமிநாதையர்![17]

இவ்வாறே நெடுவெண்ணிலவை நோக்கித் தோழி கூறு-வதாக மற்றொரு குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகின்றது.

உடன்போகிய தலைமகள் மீடற்பொருட்டுத் தாய் ஒருத்தி, காகத்தினை நோக்கிக் கூறியதாக ஐங்குறுநூற்றுப் பாடலொன்றால் அறியலாம்.

"மறுவி றூவிச் சிறுகருங் காக்கை!...
வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே"[18]

என்பதே அப்பாடல்!

திருக்குறளில்

திருக்குறள் காமத்துப் பாலில், அனிச்சமலர், நெஞ்சு, திங்கள் (மதி), கருமணிப் பாவை, மாலைப் பொழுது முதலாயின மொழியப்படுகின்றன.

"நன்னீரை வாழி யனிச்சமே! நின்னினு
மென்னீரள் யாம்வீழ் பவள்"[19]

"மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி"[20]

" கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற் கில்லை யிடம்"[21]

ஆகியன தலைவன் கூற்றுக்கள்.

" உருஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செருஅய் வாழிய நெஞ்சு!"[22]

" மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது!"[23]

என்பன தலைவி கூற்றுக்கள். 'நெஞ்சொடு கிளத்தல்', 'நெஞ்சொடு புலத்தல்' என்ற இரண்டு அதிகாரங்களிலும் 'நெஞ்சு' விளிக்கப்படுதல் காணலாம்.

சிலப்பதிகாரத்தில்

சங்க இலக்கிய மரபைப் பின்பற்றியே இளங்கோவடிகளும், தம் சிலப்பதிகாரத்தில் 'ஆற்றுவரி'ப் பாடல்களை அமைத்தார் எனலாம். காவேரி (யாறு), அன்னம், நெய்தல், ஓதம் (கடல் அலை), பொழில், துறை, குருகு முதலான பல பொருள்களும் விளிக்கப்படுகின்றன. கோவலனும், மாதவியும் பாடிய பாடல்கள் இவற்றிற்குச் சான்று.

" திங்கண்மாலை வெண்குடையான் சென்னிசெங்கோ
லதுவோச்சிக்
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி!"[24]

" மருங்குவண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கயங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி!"[25]

" அம்மெ னிணர அடும்புகாள்! அன்னங்காள்! ..."[26]

" இன்கள்வாய் நெய்தானீ! ..."[27]

" ...... ஊர்கின்ற ஓதமே!
பூந்தண் பொழிலே! ... தண்டுறையே! ..."[28]

" அடையல் குருகே! ... "[29]

பத்தி இலக்கியங்களில்

ஆண்டவனின் அருட்டிறத்தைப் பாடவந்த அடியார்களும் தொல்காப்பிய மரபைப் பின்பற்றிப் பாவிசைத்துள்ளனர்.

" சிறையாரு மடக்கிளியே! இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்

துறையாருங் கடல்தோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே''![30]

என்பது, சிவபெருமானைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு ஆளுடைய பிள்ளையார் பாடிய அழகிய தேவாரமாகும்.

நம்மாழ்வார் பாடிய திருவாய் மொழியிலும்,

“அஞ்சிறைய மடநாராய்! அளியத்தாய் நீயும்நின்
அஞ்சிறைய சேவலுமாய் ஆவாவென் றெனக்கருளி
வெஞ்சிறைப்புள் ளுயர்த்தார்க்குஎன் விடுதூதாய்ச் சென்றக்கால்
வன்சிறையி லவன்வைக்கில் வைப்புண்டா லென் செய்யுமோ!''[31]

என நாரை நவிலப்படுதல் காணலாம். நாரைமட்டுமன்றி இனக்குயில் அன்னம், அகன்றில், குருகு, வண்டு, கிளி, பூவை (நாகணவாய்ப் பறவை) வாடைக் காற்று, நெஞ்சு ஆகிய பலவும் நம்மாழ்வார் திருப்பாடல்களில் மொழியப்படுகின்றன.

பிற்கால இலக்கண நூல்களில்

தொல்காப்பியத்தைப் பின்பற்றிப் பிற்காலத் தெழுந்த இலக்கணநூல்களும் இம் மரபுகளை எடுத்து மொழியலாயின. நம்பியகப்பொருள் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலின் விரிகளை விளம்புமிடத்து,

“……………. அவன்வருங் காலைப்
பாகன் றன்னொடும் மேகந் தன்னொடும்
சோகங் கொண்டவன் சொல்லலும் ......''[32]

எனத் தலைமகன், மேகத்தொடு சொல்வதைக் குறிப்பிடுகின்றது. இதற்குத் தஞ்சைவாணன் கோவையிலிருந்து “வேண்டும் பொருளை... முகில்காள்!'' என்ற பாடல் சான்றாகக் காட்டப்படுகின்றது. இந்நூல் ஒழிபியலுள், களவிற்கூற்றிற்குரியர் அறுவருள் தலைவியும் ஒருத்தியாகச் சொல்லப்படுகின்றாள். தலைவிகூற்றுள் பின்வரும் நூற்பாவும் அமைந்துள்ளது:

“நெஞ்சு நாணு நிறைசே ரறிவுஞ்
செஞ்சுடர்ப் பரிதியுந் திங்களும் மாலையும்
புள்ளும் மாவும் புணரியும் கானலு
முள்ளுறுத் தியன்றவு மொழிந்தவை பிறவும்
தன்சொற் கேட்குந போலவுந் தனக்கவை

இன்சொற் சொல்லுந போலவு மேவல்
செய்குந போலவுந் தேற்றுந போலவும்
மொய்குழற் கிழத்தி மொழிந்தாங் கமையும்''[33]

தொல்காப்பியர் 'ஞாயிறு' முதல் 'நெஞ்சு' ஈருகப் பதினென்றினைக் கூறினர். நாற்கவிராச நம்பியும் 'நெஞ்சு' முதல் 'கானல்' ஈருகப் பத்தினைக் கூறித் தொல்காப்பியர் கூறிய 'மரன்' என்பதைப் 'பிற' என்பதனுள் அடக்கிவிட்டார். மேலும் தொல்காப்பியர் கூறிய 'புலம்புறு பொழுது' எனப் பொதுவாகக் கூறிய 'பொழுதி'னை நாற்–கவிராசநம்பி, 'மாலை' எனும் பொழுது மட்டுமே கூறினர். காரணம், பெரும்பாலான பாடல்களில், ஏனைய பொழுதுகளைவிட 'மாலைப் பொழுதே' மிகுதியாகப் பேசப்படுவதாக இருக்கலாம்.

'முத்து வீரியம்' எனும் இலக்கண நூலில், 'வேந்தற்குற்றுழிப் பிரிவு' எனும் பகுதியில், 'காரை நோக்கி வருந்தியுரைத்தல்' 'முகிலொடு கூறல்' என்பன இயம்பப்படுகின்றன.[34] உற்றுழிப் பிரிந்த தலைமகன், தன் தலைமகளது வடிவை நினைந்து வானை நோக்கி வருந்தியுரைப்பான்; காரோட்டம் கண்ட பாகன், அதனேடு விரையத் தேரோட்டாநிற்பான்; அப்போது தலைவன் காரினைப் பார்த்து, ''முகிலே! என் தலைவி வாழும் நகரின்கண், எனது தேரின் முற்பட்டு நீ சென்று இயங்கிவிடாதே! அங்ஙனம் இயங்கினும், தனித்துத் துயரில் மூழ்கியிருக்கும் அவள் கேட்குமாறு முழக்க-மிடாதே!'' என முந்துறச் செல்லும் முகிலொடு கூறுவான்—என்ற பொருள்பட வருவன இக்கூற்றுக்கள்! இதே நூலில் வரும் 'பொருள்-வயிற் பிரிவி'லும் 'நெஞ்சொடு நோதல்', 'நெஞ்சொடு புலத்தல்', 'நெஞ்சொடு மறுத்தல்', 'முகிலொடு கூறல்' முதலான உட்பிரிவு-களும் உரைக்கப்படுகின்றன.[35]

இவையெல்லாம் தொல்காப்பிய நூற்பாக்களை அடியொற்றி எழுந்தன எனலாம்.

புறப் பொருளில்

'காமங் கண்ணிய' மரபில் 'நோயும் இன்பமும்' ஆகிய இருவகை நிலையில் – அஃதாவது அகப்பொருளில் - சொல்லாதனவற்றைச் சொல்வன போலவும், செய்யாதனவற்றைச் செய்வன போலவும் பாடப் படுதல் மரபு என்பதைத்தான் தொல்காப்பியர் 'நோயும் இன்ப-மும்' என்ற நூற்பாவாயிலாகத் தெளிவுறுத்தினர். ஆனல், இம்மரபுகள் **புறப்பொருளிலும்** எடுத்தாளப்படுதல் உண்டு என்பதைப் புற-நானூறு முதலான சங்க இலக்கியங்கள்வாயிலாக உணரலாம்.

"இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி யணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே!"[36]

என்பது புறநானூற்றில் வரும் அழகிய பாடலாகும். ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் மாண்டு போனான்; "அவன் மாய்ந்த பின்னும், ஏ முல்லை மலரே! ஏன் பூத்து வாளா கிடக்கின்றாய்?" என்று அவலந் தோன்றப் புலம்புகின்றார் குடவாயிற் கீரத்தனார்.

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், பகலவனைப் பார்த்து,

"விருந்திறை நல்கு நாடன் எங்கோன்
கழல்தொடி ஆஅ யண்டிரன் போல
வண்மையும் உடையையோ **ஞாயிறு**!"[37]

என வினவுகின்றார். இங்ஙனம் புறப்பொருட் பாடல்களிலும் மலர், ஞாயிறு முதலான பல பொருட்களும் விளிக்கப்படுவன காணலாம்.

"நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!"[38]

எனச் சத்திமுற்றப் புலவர், நாரையை விளித்துத் தன் ஏழ்மை நிலையை உணர்த்தலும்,

"பேடே! திரவியமே! பேரின்பப் பாட்டுடையாய்!
ஏழுலகும் இன்பத்தீ ஏற்றுந் திறனுடையாய்!
பீழையுனக் கெய்தியதென்? பேசாய்!"[39]

எனப் பாட்டுக்கொரு புலவராம் பாரதியார், 'குயிலி'னை நோக்கிக் குரல் கொடுப்பதும் இவ்வகையில் அமைந்தனவே எனலாம்.

சிற்றிலக்கியங்களில்

தொல்காப்பியர் கூறிய 'சொல்லா மரபும் செய்யா மரபும்' என்ற தொடரே பிற்காலச் சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்கு வித்திட்டது எனலாம். குறிப்பாகத் தூது இலக்கியங்களின் தோற்றத்திற்கு இதுவே அடிப்படை என்று கூறுவது தவறாகாது!

"ஏகினம், மயில், கிள்ளை, எழிலி, பூவை, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு ஆகிய ஒன்பது அஃறிணைப் பொருள்களையும்,

'தோழி'யையும் தலைவனிடத்தில் தூது சென்று வருமாறு தலைவி கூறுவதாகக் கலிவெண்பாவினுல் பாடப் பெறுவது தூதின் இலக்கணம்'' என்ற விதியினையும் பாட்டியல் நூல்கள் வகுக்கலாயின.[40] இவை தவிரப் பணம், தமிழ், மான், வனசம், சவ்வாது, நெல், புகையிலை, துகில், காக்கை, கழுதை, பழையது, அன்பு, செருப்பு முதலிய பல்வேறு பொருள்களையும் தூதாக அனுப்பும் மரபும் எழலாயிற்று. இவையெல்லாம் தொல்காப்பிய இலக்கண விதியைப் பின்பற்றி எழுந்தவையேயாம்!

'பிள்ளைத் தமிழி'ல் சிறப்பாகப் பேசப்படுவது 'அம்புலிப்பருவம்' ஆகும். அதில், ''அதிருமக ராழிசூழ் செந்தில்வடி வேலனுடன் அம்புலீ ஆடவாவே''[41] என்பன போல் வரும் பகுதிகள் எல்லாம், 'ஞாயிறு, திங்கள்' எனவரும் தொல்காப்பிய நூற்பாவுக்குரிய இலக்கியங்களாகும்!

மேலைநாட்டு இலக்கியத்தில்

நம் தமிழ் இலக்கிய மரபினைப் போன்றே, மேலை நாட்டு இலக்கியங்களிலும், 'குருவி, கொசு' ஆகிய அஃறிணைப் பொருட்களை விளித்துப் பாடும் மரபும் காணப்படுகின்றது. இதுபற்றிச் 'சங்க இலக்கிய ஒப்பீடு' பற்றி ஆராயும் டாக்டர் தமிழண்ணல் கூறுவது இவண் சுட்டத் தகும்:

''காட்டுலசு பாடிய லெசுபியாவின் குருவிப் பாடல்கள் போல, மெலீகர் (Meleager) பாடிய கொசுப் பாடல் ஒன்று, காதல் அவலத்தைப் புனைகிறது. தமிழ் அகத்திணைப் பாடல்களில் காணப் படும் காமம் மிக்க கழிபடர் கிளவிகளை ஒத்து, இது விளங்குகிறது:

''பறந்துபோ கொசுவே!
என் இனிய விரைவுத் தூதனகப்
பறந்துபோ!
அவள் காதின் விளிம்புகளைத் தொட்டு
செனேபைவிடம் இதை மெதுவாகக் கூறு!

'நான் உன் நினைவால் உறங்காமல்
விழித்தபடி கிடக்கின்றேன்; நீயோ
உன் காதலர்களை மறந்துவிடும் இயல்பதனுல்
சோம்பேறியாக உறங்குகிறுய்!
என்றிதனை மெதுவாகக் கூறிடுக!
இங்கேயா நிற்கிருய்! சே! விரைந்து அப்பாலே பற!

ஆம். இசைத் தேவதைகள் உன்னை விழைவதனால்
சிறகடித்துப் பற!'

மேற்கத்திய பாடல்களில் தனிப்பட்டவர் மன உணர்வுகள், தனிப்பட்ட அனுபவ நிலையிலேயே தரப்படுகின்றன. இங்கோ தனிப்பட்ட மனவுணர்வுகள், அவை பாடிய கவிஞருடையவையாயினும், அக்கவிஞர் வரலாறாகவோ, அவரால் தொடர்புகொள்ளப்பட்டவர் செய்தியாகவோ குறிப்பாகக்கூடக் கூறப்படுவதில்லை. அவை பொது உலக அனுபவங்களாகக் கூறப்படுகின்றன!''[42]

முடிவுரை

இக்கட்டுரை வாயிலாகப் பின்கண்ட முடிவுகள் கொள்வது ஏற்புடைத்தாகும்.

1) புலவர்கள், தம் துன்பத்தைப் பாடுவதோடு நின்றுவிடாமல், ஏனையோர் படும் துன்பத்தையும் பாட்டில் வடித்துள்ளனர்.

2) அங்ஙனம் வடித்துரைப்பதற்குத் தொல்காப்பியர் கூறும் 'சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச், செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்' என்ற இலக்கணம் இடம் தருகின்றது.

3) ஞாயிறு, திங்கள், அறிவு, நாண், கடல், கானல், விலங்கு, மரன், பொழுது, புள், நெஞ்சு ஆகியனவும், புல், புதர், முல்லை நிலம், முல்லை மலர், யாறு, மழை, முகில், வளி, கழல் முதலான பிறவும் 'சொல்லா மரபும் செய்யா மரபும்' உடையனவாக உரைக்கப்படும்.

4) இவற்றுள்ளும் ஞாயிறு, திங்கள், கடல், கானல், பொழுது, புள், நெஞ்சு ஆகியனவே மிகுதியாகப் பேசப்படுகின்றன.

5) பொழுதுகளில் 'மாலைப்பொழுதே' பெரிதும் பேசப்படுகின்றது. 'இரங்கல்' எனும் உரிப் பொருளுக்கு 'எற்பாடு' உரியது. ஆனால், 'மாலைப் பொழுதே' இரங்கல் பொருளில் மிகுதியாக ஆளப்படுகின்றது. திருக்குறளில் 'பொழுதுகண் டிரங்கல்' என்ற அதிகாரத்தை நோக்கினால், 'மாலை'யே பொழுதாகப் பேசப்படுகின்றது. இஃது ஆய்வுசெய்யத்தகுவது.

6) நெஞ்சினை விளித்துப் பேசும் பாக்களே பரந்துபட்டுக்காணப்படுகின்றன. அவை 'நெஞ்சொடு கிளத்தல்' என்று தனியாக ஆராயத் தகும்.

7) நோயும், இன்பமும் என இருவகை நிலையில் இப்பாக்கள் அமைகின்றன. எனினும் 'நோய்' பற்றி எழுந்த பாக்களே மிகுதி எனலாம். இன்ப நிலையினைவிடத் துன்ப நிலையில்தான் இத்தகைய பேச்சுக்கள் மிகுதியாக எழக்கூடும் எனும் உண்மையை அறிய முடிகின்றது.

8) தலைவன் — தலைவி இவ்விருவர் கூற்றுக வருவனவற்றுள் பெரும்பாலும் 'தலைவி கூற்றே' மிகுந்து காணப்படுகின்றது. பல்வேறிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பினைத் தலைவன் இயல்பாகவே பெற்றிருப்பதால், 'நோய்' நிலையில் அவனுக்கு அத்துணைக் கூற்றுக்கள் நிகழக் காரணமில்லை; ஆனால், தன் உள்ள உணர்வுகளை மற்றவர்களிடம் வெளிக்காட்ட முடியாத சூழலில் வாழும் தலைவிக்கு 'ஞாயிறு' முதலான அஃறிணைப் பொருட்களை விளித்தேனும் ஆறுதல் பெற வேண்டிய இன்றியமையாத நிலை ஏற்பட்டு விடுவதே இதற்குக் காரணம் எனலாம்.

9) தொல்காப்பியர் 'தலைவன் - தலைவி' ஆகிய இருவரை மட்டுமே குறிப்பிட்டிருக்கச் சங்க இலக்கியங்களிலும் பிறவற்றிலும் தோழி, தாய் முதலானோரும் பேசுவதாக வந்துள்ளது, மரபில் எழுந்த வளர்ச்சி எனலாம். மேலும் இவர்கள் பேசுவதும், தமக்குற்ற நோய்நிலை கருதியன்று, தம்மைச் சார்ந்த தலைவியின் நிலைகருதியேயாம்.

10) அகப்பொருளில் மட்டுமன்றிப் புறப்பொருளிலும் அஃறிணைப் பொருள்களை விளித்துப் பேசும் மரபு, பண்டுதொட்டே இருந்து வந்துள்ளது.

11) அகப்பொருளில், 'காம மிக்க கழிபடர் கிளவி'யாக இப்பாக்கள் அமைவனவாயினும், 'தலைவன் சிறைப்புறத்தானகத் தும்பிக்குக் கூறியது' என்பன போன்ற கூற்றுக்களை நோக்குமிடத்து, நேரடியாகச் சொல்ல முடியாத நிலையில் மறைமுகமாகச் சொல்லித் திருத்தவோ, எடுத்த செயலை முடிக்கவோ இவைகள் துணைபுரிவன எனலாம்.

12) ஆண்டவனைப் பாடவந்த அடியார்களும், தம்மைத் தலைவியாகவும் அவனை முழுமுதற்றலைவனுகவும் (நாயகி–நாயகன்) கருதிக்கொண்டு பாப்புனையும் மரபும் எழலாயிற்று.

13) தொல்காப்பியத்தைப் பின்பற்றி நம்பியகப் பொருள், முத்துவீரியம் போன்ற இலக்கண நூல்களும் இம்மரபுகளை மொழிந்துள்ளன.

14) பிள்ளைத்தமிழில் 'அம்புலிப்பருவம்' அமைவதற்கும், 'தமிழ்', 'கிள்ளை', 'மேகம்' முதலான பல்வகைப் பொருள்களைத் தூதாக அமைத்துத் தூது இலக்கியம் தோன்றுவதற்கும் வித்திட்ட பெருமை 'சொல்லா மரபும் செய்யா மரபும்' என்ற இலக்கணத்திற்கு உரியது.

15) 'இலக்கியத்தில் உணர்வு வெளியீட்டுக் களமா'க[43] அமைவது இத்தொடர் எனலாம்.

சான்றெண் பட்டியல்

1) திருக்குறள் : 315.

2) டாக்டர் வரதராசனுர், மு., இலக்கியத்திறன், பாரி நிலையம், சென்னை, 1965, பக். 79.

3) தொல்காப்பியம் : செய்யுளியல் : 1 (ச. சாம்பசிவனுர் பதிப்பு, 1978)

4) ௸ ௸ : 181 — 190.

5) ,, 192.

6) ,, பேராசிரியம்

7) ,, பொருளியல் : 2

8) ,, இளம்பூரணம் (கழகப் பதிப்பு)

9) கலித்தொகை : 144 : 18 – 23 (சங்க இலக்கியம், வையாபுரிப்பிள்ளை பதிப்பு, 1967)

10) ௸ 144 : 40 ; 42—44

11) ,, 144 : 45 — 47

12) குறுந்தொகை : 235 (உ. வே. சா. பதிப்பு, 1962)

13) ஐங்குறுநூறு : 281 (கழகப் பதிப்பு, 1972)

14) நற்றிணை : 70 (சங்க இலக்கியம், வையாபுரிப்பிள்ளை பதிப்பு)

15) அகநானூறு : 47 (௸)

16) குறுந்தொகை : 392 (உ. வே. சா. பதிப்பு)

17) ௸ ௸

18) ஐங்குறுநூறு: 391 (கழகப் பதிப்பு)
19) திருக்குறள் : 1111 (சாம்பசிவனுர் பதிப்பு, 1970)
20) ஷை 1118 ஷை
21) ,, 1123 ,,
22) ,, 1200 ,,
23) ,, 1221 ,,
24) சிலப்பதிகாரம்: ஆற்றுவரி : கானல்வரி (உ. வே. சா. பதிப்பு, 1968, பக். 203)
25) ஷை ஷை (பக். 210)
26) ,, ,, (பக். 212)
27) ,, ,, (ஷை)
28) ,, ,, (பக். 213)
29) ,, ,, (பக். 215)
30) சம்பந்தர் தேவாரம் (மூவர் தேவாரம் : தலைமுறை, குமர-குருபரன் பிள்ளை பதிப்பு, 1968) பக். 117.
31) நம்மாழ்வார் திருவாய் மொழி:முதற்பத்து, 4 - ஆம் திருவாய்-மொழி : 1
32) நம்பியகப் பொருள் : 170 : 12 — 14 (அண்ணுமலைப் பல்-கலைக் கழகப் பதிப்பு, 1977)
33) ஷை 223 (ஷை)
34) முத்து வீரியம் : (திருப்பாற்கடனுதன் கவிராயர் உரை, 1889)
35) ஷை ஷை (பக். 251)
36) புறநானூறு : 242 (சங்க இலக்கியம், வையாபுரிப்-பிள்ளை பதிப்பு)
37) ஷை 374: 15 — 17 (ஷை)
38) சத்திமுற்றப் புலவர் தனிப்பாடல் : (தனிப்பாடல் திரட்டு, பூம்புகார்ப் பிரசுரம், 1977)
39) பாரதியார் கவிதைகள் : குயிலின் பாட்டு, பழநியப்பா பிரதர்ஸ், சென்னை, 1972, பக். 361.
40) பாட்டியல்: (பார்க்க : சிற்றிலக்கியச் செல்வங்கள், மணி-வாசகர் நூலகம், சிதம்பரம்.)
41) திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்: 65 (கழகப் பதிப்பு 1974.)
42) டாக்டர் தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, மீனுட்சி புத்தகநிலையம், மதுரை, 1978.
43) டாக்டர் சுப்பிரமணியம், ச. வே., இலக்கணத் தொகை : யாப்பு - பாட்டியல், தமிழ்ப்பதிப்பகம், சென்னை. 1978, பக். 31,

5

பாடாண் திணை

தொல்காப்பியம் - புறப்பொருள் வெண்பாமாலை ஓர் ஒப்பீடு

ந. சொக்கலிங்கம்

நுழைவாயில்

தொல்காப்பியப் புறத்திணையாகிய பாடாண் திணையையும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாடாண் படலத்தையும் ஒப்பிட்டும் உறழ்ந்தும் கண்டு அவற்றுள் அமைந்துகிடக்கும் ஒற்றுமை வேற்றுமைகளையும் வளர்ச்சிப் படிநிலைகளையும் மாற்றங்களையும் கண்டுரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திணைப் பெயரும் விளக்கமும்

தொல்காப்பியர் ஏழு புறத்திணைகளையே மொழிந்தார். ஆனல் வெண்பாமாலையாரோ பன்னிரு திணைகளாக விரித்துப் பெருக்கினர். தொல்காப்பிய ஏழாவது திணை பாடாண் ஆகும்; ஆயின் ஐயனரிதனர் ஒன்பதாவது திணையாக்கினர் இப்பாடாண் திணையை. தொல்காப்பியர், ''பாடாண்'' என்றே குறிப்பிடுவர். மேலும் அகத்திணைக்குப் புறமாக அமையும் புறத்திணைகளைக் கூறுவதே காப்பியரின் போக்காகும். அகப்புற ஒற்றுமையைக் கூறி, அத்திணைக்குரிய விளக்கத்தினையும் கூறுவார். வெட்சி முதல் காஞ்சித்திணை வரையுள்ள ஆறுதிணைகளையும் மேலே கண்டவாறு விளக்கிச் செல்லும் காப்பியர், பாடாண் பற்றிப் பேசும் பொழுது மட்டும்,

> ''பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
> நாடுங் காலை நாலிரண் டுடைத்தே'' [தொல்,புறத்திணை:20]

என்பார். இதன்கண் திணைக்குரிய பொது விளக்கம் கூறப்பெறவில்லை.

முன்னைய திணைகளுக்கெல்லாம் பொது விளக்கம் கூறியவர், பாடாணுக்கு மட்டும் கூறாது விட்டிருப்பாரா என்ற ஐயம் எழுவது இயல்பே! இவ் ஐயத்தை நீக்க முயல்கின்றார் முனைவர் தே. ஆண்டி-யப்பன் கீழ் வருமாறு நூற்பாவை மீட்டுருவாக்கம் செய்து.

"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே"

என்பதே அவர் செய்துள்ள மீட்டுருவாக்கம். [காப்பியர் நெறி — அகத்திணையியல், புறத்திணையியல், முத்துப் பதிப்பக வெளியீடு, பக் : 80]

'பாடாண் பகுதி' என்று மட்டும் கூறினார். 'தானே' என்ற பிரிநிலைச் சொல்லை முன்னைய ஆறு திணைகளுக்கும் கூறியது போலப் பாடாண் திணை கூறும்போது பயன்படுத்தவில்லை. இது குறித்து முனைவர் ச. சோ. பாரதி, "புறத்திணைகள் ஏழனுள் முன் ஆறும் கூறி முடிந்ததனாலும், எஞ்சிய பாடாண் ஒன்றே இதிற் கூறப்படுதலானும், பிறவற்றுள் ஒவ்வொன்றைப் பிரித்துக் கூறிய முன் சூத்திரங்களிற் போலத் 'தானே' என்னும் பிரிநிலைச் சொற் குறிப்பு ஈண்டு வேண்டாதாயிற்று" என்பர். (தொல்காப்பியர் பொருட்படலம், நாவலர் புத்தக நிலையம், பக்: 172-173)

ஐயனாரிதனார் திணைகளைப் 'படலம்' என்று பெயரிட்டழைப்பர். அவ்வாறே பாடாண் படலத்தின்கண் வரும் முதல் நூற்பாவின் முன்னைய படலங்களில் கூறியவாறே படலப்பெயர்களையும், துறைப் பெயர்களையும் வரிசைப்படுத்திக் கூறுவர். திணைப்பெயர் குறிப்பிடும் பொழுது, 'பாடாண் பாட்டு' என்கின்றார். ஏனைய திணைகளைப் பாட்டு என்றழைக்காது பாடாணை மட்டும் 'பாடாண்பாட்டு' என மொழி-குவர். பாட்டு என்பது திணையையே குறிக்கும். [சான்று : முல்லைப் பாட்டு, குறிஞ்சிப் பாட்டு] திணையின் பெயரையும் அகத்திற்குப் புற-மாகும் உறவினையும் கூறும் தொல்காப்பிய நெறியை இவர் முற்றிலும் பின்பற்றவில்லை. மாறாகத் திணைப் பெயருடன் துறைப் பெயர்களை-யும் தொகுத்துரைக்கும் போக்கினையே பெரிதும் பின்பற்றியுள்ளார். இப்பொது நூற்பாவை அடுத்து வரும் நூற்பாவில் திணை விளக்கமும் (கொளுவில்) சான்றுப் பாடலும் அமைத்துச் சென்றுள்ளார்.

காப்பியர் திணை விளக்கம் கூறியதாகச் சான்றில்லை. ஆனால் புறப்பொருள் வெண்பாமாலையாரோ,

"ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்
அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று''
[புறப்பொருள் : 189]

என்று விளக்கம் கூறினர். காஞ்சியை அடுத்துப் பாடாண்திணை கூறுவர் காப்பியர்; ஆனல் வெண்பாமாலையுடையாரோ வாகையைத் தொடர்ந்து பாடாணைக் கூறினர். இது திணை வைப்பு முறையில் ஒரு மாற்றமாகும். மேலும் பொது நூற்பாவில் வெட்சி, காஞ்சி, உழிஞை, பாடாண் ஆகிய திணைகளுக்கு அடைகூருதும், கரந்தை, வஞ்சி, நொச்சி, தும்பை, வாகை ஆகியவற்றிற்கு அடைமொழி சேர்த்தும் கூறியுள்ளார்.

[எ-டு] "வெட்சி வெட்சி அரவம் விரிச்சிசெலவு ... ''
— அடைமொழி இல்லை.
"துன்னருங் கடும்போர்த் தும்பை தும்பையரவம் ...''
— அடைமொழி உள்ளது.

எனவே திணைப்பெயர் கூறும் பொழுது ஒரு திட்டவட்டமான நெறியை இவர் பின்பற்றவில்லை என்பது தெளிவாகின்றது. ஆனல் காப்பியர் திணைப் பெயர் பகரும் போது நூற்பாவில் யாண்டும் அடைமொழி ஏதும் இணைக்காமல் கூறிச் செல்லும் நெறியினைத் திட்டவட்டமாகப் பின்பற்றியுள்ளார்.

புறப்பொருள் வெண்பா மாலையின் இறுதி நூற்பாவில் பாடாண் திணை பற்றிக் கூறும்பொழுது ஐயனரிதனர்,

"வாகை பாடாண் பொதுவியற் றிணையெனப்
போகிய மூன்றும் புறப்புற மாகும்'' [புறப்பொருள்: இறுதி நூற்பா] என்கின்ருர். உ. வே. சா. பதிப்பில் காணப்பெருத இந் நூற்பா கழகப் பதிப்பில் உள்ளது. எனினும் பாடாணைப் புறப்புற-மாகப் பார்க்கும் பார்வை காப்பியரிடம் காணுப் பார்வையாகும். காப்பியர் பாடாண் திணையில் பதிஞேரு நூற்பாக்கள் உரைப்பார். ஐயனரிதனர் பாடாண் படலத்தில் ஒரு பொது நூற்பாவை மொழிந்து அதனைத் தொடர்ந்து, திணைவிளக்கம் 1–ம், துறைகளை விளக்கும் கொளுக்கள் 50– ம், சான்ருய் அமையும் வெண்பாக்கள் 51– ம் ஆகப் பாகுபடுத்தியுள்ளார்.

எண்ணிக்கை கூறுதல்

பாடாண்திணை நூற்பாக்கள் பதினென்று. அவற்றுள் துறை-களை மொழியும் நூற்பாக்கள் இரண்டு. பாடாணையும், துறைகள் நாற்பத்தேழனையும் குறிக்க எண்ணிய ஐயனரிதனர்,

"ஆங்க வாறெண் பகுதிப் பொருளும்
பாங்குற உரைப்பது பாடாண் பாட்டே"
[புறப்பொருள் , நூற்பா:9]

என்று எண்ணிக்கையினை வகுத்துரைப்பார். காப்பியர் இவ்வாறு இத்தனை என்று எண்ணிக்கையிட்டுப் பாடாண் திணையைக் கூறவில்லை. ஆயினும் சிலவிடங்களில் கூட்டு எண்ணிக்கை கூருமலும் இல்லை.

"நாடுங் காலை நாலிரண் டுடைத்தே" [தொல், புறத்திணை:20]
"அமரர்கண் முடியும் அறுவகை யானும்"[தொல், புறத்திணை:21]

என்னும் எண்ணிக்கை வரையறை காப்பியரால் கூறப்பட்டிருப்பினும், நாலிரண்டு எவை, அறுவகை எவை என்று காப்பியர் விளக்கியுரைத்திருப்பாரேல் இன்னும் தெளிவு கிடைத்திருக்கும் என்பதோடு, உரையாசிரியர்களுடைய உரை வேற்றுமைக்கும் இடமில்லாமற் போயிருக்கும் அன்றோ!

துறை முன்னொட்டுக்கள் ஒப்பீடு

தொல்காப்பியர் பாடாண்திணைக்குரிய துறைகளாக இரண்டு நூற்பாக்களைக் கூறி இருபது துறைகளை எடுத்தியம்பினர். (புறத்திணையியல் : 29,30) ஐயனாரிதனரோ பாடாணுக்குரிய துறைகளாக 47-ஐக் கூறி விரித்துப் பெருக்கினர். இவற்றுள் காப்பியர் கழறிய சில துறைகளின் முன் அமைந்திருக்கும் அடைகள் அவ்வத்துறைக்குரிய விளக்கமாய் அமைந்துள.

(எ-டு) "சேய்வரல் வருத்தம் வீட வாயிற்
காவலர்க் குரைத்த கடைநிலை" [தொல், புறத்திணை:29]

என்பது தொல்காப்பியர் மொழிந்த கடைநிலை என்னும் துறை. இவ்வாறு 14 துறைகள் துறை விளக்கமாகிய முன்னடைகள் பெற்று விளங்குகின்றன. கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல், இயன்மொழி வாழ்த்து, கடைநிலை, வேள்விநிலை, விளக்குநிலை, துயிலெடைநிலை, ஆற்றுப்படை, பெருமங்கலம், குடைநிழல் மரபு, வாள் மங்கலம், மண்ணுமங்கலம், கடைக்கூட்டுநிலை, இருவகை விடை, ஓம்படை ஆகிய பதினான்கே அவை. இந்நெறியையே புறப்பொருள் வெண்பாமாலையாரும் சில துறைகளைப் பொறுத்தவரை பின்பற்றியுள்ளார். நாற்பத்தேழு துறைகளில் புண்ணிய நிலை, பெருமங்கலம், புகழ்சாற்றுநிலை, புலவராற்றுப்படை, பாடாண்பாட்டு, கடவுட் பெண்டிர் நயந்த பக்கம், கடவுண் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம், குழவிக்கண் தோன்றிய காமப் பகுதி, ஊரின்கண் தோன்றிய

காமப்பகுதி எனத் துறைப்பெயர்களை வரிசைப்படுத்தும் முதற் பொது நூற்பாவில் அடைமொழிகள் அமைந்துள்ளன. இத்துறைகளுக்குரிய விளக்கங்களை ஏனைய துறைகளுக்குக் கூறுமாப்போலே விளக்கி-யிருப்பினும் மேலும் அத்துறைகளின் பொருளமைதி சிறப்புறும் வண்ணம் அடைமொழிகள் அமைந்துள்ளன என்பது எண்ணி மகிழ்தற்குரித்து. தொல்காப்பியர் துறை விளக்கம் கருதி நூற்பா எழுதாமையினுல் அம்முன்ஞெட்டு துறைப்பெயரின் முன் நின்று சிறப்பு நல்குகின்றது என்பது துறைகளை ஒப்பு நோக்கும் பொழுது புலப்படும் செய்தியாகும்.

துறைப்பெயரில் ஒற்றுமை

தொல்காப்பியம் மொழியும் இருபது துறைகளில் பதிஞேரு துறை-கள் பெயர் மாற்றம் ஏதும்சிறிதுகூட இல்லாமல் புறப்பொருள் வெண்பா மாலையில் கூறப்பட்டுள்ளன. அவை இயன்மொழி வாழ்த்து, கண்படை நிலை, துயிலெடைநிலை, விளக்குநிலை, வாயுறைவாழ்த்து, செவியறி-வுறூஉ, வாள்மங்கலம், மண்ணுமங்கலம், ஓம்படை, புறநிலை வாழ்த்து, கைக்கிளை ஆகிய துறைகளே ஆகும். தொல்காப்பியத் துறைகளின் வைப்பு முறைகளில் ஒரு தொடர்பின்மை இருப்பது போல் தோன்று-கின்றது. துறைகளின் பெயர்கள் முன் பின் மாறிக்கிடப்பது போல் தோன்றுகின்றது. ஏடு எழுதியோர் மாற்றியிருக்கக் கூடும்; அல்லது சில துறைகள் விடுபட்டுப் போயிருத்தல் கூடும். இவ்வாறு எண்ணக் காரணம், முன்னைய வெட்சி முதலிய திணைகளின் துறைகளை எண்-ணிக்கையிட்டுக் கூறியவாறு, பாடாண் திணைத்துறைகளைக் கூருமை கொண்டு அவ்வாறு கருத இடம் ஏற்படுகின்றது. ஆனல் ஐயனரிதனர் துறை வைப்பு முறையில் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளார் என்றே கூறல் வேண்டும். சான்று: 'கண்படை நிலை'யை அடுத்துத் 'துயிலெடைநிலை'யும் அதனையடுத்து 'மங்கலநிலை'யும்' பிறவும் இவ்வாறே வருதல் காண்க. மேலே கண்ட ஏழு துறைகளில் இயன்மொழி வாழ்த்து, விளக்குநிலை ஆகிய இரு துறைகளுக்கு வெண்பாமாலையார் இரு விளக்கம் கூறுவர்.

"அடுத்தூர்ந் தேத்திய இயன்மொழி வாழ்த்து"
[தொல், புறத்திணை: 29]

என்பது தலைவனைப் பொருந்திப் புகழ்கின்ற இயன்மொழி வாழ்த்தும் என்னும் பொருளமைந்தது. இத்துறையை ஐயனரிதனர்,

"இன்னேர் இன்னவை கொடுத்தார் நீயும்
அன்னேர் போல அவையெமக் கீயென
என்னேரும் அறிய எடுத்துரைத் தன்று" [புறப்பொருள்: 194]

"மயலறு சீர்த்தி மான்தேர் மன்னவன்
இயல்பே மொழியினும் அத்துறை யாகும்" [புறப்பொருள்: 195]

என்று இரு விளக்கமுரைப்பர். இவற்றுள் இரண்டாவது விளக்கமே காப்பியர் கூறிய 'அடுத்தூர்ந்து ஏத்திய' என்னும் அடைமொழியுடன் மாறுபடாமல் அமைகின்றது. ஆயின் முதல் விளக்கம் பரிசில் வேண்டுவதாகவன்றே அமைகின்றது. எனவே இவ்விளக்கமும் பொருத்தமும் மேலும் ஆராயத் தகுவது.

"வேலை நோக்கிய விளக்குநிலை" [தொல், புறத்திணை: 29]

என்ற காப்பியரின் ஒரு விளக்கத்தினையும்,

"அளப்பருங் கடற்றானையான்
விளக்குநிலை விரித்துரைத்தன்று" [புறப்பொருள்: 200]

"அடரவிர் பைம்பூண் வேந்தன் தன்னைச்
சுடரொடு பொருவினும் அத்துறையாகும்" [புறப்பொருள்: 201]

என்ற ஐயனரிதனரின் இரு விளக்கங்களையும் கருதும் பொழுது, முதல் விளக்கம் நனி பொருந்தி வருதல் கூடும். காப்பியர் கூறும் துறைப் பெயர்களின் முன்வரும் சொல்லடைகள் துறை விளக்கமாய்த் துலங்கும். ஆயின் வெண்பாமாலையார் ஏறத்தாழ ஒன்பது துறைகளின் முன் அடைமொழி கூறியுள்ளார்.

	தொல்காப்பியம்	புறப்பொருள் வெண்பாமாலை
1.	'கண்படை கண்ணியவேள்வி நிலை'	'நெடுந்தேர்த் தானை நீறுபட நடக்கும் கடுந்தேர் மன்னவன் கண்படை மலிந்தன்று'
2.	'தாவின் னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்'	'அருந்திறல் மன்னரை அருளிய எழுகெனத் தொடுகழல் மன்னனைத் துயிலெடுப் பின்று' (இதில் பிற மன்னருக்கு அருள் செய்தற் பொருட்டுத் துயில் எழுப்புவதாக அமைவது, காப்பியர் விளக்கத்திலிருந்து சிறிது முரண்படுகிறது எனலாம்.)
3.	'வாயுறை வாழ்த்து' (முன் அடை இல்லை; இதற்குரிய விளக்கம் செய்யுளியல் 112-ஆம் நூற்பாவில் அமைந்துள்ளது.)	'பிற்பயக்கும் எம்சொல்லென முற்படர்ந்த மொழிமிகுத்தன்று'

4.	'செவியறிவுறூஉ' (முன் அடை இல்லை—செய்யுளியல் 114-ஆம் நூற்பா இது குறித்து விளக்குகிறது.)	'மறந்திரி வில்லா மன்பெருஞ் சூழ்ச்சி அறந்திரி கோலாற் கறிய வுரைத்தன்று'.
5.	'மாணார்ச்சுட்டிய வாண் மங்கலம்'	'கயக்கரும் கடற்றானை வயக்களிற்றான் வாள்புகழ்ந் தன்று'.
6.	'சிறந்த சீர்த்தி மண்ணுமங்கலம்'	'எண்ணருஞ் சீர்த்தி இறைவன் எய்தி மண்ணும் மங்கல மலிவுரைத் தன்று'
7.	'அச்சமும் உவகையும் எச்சமின்றி நாளும் புள்ளும் பலவற்றின் நிமித்தம் காலங் கண்ணிய ஓம்படை'	'இன்னது செய்தல் இயல்பென எய்தி முன்னின் றறிவன் மொழி தொடர்ந்தன்று'
8.	'ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்து' (செய்யுளியல் 110-ஆம் நூற்பா புறநிலை வாழ்த்தை விளக்குகிறது.)	'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப வழிவழி சிறக்கென வாய் மொழிந்தன்று' (தொல்காப்பியச் செய்யுளியல் விளக்கம் அப்படியே எடுத்தாளப் பட்டுள்ளது.)
9.	கைக்கிளை (முன்அடை இல்லை)	'தண்டாக் காதல் தளரியல் தலைவன் வண்டார் விரும்பிய வகையுரைத் தன்று'

மேலே காணப்பெறும் ஒப்பீட்டில் தொல்காப்பியர் கூறும் துறைப் பெயர்களை அப்படியே கையாண்டுள்ளதோடு, துறை விளக்கத்தினை அவர் மொழிந்த அடைமொழிகளைக் கொண்டே விளக்கியுள்ளார் என்றும் துணியலாம். இவ்வாறு ஐயனாரிதனாரின் துறை விளக்கத்திற்குக் காப்பியரின் அடைமொழிகள் மிகுதியும் பயன்பட்டிருத்தல் வேண்டும்.

துறைப்பெயர் மாற்றம்

தொல்காப்பியர் கூறிய துறைகளை — துறைகளுக்கு முன் கூறியுள்ள அடைமொழிகளை வைத்துப் புறப்பொருள் வெண்பாமாலை

ஆசிரியர் சிறிதோ முழுவதுமாகவோ துறைப்பெயர்களை மாற்றியுள்ளார். அவ்வாறு அமையும் ஆறு துறைகள் வருமாறு:

தொல்		பு. பொ. வெ. மாலை.	
1. பெரு மங்கலம்	—	நாள் மங்கலம்	முன் பகுதியில் மாற்றம்.
2. கடை நிலை	—	வாயில் நிலை	
3. குடை நிழல்மரபு	—	குடை மங்கலம்	— பின் பகுதியில் மாற்றம்.
4. கபிலை கண்ணிய வேள்வி நிலை	—	கபிலை கண்ணிய புண்ணிய நிலை	— நடுவில் மாற்றம்.
5. கடைக்கூட்டுநிலை	—	பரிசில் துறை	— முழுவதும்மாற்றம்
6. மண்ணு மங்கலம்	—	குடுமிகளைந்த புகழ்சாற்று நிலை	— முழுவதும் மாற்றம்

தொல்காப்பியர் கூறிய 'கபிலை கண்ணிய வேள்வி நிலை'யைப் புறப்பொருள் வெண்பாமாலையார் 'கபிலை கண்ணிய புண்ணிய நிலை' என்றும், 'வேள்வி நிலை' என்றும் இரண்டாகப் பகுப்பர். தொல்காப்பியத் துறைகளை ஐயனரிதனர் எந்த அளவு மாற்றம் செய்து பயன்படுத்தினர் என்பது தெளிவாகின்றது. மன்னெயில் அழித்தமை பற்றி மட்டுமே கூறினர் தொல்காப்பியர். ஆயின் ஐயனரிதனரோ நெடிய மதிலை அழிப்பதோடு, பகைவர்களின் குடுமிகளை (முடிகளை)க் களைதலையும் இணைத்துக் 'குடுமிகளைந்த புகழ்சாற்று நிலை' என்ற ஒரு துறையுள் கூறினர். புறப்பொருள் வெண்பாமாலை கூறும் துறைப் பெயரில் மாற்றார் மணிமுடிகளைக் களைவது மட்டுமே அமைகிறது. ஆனல் துறைக்கொளுவில்,

> "நெடுமதில் எறிந்து, நிரைதார் மன்னன்
> குடுமி களைந்த மலிவுரைத் தன்று" [புறப்பொருள்: 209]

என இரு செய்திகளை அமைத்துள்ளார். நெடுமதில் எறிதல், குடுமிகளைதல் என இரு துறைகளாக்கி உரைத்தற்குரிய இடமிருப்பினும் ஒரு துறையாகவே கூறியதன் நுட்பம் மேலும் நுணுகி ஆய்தற்குரித்து.

ஒரு துறையைப் பல துறையாக்கல்

'கபிலை கண்ணிய வேள்விநிலை' என்பது கபிலை நிறத்தையுடைய பசுவினைக் குறித்த வேள்விநிலை கூறுவதாக மொழிந்தார் தொல்காப்பியர். புறப்பொருள் ஆசிரியர், வேள்வி நிலையைத் தனி-

யொரு துறையாக மொழிந்து, அதற்கு முந்திய துறையாகப் 'புண்ணிய நிலை'யைக் கூறினர். காப்பியர் கூறிய துறைப்பொருளை விளக்கும் வகையில்,

" அண்ணல் நான்மறை அந்த ணாளர்க்குக்
கண்ணிய கபிலை நிலையுரைத் தன்று" [புறப்பொருள் 202]

எனக் கொளுவினை அமைத்தார். காப்பியர் கூறிய வேள்விநிலை-யையே இவர் பெயரளவில் தனித்துறையாக்கினராதல் வேண்டும். வேள்வி நிலைக்கு அடை கொடுத்தார் காப்பியர்; இவர் அடை கூற-வில்லை. வேள்வி நிலைக்குக் காப்பியர் கூறிய அடைமொழியை ஐயனரிதனர் புண்ணிய நிலைக்குக் கூறினர்.

தொல்காப்பியர், 'இருவகை விடை' என்றொருதுறை வகுத்தார்.

" பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயின் தோன்றிய இருவகை விடையும்"
[தொல், புறத்திணை : 30]

என்பது அவர் கூற்று. இது புலவன் பொருள் பெற்றபின் அவ் வள்ளல் அளித்த பரிசினைப் புகழ்ந்து, புரவலன் விடை கொடுக்க மீள்வதும், புலவன் தானே விடைபெற்று மீள்வதும் ஆகும். இவ் இருவகை விடையைப் புறப்பொருள் வெண்பாமாலையார்,

இருவகை விடை <
- பரிசில் நிலை. (இரவலன் பரிசில் பெற்றுத் தன்னூர்க்குப் போக ஒருப்பட்டது)
- பரிசில் விடை. (வேந்தன், தன்வெல் புகழைச் சொல்லிய பரிசிலர்க்குப் பரிசு நல்கி அவன்சு ற்றம் இன்-புறுமாறு விடுத்தது)

என இரு துறைகளாக்கினர்.

ஆற்றுப்படை குறித்துப் பேசும் தொல்காப்பியர் அதனை மிகத் தெளிவாகவும், பொருத்தமாகவும் விளக்கியுள்ளார். அதனை ஒரே துறையாகவே கூறிச் சென்றார் அவர்.

" கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி,
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"
[தொல், புறத்திணை: 30]

என்பதே அது. இவ்வொரு துறையையே ஐயனாரிதனார் பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை என்று நான்கு துறைகளாக்கினார். அப்படிக் கூறும் பொழுதும், பாணரை முதலாவதாகவும் கூத்தரை இரண்டாவதாகவும் மாற்றிக் கூறினார். காப்பியர் கூறிய இந்தச் சீரிய விளக்கம் வெண்பா மாலையில் அமைந்துள்ள துறைக் கொளுவில் அமையவில்லை. ஆனால் சான்றாகக்கூறும் வெண்பாக்களில்தான் அமைந்துள்ளது. அதில் ஒன்றைக் காண்போம்.

“ சேணோங்கிய வரையதரிற்
பாணனை ஆற்றுப்படுத்தன்று” [புறப்பொருள் : 216]

இதுபோலவே பிற ஆற்றுப்படைத் துறைகளும் அமைந்துள. இதன்கண், காப்பியர் கூறும் ‘பெற்ற பெருவளம் பெறுஅர்க்கு’ அறிவுறுத்துதல் பற்றிய குறிப்பு அமையவில்லை. இவ்வாறு காப்பியர் கூறிய மூன்று துறைகளை ஐயனாரிதனார் விரித்துப் பெருக்கியுள்ளார். இது துறை வளர்ச்சி நிலையாகும்.

புதுத்துறைகள்

தொல்காப்பியர் பாடாண்திணையில் கூறாத பதினாறு துறைகளைப் புறப்பொருள் வெண்பாமாலையார் கூறியுள்ளார். அவை கடவுள் வாழ்த்து, பூவை நிலை, வேள்வி நிலை, மங்கல நிலை, வெள்ளி நிலை, நாடு வாழ்த்து, கிணையது நிலை, களவழி வாழ்த்து, பெரு மங்கலம், மணமங்கலம், பொலிவு மங்கலம், ஆள்வினை வேள்வி, புலவராற்றுப்படை, புகழ்ந்தனர் பரவல்,பழிச்சினர் பணிதல்,பெருந்திணை, பாடாண்பாட்டு என்பனவாகும்.

மேலே கண்ட பதினாறு துறைகளில் பெருமங்கலம், புலவராற்றுப்படை, பாடாண்பாட்டு ஆகிய முத்துறைகளுக்கும் அடைமொழி கூறி விளக்குகின்றார் வெண்பாமாலையார்.

“ வீற்றினிதிருந்த பெருமங்கலம்’ [புறப்பொருள் , நூற்பா : 9]

“ குணஞ்சால்
புலவரை அவர்வயிற் புகழ்ந்தாற்றுப் படுத்தல்”
[புறப்பொருள் , நூ : 9]

“ நற்றுனி நவின்ற பாடாண்பாட்டு” [புறப்பொருள் , நூ : 9] என்பன அவை. ஏனையவற்றிற்கு வெறும் துறைப் பெயரே கூறுவர். இப்பதினாறு துறைகளிலும் ஒருவகைத் தொடர்பு விளங்குதல்

கருதற்பாற்று. கடவுளின் அருளை வேண்டி மன்னவனை வாழ்த்துவது **கடவுள் வாழ்த்து**; அவ்வரசனை ஆனிரை காத்த மாயவனின் நிறத்துடன் உவமித்துப் புகழ்வது **பூவை நிலை**; துயில்நீத்த மன்னன் முன் மங்கலம் கூறுவது **மங்கலநிலை** ; மன்னவன் ஆட்சி சிறக்க மழை வேண்டும்; அம்மழை பொழியும் வெள்ளி என்னும் கோளின் சிறந்த தன்மை கூறுவது **வெள்ளிநிலை** ; அதனால் அம்மன்னவன் நாடு வளமுடையதாகும்; அவ்வள முரைப்பது **நாடு வாழ்த்து**; இப்படி மேலே கண்ட புதுத்துறைகளிடையே ஒரு சங்கிலித்-தொடர்பினைக் காணமுடிகிறது. தொல்காப்பியர் கூறிய கைக்கிளையை இவரும் கூறினார். அதனையடுத்துப் பெருந்திணையையும் அகத்திணை-யின்கண் அமையும் ஊடல் பொருளாகத் தோன்றிய பாடாண்பாட்-டினையும் இணைத்து மொழிந்த மாற்றம் உன்னத்தக்கது. இவ்வாறு அகத்திணைக் கூறுபாடுகளை ஒரு துறையாக்கிக் கூறுவதற்கு அடிப்-படைக் காரணம் தொல்காப்பியர் கைக்கிளையைப் பாடாண்திணையுள் ஒரு திணையாக்கிக் காட்டியமையே என்று துணிய இடமுண்டு.

பாடாண் வகைகள் துறையாக்கப்படுதல்

''கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே''

[தொல், புறத்திணை : 27]

என்றார் காப்பியர். இது கடவுள் வாழ்த்துடன் சார்ந்துவரும் மரபு கூறும் நூற்பா. இதனைக் காப்பியர் துறையாகக் கூறினாரிலர். ஆனால் ஐயனாரிதனார் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்று முத்துறைக-ளாக்குவர் அதனோடு மட்டும் அமையாது, காப்பியர் பாடாண்திணை இரண்டாம் நூற்பாவில் பகர்ந்த முதலடியாகிய ''அமரர்கண் முடியும் அறுவகையானும்'' என்பதனை முன்னொட்டாக இணைத்து,

''அமரர்கண் முடியும் அறுவகை யாகிய
கொடிநிலை கந்தழி வள்ளி'' [புறப்பொருள், நூற் : 9]

என்றுரைத்தார் ஐயனாரிதனார். காப்பியர் துறைகளாகப் பாகுபடுத்-தாமற் சென்றவை இம்மூன்றும் ஆகும். இதனைப் போன்றே,

''காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்''

[தொல், புறத்திணை : 23]

என்ற தொல்காப்பிய நூற்பாவினை, 'கடவுண் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்த பக்கம்', 'கடவுண் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்' என்று இருதுறைகளாகப் பெருக்கினார். இவை போன்றே இன்னும் இருதுறைகள் அமைகின்றன.

தொல்	புறப்பொருள்
"குழவி மருங்கினும் கிழவ தாகும்"	"மாதர் மகிழ்ந்த குழவியும்"
"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப"	"ஊரின் கண்ணே தோன்றிய காமப்பகுதி"

எனவும் கூறித் துறைகளாகவே அமைத்தார். இவ்வாறு தொல்காப்பியர் மொழிந்த நான்கு சிறப்புப் பாகுபாடுகளைப் — பாடாண் மரபுகளைப் பிற்காலத்தவராகிய ஐயனாரிதனார் ஏழு தனித்தனித் துறைகளாக்கி விரித்துச் சொன்னார்.

விடுபட்டுப் போயின

ஒரு துறையைப் பல்துறையாக்கிய சிந்தனை வளர்ச்சிப் படி நிலையை இதுகாறும் கண்டோம். அதே சிந்தனையாளராகிய ஐயனாரிதனார், காப்பியர் கூறிய பாடாண் வகைகளைக் கூறாது நீக்கிவிட்டார் என்பதும் அறியத்தக்க செய்தியாகும்.

"அமரர்கண் முடியும் அறுவகையானும்"

(தொல், புறத்திணை : 21)

"வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇ......"

(தொல், புறத்திணை : 22)

என்ற தொடக்கமுடைய நூற்பாக்களின் செய்திகளையும்,

"மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் மொழிப"

[தொல், புறத்திணை : 26]

"கொற்ற வள்ளை ஓரிடத் தான" [தொல், புறத்திணை : 28] ஆகிய நூற்பாக்களின் கருத்துக்களையும் ஐயனாரிதனார் எடுத்துக் கூறவில்லை. பாடாண் பகுதிகளாகப் பகர்ந்த கொடிநிலை, கந்தழி, வள்ளி அனைய பிறவற்றையும் தனித்தனித் துறைகளாக்கிய ஐயனாரிதனார் மேலே கண்ட நான்கு நூற்பாக்களையும் துறைகளாக்காமை வியப்பிற்குரியதே!

பிற இடத்தில் பேசல்

தொல்காப்பியர் "கொடுப்போர் ஏத்திக் கொடாரப் பழித்தலை" ஒரு துறையாகப் பாடாணுள் அடக்கினார். காப்பியர் கூறிய

இருபது துறைகளில் பத்தொன்பதனை ஒட்டியும் வெட்டியும், புதுக்கியும் தந்த ஐயனாரிதனார் இத்துறையை மட்டும் ஒழிபியலில் கொண்டு இணைத்துள்ளமை விந்தைக்குரியதாகும்.

''பாடாண் பகுதியுள் தொல்காப் பியமுதற்
கோடா மரபிற் குணனொடு நிலைஇக்
கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்''

(புறப்பொருள் : 18)

என்பதே அது. பரிசில் நிலை, பரிசில் துறை, பரிசில் விடை ஆகிய பரிசு தொடர்பான துறைகளைக் கூறிய ஆசிரியர் இத்துறையை மட்டும் ஒழிபியலில் கூறுவதற்குரிய காரணம் ஆய்தற்குரியது.

முடிவுரை

ஐயனாரிதனார், தொல்காப்பியர் மொழிந்த துறை முன்னடை- களைக் கொண்டே கொளுக்களைக் கூறியிருத்தல் வேண்டும் என்- பதும், சில துறைகளை எம்மாற்றமும் செய்யாது ஏற்றுக்கொண்டுள்- ளார் என்பதும், சில துறைகளை சிறிதோ முழுவதுமாகவோ மாற்றி- யும் துறைகளைக் கையாண்டுள்ளார் என்பதும் பாடாண் வகைகளை- யும் துறையாக்கினர் என்பதும் தெளிவாகின்றன. புதுவதாகக் கூறிய துறைகள் மிகுதியாக உள. தொல்காப்பியத் துறை வைப்புமுறை- யில் பிறழ்ச்சி இருப்பதுபோல் தோன்றுகின்றது. ஆனால் ஐயனாரித- னார் கூறிய துறைகளின் வரிசை அமைப்பு மிகுதியும் பொருத்த- மாகவும், திட்பமுள்ளதாகவும் விளங்கக் காண்கின்றோம். மேலும் மூன்று பாடாண் துறைகளுக்கு உரைவேறுபாடு கூறுவது போல் இருவிளக்- கங்கள் கூறியுள்ளார். காப்பியர், 'மண்ணுமங்கலம்' என இரு துறை- களுக்குப் பெயர் மொழிந்தார். அதன்முன் அடைச்சொற்களைக் கொண்டு வேறுபாட்டினை அறிய வைத்தார். ஆயின் ஐயனாரிதனாரோ அவ்வாறு இரு துறைகளுக்கு ஒரே பெயரைக் கொடுக்க விழையாது, ஒன்றனை 'மண்ணுமங்கலம்' என்றும், மற்றொன்றனைக் 'குடுமிகளைந்த புகழ்சாற்றுநிலை' என்றும் மாற்றி வழங்கியமை அறியற்பாற்று. இதுகாறும் இருபது துறைகள் நாற்பத்தேழாக விரித்துரைக்கப்- பட்டமைக்கான காரணங்களை ஒருவாறு கண்டோம்.

துணை நூற்பட்டியல்

1. தொல்காப்பியம் : பொருளதிகாரம், இளம்பூரணம், கழக- வெளியீடு. சென்னை- 1, 1974.
2. புறப்பொருள் வெண்பாமாலை, பொ. வே. சோமசுந்தரனார் விளக்கவுரை, கழக வெளியீடு, சென்னை- 1, 1974.

6

தொல்காப்பியர் கூறும் தலைவி

ப. பா. இராசேந்திரன்

முன்னுரை

தலைவியின் புனைவு பற்றித் தொல்காப்பியர் சுட்டுமிடங்கள் பல. செய்யுளியலுள் அகத்திணை மாந்தர்களுள் ஒருத்தியாக அவள் குறிக்கப்படுகிறாள். களவிலும் கற்பிலும் அவளுக்கு இன்றியமையாத இடனுண்டு என்பது தெளிவுபடுகின்றது. அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் ஆகிய இவ்வைந்து இயல்களிலும் தொல்காப்பியர் தலைவி பற்றிய படைப்புக்கு வழிகாட்டுகின்றார். அவை அனைத்தையும் தொகுத்துக் காண்பதன் மூலம் பண்டையிலக்கியத்தில் தலைவி பெற்ற இடத்தினையும் சிறப்பினையும் நாம் மதிப்பிடுதல் கூடும்.

இயல்பு

''குடிப்பிறப்பு, அதற்கேற்ற நல்லொழுக்கம், ஆள்வினைத்தன்மை, பருவம், வடிவம், அழகை வாயிலாகக் கொண்டு நிகழும் அன்பு, உள்ளத்தை ஒருவழிப்படுத்துதல், அனைத்து உயிர்களிடத்தும் அருள் உடையவராய் இருத்தல், அறிவு, திரு''[1] என்ற இப் பத்துக் குணங்களிலும் தலைவனோடு ஒத்திருப்பவள் தலைவி. அடக்கம், அமைதி, நேர்மை, உண்மையினை வற்புறுத்தும் சொல் வன்மை, நல்லறிவு, அருமை''[2] என்பனவும் 'அச்சம், நாணம், பேதைமை''[3] ஆகியனவும் தலைவிக்குரிய இயல்புகளாகும். மேலும், தலைவியின் இயல்புகளைப் பின்வரும் தொல்காப்பிய நூற்பாவும் உணர்த்தும்:

---

1. தொல் மெய்ப். 269
2. தொல். பொருள். 206
3. தொல். களவு. 96

"கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்
பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்" (கற்பியல். 11)

"தன் உள்ள வேட்கையைத் தலைவனிடத்துச் சொல்லும் இயல்பு தலைவிக்குக் கிடையாது. எனினும் அவளது காதல் புதுக் கலத்தின் கண் பெய்த நீர் போலப் புறம் பொசிந்து காட்டும் உணர்வினை- யுடையது."[4] 'அவள் கூறும் கருமம் துணையோரால் செய்யப்படும் கருமம். ஆதலால் தலைவி, தன்னயம் மருங்கின் நாட்டம் வேண்டு- தலின் துணையைச் சுட்டிக் கூறுவாள்.'[5]

"அருள் முந்துறுத்த அன்புபொதி கிளவி பொருள்பட மொழிதல் கிழவோர்க்கும் உரித்தே" என்ற தொல்காப்பிய நூற்பாவும் தலைவியின் இயல்பினைப் (தொல். கற்.159) புலப்படுத்தும்.

வயது

தலைவனுக்கும் தலைவிக்கும் முறையே பதினாறும் பன்னிரண்டும் அகவையாகக் கூறப்பட்டிருத்தலைமெய்ப்பாட்டியலில்'பிறப்பே குடிமை' என்னும் நூற்பா (பேராசிரியர்) உரையில் காணலாம்: "பன்னிரண் டாண்டும் பதினாருண்டும் பெண்மையும் ஆண்மையும் பிறக்கும் பருவம் என்பது வேதத்துள் ஒப்ப முடிந்தமையின் அதுவும் ஒப்பெனவே படும்".

ஒழுக்கம்

தலைவி தலைவனோடு கூடும் களவு ஒழுக்கம் நான்கு வகை- யாகக் கூறப்பட்டுள்ளது. அவை: இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்- பாடு பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம் என்பன. தொல்காப்பியர் இவ் வகைகளை,

"காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
பாங்கொடு தழாஅலும், தோழியிற்புணர்வுஎன்று
ஆங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு
மறையென மொழிதல் மறையோர் ஆறே"
(தொல்.செய்.487)

என்று குறிப்பிடுகின்றார்.

4. தொல். களவு. 116
5. தொல். களவு. 121

இயற்கைப் புணர்ச்சியின் போது தலைவி தன்னுடைய வேட்-கையை வெளிப்படக் கூறாது கண்களால், குறிப்பால் உணர்த்துவாள். இவற்றை,

“நாட்டம் இரண்டும் அறிவுஉடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்” (தொல். களவு 5)

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

“கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல” (குறள் : 1100)

என்ற குறட்பாவின் கருத்தும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

தலைமகன் வேட்கை மிகுதியினால் மெய்யுறு புணர்ச்சியை விரும்பினான் ஆயினும் தலைமகள்பால் தோன்றும் அச்சமும், நாணமும், மடமும் அதற்குத் தடையாய் நிற்கும். அத்தடை நீங்குவதற்காகத் தலைவியை முன்னிலைப்படுத்திச் சில கூறுவான். அவளுடைய நலத்தினைப் பாராட்டுவான். அது கேட்ட தலைவிக்குப் புன்முறுவல் உண்டாகும். இவ்வாறு முறுவலித்து நிற்கும் தலைவியை நற்றிணைப் பாடல் ஒன்றில் காணலாம்.

“பெருங்கடற் பரப்பின் அமர்ந்துறை அணங்கோ
இருங்கழி மருங்கின் நிலைபெற் றனையோ
சொல்லினி மடந்தை என்றனென் அதனெதிர்
முள்ளெயிற்று முறுவலுந் திறந்தன
பல்லிதழ் உண்கணும் பரந்தவால் பனியே”

(நற்றிணை. 155)

இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்து இருவரும் பிரிந்த பின்னர்த் தலைவன் மறுநாளும் தலைவியைக் காண எண்ணி, முதல் நாளில் அவளைக் கண்ட இடத்திற்கு வருவான். தலைவியும் அத்தகைய மன நிலையுடன் முன்னரே அங்கு வந்து நிற்பாள் தோழியரோடு விளையாட வந்தும் விளையாட்டில் விருப்பம் கொள்ளாள். அவளது காதற் பெருக்கை உணர்ந்த தலைமகன் அவளை மெய்யுறத் தீண்டிக் குறிப்பறிவான். இது மெய் தொட்டுப் பயிறல் எனப்படும். மெய் என்பது தோளைக் குறிக்கும் என்பர் மு. இராகவையங்கார்.

"உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்" (குறள் : 1106)

என்ற குறளையும் இவர் எடுத்துக் காட்டுவார்.

இன்னணம் மெய் தொட்டுப் பயின்றவன் தலைவியின் உடன்பாட்டுக் குறிப்பறிந்து அவளைப் பலவாறு புகழ்ந்து நெருங்குவான். 'என் சொல்லுக்கெல்லாம் மறுமொழி சொல்லாது நாணுபவளே,' 'நின் நாணம் என் காமத்தைப் பெருக்கின் தாங்குவது எப்படி' என்று நற்றிணை முப்பத்தொன்பதாவது பாடல் கூறும். தலைவி தன் இயற்கைக் குணங்கள் தடுத்தலால் நாணிக் கண் புதைத்து நிற்பாள். பின் தலைவியைக் கூடி மகிழ்ந்த தலைவன் அவளைப் பிரியும் பொழுது எஞ்ஞான்றும் இனிப் பிரியேன் என்று சூளுரைத்து அவளைந் தேற்றி நீங்குவான். "இடந்தலைப்பாடு பற்றிச் சங்க இலக்கியத்தில் மூன்று பாடல்களே (ஐங்.197; நற்.39; 155) உள்ளன. இவற்றில் புணர்ச்சி வேட்கை காணப்படுவதன்றிப் புணர்ந்த குறிப்பு ஒரு சிறிதும் இல்லை" என்பார் வ.சுப. மாணிக்கம். மேலும், அவர் இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம் தோழியிற் கூட்டம் என்ற குறியீடுகள் காதலரிடைப் புணர்ச்சியுண்டு என்பதை வெளிப்படையாகக் காட்டுவதைப் போல் இடந்தலைப்பாடு என்னும் குறியீடு காட்டவில்லை என்று கூறுவதும் அறியத்தக்கது."[6]

களவு வாழ்க்கையில் பாத்திரங்களாக நின்று கூற்று நிகழ்த்துதற்கு உரியவர்கள் அறுவர். அவர்களைத் தொல்காப்பியர்,

"பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
சீர்த்தகு சிறப்பின் கிழவன் கிழத்தியோடு
அளவியல் மரபின் அறுவகை யோரும்
களவினில் கிளவிக் குரியர் என்ப" (தொல்,செய். 490)

எனக் குறிப்பிடுவார்.

கூற்றுக்கள் நிகழுமிடம்

களவியலில் மூன்று இடங்களில் தலைவி கூற்று நிகழாது; மூன்று இடங்களில் கூற்று அருகி வரும். தலைவியைத் தலைவன் காணுமாறு நிற்றல், தலைவியைத் தலைவன் காணமல் தலைவி அவனைக் காணுதல், மிகுந்த வேட்கையால் தலைவன் கூறிய சொற்களைக் கேட்டு எதிர் மொழி கூறாது மடிந்து நிற்றல் ஆகிய மூன்று

---

6. தமிழக் காதல் பக். 49.

இடங்களில் தலைவி கூற்று நிகழாது. தலைவியின் வேட்கைக் குறிப்பறிந்த தலைவன் சாரலுற்ற வழி அதற்கு உடம்படாது மறுத்தல், மறுத்தபடியே மருது பின் அவனை ஏற்றுக் கொள்வது, குற்றந்தீர்ந்த முறுவல் சிறிது தோற்றுவித்தல் ஆகிய இடங்களில் தலைவி கூற்று அருகி நிகழும். தலைவி தன் தோழிக்குக் கூறும் பான்மையில் பதின்மூன்று கூற்றுக்களைக் காணலாம். இப் பதின்மூன்றும் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின் நிகழ்வன என்பர் இளம்பூரணர்.

1) தலைவன் கையகப்பட்ட பின்பு 'என் செய்தேன் ஆயினேம்' என்று தலைவி கலங்குவாள் என இளம்பூரணர் விளக்குகின்றார்.

2) தலைவி முன்பு கொண்ட நாணத்தை விட மிகுதியான நாணம் கொள்ளல்.

3) தலைவன் இட்டு வைத்துப் பிரிவான் என அஞ்சுதல்.

4) தலைவன் வருதற்குக் காவலாகிய அருமை செய்ததனால் அவனும் வருதலைத் தவிர்த்தல்.

5) தலைவன் வந்தவிடத்து 'அலர்' ஆகும் என்று அஞ்சி இகழுதல்

6) மறையாது சொல்லி இரங்குதல்.

7) தலைவன் தெளிவித்த தெளிவை (தேற்றுதல்) நொந்து அதனை ஒழித்தல்,

8) தலைவன் வருகின்றது இடையீடாக அச்சம் மிகுந்து சொல்லல்.

9) தலைவன் பிரிந்தவழிக் கலக்கமுற்றுக் கூறல்.

10) தலைவனோடு கூட்டம் நிகழ்ந்தபோது மகிழ்ந்து கூறுதல்

11) 'தலைவன் வருவதற்கு இடையீடாகக் காவலர் கடுகுதலான் கண்டு வருதல் அரிது' என்று தோழி தலைவிக்குச் சொல்லும் போதும் தலைவி கூற்று நிகழும்.

12) தோழி கூறிய கூற்றை மனங் கொள்ளாத காலத்தில் தலைவி கூறுதல்.

13) இற்செறிக்கப்பட்டு வெளியேற முடியாமல் கலங்கிய போது தோழிக்குத் தலைவி கூறுதல்.

(எ - டு) "பலவின் பழம்பெற்ற பைங்கண் கடுவன்
எலவென்று இணைபயிரும் ஏகல்சூழ் வெற்பன்
புலவுங்கொல் தோழி புணர்வறிந் தன்னை
செலவுங் கடிந்தாள் புனத்து" (திணைமொழி: 10)

இப் பதின்மூன்றும் கூருக்காலத்துத் தன்உயிர் செல்லுமாறு சொல்லு-வாள் தலைவி.

தன் குறி தப்பித் தலைவன் எதிர்ப்படுதல் இல்லாக் காலத்து வந்தவன் பெயர்ந்த வறும் களம் நோக்கிக் கலக்கமில்லாமல் தலைவி கூறும் கூற்றுக்கள் பத்தும் களவியலில் உள்ளன.

1) தலைவியைப் பிறன் ஒருவன் மணங்கொள்ள வந்தால் அதனை மாற்றுவதற்காகக் கூறும் கூற்று.

2) தலைவனோடு கூடிய உண்மையை ஆராயும் பொழுது, கண் சிவப்பு, நுதல் வியர்ப்பு முதலான மெய்வேறுபாடு நிகழ்ந்-துழி, தோழி அறியாமலும் செவிலி அறியாமலும் மறைக்கு-மிடத்தில் கூறும் கூற்று.

3) ஊழால் நிகழ்ந்த புணர்ச்சியைக் குறித்து ஒற்றுமைப்பட்ட நட்பினால், தலைவன் வரைதற்குக் குறையுறுகின்றதனைத் தெளிந்த தலைவி செய்தற்கு அருமை அமைந்த எட்டு வகையினால் பெருமை இழந்த இயல்பினளாகி நிற்றல். அவ் எட்டு வகையாவன; முட்டுவயிற் கழறல், முனிவு மெய்ந்நிறுத்தல், அச்சத்தின் அகறல், அவன் புணர்வு மறுத்தல், தூது முனிவின்மை, துஞ்சிச் சேர்தல், காதல் கைம்மிகல், கட்டுரையின்மை ஆகியன ஆகும்.

4) பொய்ம்மையாகத் தலைவன் மடலேறுவேன் என்று கூறிய போதும் தலைவி வெறுத்த உள்ளத்தை உடையவளாகக் குறிவழிச் செல்லாள்.

5) தோழி தன் கையினால் தலைவியின் கண்ணீரைத் துடைத்த போதும் தலைவி குறிவழிச் செல்லாள்.

6) தலைவியினிடத்தும் வேறுபாடு கண்ட செவிலி வெறியாட்டு-விக்க வரும் அச்சத்தினாலும் தலைவி குறிவழிச் செல்லாள்.

7) தலைவன் செய்த குறியை ஒப்புமை பற்றிச் சென்று அஃது அவ்வழி மனுதற்கண்ணும் தலைவி குறிவழிச் செல்லாள்.

8) தலைவன் மணம் செய்து கொள்கின்ற நாள் அண்மையில் வரி-னும் தலைவி குறிவழிச் செல்லாள்.

9) களவொழுக்கத்தினைப் பிறர் அறிந்தபோதும் தலைவி குறி-வழிச் செல்லாள்

10) தன்னை ஐய முற்றுச் சுற்றத்தார் காத்த காரணத்தினால் தலைவி கூறுவாள்.

இனி, ஐந்து இடங்களில் தன்வயின் உரிமையும் அவன்வயின் பரத்தமையும் அவை போல்வனவும் நிகழும்போது தலைவிக்குக் கூற்று நிகழும்.

1) தோழி தலைவனைக் குற்றம் கூறிய போது தலைவியானவள் 'அவன் குற்ற மிலன்' என இயற்பட மொழிவாள்.

2) தலைவன் வரும் காலமும் இடமும் குற்றமுறுதாதலின் ஆண்டு அழிவு வந்த சிந்தைக்கண்ணும் தலைவி கூற்று நிகழும் தலைவன் வரும் காலம் குற்றமுடையது என்று கூறுவது.

3) தலைவன்பால் கொண்டுள்ள வேட்கை மிகுதியால் தலைவி கூற்று நிகழும்.

4) தலைவனின் தலையளி மிகுதலால் தலைவி கூற்று நிகழும்.

5) 'இவன் வரைந்தாலல்லாமல் நீங்கான்' என்ற ஏமம் (பாது காவல்)பொருந்திய மகிழ்ச்சி வந்துழித் தலைவி கூற்று நிகழும்.

தலைவி தானே கூறலும் உண்டு. இக் கூற்று மூன்று இடங்-களில் நிகழும்.

1) தலைவன் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்குகின்றான். இற்றை நாள் மணந்து கொள்வேன் என்று கூறித் தோழி-யிற் கூட்டத்திற்கு முயலாது பிரிவான். தோழி ஐயப்படு-வாளே என்பதனால் அதனை மறைத்தொழுகும் தலைவி, தலைவன் வரும் வரை ஆற்றாமல் வருத்தமுற்றுக் கூறுவாள்.

2) மணம் செய்து கொள்ளாது ஒழுகும் காலத்து மறைந்து களவொழுக்கம் நிகழ்த்தும் தலைவனானவன், செவிலி முத-லானோரை எதிர்ப்பான், அது கண்டு தலைவி கூறுவது.

3) இவ் ஒழுக்கத்தினை 'நின் தோழிக்கு உரை' எனத் தலை-வன் கூறத் தலைவி கூறுதல்.

"எல்லாவற்றினும் சிறந்த உயிரினும் மகளிர்க்கு நாணம் சிறந்-தது. அந்நாணத்தை விடக் குற்றம் தீர்ந்த கற்புச் சிறந்தது".— இன்னணம் முன்னையோர் கூறிய கூற்றினை நினைத்துக் கொண்டு, "தலைவன் இருக்குமிடம் தலைவி தானே சென்றுலும், வருத்தமிலார் சொல்லைத் தானே சொல்லுதலும், இவை போன்ற பிறவற்றைச் சொல்லுதலும் ஆகிய இவை அகப்பொருளாய் உயர்ந்து தோன்றும்" என்பர் இளம்பூரணர். "பல வகையானும் தலைமகன்பாலுளவாம் நன்மைகளை நாடுவார் பக்கத்தினை, ஆராயும் ஆராய்ச்சி தலைவனுக்கு வேண்டுமாதலானும் தாங்கள் மேற்கொண்ட அன்பின் வழிப்பட்ட களவொழுக்கம் ஒன்றிய அன்புடைய துணையாகிய தோழியால் புறத்-தாரறியாது நிலைபெற்று நிகழ்தல் வேண்டுமாதலானும் தனக்குத் துணையாவாள் இன்னுளெனத் தலைவனுக்குச் சுட்டிக் கூறும் சொல் தலைவிக்குரிய தாகும்"[7] என்பர் ஆசிரியர்.

கற்பியலில், கற்பின் இலக்கணம் முதற்கண் கூறப்படுகிறது. கொள்ளுதற்குரிய தலைவன் வேள்விச் சடங்கோடு கூடத் தலைவியை அவர் பெற்றோர் கொடுப்பக் கொள்ளுதல் கற்பெனச் சிறப்பித்து உரைக்கப்படுகிறது. கணவனிற் சிறந்த தெய்வம் இல்லையெனவும், அவனை இன்னவாறு வழிபடுதல் வேண்டுமெனவும், தலைமகளுக்குப் பெற்றோர் கற்பித்தலானும், அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், விருந்தினர் முதலியோர்பால் இன்னவாறு நடந்து கொள்ளுதல் வேண்டுமெனத் தலைமகன் தலைமகளுக்குக் கற்பித்தலானும், நின் மனைவியை இவ்வாறு பாதுகாப்பாயாக எனத் தலைவனுக்கும், நின் கணவனுக்கு இவ்வாறு பணி செய்து ஒழுகுவாயாக எனத் தலைவிக்கும் சான்றோர் கற்பித்தலானும், இவ்வதுவைச் சடங்காகிய க்ரணமும் கற்பெனப் படுவதாயிற்று என்பர் நச்சினுர்க்கினியர். இதனை, 'கற்-பென்னுந் திண்மை' என்றுர் வள்ளுவர்".[8]

கற்பின்கண் பத்தொன்பது இடங்களில் தலைமகள் கூறும் கூற்றுக்கள் நிகழும் என்பர் ஆசிரியர்,

1. தலைவனது அறிவைத் தலைவி நன்றுக அறிந்துபட்டவள் ஆதலின் அவனை உயர்த்திக் கூறும் இடத்தில் தலைவி கூற்று நிகழும்.

---

7. தொல்காப்பியம் (வரலாறு), வெள்ளைவாரணம். பக். 128-129.
8. தொல்காப்பியம் (வரலாறு), வெள்ளைவாரணம். பக். 131-132.

2) தலைவனது பண்பினைத் தோழி கூறியவாற்றால் தலைவி நிறுத்திக் கூறுதல், அதாவது தலைவியும் உடன்பட்டுத் தலைவனின் பண்பைப் போற்றல்.

3) தனக்கு உரிமையைக் கொடுத்த தன் தலைவனிடத்துப் பெருமையினின்றும் திரியாத அன்பு செய்தல்.

4) பொருள்வயிற் பிரியும் தலைவனைத் தலைவி பிரிந்திருத்தலால் ஏற்படும் தனிமை பெரிதாகலின், அப்போது வருத்தம் பெருகிய காமத்தின் மிகுதியால் தலைவி கூறும் கூற்று.

5) தலைவிக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கு நிகழும் இடம். அஃதாவது பிரிந்த தலைவனை எதிர்ப்பட்டபோது இன்பமும் பிரிந்தபோது துன்பமும் ஏற்படும் காலத்தில் தலைவி கூற்று நிகழும்.

6) யானைக் கன்று போன்ற மகன் பிறந்தமையால் எண்ணெய் ஆடுதலைக் காண விரும்புவான் தலைவன். அப்போது தலைவி, தன்னைச் செறிதலின்றி நீங்கினன! தன் நெஞ்சு புண்ணுகுமாறு செய்து பிரிந்தான் என்ற காரணத்தினுல் அவனை இகழ்ந்து கூறுமிடத்தில் தலைவி கூற்று நிகழும்.

7) தலைவன் பரத்தையிற் பிரிந்து சென்றுன். அவள்பால் இன்புற்றுத் தம் இல்லம் திரும்பினுன். தனிமைத் துன்பத்தால் அவன்பால் மனம் சென்றது; அங்ஙனம் சென்ற உள்ளத்தைச் செல்லவிடாமல் மீட்டாள்; புதிய பரத்தைக்கு ஒன்று கொடுக்க வந்தான் என்று கொண்டு, அவனை வெறுத்துப் புணர்ச்சிக்கு இடம் கொடுக்க மறுத்தாள். எனினும், அவன்பால் உள்ள அன்பால் ஊடல் தணிந்து சில கூறினுள்.

8) பரத்தையரிடத்துத் தங்கிய ஒழுக்கத்தையுடைய தலைவனைப் பணிந்து, அவனை நோக்கி, 'நீ கூறும் பணித்த மொழிகளை என் தங்கையர்க்கு உரைப்பாயாக' என வேண்டிக் கொண்டு, 'என்னைத் தொல்லைப் படுத்தாதே; உனக்கு விரும்பிய அப் பரத்தையற்பாற் செல்க' என்று கூறுமிடத்தில் தலைவி கூற்று நிகழும்.

9) தலைவன் பரத்தையர்மாட்டுச் செல்லாத காலத்திலும் தலைவி போவெனக் கூறுதல்.

10) தலைவனுடைய காமக்கிழத்தியானவள் தலைவியின் மகனைத் தழுவிக் கொண்டு மகிழ்ச்சியோடு விளையாடுதலைத் தலைவி மறைந்து இருந்து கூறுவாள்.

11) தலைவியும் காமக்கிழத்தியைப் போல் தன் மகனோடு விளையாடுவாள். அதுபோது தலைவன் தோன்றி அஞ்சா நெஞ்சத்தோடு, தனது வரவைத் தலைவி அறியாளாக நின்று, தலைவியைப் புறம் பெய்து அவளிடத்தில் உண்டாகிய ஊடலைப் பெயர்தல் வேண்டிய இடத்துத் தலைவி கூற்று நிகழும்.

12) தெருவில் விளையாடும் தலைவியின் மகனைக் காமக்கிழத்தி தழுவி மகிழ்வுடன் விளையாடுவதைக் கண்ட தலைவி, மகனைப் பார்த்து, 'நீயும் உன் தந்தையைப் போல் இருப்பாய்' என்று பழித்து வெகுண்டு கூறுமிடத்துத் தலைவி கூற்று நிகழும். குறிப்பாகத் தலைவனைப் பழித்தலாகும்.

13) பாணர், கூத்தர், விறலியர் முதலானோரால் 'தலைவன் பரத்தையின் வீட்டில் உள்ளான்' என்பதை அறிந்த தலைவி சினம் கொள்வாள். அவர்கள் வாயிலாக வரத் தலைவி வாயில் மறுப்பாள். பின்பு தலைவன் தானே வாயிலாக வருவான். அப்போது அவனது தவற்றினைக் கூறுவாள்.

14) தலைவனது கொடுமை ஒழுக்கத்தினைத் தலைவியே பொறுக்க வேண்டும் என விரும்பித் தலைவியது அடிமேல் வீழ்ந்த தலைவனை நெருங்கி 'நின்னிடத்துக் காதல் கொண்ட பரத்தையர் கண்டால் இப்பணிதல் மிக நன்றாய் இருக்கும்' என்று கூறும் கூற்று.

15) தலைவன் தன் மகனையும் பரத்தையர் சேரிக்கு அழைத்துச் செல்கின்றான். அப் பரத்தையர் அச்சிறுவனுக்குப் பல அணிகலன்கள் அணிந்து மகிழ்கின்றனர். புறப் பெண்டிர்மாட்டுப் போகிய தலைவனை வெருளுதல் போலத் தன் மகன் பரத்தையர் இல்லத்துச் சென்று நல்லணி அணிந்து திரும்பி வரும் காலத்தும் மகனையும் வெகுண்டு பேசுமிடத்துத் தலைவி கூற்று நிகழும்.

16) தன்னிடத்து நின்ற மிகுதியானும், தலைவனிடத்து நின்ற வேறுபாட்டானும் இன்னாத பழைய சூளுரையைத் தலைவி அடுத்த வழி, கூற்று நிகழும். இதனைத் தொல்காப்பியர்,

"மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய"
என்று குறிப்பிடுவர். (தொல். பொருள்.223)

17. தலைவி காமக் கிழத்தியின் நலத்தினைப் பாராட்டுவாள். அப் பாராட்டு தீமை பற்றி வருவது. தலைமகனின் நலத்தைத் தலைவன் பாராட்டிய போதும் தலைவி கூற்று நிகழும்.

18. தலைவன்மாட்டு நிகழும் கொடுமை ஒழுக்கங்கள் அனைத்தையும் தலைவி தோழிக்குக் கூறமாட்டாள். எதைக் கூறலாமோ அதனை மட்டும் கூறுவாள். குற்றமற்ற சிறப்பினையுடைய கற்பின்கண் திரியாது, தலைவனைக் காய்தல், உவத்தல் இவற்றை நீக்கி நிறுத்தல், பேணிக் கோடல், அவ்விடத்து வரும் பலவாய வேறுபட்டு வரும் நிலை தோழிக்குரியன வாகும்.

19. வாயில்கள்மாட்டு நிகழும் கூற்று வகைகள்:

பார்ப்பார், பாங்கன், தோழி, செவிலி, பாணன், பாடினி, விறலி, இளையர், விருந்தினர், கூத்தர், அறிவர், கண்டோர் எனப் பன்னிருவர் வாயில்களாவார், வாயிற்குக் கூறல், வாயின் மறுத்தல், வாயில் நேர்தல் என வாயில் மூவகைப்படும். உழையர் வாயிலாகக் கூறிய குறுந்தொகைப் பாடல் ஒன்றைச் சான்றாகக் காண்போம்.

"நீ கண்டனையோ கண்டார்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையின மொழிமோ
வெண்கோட் டியானை சோணைபடியும்
பொன்மலி பாடினி பெறிஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே"
(குறுந்: 75)

செயல்

"தலைவனைக் கூடி மகிழுங் காலத்தில் தாயைப் போன்று இடித்துரைத்துத் திருத்தி அவனது மனக் கவலையை மாற்றுவதும் மனைவிக்குரிய கடமையாகும். தலைவனது ஒழுக்கத்தில் சோர்வு பிறவாமல் காத்தல் தலைவியின் கடமையாக நூல்களில் சொல்லப்படுவதால், மகனைப் பெற்ற தாயாகிய மனைவி இன்னணம் இடித்துரைக்கும் உயர்வுடையளாதலும் தலைவனது உயர்வாகவே கருதப்படும்.

பொருளியலில் தலைவி கூற்று

தலைமகள் தனது உடல் வனப்பு வேறுபட்டுத் தனிமையுறுங்-கால் தலைமகனது பிரிவைத் தன் அவயங்கள் முன்னமே உணர்ந்தன போலப் பொருந்திய வகையால் கூறுதலும் உண்டு. தன் உடம்பும் உயிரும் மெலிந்த நிலையிலும் 'இவை என்ன வருத்தமுற்றன'? எனத் தனக்கு வருத்தமில்லாதது போலக் கூறுவதல்லது, தலைவனைத் தானே சென்று சேர்தல் தலைமகளின் இயல்பன்றாம். இதனைத் தொல்-காப்பியர்,

"உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்
என்உற் றனகொல் இவைஎனின் அல்லாத
கிழவோற் சேர்தல் கிழத்திக்கு இல்லை"

(தொல்.பொருள் : 200)

என்று குறிப்பிடுகின்றார்.

"கதுமெனத் தாம் நோக்கி தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து"

(குறள் : 1173)

என்ற குறட்பாவும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

தன் நெஞ்சுடன் தனித்து ஆராயுங்காலத்து, தலைமகள் இருக்குமிடத்தைத் தலைவி அடைதலும் வேண்டும் எனக் கூறுதலும் உண்டு.

தலைவன் புறத்தொழுக்கத்தை மறைக்குமிடனும் தான் அவன் பால் பெருவிருப்புற்ற நிலையும் அல்லாத ஏனை இடங்களிலெல்லாம் மடன் நீங்காதபடி நிற்றல் தலைவியின் கடமையாகும்.

கற்பின் வழிப்பட்ட தலைமகள் பரத்தையைப் புகழ்ந்து பாராட்டி-னளாயினும், அவள் மனத்தகத்த தலைவனோடு ஊடின தன்மை உண்டென்பர். மற்றொருத்தியைக் குறித்து, 'இவள் இத்தன்மையர், எனத் தலைவனுக்குச் சொல்லி, 'அவளிடத்தில் இவன் எத்தன்மை-யனாயிருக்கின்றான்' என அவனது உள்ளக் குறிப்பினை உணர்த்து வதும் தலைவிக்குரிய செயலாகும்.

தலைவி கூற்றில் உரையாசிரியர்களின் மாறுபட்ட கருத்து

இரவுக்குறி, பகற்குறி, பிழைத்தவழி, தாய், ஊர், நாய் துஞ்-சாமையால் தலைவன் குறித்த இடத்தின்கண் செல்ல முடியாதபோது, விடியலில் சென்று பார்த்தபோது தலைவன் குறியிடம் வந்து மீண்-

டதை அறிந்த போது, உணவு நேரத்தில் விருந்தினனாய் அன்னை இருக்கும்போது, தலைவன் வந்து எதிர்ப்பட்ட போது, அவள் அவனை விருந்தாய் ஏற்க விழைந்த காலத்து, தோழி அவனை விருந்தாய்த் தங்கு என்றபோது, 'வாளாண்மை செய்தற்கு ஒத்த பிரிவு நேர்ந்த போது, காதல் பெருக்கால் நாண் துறந்தபோது, வரைவுக்கு மறுத்தபோது, உடன்பட்ட போது தலைவி கூற்று நிகழும். இது நச்சினார்க்கினியர் உரை முறை. இவையனைத்தையும் தலைவன் கூற்றுக்குவர் இளம்பூரணர்.

அகத்திணையியலில் தலைவி கூற்று

இனித் தொல்காப்பியர் அகத்திணையியலிலும் தலைவி கூற்றினை மொழிகின்றார்.

"எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே"

(தொல். அகத். 46)

இந் நூற்பாவிற்கு இளம்பூரணர் பின்வருமாறு உரை கூறுவர்.

"பாங்கர் முதலாயினாரை இச்சூத்திரத்தால் கூறுப. தலைமகள் கூற்றுத் தனித்துக் கூறல் வேண்டும். இவரோடு ஒரு நிகரன்மையின் எனின் ஒக்கும். தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம் காலப் பழமையாற் பெயர்த்தெழுதுவார் விழ எழுதினார் போலும்! "இளம்பூரணர் இச் சூத்திரத்தானும் பொருள் கொள்ள வந்தமையின், தலைமகள் கூற்று வருமாறு: தலைமகளைப் பிரிதலுற்ற தலைமகன் குறிப்புக்கண்டு கூறுதலும், பிரிவுணர்ந்து கூறுதலும். பிரிவுணர்த்திய தோழிக்குக் கூறுதலும், உடன் போவல் எனக் கூறுதலும், இடைச்சுரத்து ஆயத்தார்க்குச் சொல்லி விட்டனவும், தமர் வந்துள்ள வழிக்கூறுதலும், மீளலுற்ற வழி ஆயத்தார்க்குக் கூறிவிட்டனவும், பிரிவாற்றாமையும், ஆற்றுவல் என்பதுபடக் கூறுதலும், தெய்வம் பராவலும், பருவங்கண்டு கூறுதலும், வன்புறை எதிரழிந்து கூறுதலும்" இவையெல்லாம் கூறப்படும்.

"சொல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை" (குறள் : 1151)

"அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்" (குறள்: 1153)

என்னும் குறட்பாக்கள் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கன.

முடிவுரை

இக்கட்டுரை வாயிலாகத் தொல்காப்பியர் காட்டும் தலைவியைக் குறித்துப் பின்வரும் சிலமுடிவுகளை நாம் கொள்ளலாம்.

1) கற்பு, காமம், நல்லொழுக்கம் முதலான பல்வகைப் பண்புகளும் ஒருங்கே பெற்றவள்.

2) களவொழுக்கத்தில் இயற்கைப் புணர்ச்சியின் போது தன் வேட்கையைக் குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

3) களவின் போது தலைவிக்குக் கூற்றுக்கள் நிகழும்.

4) தலைவன் கையகப்பட்ட போது 'என் செய்தேன்' என்று கலங்குவாள்.

5) 'அவன் பிரிவானே' என அஞ்சுவாள்.

6) அவன் வந்தவிடத்து அலர் ஆகுமே என வருந்துவாள்.

7) அவனோடு கூட்டம் நிகழ்ந்தபோது மகிழ்வாள்.

8) இற்செறிக்கப்பட்டு வெளியேற முடியாத போது கலங்கித் தோழியிடம் தன் நிலையைக் கூறுவாள்.

9) தலைவன் 'மடலேறுவேன்' எனப் பொய்யாகச் சொல்லிய போது தலைவி வெறுத்த உள்ளத்தாளாய்க் குறியிடம் செல்லாள்.

10) தோழி தலைவனைக் குற்றங் கூறிய போது இவள் 'அவன் குற்றமிலன்' என மொழிவாள்.

11) தலைவன் இருக்குமிடத்திற்குத் தானே செல்லும் இடமும் உண்டு.

12) கற்பின்கண்ணும் தலைவி கூற்று நிகழும்.

13) தலைவனை உயர்த்திக் கூறுவாள்.

14) தனக்கு இல்லறக் கிழமை கொடுத்த தன் தலைவனிடத்துப் பேரன்பு கொள்வாள்.

15) அவன் பொருள்வயிற் பிரிந்த போது தனிமைத் துன்பத்தால் வருந்துவாள்.

16) அவன் பரத்தையிற் பிரிந்த போதும் ஊடல் கொண்டாலும் அவன்பால் உள்ள அன்பால் ஊடல் தணிவாள்.

17) தலைவன்பால் உள்ள கொடுமைகளைத் தன் தோழிக்கும்கூடக் கூறமாட்டாள்.

18) தலைமகளது பிரிவைத் தன் உறுப்புக்கள் உணர்ந்தன போலப் பேசுதலும்உண்டு.

7

தொல்காப்பியம்-நம்பிஅகப்பொருள், களவு-கற்பு கூற்றுவகை, துறை ஒப்பீடு: தலைவன் கூற்று

இரா. காசிராசன்

தொல்காப்பியர் அகத்திணை இயல், களவியல், கற்பியல், பொருள் இயல் ஆகிய இயல்களில் தலைவன், தலைவி, தோழி, காமக் கிழத்தியர், பரத்தையர், செவிலி, நற்றாய், பாங்கன், பார்ப்பார், இளையோர், கூத்தர், பாணர், அறிவர், கண்டோர் ஆகிய பதினால்வர் கூற்றுக்கள் பற்றிப் பேசுகின்றார். ஆயின் கூற்றிற் குரிமையுடையார் பற்றிக் கூறும் செய்யுளியல் நூற்பாவில் (செய் : 490 491) மேற்கண்ட பதினால்வரில் நற்றாய், காமக்கிழத்தியர், இளையோர் நீங்கலாக எஞ்சிய பதினொருவரும், விறலியும் (பன்னிருவர்) கூற்றிற் குரியர் என்கிறார்.

இங்குக் கூற்றிற்குரிய 'விறலி' கூற்று ஏனைப் பாணர், கூத்தர் கூற்றுக்களுள் அடங்கும் என்பதால் ஆசிரியர் அதனைத் தனியே விதந்து கூறவில்லை என எண்ணலாம். இது போலக் களவில் செவிலி கூற்றை முறைப்படுத்திய காப்பியர் அவை நற்றாய்க்கும் உரித்து என்கிறார் (தொல்: கள : 26). ஆயின் கற்பில் செவிலி கூற்றைக் கூறியவர் அது அறிவர்க்கும் உரித்து என்கிறாரே தவிர, நற்றாய் பற்றிய பேச்சு அங்கு இடம்பெறவில்லை. (தொல் : கற் : 12-13) அன்றியும், அகத்திணையியலில், (நூற் : 39). நற்றாய்க்குரிய கூற்றுக்கள் ஐந்தினைத் தருகிறார். பொருளியலில் கனுக்காண்டல் தாய்க்கும் உரித்து என (தொல். பொருள் : 4) நற்றாய் பற்றிப் பேசுகிறார். இங்ஙனமிருக்க நற்றாய் கூற்றிற்குரியார் பட்டியலில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கூற்றிற்குரியார் பட்டியலில் இடம்பெறும் 'பரத்தை' கூற்றுப் பற்றித் தொல்காப்பியர் தனியே பேசவில்லை. ஆயின் காமக்கிழத்-

தியர் கூற்று எட்டினைக் கற்பியலில் தருகிருர் (தொல்: கற்: 10). எனவே காமக்கிழத்தி-பரத்தை – இருவரும் ஒருவரே என்ற கருத்துத் தொல்காப்பியருக்கு இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. இனி இளையோர் கூற்றுக்கள் ஒன்பதினைக் கற்பியலில் தொகுத்துத் தரும் ஆசிரியர் (தொல் : கற் : 29) அவரைக் கூற்றிற்குரியார் பட்டியலில் சேர்க்காது விட்டுவிடுகிருர்.

களவில் கூற்றிற்குரிமையுடையார் பற்றி நம்பி கூறுவது, தொல்காப்பியர் கூறுவதே ஆயினும் கற்பில் கூற்றிற்குரியார் பட்டியலில் நற்ருயைச் சேர்க்கிருர். நற்ருய் கூற்று, நம்பி அகப்பொருளிலேயே இடம்பெருது போகிறது. வரைவியலில், கற்பொடு புணர்ந்த கவ்வை (நற்ருய் புலம்பல், அனை மருட்சி நூற் : 185, 186), மீட்சி (நூற் :191), தன்மனை வரைதல் (நூற் : 194) ஆகிய துறைகளில் பன்னிரு கூற்றுக்கள் இடம்பெறுகின்றன. மேலும், தொல்காப்பியர் கூறும் நற்ருய் கூற்றும், களவிலேயே (உடன்போக்கு) இடம் பெறுகின்றது. எனவே நம்பி அகப்பொருளார் நற்ருய் கூற்றைக் கற்பிற்கே உரித்தாக்குவது அவ்வளவு பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

கூற்றிற்குரிய விறலி கூற்றைத் தொல்காப்பியர் தனியே வரையறுக்காது போக, நம்பி. விறலி கூற்ருக நான்கினைக் குறிப்பிடுகிருர் (நூற் :96); அதுபோலத் தொல்காப்பியர் காமக்கிழத்தியர் கூற்று, பரத்தையர் கூற்று என வேறுபடுத்தாது இருப்ப, நம்பி அகப்பொருளார் பரத்தையர் கூற்று ஐந்தும் (நூற் : 106, 205), காமக் கிழத்தியர் கூற்று மூன்றும் (நூற் : 105) ஆக எட்டுக் கூற்றுக்களைத் தனித் தனியே பிரித்துக் கூறுகிருர்.

தொல்காப்பியர் போல நம்பியும் இளையோர் கூற்றுக்கள் பத்தினைக் கூறினும் (நூற் : 98) கூற்றிற் குரியார் பட்டியலில் இவரைச் சேர்க்கவில்லை. தவிரப் பாகர், உழையர், முன்செல்வார் (தூதுவர்), முக்கோற், பகவர் ஆகியோர் கூற்றுக்களும் நம்பி அகப்பொருளில் இடம்பெறுகின்றன.

பார்ப்பார் கூற்றுக்களைக் களவுக்கும் கற்புக்கும் உரியதாகத் தொல்காப்பியரும் நம்பியும் கூறினும், இவர்தம் கூற்றுக்கள் கற்பில் மட்டுமே அமைந்து கிடக்கின்றன. நம்பி அகப்பொருளார், பாங்கன் கூற்றிலே-பார்ப்பனர் கூற்றைப் பார்ப்பனப் பாங்கன் கூற்று, சூத்திரப் பாங்கன் கூற்று என வகைப்படுத்தியுரைக்கிருர். இவ்விருவகைப் பாங்கரும் கற்பிற்குரியரே. பாங்கற் கூட்டத்தில் பொதுப்படச்

சொல்லும் பதின்மூன்று பாங்கன் கூற்றுக்களைக் களவிற்குரிய-தாக்குகிருர்.

கூற்றிற்குரியார் யார் யாரிடம் கூறலாம் என்பது பற்றிய சில குறிப்புக்களும் தொல்காப்பியரிடமும் நம்பியிடமும் காணப்-படுகிறன்றன. நற்ருய் தலைவனெடும், தலைவியொடும் கூறப் பெருள் என்பதை இருவரும் குறிப்பிடுவர் (தொல்: செய்: 493; நம்பி: 218). அதற்கு மேல்,நம்பி, நற்ருய், அந்தணர், தெய்வம், அயலோர்,அறிவர், சிந்தைநோய் அறிவோர், செவிலி, பாங்கி, கண்டோர் ஆகியோரிடம் (எண்மர்) கூற்று நிகழ்த்தலாம் என்கிருர். (நம்பி : 219)

கண்டோர் கூற்று, ஒண்டொடி மாதர் (நற்ருய், செவிலி, பாங்கி), கிழவன், கிழத்தியொடு திகழும் என்பர் தொல்காப்பியர் (தொல் : செய் : 494). இதனையே சற்று விரிவாக, தாயர், பாங்கியர், தலைவன், தலைவியொடு நிகழும் என்கிருர் நம்பி. (நூற் : 221), செவிலி நற்ருயொடும் பாங்கியொடும் கூறப்பெறுவாள் (நம்பி : 220). தொல்-காப்பியர் இதனைக் கூறவில்லை. எஞ்சிய கூற்றிற்குரியோர் தலைவன் தலைவியொடு கூறப்பெறுவர் என்பதை இருவரும் கூறுகின்றனர் (தொல் : செய். 496;நம்பி: 222). கூற்றிற்குரிய அனைவரும் தம்மொடு தாமே கூறிக்கொள்ளற்கு உரியர் என்பர் நம்பி (நூற் : 224). இது பொது நிலையில் தலைவன், தலைவி முதலானேர்க்கும் இயல்பு என்பதைத் தொல்காப்பியர் கூற்றுக்கள் உணர்த்தினும், இதனைக் காப்பியர் தனியே விதந்து கூறவில்லை. ஒருபாற் கூற்று எனத் தொல்-காப்பியர் கூறுவது இதனையே எனலாம் (தொல். பொருள். 194). இவை, தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்ருய், பாங்கன் ஆகியோர்க்கும் உரித்து என்பது உரையாசிரியர் கருத்து.

கூற்றுக்களைக் கேட்போர் பற்றிய குறிப்பும் இரு இலக்கண நூல்களிலும் காணப்படுகிறது. பார்ப்பார், அறிவர் கூற்றுக்களை கூற்றுக்குரிய அனைவரும் கேட்பர் என்பதில் இரு நூலாரும் உடன்-படுவர் (தொல்:செய்: 498; நம்பி:226).

> " மனையோள் கிளவியும் கிழவன் கிளவியும்
> நினையுங் காலை கேட்குநர் அவரே" (தொல் : செய்: 497)

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை காணும் ஆசிரியர்கள் தம்-முள் மாறுபடுகின்றனர். பேராசிரியர், தலைவன் கூற்றைத் தலைவியும், தலைவி கூற்றைத் தலைவனும் கேட்பர் எனவும், இளம்பூரணரும், நச்சினுர்க்கினியரும் பதின்மர் (கூறுவர், நற்ருய் நீங்கலாக) என்பர். இவ்வுரையை அடிப்படையாகக் கொண்டு, அகப்பொருள் ஆசிரியரும்

பதின்மர் (தலைவன், தலைவி, நற்றாய் ஒழிந்த) என்கிறார் (நூற். 225). இனி, சொல்லா, செய்யா மரபினவாய ஞாயிறு, திங்கள் முதலானவற்றுடன் கூற்று நிகழ்த்துதல் செய்யுள் மரபு என்பதை இருவரும் உடன்படுகின்றனர் (தொல் : செய் : 501; நம்பி : 223).

கூற்றிற்குரிமையில்லா ஊரவர், அயலார், சேரியோர், நோய் மருங்கறிஞர், தந்தை, தன்னை ஆகிய அறுவரைக் குறிப்பதில் இருவருக்கும் எவ்வித மாறுபாடும் இல்லை. (தொல் : செய் : 492; நம்பி: 215). இங்கு யார் யாரிடமெல்லாம் கூறுகின்றனர்; ஒருவருடைய கூற்றுக்களை யார் யார் எல்லாம் கேட்கின்றனர் என்பதை ஒவ்வொருவர் கூற்றுக்களிலும் ஆராய்ந்து காணுதல் இன்றியமையாதது.

கூற்றுக்களைத் தொல்காப்பியர் துறை அடிப்படையில் வகைப் படுத்தவில்லை. களவு, கற்பு ஆகிய கைகோள்களில் அமையும் கூற்றுக்களை முறையே களவியல், கற்பியலில் கூறுவதோடு, அகத்திணை இயலிலும், பொருளியலிலும் கூறுகின்றார். இங்ஙனம் பிரித்து ஓதுவதன் நோக்கம் என்ன என்பது புலப்படவில்லை. அகத்திணை இயலில் அமையும் நற்றாய், தோழி கூற்றுக்கள் முழுவதும் உடன்போக்கை அடிப்படையாகக் கொண்டவை. இங்கு அமையும் தலைவன் கூற்று, உடன் போக்கில் மட்டும் அன்றி, பல்வகைப் பிரிவின் அடிப்படையிலும் அமையும். பொருளியலில் வரும் ஒருபாற் கூற்று காமம் இடையீடு பட்டுழி நிகழ்வன. இவை களவுக் காலப் பிரிவில் (ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்) எழுவன வாகலாம். இங்குப் பேசப்பெறும் தோழி கூற்றுக்கள் பதினெட்டும் (தொல். பொருள் : 14, 15, 41) அறத்தொடு நிலை, வரைவு கடாதல், சேட்படை ஆகிய துறைகளை அடிப்படையாகக் கொண்டவை. ஒருபாற் கூற்றிலன்றிப் பிறவகையான் இடம் பெறும் தலைவி கூற்றுக்கள் நான்கும், களவுக் காலப் பிரிவு காரணமாகப் புலம்பலும், கற்பில் பரத்தையை ஏத்தி அவன் உள்ளது ஊடல் உணர்த்துவதாகவும், வினை முடித்துவரும் தலைவனிடம் நெஞ்சழுங்கிக் கூறுதலாகவும் அமைகின்றன. இங்ஙனம் கூற்றுக்களைப் பகுத்து உரைத்தமைக்குரிய காரணம் புலப்படவில்லை.

ஆயின், நம்பி அகப்பொருளார், தொல்காப்பியர் வெவ்வேறு இடங்களில் கூறிய செய்திகளைத் தொகுத்து, களவியல், கற்பியல்களில் துறை வாரியாக முறைப்படுத்துகிறார். களவில், இயற்கைப் புணர்ச்சி, வன்புறை, தெளிவு, பிரிவுழி மகிழ்ச்சி, பிரிவுழிக் கலங்கல்,

இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கி மதி உடன்பாடு, பாங்கி-யிற் கூட்டம், பகற்குறி, பகற்குறிஇடையீடு, இரவுக்குறி, இரவுக்குறி இடையீடு,வரைதல் வேட்கை, வரைவு கடாதல், ஒருவழித் தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு எனப் பதினேழு துறை-களில் களவுக் கூற்றை வகை செய்கிறார்.

வரைவியல் அமைத்து, வரைவு மலிதல், அறத்தொடு நிலை, உடன் போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி, தன்மனை வரைதல், உடன் போக்கு இடையீடு ஆகிய துறைகளில் களவுக் கூற்றுக்களைத் தனியே பகுத்துரைக்கிறார். கற்புக் கூற்றுக்களை இல் வாழ்க்கை, பரத்தையிற் பிரிவு என்ற இருவகையில் அடக்குவர். இவற்றைத் தொகை, வகை, விரியாக விவரிக்கிறார் நம்பி.

தலைவன் கூற்று

தொல்காப்பியர் தலைவன் கூற்றை, அகத்திணையியல்(நூற் :44), களவியல் (நூற்: 11,12,17), கற்பியல் (நூற்: 5,15,31,40,44), பொரு-ளியல் (நூற்: 2,3) ஆகிய நான்கு இயல்களில் வரையறுக்கிறார். இவை இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் கூற்று, களவுக்கூற்று, கற்புக் கூற்று, ஒருபாற் கூற்று, பிரிவு-உடன்போக்குக் கூற்று என்ற முறையில் தனித்தனியே எடுத்தோதப் பெறுகின்றன.

நம்பியகப் பொருளில், களவியல் துறைகளில், தெளிவு, வரைதல் வேட்கை, வரைவு கடாதல் ஆகியன நீங்கிய பதினான்கு துறைகளிலும், வரைவியல் துறைகளில், அறத்தொடு நிலை, கற்பொடு புணர்ந்த கவ்வை நீங்கிய ஐந்திலும், கற்பியல் பகுதி அனைத்திலும் தலைவன் கூற்றுக்கள் இடம்பெறுகின்றன.

களவு, கற்பு நிலையில் தொல்காப்பியத்திலும், நம்பி அகப் பொருளிலும் முறையே 118,117-கூற்றுக்கள் இடம்பெறுகின்றன. தொல்காப்பியர் கூற்றுக்களைத் துறை அடிப்படையில் வகைப்படுத் தாமல், களவுக்கூற்று, கற்புக்கூற்று, என வகைப்படுத்துவதால், சில கூற்றுக்கள் திரும்பத்திரும்ப வராமலிருப்பதைத் தவிர்க்கிறார். நம்பியின் துறைப்பாகுபாடு காரணமாகப் பல கூற்றுக்கள் திரும்பத்திரும்ப வருகின்றன. இவை கூட்டல், கூடல், ஆயங்கூட்டல், நலம் பாராட்டல் எனும் நிலையில் பலபட வருகின்றன (1-3,14-17, 31-34, 40-45, 71-74, 84-88).

தொல்காப்பியத்திலும் சில கூற்றுக்கள் திரும்ப வருகின்றன (91,101; 76; 107, 78-79, 94-96). இருப்பினும் இவற்றிடையே சில நுட்பமான வேறுபாடுகளும் காணப்படுகின்றன. காட்டாக, 'அழியல்

அஞ்சல் எனக் கூறித் தேற்றியவன் பிழைபடலும்' (91), 'தானவட் பிழைத்த நிலையும்' (101) ஒன்று போலத் தோன்றினும், முன்னது பரத்தையிற் பிரிவையும், பின்னது வினைவயிற் பிரிவையும் பற்றியன.

தொல்காப்பியர் கூற்றுக்களை அப்படியே நம்பி எடுத்தாளும் இடங்கள் பல. (தொல் 1,4,8-13, 20-24, 41, 118 ஆகியன முறையே நம்பியில் 8, 13, 7, 8, 9, 11, 12, 14, 46-50, 76, 117 - என்ற எண்ணில் இடம்பெறும்) தொல்காப்பியர் கூற்றுக்களை நம்பி விரித்துச் செல்கின்ற இடங்கள் மிகுதியும் காணப்படுகிறது. பெற்றவழி மகிழ்ச்சி-(16) யாக அமையும் தொல்காப்பியக் கூற்று, நம்பியில் பிரிவுழி மகிழ்ச்சியாகவும் (23-24). புணர்ச்சியின் மகிழுல் (15), புகழ்தல் (16) ஆகிய கூற்றுக்களாகவும் விரிவு பெறுகின்றன. பிரிந்தவழிக் கலங்கல் (17) நம்பியில் ஐந்து கூற்றுக்களாக (25-29) விரிவு பெறுகின்றது.

'குற்றங் காட்டிய வாயில் பெட்ட'லாக அமையும் காப்பியர் கூற்று, நம்பியில் பாங்கற் கூட்டம் துறையாக வளர்ந்து பதினொரு கூற்றுக்களாக விரிவு பெறுகின்றது (35-45). பாங்கியிற் கூட்டமாக அமையும் கூற்றுக்கள் தொல்காப்பியத்தில் பதினான்கு இடம் பெற (25-38) நம்பியில் இருபத்திரண்டு கூற்றுக்கள் (53-74) இடம் பெறுகின்றன.

இருவகைக் குறிகளைக் கூறிய தொல்காப்பியர் குறிவயிற் சென்று புணர்தல், கலங்கல் பற்றிய செய்திகளை ஏழு கூற்றுக்களில் விளக்க (39-45), நம்பி அகப் பொருளார், பகற்குறி, ஒரு சார் பகற் குறி, பகற்குறி இடையீடு, இரவுக்குறி, இரவுக்குறி இடையீடு, அல்ல குறி என வகைப்படுத்திப் பதினாறு கூற்றுக்களாக விரிப்பர் (75-90).

கற்பு வாழ்க்கையில் தலைவன் கூற்றுக்களைத் தொல்காப்பியர் 38-கூற்றுக்களாக விரித்துச் செல்ல (80-117) நம்பி அகப்பொருளார் இதனை முழுவதுமாக விடுத்திருக்கிறார். மேலும், பல்வகைப் பிரிவு-களில் தலைவன் கூற்றை விரித்த அளவிற்கு (58-79) நம்பி அகப் பொருள் ஆசிரியர் செய்யவில்லை. மட்டுமன்றி ஒருபாற் கூற்றாக வரும் தொல்காப்பியச் செய்தி நம்பியில் இடம் பெறாது போகிறது. இங்ஙனம் தொல்காப்பிய-நம்பி அகப்பொருள் தலைவன் கூற்றுக்களை ஒப்பிட்டு நோக்கத் தொல்காப்பியத்தில் கூறிய செய்திகள் எதுவும் நம்பியில் இடம் பெற்றதாகத் தெரியவில்லை. மாறாகப் பல செய்திகள் விடுபட்டிருக்கவே செய்கின்றன. நம்பி எளிமை, சுருக்கம், தெளிவு காரணமாக இதனைச் செய்திருக்க வேண்டுமே தவிரப் புதியன புகுதலுக்கு இடனளிக்க வேண்டும் என்ற நோக்கில் தம் அகப் பொருள் இலக்கணத்தைச் செய்தார் என்று கூறற்கில்லை.

தொல்காப்பியர் தலைவன் கூற்றை மட்டும் தனியே கூறலின், இங்குத் தோழி கூற்றும் இடம்பெறும் சூழல் அமைகின்றது. மடல் கூற்று, மடல் விலக்கு-ஆகிய பகுதிகளில் அமையும், தோழி குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறல், அறிந்தோள் அயர்ப்பு, கேடு கூறல், பீடு கூறல், தோழி நீக்கலின் ஆகிய நிலைமை, பண்பிற் பெயர்த்தல், பரிவுற்று மெலிதல், அன்புற்று நகுதல் ஆகியன (25, 29–32, 34-37), முழுக்க முழுக்கத் தோழி கூற்றாக அமைவனவே. இவற்றிற்கு எதிர் மொழிகின்ற தலைவன் கூற்றையே இங்கு ஆசிரியர் பேசினும், இக்கூற்றுக்களில் தோழி கூற்று அமைந்து கிடப்பதையும் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இங்கு நோக்கப்பட்ட முறையிலன்றித் தலைவன் கூற்றினைக் கூறப்படுவார் அடிப்படையில் பகுத்துத் தொல்காப்பியம், நம்பியகப்பொருள் ஆகிய இரு இலக்கண நூல்களுக்கும் வேறுபாடு இருக்கிறதா என்பதையும் ஆராய்ந்து காண முற்படுதல் வேண்டும்.

பின்வரும் பட்டியல் ‘தொல்காப்பியம் – நம்பியகப்பொருளி’ல் வரும் ‘தலைவன் கூற்றுக்களை’ விளக்குவதாகும்.

தலைவன் கூற்று

தொல்காப்பியம்

1. முன்னிலை ஆக்கல்
2. சொல்வழிப்படுத்தல்
3. நன்னயம் உரைத்தல்
4. நகைநனி உறுஅ அந்நிலை அறிதல்
5. மெலிவு விளக்குறுதல்
6. தன்னிலை உரைத்தல்
7. தெளிவு அகப்படுத்தல்
8. மெய் தொட்டுப் பயிறல்
9. பொய் பாராட்டல்
10. இடம் பெற்றுத் தழாஅல்
11. இடையூறு கிளத்தல்
12. நீடுநினைந்து இரங்கல்
13. கூடுதல் உறுதல்
14. சொல்லிய நுகர்ச்சி வல்லே பெறுதல்
15. தீராத் தேற்றம்
16. பெற்றவழி மகிழ்ச்சி
17. பிரிந்தவழிக் கலங்கல்
18. நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைத்தல்

1-7 இயற்கைப் புணர்ச்சிக்கு முன் (நூற் : 98)

இயற்கைப் புணர்ச்சி (8-13) இடந்தலைப் பாடு (14-18)

நம்பி அகப்பொருள்

1. கலந்துழி மகிழ்தல்
2. நலம் பாராட்டல்
3. ஏற்புற அணிதல்

1-3 இயற்கைப் புணர்ச்சி-தெய்வத்தின் எய்தும் புணர்ச்சி (நூற் : 125)

4. இரந்து பின்னிற்றற்கு எண்ணல்
5. இரந்து பின்னிற்றல்
6. முன்னிலை ஆக்கல்
7. மெய்தொட்டுப் பயிறல்
8. பொய் பாராட்டல்
9. இடம் பெற்றுத் தழாஅல்
10. வழிபாடு மறுத்தல்
11. இடையூறு கிளத்தல்
12, நீடுநினைந்து இரங்கல்
13. முறுவற் குறிப்பு உணர்தல்
14. முயங்குதல்
15. புணர்ச்சியின் மகிழல்
16. புகழ்தல்

4-16 இயற்கைப் புணர்ச்சி தலைவியின் எய்தும் புணர்ச்சி (நூற் : 127)

தொல்காப்பியம்		நம்பி அகப்பொருள்	
19. குற்றங் காட்டிய வாயில் பெட்டல்	பாங்கற் கூட்டம் [19]	17. அணிந்துழி நாணியது உணர்ந்துதெளிவித்தல்	17-22 வன்புறை (நூற் : 129)
20. பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுத்தல்	20-38-பாங்கியிற் கூட்டம்	18. பெருநயப்புரைத்தல்	
21. ஊர் வினுதல்		19. தெய்வத் திறம் பேசல்	ஐயம் தீர்த்தல் 17-19
22. பேர் வினுதல்		20. பிரியேன் என்றல்	
23. கெடுதி வினுதல்		21. பிரிந்து வருவேன் என்றல்	பிரிவு அறிவுறுத்தல் 20-22
		22. இடம் அணித்து எனல்	
24. பிறவாறு வினுதல்	20-24 பாங்கிமதி உடன்பாடு	23. உளத்தொடு சொலல்	23-24-பிரிவுழி மகிழ்ச்சி நூற் : 131
25 (தோழி) குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறல்	25-33 மடல்மா கூறல்	24. பாங்கனெடு சொலல்	
26 தண்டாது இரத்தல்		25. ஆய வெள்ளம் வழிபடக் கண்டுஇது மாயமோ எனல	25-29-பிரிவுழிக் கலங்கல் (நூற்:133)
27. மற்றைய வழி		26. வாயில் பெற்று உய்தல்	
28. சொல்லவட் சார்த்தலின் புல்லிய வகை	34-38 மடல் விலக்கல்	27. பண்பு (தலைவி) பாராட்டல்	25-மருளுற்றுரைத்தல்
29. அறிந்தோள் அயர்ப்பு (பேதைமை யூட்டல்)		28. பயந்தோர்ப் பழிச்சல்	
30. கேடு கூறுதல்	8-33-நூற் : 99 34-38-நூற் : 100	29. கண்படை பெருது கங்குல் நோதல்	26-29 தெருளுற்றுரைத்தல்.
31. பீடு கூறுதல்		30. தந்த தெய்வம் தரும் எனச் சேறல்	30-34-இடந் தலைப்பாடு (நூற் : 135)
32. தோழி நீக்கலின் ஆகிய நிலைமை			

தொல்காப்பியம்	
33. மடல்மாக் கூறல்	
34. பண்பிற் பெயர்த்தல்	
35. பரிவுற்று மெலிதல்	
36. அன்புற்று நகுதல்	
37. அவட்பெற்று மலிதல்	
38. ஆற்றிடை உறுதல்	
39. இரு வகைக் குறி (பகல், இரவு) பிழைப்பாகிய இடத்து	39-49-இருவகைக்-குறி (நூற் : 105)
40. காணுவகையில் (தலைவியை) பொழுது நனி இகத்தல்	
41. காணு வகையில் பொழுது மிகக் கழியக் குறியிடம் சென்று காணுது வேட்கை யுற்றுச் செயலறல்	39-42 குறி பிழைப்பு
42. புகாக்காலை (தலைவி மனையகம்) புக்கெதிர்ப் பட்டுழி (தாயை) பகாஅ விருந்தின் பகுதிக்கண்	43-54குறிவயிற் சேறல்
43. வேளாண் எதிரும் விருப்பின்-கண் (குறியிடத்துத் தலைவி-யைக் கண்டபோது)	46-49- வரைவு கடாதல்

நம்பி அகப்பொருள்		
31. முந்துறக் காண்டல்	30-தெய்வந் தெளித்தல்	
32. முயங்கல்	31-33-கூட்டல்	
33. புகழ்தல்	34-விடுத்தல்	
34. உடன்புணர் ஆயத்துய்த்தல்		
35. பாங்கனைச் சார்தல்	35-45பாங்கற் கூட்-டம் [நூற்:137]	35-சார்தல்
36. உற்றது உரைத்தல்		36-சாற்றல்
37. கழற்று எதிர்மறுத்தல்		37-38-எதிர் மறுத்தல்
38. வேட்கை தாங்கற்கருமை சாற்றல்		
39. இவ்விடத்து இவ்வியற்று எனல்		39-நேர்தல்
40. குறிவழிச் சேறல்		40-43-கூடல்
41. தவிலையைக் காண்டல்		
42. கலவியில் மகிழ்தல்		
43. புகழ்தல்		
44. தலையைப் பாங்கியொடு வரும் எனல்		44-45-பாங்கியிற் கூட்டம்
45. ,, ,, கூட்டல்		

தொல்காப்பியம்

44. தாளாண் எதிரும் பிரிவின்கண் (குறியிடத்துப் புணர்ந்து நீங்கிய வழி - அண்மைக்கண் பிரிதல்)

45. நாணு நெஞ்சலைப்ப விடுத்தற்கண் (அலரஞ்சிய தலைவி நாண் நீக்கி விடுத்தற்கண்)

46. வரைதல் வேண்டித் தோழி செப்பிய புரைதீர் கிளவி புல்லிய எதிரல் (மேலும் களவு வேட்டல்)

47. வரைவுடம் படுதல்

48. ஆங்கதன் புறத்து (வரைவு நிகழ்ச்சிக்கண்)

49. புரைபட வந்த மறுத்தல் (அவர் மறுத்தல்-வரைவு)

50. இன்பமும் துன்பமும் இடையீடு படுதலால் எண் வகை மெய்ப்பாடு தோன்ற உறுப்புடையது போலவும் உணர்வுடையது போலவும் மறுத்துரைப்பது போலவும் நெஞ்சொடு புணர்த்துக் கூறல்.

50-54- ஒரு பாற்கூற்று (நூற் :23, பொருள்] (காமம் இடையீடு பட்டுழி)

நம்பி அகப் பொருள்

46. இரவு வலியுறுத்த நினைதல்
47. ஊர் வினுதல்
48. பேர் வினுதல்
49. கெடுதி வினுதல்
50. ஒழிந்தது வினுதல்
51. கையுறை ஏந்திக் காதலொடு வரல்
52. அவ்வகை (கெடுதிமுதலான) வினுதல்

46-52 பாங்கிமதி உடன்பாடு (நூற் : 138-41)
46-50- குறையுற வினுதல்
51-52 இருவர் உள்வழி அவன் வர வுணர்தல்

53. உட்கோள் சாற்றல்
54. தலைவியை உயர்த்திக் கூறல்
55. ,, தன்மை இயம்புதல்
56. ,, இன்றியமையாமை சாற்றல்
57. தலைவன்பாங்கியைப் பழித்தல்
58. தலைவியின் மூதறிவுடைமை மொழிதல்
59. தன்னிலை சாற்றல்
60. (தோழி உலகியலுரைக்க) மறுத்துரைத்தல்
61. கையுறை புகழ்தல்
62. ஆற்ற நெஞ்சினொடு புலத்தல்

பாங்கியிற் கூட்டம் (53-74)
53 62இரந்து பின் நிற்றல் - நூற் : 144

தொல்காப்பியம்	
51. சொல்லா, செய்யாமரபினவாய (புள், மா, மரம், கடல், கானல்) இவற்றைத் தூது சேறலும் வருதலும் உளபோலக் கூறல்	தலைவன், தலைவி, தோழி, நற்ருய், செவிலி, பாங்கன் ஆகியோர்க் குரித்து
52. அவரவர் உறுபிணி தம போல் சேர்த்திக் கூறல்	
53. அறிவும் புலனும் வேறுபட நிறுத்தி இருவகைப் பெயரும் (உவமானம் உபமேயம்) மூவகைப் பொருளும் (தொழில், பயன், பண்பு) பொருந்த உவமை கூறல்	
54. காமம் இடையீடுபடக் கனுக் காணல்	
55. வரைவுக்கு ஒன்ருத் தமரினும், பருவத்தும், சுரத்தும் தலைமகளை உடன் கொண்டு போகத் துணிதல்	55-79 (அகத் : 44)
56. ,, ,, உடன் கொண்டு போகாது விடுத்தல்.	
57. இடைச்சுரத்துத் தமர்எய்தித் தலைவியைக் கொண்டுபோகக் கலங்களுர் எய்திய கற்பொடு புணர்ந்த கவ்வை.	

நம்பி அகப்பொருள்	
63. மடலே பொருள் என மதித்தல்	63-66 பாங்கியிற் கூட்டம்-மடல் கூற்று. நூற் :145
64. மடலை உலகின்மேல் வைத்துரைத்தல்	
65. ,, தன்மேல் ,,	
66. தன்னைத் தானே புகழ்தல்	
67. தலைவி தன்னை வருந்திய வண்ணம் உரைத்தல்	67-70 பாங்கியிற் கூட்டம்-மடற் கூற்ருெழிதல் நூற் : 146
68. ,, செவ்வி எளிமை செப்பல்	
69. (தோழி நகைக்க) பொருது புலம்பல்	
70. (,, கையுறை ஏற்க) ஆற்றியிருத்தல்	
71. புணர்தல்	71-74 கூடல், ஆயங் கூட்டல், வேட்டல் நூற் : 149
72. புகழ்தல்	
73. விடுத்தல்	
74. விருந்து விரும்பி உரைத்தல்	
75. தஞ்சம் பெருது நெஞ்சொடு கிளத்தல் (தோழி இற்செறிப்பு அறிவிக்க)	ஒரு சார் பகற்குறி-இரங்கல் நூற் : 154

தொல்காப்பியம்	
58. யாக்கை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை	55-57 உடன் போக்கு
59. இளமை ,, ,, ,, ,,	58-79 பிரிவு
60. முயற்சியால் வரும் வருத்தம் என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை.	
61. பொருள்மேல் காதல் உணர்ந்தோங்கித் தகாது என உணர்த்தும் உணர்ச்சியைப் பொருந்தாமை	
62. இன்மையான் வரும் இளிவர விணைப் பொருந்தாமை.	
63. பொருள் உடைமையின் அமை விணைப் பொருந்தாமை.	
64. அன்பிணைப் பொருந்தாமை.	
65. பிரிதல் அருமையைப் பொருந் தாமை	
66. வாயால் வகுத்த பக்கம் (ஓதல்) பிரிவு	
67. கையால் ,, ,, (படைக்கலம் பயிறல் ; சிற்பம்-பிரிவு)	

நம்பி அகப்பொருள்	
76. குறிவயின் நீடுசென்று இரங்கல்	76-78 பகற்குறி இடையீடு-கலங்கல். நூற் : 156
77. வறுங்களம் நாடி மறுகல்	
78. தலைவி ஊர் நோக்கி மதி மயங்கிக் கூறல்	
79. இரவுக் குறி வேண்டல்	79-88-இரவுக்குறி நூற்:158
80. நெறியின் எளிமை கூறல்	
81. தலைவிநாட்டு அணியியல் விஞதல் (தோழியிடம்)	
82. தலைவியைக் குறியிடத்து எதிர்ப்படல்	79-81-வேட்டல்
83. (இரங்கிய) தலைவியைத் தேற்றல்	82-84-கூடல்
84. புணர்தல்	85-பாராட்டல்
85. புகழ்தல்	86-பாங்கியிற் கூட்டல்
86. இல்வயின் விடுத்தல்	87-முயங்கல்
87. (தோழி வரவு விலக்க) மயங்கல்	88-நீங்கல்
88. (புணர்ந்த பின்) தன்னுடு நீங்கல்	

தொல்காப்பியம்	நம்பி அகப்பொருள்	
68. ஊதியம்(அறத்திறம்) காரணமாகப் பிரிந்துழிக் கூற்று.	89. (குறி மருள) புலந்து போதல்	89-90-இரவுக்குறி இடையீடு நூற் : 160-அல்ல குறி.
69. பிரிதான் வரும் புகழும், பிரியாமையான் வரும் குற்றமும் கூறித் தலைவியை ஆற்றுப் படுத்தல்.	90. தலைவிமேல் குறிபிழைப் பேற்றல்	
70. தூதுசெல்லும் வகையின்கண்	91. தன் பதிக்கு அகற்சி சாற்றல்	91-93 ஒருவழித்-தணத்தல் நூற் : 168 91-செலவு அறிவித்தல்
71. தனக்குப் பாங்காயினூர் பக்கத்துப் பிரிவுழி (உற்றுழி உதவ–வேந்தர்க்கு)	92. நீங்கல் வேண்டல்	92-உடன்படல்
72. மூன்றன் பகுதிக்கண் (தன்-வலி, துணைவலி, வினைவலி-போர்)	93. பாங்கியொடுநொந்து வினுதல்	93-வந்துழி நொந்-துரைத்தல்
73. பகைவர் மண்டிலம் கொண்ட அருமைக்கண்	94. தன் பொருட்பிரிவைத் தலை-விக்குரைக்கத் தோழியை வேண்டல்	94–99 வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிவு நூற்: 170
74. தோன்றல் சான்ற மாற்ருரது உயர்ச்சிக்கண்	95. பிரிவு நீடேன் என நீங்கல்	94-பிரிவறிவுறுத்தல்
75. பாசறைப் புலம்பல்	96. பிரிந்த தலைவன் புலம்பல்	95-பிரிவுடன் படுத்தல்
76. வினைமுடிந்த காலத்துப், பாகனெடு விரும்பிய வினைத்திற வகையான்	97. மீண்டு வருவோன் பாகரொடு கிளத்தல்	பிரிவுடன் படுதல்
	98. ,, ,, மேகத்தொடு கிளத்தல்	96- பிரிவுழிக் கலங்கல்
77. காவற் பாக்கத்து (காவற் பிரிவுக்கண்)	99. (தலைவியை) நினைத்தமை செப்பல்	97–98 வருவழிக், 99-வந்துழி மகிழ்ச்சி

தொல்காப்பியம்	
78. பரத்தையிற் பிரிந்த காலத்துத் தலைவியைக் குறுகி இரத்தல் 79. ,, ,, ,, ,, ,, தெளித்தல்	
[கற்பியல்]	
80. கரணத்தின் அமைந்து முடிந்த காலை நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக்கண் 81. எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவம் 82. அஞ்ச வந்த உரிமைக்கண் 83. நன்னெறிப் படரும் தொன்னலப் பொருளின்கண் (தலைவி அறவழி இல்வாழ்க்கை நடத்தற்கண்) 84. பெற்ற தேஎத்து (கற்பு) நிலைஇக் குற்றம் சான்ற பொருள் (களவு நிகழ்வு எடுத்துரைத்தல்) 85. நாம (அச்ச)க்காலத்து (துணை) உண்டெனத் தோழி ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கு	80-112 (நூற் : கற் 5)

நம்பி அகப்பொருள்	
வரைவியல்	
100. மகிழ்வு (மணப் பொருட்டுத் தலைவி அணங்கு பராயது கண்டு)	100-வரைவு மலிதல்-நூற் : 174 [பராவல் கண்டு உவத்தல்]
101. மறுத்தல் (தோழி போக்கறிவுறுத்த) 102. போக்குடன் படுதல்	101–106 உடன் போக்கு-நூற் :182 101-போக்குடன் படாமை
103. தலைவியைச் சுரத்துய்த்தல் 104. ,, அசைவு (துன்பம்) அறிந்து இருத்தல் 105. உவந்து அலர் சூட்டி உண் மகிழ்ந்திருத்தல் 106. தம்பதி அடைந்தமை தலைவிக் குரைத்தல்	102 ,, படல் 103-போக்கல் 104–விலக்கல் 105-புகழ்தல் 106-தேற்றல்
107. தம்ஊர் சார்ந்தமை தலைவிக்குரைத்தல் 108. தான் வரைந்தமை நுமர்க் குரை எனத் தோழிக்குக் கூறல்(தலைவி இல் வந்து) 109. தலைமகளை விடுத்தல் (உடன் போக்கில் தமர் வர)	மீட்சி நூற் : 191 தெளித்தல் 109- தன்மனை வரைதல் நூற்:194 -ஏவுதல்- 109- உடன் போக்கு இடையீடு நூற் : 198 —நீக்கல்

தொல்காப்பியம்	நம்பி அகப்பொருள்	
	(கற்பியல்)	
86. அல்லல் தீர ஆர்வமொடு அளை இச் சொல்லுறு பொருள் (களவுக்கால வருத்தம் தீரத் தலைவி தன் காதல் மிகுதி கூறுங்கால்)	110. தலைவிமுன் தோழியைப் புகழ்தல்	110-இல்வாழ்க்கை நூற் : 203 -கிழவோன் மகிழ்ச்சி
87. ஒன்றை நுகருங்கால்(அடிசில். பூ) அது நீ கை தொட்டதால் சுவை பெற்றது எனப் பாராட்டல்.	111. வெள்ளணி அணிந்து விடுத்துழி வாயில் வேண்டல்	111-116 பரத்தையிற் பிரிவு உணர்த்த உணரா ஊடல். நூற் :206
88. அந்தணர், சான்றோர், பிற பெரியோர்மாட்டு நடந்து கொள்ளும் முறைமையைத் தலைவிக்குரைத்தல்.	112. தன்மனத்து உவகை கூறல் (மகப்பேறு அறிந்து)	
89. களவுக்கால நிகழ்வு அருமைக்குக் காரணம் கேட்ப (தலைவி) கூறல்.	113. விருந்தொடு வரப் பொறுத்த தலைவி கண்டு மகிழல்	
90. களவுக் கால ஒழுக்கம் (அச்சத்தோடு கூடிய) கெடக்கூடி, அதனை வியத்தல்	114. விருந்து கண்டு ஒழித்தவூடல் வெளிப்படத் தலைவன் சீறேல் என்றவள் சீறடி தொழல்	
91. அழியல், அஞ்சல் எனக் கூறித் தேற்றியவன் பிழைபடல்(புறப் பெண்டிர்மாட்டுப் பிரிதல்)	115. எங்கையர் (பரத்தை) யாரையும் அறியேன் எனல்	
	116. தலைவி ஊடல் தணியாளாகத் தலைவன் ஊடல்	
	117. தவலைன் ஆணை கூறல்(இடைச் சுரத்துத் தலைவியொடுஇருப்ப அவள் தமர் வர)	உடன்போக்கு நூற் : 216

தொல்காப்பியம்	நம்பி அகப்பொருள்
92. நோன்மையும் பெருமையும் மெய்கொள அருளிப் பன்னல் சான்ற வாயிலொடு (தோழி) பொருந்தித் தன்னினுகிய தகுதிக்கண் (தலைவி ஊடற்கண்) 93. புதல்வர்ப் பயந்த புனிறுதீர் பொழுதின் நெய்யணிமயக்கம் புரிந்தோள் நோக்கி, முனிவர் அமரர்ச் சுட்டிச் செய்யா நின்ற சிறப்பின்கண் 94. தலைவன் பரத்தையிற் பிரிய, துணையணை புல்லி ஊடலொடு இருப்பாளைக் குறுகி சீறடி புல்லி இரத்தல் 95. உறல் அரும் ஊடல் மிகுத்தோளைப் பிற பெண்டிரிற் பெயர்த்தல் (ஊடல் தீர்க்க முயலல் 96. பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப் (தலைவி, காமக்கிழத்தி) பரிவு நீக்கிய பகுதி. 97. நின்று நனி அஞ்சிய பையுள் (பிரிவு அஞ்சிய)	80 - 90– இல்வாழ்க்கை 91-96- பரத்தையிற் பிரிவு 97 - 104 - பொருட் பிரிவு 105 - 112 -பொருட் பிரிவு மீட்சி

தொல்காப்பியம்	நம்பி அகப்பொருள்
98. சென்று கையிகந்து பெயர்த்துள்ளிய வழி (பின்னும்பிரிய நினைந்துழி – பொருள்வேட்டு)	
99. காமத்தின் வலி (பொருளை–விட) உணர்ந்தவிடத்து)	
100. கைவிடின் அச்சம் (தலைவி உயிர் எண்ணி)	
101. தானவட் பிழைத்த (நின்னிற் பிரியேன் என்ற) நிலை	
102. உடன் சேறற்செய்கை (உடன் வருவேன் என்ற தலைவியை விலக்கிய வழி)	
103. அன்னவை பிறவும் மடம்பட வந்த தோழிக்கண் (மேலன-வற்றைத் தோழி கூறிய வழி)	
104. வேற்று நாட்டு அகல்வயின் விழுப்பம் (போகலாமா-வேண்டாமா என்ற மனநிலை)	
105. மீட்டு வர ஆய்ந்த வகை	
106. அவ்வழி (பிரிந்து சென்ற) பெருகிய சிறப்பு	

தொல்காப்பியம்		நம்பி அகப்பொருள்
107. பேரிசை ஊர்திப் பாகர் பாங்கு (பிரிந்து வரு தலைவன் தன் உணர்வைப் பாகனிடம் கூறல்)		
108. காமக் கிழத்தி, மனையோள் ஏமுறு கிளவி (எப்படி வந்தீர் என்ற) சொல்லிய எதிர்.		
109. சென்ற தேஎத்து உழப்பு நனி விளக்கித் (தலைவி) இன்றிச் சென்ற தம் நிலை கிளத்தல்.		
110. அருந்தொழில் முடித்த செம்மற் காலை விருந்தொடு (தலைவி) நல்லவை வேண்டற்கண்		
111. மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும் கேளிர் ஒழுக்கத்துப் புகற்சி (வினை முற்றியவனை உறவினர் எதிர் கொண்ட காலத்து)		
112. ஏனை வாயிலோர் எதிர்கொண்ட காலத்து		
113. உணர்ப்பு வரை இறப்பின் புலத்தல் ; ஊடல்	(நூற்: 15 கற்.) 113-பரத்தையிற் பிரிவு	
114. குறி பிழைத்த காலத்து ,, ,,	114 குறிபிழைப்பு	

தொல்காப்பியம்	நம்பி அகப்பெருள்
115. வினைவயிற் பிரியும் தலைவன் தலைவி முன் தன்னைப் புகழ்தல்	பொருள் வயிற் பிரிவு (நூற்: 40, 44 கற்.)
116. செலவிடை அழுங்கல் 117. கிழவோன் கலங்கல் (பின் முறை ஆகிய பெரும்பொருள் வதுவைக்கண் மனைவி எதிர்ப் பாடாயினும், புதல்வனை வாயில் கொண்டு புகினும்)	(நூற்:31.கற்.) பரத்தையிற்பிரிவு
118. தலைவன் வழக்கியல் ஆணை கூறல் தலைவியிடம் (இடைச்சுரத்தில்)	(நூற்: 495 செய்.)

8

புறப்பொருளில் தெய்வத் துறைகளும் சில விளக்கங்களும்

திருமதி சோதிபாய் தேவதாஸ்

முன்னுரை

பண்டைத் தமிழரின் அகவாழ்வையும் புறவாழ்வையும் படம்பிடித்துக் காட்டும் தெய்வக் கூற்றுக்களும், துறைகளும் மிகச் சிலவே. தொல்காப்பியர் தம் புறத்திணையியலில் சில தெய்வத் துறைகளைக் கூறுகிறார். அவர் கூறிய துறைகளையும் அவற்றொடு வேறு சில துறைகளையும் சேர்த்துக் கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார் கூறுகிறார். அரசியல், சமுதாயத் துறைகளில் ஏற்பட்டதைப் போன்ற பல்வேறு மாற்றங்களை நாம் தெய்வத் துறைகளில் காண இயலவில்லை. ஆயினும் அச் சில தெய்வத்துறைகளில் அறிஞர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் பலப்பல. அவற்றை அன்னோர்தம் உரை விளக்கங்களால் உணர முடிகின்றது.

தொல்காப்பியம் கூறும் தெய்வத் துறைகள்

தொல்காப்பியர் வெட்சியில், வெட்சிப் பொதுவில் அல்லது வெட்சிப் புறனடையில், பாடாண் திணையில் மட்டுமே சில தெய்வத் துறைகளைக் குறிப்பிடுகிறார்.

அ. வெட்சியில்

நிரை மீட்கும் கரந்தையைத் தனித்திணையாக்காமல் வெட்சியுள் அடக்கிக்கொண்ட தொல்காப்பியர், வெட்சித் திணைக்குரிய துறைகளைக் கூறும்போது மூன்று தனி நூற்பாக்களை அமைக்கிறார். முதல் நூற்பாவில் 'வந்த ஈரேழ் வகையிற்றாகும்' என 14 துறைகளையும், பின் 'அத்திணைப் புறனே' என 2 துறைகளையும், இறுதி-

யில் 'சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே' என 21 துறைகளையும் குறிப்பிடுகின்றார். முதல் நூற்பாவில் எத்தெய்வத் துறையையும் தொல்காப்பியர் கூறவில்லை என்றே கொள்ளலாம். ஆயினும் வெட்சிப்போர் தொடங்குமுன் வீரர்கள் மாலை நேரத்தில் நற்சொல் கேட்டலை, தெய்வ வாக்குப்போல் காதில் விழும் சொற்களைக் குறித்த விரிச்சி என்னும் துறையை வேண்டுமானால் ஓரளவு தெய்வத்தன்மையேற்ற துறையாகக் கருதலாம். இராண்டாவது நூற்பாவில் போர்த் தொடக்க நிகழ்ச்சிகளில் தனித்தன்மை வாய்ந்த கொற்றவை வழிபாட்டைக் **கொற்றவைநிலை** எனத் தெய்வத் துறையாகக் குறிப்பிடுகிறார். மூன்றாவது நூற்பாவில் **காந்தள், வள்ளி, உன்னநிலை, பூவைநிலை, காட்சி, கல்கோள், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்தல்** என்னும் 10 துறைகளைத் தெய்வத் துறைகளாகக் குறிப்பிடுகிறார்.

1. கொற்றவைநிலையும் துடிநிலையும்

மறங்கடைக் கூட்டிய துடிநிலையும். சிறந்த கொற்றவைநிலையும் நிரைகொண்டோர்க்கும் மீட்டோர்க்கும் பொதுவாதலின் தொல்காப்பியர் அவ்விரண்டைத் தனியொரு நூற்பாவில் குறிப்பிட்டதாகக் கூறுவார் நச்சினார்க்கினியர். சொல்லளவில் கொற்றவைநிலை எனக் கூறும் தொல்காப்பியர், அதைக் குறித்துச் சிறு விளக்கமும் தரவில்லை. நச்சினார்க்கினியர்தான் அதைப் 'போர்த் தொழிற்குச் சிறந்த கொற்றவைக்குப் பரவுக்கடன் கொடுக்குங்கால் அவளது நிலைமை கூறுதல்' என விளக்குகிறார். அவர் கூறிய அதே விளக்கத்தையே நாம் வெண்பாமாலையுள்,

> " ஒளியினீங்கா விறற்படையோள்
> அளியினீங்கா அருளுரைத்தன்று" (19)

என்பதில் காண்கின்றோம். அந்நூல் தரும்,

> " ஆளி மணிக்கொடிப் பைங்கிளி பாய்கலைக்
> கூளி மலிபடைக் கொற்றவை — மீளி
> அரண்முருங்க ஆகோள் கருதின் அடையார்
> முரண்முருங்கத் தான்முந் துறும்"

என்னும் அதே சான்றினைத்தான் இளம்பூரணரும் தருகின்றார். கொற்றவைக்கு வீரர்கள் தம் உயிரையும் குருதியையும் பலியாகக் கொடுப்பது பழக்கமென்கின்றார் நச்சர். கொற்றவைநிலை குறித்த பிற விளக்கங்களை வழிபாட்டு நிலைகள் என்னும் தலைப்பில் காணலாம்.

நாவலர் சோமசுந்தர பாரதியார் ஒருவரே துடிநிலையைத் தெய்வத் துறையாகக் கண்டு 'மிடல் மலிவால் அடல் விருப்பின் விளைந்த முரசு பராவுதல்' எனப் பொருள் கொள்கிறார். 'போர்க்களத்து மறவரது மறத்தினைக் கடைக்கூட்டிய துடிநிலை' என நச்சராலும், 'தொடுகழல் மறவர் தொல்குடி மரபிற் படுகண் இமிழ்துடிப் பண்புரைத்த'லே துடிநிலை என ஐயனாரிதனாராலும், துடிநிலையைக் குடிநிலை எனக் கொள்ளும் பாடவேறுபாட்டால் 'மறத்தொழில் முடித்தலையுடைய குடியினது நிலையைக் கூறல்' என இளம்பூரணராலும் கொள்ளப்படும் பொருள்நிலைகளால் இத்துறை தெய்வத் தன்மையினின்றும் நீங்கிவிடுகின்றது.

2. காந்தள்

வெட்சிப் பொதுவில் இடம்பெற்ற எழுமூன்று துறைகளுள் தொல்காப்பியரால் முதலில் கூறப்படும் துறை காந்தளாகும். 'காந்தள் என்பதனை மடலேறுதற்குப் பெயராகக் கூறுவார் உளராதலின், வெறியாட்டு அயர்ந்த காந்தள் என்றார்' எனப் புதுமுறையில் விளக்குவார் இளம்பூரணர். வெறியாட்டு என்பது பொதுவாக அகப்பொருளுள் குறிஞ்சித் தலைவியின். பொருட்டாக வேலனால் நிகழ்த்தப்படும் ஒருசெயல் என்பதைப் பலரும் அறிவர். கேரளத்தில் அதை 'வேலன் துள்ளல்' என இன்றும் குறிப்பிடுவதைக் காணலாம் என்பார் மு. இராகவையங்கார். அகப்பொருளைப் போலவே புறப்பொருளிலும் வெட்சிப்போரில் ஈடுபடும் மறவர்கள் வென்றி வேண்டி வெறியாடுவராம். சிலப்பதிகாரத்து வேட்டுவவரியுள் அதற்குரிய சான்றினைக் காணலாம். அதே சமயத்தில் வேலன் தானே வெறியாடுவதும் உண்டு. அதைத்தான்

'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தள்'

என்னும் இத்துறை குறிப்பிடுகின்றது. இதற்கு இளம்பூரணர் எச்சான்றினையும் தரவில்லை. 'வேலன் தைஇய வெறியயர் களனும்' எனத் திருமுருகாற்றுப்படைப் பாடலடியைப் புறப்பொருள் சான்றாகக் காட்டுகிறார் நச்சர். மறவர் பொருட்டு வேலன் வெறியாடியதாகப் பொருள்கொள்ள இத்துறை இடம் தருகின்றது, "வேலன் வெறியாட்டு குறிஞ்சிக்கும் வெட்சிக்கும் பொதுவாயினும், வெட்சித்துறை வெறியாட்டில் வேலன் காந்தள் குடி ஆடுவான்; குறிஞ்சித் துறையில் வெறியாடும் வேலன் குறிஞ்சிப்பூச் சூடுதல் மரபு. இதனை மதுரைக்காஞ்சியின் புறத்தில் அகத்துறையாக,

'அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
அரிக்கூடு இன்னியம் கறங்கநேர் நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடி'

என்வரும் அடிகளானுமறிக'' (ப. 58) என்னும் நாவலர் புத்துரை-யும் ஈண்டு நினைக்கத்தக்கதாகும். முருகனைத் தன் மெய்க்கண் நிறீஇக் குறி கூறுபவன் இவ்வேலனாதலின், தொல்காப்பியர், பல்-வேறு அறிஞர் ஆகியோர் கருத்துப்படி இத்துறை தெய்வத் துறை-யாகின்றது.

போருக்கு முன்னைய நிலையில் ஆடப்படுவது இவ்வெறியாடல் என்பது நம்மால் உய்த்துணர முடிகின்றது. வேலன் மட்டும் ஆடு-வானா, அவனோடு மகளிரும் சேர்ந்து ஆடுவதுண்டா என்பதில்தான் அறிஞர்களுக்கிடையே கருத்து வேறுபாடு எழுகின்றது. எனினும் வேலன் ஆடுவதற்கே பலர் முதன்மை தருகின்றனர். ச. சோ. பாரதியார் 'முருகனைப் பரசி வேலனாடுவது காந்தள். அக்கடவுளைப் பாடிப் பெண்டிர் ஆடுங்கூத்து வள்ளி' என்று காந்தளுக்கும் வள்ளிக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைத் தெளிவாகக் கூறுகிறார். 'வேலனைக் கூறினமையிற் கணிகாரிகையுங் கொள்க. காந்தளை-யுடைமையானும், பனந்தோடுடைமையானும் மகளிரை வருத்துத-தலானும் வேலன் வெறியாட்டயர்ந்த என்றதனாலும் வேலன் ஆடுவதே பெரும்பான்மை; ஒழிந்தோர் ஆடுதல் சிறுபான்மை என்றுணர்க' எனக் கூறி,

'அமரகத்துத் தன்னை மறந்தாடி யாங்குத்
தமரகத்துத் தன்மறந்தாடுங் — குமரன்முன்
கார்க்காடு நாறுங் களனிழைத்துக் காரிகையார்
ஏர்க்காடும் காளை இவன்'

என்னும் சான்று மூலமாகச் சிறப்பறியா மகளிராடுதலையும் குறிப்-பிடுகிறார் நச்சினார்க்கினியர். 'வேலன் தானே ஆடியதற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டுகொள்க' எனக் கூறிவிடும் இளம்பூரணர், மகளிராடு-தலைப்பற்றி எதுவும் குறிப்பிடாமையின் இவ் வெறியாட்டு ஆடவர்க்கே உரியது என்பது புலனாகும்.

3. வள்ளி

வெட்சிப் பொதுவில் இடம்பெற்ற மற்றொரு துறை வள்ளி என்பதாகும். வள்ளி என்பது வாடும் ஒரு கொடிக்கும் ஆடும் ஒரு-வகைக் கூத்துக்கும் பொதுப் பெயராதலால் ஓடாப் பூட்கை, வாடா வஞ்சி என்பன போல், கொடியை நீக்கிக் கூத்தைச் சுட்டும்

பொருட்டு 'வாடா' வள்ளி எனப்பட்டது என்பர் அறிஞர் பலர். தொல்காப்பியர் 'வாடாவள்ளி' எனச் சொல்கின்றரேயன்றி, யார் ஆடுவது எப்படி ஆடுவது எந்த நேரத்தில் ஆடுவது என்பன போன்ற விளக்கங்களைத் தரவில்லை. ஆயின் அத்துறைக்கு விளக்க-மெழுதிய நச்சரோ, வள்ளிக்கூத்தை இழிந்தோர் காணும் கூத்தெனக் குறிப்பிடுவதால் வெற்றி பெற்ற நிலையில் ஆடப்படுவதாக நினைக்-கலாம். புறத்திணைக்கண் வரும் இக்கூத்து ஆண்பாற்கும் பெண்-பாற்கும் பொதுவாக இருந்தாலும் பெண்பாற்கே பெருவரவிற்றாய் வரும் என்கின்றர்; மேலும் வள்ளியின் வேடம் பூண்டு மறத்தி ஆடுவதால்தான் அது வள்ளிக்கூத்து எனப் பெயர் பெற்றது எனப்-பெயர்க் காரணமும் கூறுகிறர். அதற்கு அவர் காட்டும் சான்றிலும் மறவர் குழாத்திடை வள்ளியின் கோலங்கொண்டு மறத்தியொருத்தி ஆடிய கூத்தே குறிப்பிடப்பட்டுள்ளது.

'மண்டமர் அட்ட மறவர் குழாத்திடைக்
கண்ட முருகனும் கண்களித்தான் - பண்டே
குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப்
பிறமகள் நோற்றாள் பெரிது'

என்பது அச்சான்றுப் பாடல். வள்ளியைக் கூத்தென உடன்படும் இளம்பூரணர், 'உதாரணம் வந்தவழிக் கண்டுகொள்க' என எவ் விளக்கமும் தராமல் விட்டுவிடுகிறர். இக்கூத்து முருகனுக்காகப் பெண்டிர் ஆடுவதாகப் பாரதியாரும், 'பெண்பாலார் மிகுதியும் ஆடும் வள்ளிக் கூத்து' எனக் கா. சு. பிள்ளையும், மற்றும் பலரும் கூறுவதால் இத்துறை தெய்வத் துறையாகின்றது. விண்ணுறவோங்கி விளங்கும் மதில் சூழ்ந்த மாடங்கள் நிறைந்த ஊர்களிலும், புறநாடுகளிலும் கடவுளைப் பரசிப் பெண்டிர் ஆடும் வளப்பம் மிக்க வள்ளிக்கூத்து நிகழ்ந்ததைப்

'பன்மர நீளிடைப் போகி நன்னகர்
விண்தோய் மாடத்து விளங்குசுவர் உடுத்த
வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்
நாடுபல கழிந்த பின்றை (பெரும்.368-371)

என்னும் பாடலடிகள் நமக்கு உணர்த்தும் என்பர்.

''வள்ளிக்கூத்து' சாதாரண மக்களுக்கு உரியதாகக் கருதப் படுகிறது. இது ஆண்களாலும் பெண்களாலும் சேர்ந்து ஆடப்-படுவது. நாட்டுக்கு வெற்றியும் வளனும் நல்க வள்ளியை நினைத்துப் புகழும் பாடல்களுடன் இக்கூத்து ஆடப்படும்'' என்று டாக்டர் ஏ. என். பெருமாள் 'தமிழ் நாடகம் ஓர் ஆய்வு' என்ற நூலில் (ப.7)

நாடகப் பாங்கில் குறிப்பிடுவது காணலாம். வள்ளியின் வேடம் பூண்டாடுவதைக் குறிப்பிடாத இவர், அவள் புகழ்பாடும் பாடல்களைப் பாடியாடுவதாக இக்கூத்தைக் குறிப்பிடுவது நினைவிற் கொள்ளத்தக்கது.

தொல்காப்பியர் வெட்சிப் பொதுவில் கூறிய இவ் 'வாடா வள்ளி'யும், பாடாண்டிணையில் கொடிநிலை கந்தழியோடு சேர்த்துக் கூறிய வள்ளியும் ஒன்றெனப் புத்துரை வழங்கியுள்ளார் டாக்டர் பாரதியார்.

இனி, 'வாடா வள்ளி' என்பதைத் தனித் துறையாகக் குறிப்பிடாமல் 'வாடா வள்ளி வயவர் ஏத்திய ஓடாக் கழல்நிலை' என வள்ளியை வீரரோடு இணைத்துக் 'காப்பியர் நெறி'யில் விளக்கம் தருகிறுர் டாக்டர் ஆண்டியப்பன். வாடா வள்ளியை ஒருவகைக் கூத்தெனப் பலர் கூறுவதைக் குறிப்பிடும் அவர் 'வெட்ட வெட்டத் தளிர்க்கும் வள்ளியொன்று சங்க இலக்கியத்தில் வருவதுண்டு; வீரர்களும் வெட்ட வெட்ட வீறுகொண்டு எழுவதால் வாடா வள்ளி வயவர் ஆயினர் எனலாம்' (ப. 36) என்பார்.

4. உன்னநிலை

உன்னம் என்பது சிற்றிலையும் பொற்பூவுமுள்ள ஒருவகை மரம். இது தெய்வத் தன்மையுடையதாய்ப் பின்னிகழும் நிமித்தங்களைக் காட்டும் என்பதில் அறிஞர்களுக்குக் கருத்து வேறுபாடில்லை. பதிற்றுப்பத்துப் பாடலும் (40) உன்னமரச் செய்தியைத் தந்துள்ளதும் நோக்கத்தக்கது. வெட்சியார் மாலை நேரத்தில் விரிச்சி (நற்சொல்) கேட்டலும், பூவை மலரின் மலர்ச்சி கண்டு நன்மை வருமென நினைப்பதும் உன்னநிலையொடு ஒருங்கு வைத்துக் காணத் தக்கதாகும். போர்க்கெழு மறவர், பின்வாங்காது போரிடும் வேந்தன் வெற்றியை உளத்தெண்ணிச் சார்த்து வகையால் நிமித்தம் கண்டு செல்வது மரபு. வேந்தற்கு வெற்றி விளைந்தால் இன்னது செய்வேன் என மறவர் பரவுதலும், எம் வேந்தற்கு ஆக்கம் உளதெனின் அக்கோடு பொதுளுக எனவும் பகை வேந்தற்குக் கேடு உளதெனில் அக்கோடு படுவதாக எனவும் நிமித்தம் கோடலும் என இருவகைத் தெய்வத் தன்மை உன்னத்திற்கு உண்டென்கிருர் நச்சர். மறவர் உன்னமரத்தை நோக்கி,

" முன்னங் குழையவும் கோடெலா மொய்தளிரின்
றுன்னங் குழையொலித் தோங்குவாய் – மன்னரைக்
கொன்று களங்கொள்ளுங் கொல்யானை வேந்தனை
வென்றுகளங் கொள்ளுமேல் வேந்து'

எனப் பேசுகின்றனர். வேந்தன் மேல் சார்த்தி நச்சர் பொருள்தர, இளம்பூரணரோ நாட்டைச் சார்த்தி, 'அது தன் நாட்டகத்துக் கேடு வருங்கால் உலறியும், வாராத காலம் குழைந்தும் நிற்கும்' எனப் பொருள் உரைக்கிருர். கொடிய வேனிற் காலத்திலும் வாடாத உன்ன மரத்தின் வாட்டத்தால் நாட்டிற்கு ஏற்படும் பஞ்சம் வறட்சி போன்றவற்றையும், அதனுல் மன்னனுக்கேற்படும் விளைவையும் உற்றுணரலாம் என்கிருர் டாக்டர் ஆண்டியப்பன். மு. இராகவையங்கார், கா. சு. பிள்ளை முதலியவர்களும் உன்ன மரத்தின் தெய்வத்தன்மையைக் குறிப்பிடுகின்றனர். இலந்தையை உன்னம் என்பது மலையாள நாட்டு வழக்கென்பார் மு. இராகவையங்கார்.

5. **பூவைநிலை**

தொல்காப்பியர் வெட்சிப் பொதுவில் குறிப்பிடும் இன்றியமையாததோர் துறை பூவைநிலையாகும். காலப் போக்கில் பொருள் வளர்ச்சி பெற்ற துறையாகவும், பாடல் பெற்ற தெய்வத் துறையாகவும், அறிஞர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு இடந்தரும் துறையாகவும் இதனை நாம் காண்கின்ருேம். தொல்காப்பியர் பாடாண் திணையில் குறிப்பிடாத இத்துறையை ஐயனுரிதனுர் பாடாண்படலத்தில் குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. புறநானூற்றுக்குத் திணை துறை வகுத்தோரும் இத்திணையைப் பாடாண்திணையில் வைத்தே பேசியுள்ளமை சிந்திக்கத் தக்கது. ஈண்டு, தொல்காப்பியர் பேசியுள்ள பொருள் நிலையை உரையாசிரியர்தம் கருத்தால் நோக்கலாம். பல துறைகளைப் பெயரளவில் கூறும் தொல்காப்பியர் இப் பூவைநிலையை,

> 'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
> தாவா விழுப்புகழ்ப் பூவைநிலை'

என ஓரளவு விளக்கியே சென்றுள்ளார். நாடெல்லை காடாதலின், அக் காட்டிடைச் செல்வோர் திருமாலின் நிறத்தையொத்துச் சிறப்பிற்கும் புகழ்ச்சிக்கும் உரிய முறையில் பூவை மலர் மலர்ந்திருப்பதைக் கண்டு புகழ்வதுண்டு. கண்ணுக்கினிய காட்சி நல்கும் காயாம் பூவில் விழுப்புகழ் பெறவிருக்கும் மன்னனைக் கண்டிருக்கலாம் அன்றைய போர் வீரர். அதனுல் அம் மலரைப் புகழ்ந்தனர் எனலாம் உன்ன மரத்தால் வேந்தனின் ஆக்கத்தையும் தேக்கத்தையும் உணர்ந்ததைப் போன்ற ஒரு நிலையே பூவைப் பூவால் உணர்ந்தது என்றும் குறிப்பிடலாம். 'மாயோனைப் பொருந்திய நிலைபெற்ற பெருஞ்சிறப்பினையுடைய கெடாத விழுப்புகழைப் பொருந்திய பூவைநிலை' என அத்துறையை விளக்கி, வெண்பாமாலைச் சான்றையே காட்டும்

இளம்பூரணர், மாயோன் முதலாகிய தேவர்களோடு உவமித்தலே பூவை நிலையெனப் பிறர் கூறுவதை ஏற்றுக்கொண்டு முத்தொள்ளாயிரப் பாடலொன்றைச் சான்றாகக் காட்டுவார். அத்துடன், வேறு கடவுளரை நோக்கி உவமித்து வருபவற்றையும் பூவை நிலையாகக் கொள்க எனக் கூறிச் சிவனோடு ஒப்பிட்டுக் கூறும் பிறிதொரு முத்தொள்ளாயிரப் பாடலைக் காட்டுவார்.

நச்சரோ, மாயோன் விழுப்புகழ்,மேய பெருஞ்சிறப்பின் தாவா விழுப்புகழ், மன்பூவை நிலை எனப் பிரித்து அதற்கேற்பத் திருமாலின் காத்தற் புகழையும் ஏனோராகிய நான்முகன், சிவன் ஆகியோர்க்குரிய படைத்தல் அழித்தல் என்னும் புகழ்களையும் மன்னர் தொழிலுக்கு உவமையாகக் கூறுவதே பூவைநிலை எனப் பொருள் உரைக்கிறார். இதிலிருந்து ஒன்றனை ஒன்றுபோல் கூறும் துறையே பூவைநிலை என்பதும் நெடுநில மன்னர் குறுநில மன்னர் முதலானோரையும் அப்படிக் கூறலாம் என்பதும், முத்தொழில் மட்டுமன்றி அவரவர் தாமாகக் கூறலாம் என்பதும், 'முருகன் இந்திரன் முதலியோராகக் கூறலாம் என்பதும் அவர்தம் கருத்தென அவர் காட்டும் சான்றும் பாடல்களால் உணரலாம். 'ஆநிரை மீட்டு வரும்போது காட்டிடைக் காயாமலரை நிமித்தம் காரணமாகப் புகழ்ந்து பாடும் நிலை படிப்படியே திருமாலோடு உவமை சொல்லிக் காயாவைப் புகழ்வதாகவும் மன்னனால் வழிபடப்படும் திருமாலோடு உவமை சொல்லிக் காயா மலரைப் புகழ்வதாகவும், திருமாலை மன்னனோடு உவமை கூறிப் புகழ்வதாகவும் பல்வேறு பெரிய பெரிய மாற்றங்களைப் பெற்றுள்ளது. மன்னனைத் திருமாலாகவே உருவகித்துப் பாடும் நிலை பிற்காலத்தே வளர்ந்தது. பூவை மலரைப் புகழ்ந்தது போன்று இலக்கியத்துள் ஒரு பாடல் கூட இல்லை' எனப் பூவைநிலையின் வளர்ச்சியைக் குறிப்பிடுவார்(பக். 111-112) டாக்டர் நா.செயராமன். டாக்டர் ச.சோ. பாரதியாரும் வெண்பாமாலை - பாடாண் படலப் பூவைநிலைத்துறைச் சான்றையே எடுத்துக்காட்டி அமைதியுறுகிறார். எனவே,தொல்காப்பியரின் மாயோன் எனும் சொல்லாலும், அறிஞர் பலர் கருத்தாலும் பூவைநிலை தெய்வத்துறை என்பதில் யாதொரு ஐயமில்லை.பூவைநிலை குறித்த பிற விளக்கங்களைப் பாடல் பெற்ற துறை என்னும் தலைப்பில் காணலாம்.

6. கல்லொடு தொடர்புடைய துறைகள்

எழுமூன்று துறைகளில் கல்லொடு தொடர்புடையதாகத் தொல்காப்பியர் ஆறு துறைகளை ஒருசேரக் கூறுகிறார். அவையாவன காட்சி, கல்கோள், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்தல். இவை வீரப்போர் செய்து விழுப்புகழுடன் இறந்தோர்க்குக் கல்

எடுத்து அவரைத் தெய்வமாக்கி வழிபாடு செய்வதை வகுத்துக் காட்டும். இதை வீரவழிபாடு எனக் குறிப்பிடுவர்.

போர்க்களத்துப் பட்ட வீரனைக் கல்லில் நிறுத்தற் பொருட்டு அவனுக்குப் பொருத்தமான கல்லைத் தேடிக் காண்பதே 'காட்சி' யாகும். கண்ட கல்லைக் கைக்கொள்வது 'கல்கோள்' ஆகும் அக் கல்லை நீரில் இட்டுத் தூய்மை செய்வது 'நீர்ப்படை'யாகும். நீர்ப்-படுத்திய கல்லை நடுவது 'நடுதல்' ஆகும். நாட்டிய கல்லிற்குக் கோயில் எடுப்பது 'பெரும்படை' எனப்படும். பின் அக் கல்லைப் பழிச்சுதல் 'வாழ்த்து' எனப்படும். இப்படி விளக்கும் இளம்பூரணர் அனைத்துத் துறைகளுக்கும் வெண்பாமாலைப் பாடல்களையே சான்று-களாகத் தருகிருர்.

கற்கோளைக் கால்கோள் எனக் கொள்ளும் நச்சரோ ஒவ்-வொரு துறைக்கும் ஈரிரு வகைகளைக் கூறிப் புதிய பாடல்களைச் சான்ருகக் காட்டுகிருர். 'காட்டில் சென்று கல்லைப் பார்த்தலையும் கல் நாட்டிய பின் அதைப் பார்த்தலையும் காட்சியுள் அடக்குகிருர். இவ்வாறே கால்கோள் முதலான பிறவற்றிற்கும் ஈரிரு விளக்கங்களைத் தந்துள்ளார். இவ்வாறு உரையாசிரியர்கள் தரும் விளக்கம் ஒன்-ருயினும் பலவாயினும் கல்லொடு தொடர்புடைய துறைகள் ஆறும் வீரனைத் தெய்வமாக்கும் தெய்வத் துறைகள் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

சிலம்பில் கண்ணகியென்னும் காரிகை நல்லாள் கற்பின் பொற்பால், மனத்திண்மையால் பத்தினித் தெய்வமாக ஆன நிலையில். அவளுக்குக் காட்சிக் காதை, கால்கோள் காதை, நீர்ப்படைக் காதை நடுகற் காதை, வாழ்த்துக் காதை என்னும் காதைகளால் சொற்-கோயில் கட்டிவிட்டார் இளங்கோவடிகள். தொல்காப்பியரின் பெரும்-படையைமட்டும் அவர் காதையாக்காதது ஏன்? கோயில் எடுப்-பதையே பெரும்படை என உரையாசிரியர் விளக்கியுள்ளனர். கண்ணகியைத் தெய்வமாக்கினரேயன்றி அவளுக்காகக் கோவில் கட்டிய-தாகச் சிலம்பில் செய்தியில்லை. அத்துடன் பிற்காலச் சோழர் கல்-வெட்டொன்று இறந்த வேந்தனுக்குப் பள்ளிப்படை அமைத்ததைக் குறிப்பிடுகின்றது. அப் பள்ளிப்படையும் பெரும்படையும் ஒன்றென் கின்ருர் டாக்டர் ஆண்டியப்பன். வீரன் அல்லது வீர வேந்தனல்-லாத குடிமகள் கண்ணகியாதலின் அவளுக்கு இளங்கோ பெரும்-படை வகுக்கவில்லை போலும்!

ஆ. பாடாண் திணையில்

பாடாண் திணையில் தொல்காப்பியர் துறை விளக்க நூற்பாவாகக் குறிப்பிட்டவை இரண்டுதான். அதில், முதல் துறை விளக்க நூற்பாவில் வரும் **புறநிலை வாழ்த்து** என்னும் துறைதான் தெய்வத்தன்மை ஏற்ற துறையாகக் கருதுதற்குரியது. பாடாணில் இதைப் பெயரளவில் குறிப்பிடும் தொல்காப்பியர், செய்யுளியலில்தான்,

'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே (செய். 106)

என விளக்கம் தருகிறார். இதில் வரும் வழிபடு தெய்வம்தான் அதைத் தெய்வத் துறையாக்குகின்றது. பாட்டுடைத் தலைவன் முன்னிலையாகத் தெய்வம் படர்க்கையாக வாழ்த்தப்படும் இப் புறநிலை வாழ்த்தில் தெய்வ வழிபாட்டினைக் காண்கின்றார் நச்சர். மன்னன் வழிபடும் தெய்வம் பற்றிய செய்தியை இத்துறையால் உணர முடிகின்றது. இளம்பூரணர் தரும் யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோளில் 'குன்றமர்ந்த கொல்லேற்றா'னும், நச்சர் தரும் சான்றில் கண்ணுதலோன், கடல்மேனிமால், எண்ணிருதோள் ஏந்திழையாள் ஆகியோரும் குறிப்பிடப்படுகின்றனர்.

இவ்வாறு, புறநிலை வாழ்த்து மட்டும் தெய்வத்துறையாகத் தொல்காப்பியரால் பேசப்பட்டாலும், பாடாண் பகுதி பிறக்கும் நிலைக்களன்பற்றிய எட்டு நூற்பாக்களும் காலப்போக்கில் துறைகளாக வளர்ச்சியடைந்தமையின், அவற்றையும் ஈண்டு இணைத்துப் பார்ப்பதில் தவறில்லை.

'காமப் பகுதி **கடவுளும்** வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர் (81)

'கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' (85)

என்னும் இரு நூற்பாக்கள் வெளிப்படையாகத் தெய்வச் செய்திகளை உணர்த்துவன.

'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே' (78)

'அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப' (79)

'கொற்ற வள்ளை ஓரிடத் தான' (86)

என்னும் ஒரு சில நூற்பாக்கள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் என்னும் ஒரு சிலர் கருத்துப்படியும், திறனாய்வாளர் சிலர் கருத்துப்படியும் தெய்வத் தொடர்புடையனவாகின்றன. நாலிரண்டில் ஒன்றாக இளம்பூரணர் கடவுள் வாழ்த்து வகையையும், புலவர் குழந்தை தேவர்ப் பாடாணையும் குறிப்பிடுவர். அமரர் என்பதற்குத் தேவர் எனப் பொருள் கொள்கிறார் நச்சர், இளம்பூரணர், டாக்டர் துரையரங்கனார் முதலானோர். அமரர் என்பதற்குப் பாரதியார், டாக்டர் இலக்குவனார், டாக்டர் நா. செயராமன் முதலானோர் கூறுவதுபோல் போர்வீரர் எனப் பொருள்கொள்ளின் இந்நூற்பா தெய்வத் தன்மையினின்று நீங்கிவிடுகின்றது. கடவுள் வாழ்த்தொடு கண்ணியவரும் கொடிநிலை, கந்தழி, வள்ளியைத் தொடர்ந்து 'கொற்றவள்ளை ஓரிடத் தான' என்னும் நூற்பா அமைந்திருப்பதால், வஞ்சித்திணைக்குரிய கொற்றவள்ளை கடவுள் வாழ்த்தொடு பொருந்திப் பாடாண் பாட்டாய வருமெனப் பொருள்கொண்டு தெய்வத் தொடர்புடைய செய்தியாகக் காண்கின்றனர் நச்சர், நாவலர், இராகவையங்கார், வெள்ளைவாரணனார் ஆகியோர்.

பலரும் உலகியலைச் சார்த்தி விளக்கும்
'குழவி மருங்கினும் கிழவ தாகும்' (82)
'மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே' (84)

என்னும் இரு நூற்பாக்களையும், 'இறைவனைக் குழவி வடிவமாகவும் மனத்தில் கொண்டு அதன் காட்சி பெற்றுப் பயனடையலாம்', 'ஈண்டு ஆண்டு என்று ஓடியலைதல் வேண்டா, இருந்த ஊரிலேயே இருந்த இடத்திலேயே அதன் தோற்றம் எய்தப் பெறலாம்' என்று தனக்கே உரிய முறையில் சமயத் தொடர்பாக — தெய்வத் தொடர்பாகப் பொருள் தருகிறார் டாக்டர் துரையரங்கனார்.

எனவே, சுருங்கக்கூறின், 'வழக்கியல் மருங்கின்' எனத் தொடங்கும் நூற்பாவும் (80), 'ஊரொடு தோற்றமும்' எனத் தொடங்கும் நூற்பாவும் (83) நீங்கலாகப் பாடாண் திணையின் முன்னுள்ள நூற்பாக்கள் ஏதோ ஒரு வகையில் ஒரு சிலர் கருத்துப்படியாவது தெய்வத் தொடர்புடையனவாகின்றன எனலாம்.

புறப்பொருள் வெண்பாமாலை கூறும் தெய்வத்துறைகள்

ஐயனாரிதனார் வெட்சி, வஞ்சி, உழிஞை, பாடாண், பொதுவியல், பெருந்திணை ஆகிய ஆறு படலங்களில் தெய்வத்துறைகள் பலவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

1. வெட்சியில்

நிரை கவர்தலாகிய வெட்சியில் கொற்றவைநிலை, வெறியாட்டு என்னும் இரு துறைகள் தெய்வத்துறைகளாக உள்ளன. கொற்றவைநிலையைப் பொறுத்தமட்டிலும் தொல்காப்பியத்தை ஒட்டியே செல்கின்றது எனலாம். ஆனால் வெறியாடுதல் என்பது வள்ளிக் கூத்தாடல் என்கிறார் அதன் உரையாசிரியர். அப்பொருள் விளக்கத்தைப் பார்க்கும்போது தொல்காப்பியரின் காந்தளும் வள்ளிக்கூத்தும் ஒன்றுதானோ என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றது. 'வெறியாடல்' துறையைக் குறிப்பிட்ட ஐயனாரிதனார் 'வள்ளி'யை வெட்சியில் ஒரு துறையாகத் தனியே குறிப்பிடாமல் இருப்பதும் சிந்திக்கத்தக்கது.

2. வஞ்சியில்

வெட்சிப் படலத்தில் கொற்றவைநிலை ஒன்று இருப்பதைப் போலவே, வஞ்சிப் படலத்திலும் கொற்றவைநிலை எனும் தெய்வத் துறையொன்று காணப்படுகின்றது,

3 உழிஞையில்

திருமால், சிவபெருமான், முருகன் ஆகிய மூன்று தெய்வங்கள் நிகழ்த்திய கோட்டைப் போர்களைக் குறித்தும், அவர்கள் அப்போது சூடிய பூக்களைக் குறித்தும் உரைக்கின்றன கந்தழி, முற்றுழிஞை, காந்தள் என்னும் துறைகள்.

கோட்டைப் போரின்போது பயன்படுத்திய முரசிற்குப் பலியிட்டு வழிபட்டதால் 'முரச உழிஞை' என்பதையும் தெய்வத் துறையாக அடக்கலாம்போல் உள்ளது. அவ்வண்ணமே வாகையில் இடம் பெற்ற ஒரு துறை 'முரச வாகை' யாகும்.

4. பாடாணில்

பாடாண்படலத்துள்தான் பெரும்பான்மையான தெய்வத் துறைகள் இடம்பெற்றுள்ளன. அவையாவன :

1. கடவுள் வாழ்த்து
2. பூவைநிலை
3. புறநிலை வாழ்த்து
4. கொடிநிலை
5. கந்தழி
6. வள்ளி

7. புலவராற்றுப் படை
8. புகழ்ந்தனர் பரவல்
9. பழிச்சினர் பணிதல்
10. கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்த பக்கம்
11. கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்

5. பொதுவியலில்

கல்லொடு தொடர்புடைய கற்காண்டல், கற்கோள்நிலை, கல்நீர்ப்படுத்தல், கல்நடுதல், கல்முறைபழிச்சல், இற்கொண்டு புகுதல் என்னும் ஆறும், காஞ்சிப் பொதுவியற்பாலதாய் வரும் புலவரேத்தும் புத்தேள் நாடு என்னும் ஒன்றும் ஆக 7 துறைகள் பொதுவியல் படலத்துள் தெய்வத் துறைகளாகக் காண்கின்றோம்.

6. பெருந்திணையில்

பெருந்திணைத் தலைவி முருகனின் அளி நினைந்து, தன் நிலையைத் தாய் உணராமல் வெறியாடுவதைக் கூறும் வெறியாட்டு என்னும் துறை இருபாற் பெருந்திணயுள் தெய்வத் துறையாக காணப்படுகிறது.

'வெய்ய நெடிதுயிரா வெற்பன் அளிநினையா
ஐய நனிநீங்க ஆடினாள் — மையல்
அயன்மனைப் பெண்டிரொ டன்னைசொல் அஞ்சி
வியன்மனையுள் ஆடும் வெறி'

என்ற சான்றுப் பாடலைக் கொண்ட வெறியாட்டிற்கும் வெட்சி வெறியாட்டிற்கும் வேறுபாடு உள்ளதை நோக்கலாம்.

தெய்வத்துறை ஒப்பீடு

தெய்வத் துறைகளைப் பொறுத்த வரை தொல்காப்பியப் புறத்திணையியலுக்கும் புறப்பொருள் வெண்பாமாலைக்கும் இடையில் பல்வேறு ஒற்றுமைக் கூறுகளையும் வேற்றுமைக் கூறுகளையும் நாம் காண முடிகின்றது.

1. பொதுவியல்புகள் சில

இருநூல்களிலும் தும்பை, வாகை, காஞ்சி என்ற மூன்று திணைகளில் எத்தெய்வத் துறையும் இடம்பெறவில்லை.

பாடாண் திணையில்தான் மிகுதியான தெய்வப் பகுதிகள் அல்லது தெய்வத் துறைகள் இருநூல்களிலும் பேசப்பட்டுள்ளன.

2. வேறுபாடுகள் சில

புறத்திணை ஏழெனவும், பன்னிரண்டெனவும் அடித்தளத்தி-லேயே வேறுபடும் இவ்விரு நூல்களில் வேற்றுமைக் கூறுகள் இல்லாமல் போய்விடுமோ?

தொல்காப்பியம் வெட்சி, பாடாண் ஆகிய இருதிணைகளைத் தவிர வேறு எத்திணையிலும் தெய்வத் துறைகளைக் கூறவேயில்லை. ஆனால் வெண்பாமாலை மட்டும் வஞ்சி, உழிஞை, பாடாண், பொது-வியல் ஆகிய படலங்களில் சில புதிய தெய்வத் துறைகளைக் குறிப்-பிட்டுள்ளது. வஞ்சியுள் கொற்றவைநிலையைப் புதிதாகச் சேர்ப்ப-தோடு நில்லாமல் அதற்கு,

'நீடோளான் வென்றிகொள்கென நிறைமண்டை வலனுயரிக்
கூடாரைப் புறங்காணும் கொற்றவைநிலை உரைத்தன்று
(5)

'மைந்துடை ஆடவர் செய்தொழில் கூறலும்
அந்தமில் புலவர் அதுவென மொழிப' (6)

என இரு விளக்கங்களையும் தந்துள்ளது. அவ்வாறே உழிஞையுள்,

'மாவுடைத்தார் மணிவண்ணன்
சோவுடைத்த மறநுவலின்றி' (7)

'ஆடியல் அவிர்சடையான்
சூடியபூச் சிறப்புரைத்தன்று' (8)

'கருங்கடலுள் மாத்தடிந்தான்
செழுங்காந்தட் சிறப்புரைத்தன்று (9)

என விளக்கப்பட்ட கந்தழி, முற்றுழிஞை, காந்தள் ஆகிய மூன்று துறைகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. தொல்காப்பியர் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகியவர்களுக்கு மட்டும் ஆற்றுப்படை வகுக்க, ஐயனாரிதனாரோ இறையருள் பெற்ற ஒரு புலவன் அது பெறத்தகுந்த மற்றொரு புலவனை இறைவனிடத்து ஆற்றுப்படுத்து-வதால் 'புலவராற்றுப்படை'த் துறையைப் புதிதாக அமைக்கிறார். 'இருங்கண் வானத்து இமையோருழைப் பெரும்புலவனை ஆற்றுப்-படுத்தன்று' (42) என்பது அதற்கு அவர்தரும் இலக்கணம்.

தொல்காப்பியர் ஓரிடத்தில் குறிப்பிட்ட தெய்வத்துறைகள் சில, வெண்பாமாலையுள் வெவ்வேறிடங்களில் கூறப்பட்டுள்ளன. வெட்சிப் பொதுவில் கூறிய துறைகள் பொதுவாக இவரது வெட்சி

நீங்கலான பிற படலங்களில்தான் காணமுடிகின்றது. சான்ருக வள்ளியும் பூவைநிலையும் பாடாண்படலத்துள்ளும், காட்சி முதலாய நடுகல் துறைகள். உன்னநிலை ஆகியவை பொதுவியல் படலத்திலும் இடமாற்றம் செய்யப்பட்டதைக் காணலாம். ஆனுல் தொல்காப்பியக் 'காந்தள்' மட்டும் வெட்சிப் படலத்தின் இறுதிப் பகுதியுள் 'வெறியாடல்' எனக் கூறப்பட்டுள்ளதை நோக்கலாம். ஆயின் அத்துறை விளக்கத்தை நோக்கும்போது முருகனை நினைத்து வேலன் ஆடுவதும், அவனை நினைத்து மகளிர் ஆடுவதுமாகிய காந்தள், வள்ளி என்னும் இரு துறைக் கருத்துக்களையும் இணைத்து வெறியாட்டென ஒரு துறையாக்கிவிட்டார்போல் உள்ளது.

அடுத்து, தொல்காப்பியர் ஓரிடத்தில் ஒரு நிலையில் கூறிய தெய்வக் கருத்துக்கள் வெண்பாமாலையுள் வேறு நிலையில் கூறப்பட்டுள்ளன. அஃதாவது அவர் பாடாண் பகுதி பிறக்கும் நிலைக்களன்களாகச் சொல்லிய தெய்வச் செய்திகளெல்லாம் இவர் காலத்தில் தெய்வத் துறைகளாக மாறிவிட்டன.

தொல்	பு. வெ. மாலை
1. 'காமப் பகுதி கடவுளும் வரையார் ஏனோர் பாங்கினும்என்மனூர்புலவர்'	1. கடவுள்மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்த பக்கம் 2. கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்
2. 'கொடிநிலை கந்தழி வள்ளி என்ற வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'	1. கொடிநிலை 2. கந்தழி 3. வள்ளி 4. கடவுள் வாழ்த்து

இவ்வாறே 'உலகியல் மருங்கின்' எனத் தொடங்கும் நூற்பாவில் பரவலும் புகழ்ச்சியும் மக்கட் பாடாண் பகுதியாகக் காப்பியரால் கூறப்பட, பின் அவை தெய்வத்தன்மை பெற்று மறுமைப் பயனுக்காகவும் இம்மைப் பயனுக்காகவும் இறைவனை வேண்டுவதாய்ப் 'புகழ்ந்தனர் பரவல்', 'பழிச்சினர் பணிதல்' என இரு துறைகளாகக் கூறப்பட்டுள்ளன. இளம்பூரணரால் 'அமரர்கண் முடியும் அறுவகை'யுள் அடங்குவதாகக் கூறப்பட்ட பரவலும், புகழ்ச்சியும், கொடிநிலையும், கந்தழியும், வள்ளியும் மட்டுமே தொல்காப்பியர் கூறியவை. புலவராற்றுப்படை இளம்பூரணருக்கு எங்கி-

ருந்து கிடைத்தது என்பதைச் சிந்திக்கும்போது, வெண்பாமாலையின் தாக்கமே என்பதை நம்மால் உணரமுடிகின்றது, அவ்வண்ணமே அவர் கருத்துப்படி 'புரைதீர் காமம் புல்லிய வகை'தான் 'புலவி பொருளாகத் தோன்றிய பாடாண் பாட்'டாக மலர்ந்திருக்க வேண்டு-மெனத் தோன்றுகின்றது.

பாடல் பெற்ற துறை

புறப்பொருளுள் தெய்வத் துறைகள் பல காணப்பட்டாலும் பூவைநிலை ஒன்றுதான் பாடல் பெற்ற துறையாக உள்ளது. ஆநிரைப் போரில் பூவையின் மலர்ச்சி, தொல்காப்பியரால் நிமித்தமாகக் கூறப்-பட, வெண்பாமாலையுள் மன்னனால் தொழப்படும் மாயவனின் நிறத்-தோடு பூவைமலர் ஒப்பிட்டுப் பேசப்பட்டுள்ளது. 'கறவை காவலன் நிறனொடு பொரீஇப் புறவலர் பூவைப் பூப்புகழ்ந்தன்று' என்று பூவைக்குரிய கொளு பொதுநிலையில் பேசினாலும்,

'பூவை விரியும் புதுமலரிற் பூங்கழலோய்
யாவை விழுமிய யாமுணரேம்—மேவார்
மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை
நிறத்தொடு நேர்தருத லான்'

என்னும் சான்றுப்பாடல் 'பூங்கழலோய்' என மன்னனை விளித்துப் பேசியிருப்பதால் இதை உணர்கிறோம்.

புறநானூற்றில் பாடாண்திணைப் பூவைநிலைத் துறைக்கே உரிய-தாக மூன்று பாடல்கள் உள்ளன. இதிலிருந்து தொல்காப்பியர் கூறிய வெட்சி குறிக்கப்படாமல், ஐயனரிதனர் கூறிய பாடாண்திணையே அதற்கு உரித்தாக்கப்பட்டதை நோக்கலாம். ஆயினும் அம்மூன்று பாடல்களின் பொருட்கூறுகளை நோக்கும்போது அவை வெண்பா-மாலைக் கருத்தினும் வேறுபட்டுச் செல்வதைக் காண முடிகின்றது. 'ஏற்றுவலனுயரிய எரிமருள் அவிர்சடை' எனத் தொடங்கும் புறம் 56–ஆவது பாடலில், உலகம் காக்கும் கடவுள் நால்வர் - சிவன், பலதேவர், திருமால், முருகன் ஆகியோர் குறிப்பிடப்பட்டு, அந்-நால்வரோடு பாண்டியன் ஒருவன் ஒப்பிடப்படுகிறான். அத்துடன் கதிரவனும் திங்களும்போல் வீரமும் புகழும் மிக்கோனாக விளங்க வேண்டுமென வாழ்த்தவும்படுகின்றான். இரு இலக்கணங்களின் பூவைநிலைத் துறைக் கருத்தோடு இப்பாடல் ஒத்துப் போகவில்லை. என்றாலும், இதைப் பூவைநிலைக்கு மிகப்பொருந்திய பாடலாகக் குறிப்-பிடுவர். நச்சரும் இளம்பூரணரும் வலிந்துகொள்ளும் பொருள் நிலைகளுக்கு வேண்டுமானால் அத்துறைக்குப் பொருத்தமாகலாம்.

அவ்வாறே, பாண்டியனின் அழகும், அருளும், இயல்பும் பாராட்டப்பட்டு அவன் ஞாயிற்றோடும் திங்களோடும் ஒப்பிடப்படும் புறம். 59-ஆம் பாடல் பூவைநிலைக்கு எப்படிப் பொருந்தும் என்பது தெரியவில்லை. 'கானன் மேய்ந்து' என்னும் புறம். 374-ஆம் பாடல் ஆய் அண்டிரனுக்கு ஞாயிறுனது ஒவ்வாமை என்னும் எதிர்மறை—முகத்தால் ஒப்பிடப்பட்டுள்ளது. ஆயின் அதன்கண் வரும் விடியல் வருணனை, கிணைவன் பாடல், ஆய் அண்டிரன் கொடை புகழப்படல் என்னும் பொருட்கூறுகளால் பரிசில் தொடர்பான துறையொன்றுள் அடக்கலாம்போல் உளதேயன்றிப் பூவைநிலைக்குப் பொருத்தமாகப் படவில்லை. டாக்டர் செயராமனும் 'தலைவனை ஞாயிற்றோடும் திங்களோடும் உவமை சொல்லிப் பாடும் பாடலைப் பூவைநிலை என்பது புதுமையாய் உள்ளது' எனச் 'சங்க இலக்கியத்தில் பாடாண் திணை'என்னும் நூலில் (ப. 112) குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது. புறநானூற்று உரையாசிரியரும், ஒளவை துரைசாமி ஆகியோரும் ஞாயிறு திங்களோடு உவமித்தமையால் பூவைநிலையாயிற்று எனப் பொருத்தம் காட்டுவது எவ்வண்ணம் பொருந்துமோ தெரியவில்லை! திருவுடை மன்னனைத் திருமாலாகக் காண்பதோடு மட்டும் தமிழர்கள் நிறை-வடையவில்லை என்பதைத்தான் இத்துறை நமக்கு உணர்த்துகின்றது.

சிக்கல் மிக்க துறைகள்

தொல்காப்பியப் பாடாண்டிணையில் பல நூற்பாக்கள் படும்பாடு சொல்லும் தரமன்று. அவற்றுள் கொடிநிலை,கந்தழி,வள்ளி என்பவை-பற்றித் தமிழறிஞர்களுக்கிடையே உள்ள கருத்து வேறுபாடு சொல்லி முடிவதாமோ! அச் சொற்களுக்கு எவ்விளக்கமும் கூறாமல் இருந்து விட்டார் தொல்காப்பியர். கடவுள் வாழ்த்தொடு வரும் இம்மூன்று சொற்களையும் அரசனைச் சார்த்திப் பொருள் சொல்ல நினைக்கிறார் இளம்பூரணர். கொடிநிலைக்கு வெண்பாமாலை விளக்கத்தையே- 'மூவர் கொடியுள்ளும் ஒன்றெடு பொரீஇ மேவரு மன்னவன் கொடி புகழ்ந்-தன்று' என்பதையே ஏற்று அதே சான்றுப் பாடலைத் தரும் இளம்-பூரணரால், கந்தழிக்கு அப்படியே அவர் தரும் சான்றைத் தரமுடிய-வில்லை. எனவே தம் கருத்திற்கு அரண் செய்யும்வண்ணம் உழிஞைப் படலத்திற்குச் சென்று, அங்குக் 'கந்தழிக்குக் கூறப்பட்ட சான்றைத் தந்துவிடுகிறார். வள்ளியை என்ன செய்வது? எனவே, 'வள்ளியிற் சார்ந்து வருமாறு வந்தவழிக் கண்டு கொள்க' என விளக்கமும் சான்றும் காட்டாமல் கைவிரித்து விடுகிறார்.

நச்சரோ, அம் மூன்றிற்கும் வெஞ்சுடர் மண்டிலம் (கதிரவன்)

தத்துவங் கடந்த பொருள் (முதற் பொருள்), தண்கதிர் மண்டிலம் (நிலா) எனப் பொருள் காண்கின்ருர்.

டாக்டர் துரையரங்கனுர் இவற்றைப் பிறவாப் பேரின்பமாகிய வீட்டுநிலையை எய்துவதில் உள்ள படிநிலைகளாகக் கொண்டு வேருெரு முறையில் விளக்குவார். கந்துடைநிலை, கந்தழிநிலை, வள்ளிநிலை என்னும் மூன்றுநிலைகள் கடவுளுக்கு உண்டென்பார். அத்துடன் 'உருவத் திருமேனியாக அன்பர்கள் தேவுகின்ற (கொள்ளுகின்ற) வண்ணம் கந்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு உருவத் திருமேனி காட்டி நிற்கும் நிலையே கொடிநிலை அல்லது கந்துடை நிலையாம். இது மனமொழி மெய்களால் பற்றுதற்குரிய ; கடவுள் நிலையாம்; தெய்வநிலையாம். கந்தழிந்து அருவமாக நிற்கும் நிலையே கந்தழி நிலையாம். இது மனமொழி மெய்களைக் கடந்து அவற்ருல் பற்றுதற்கு அரிய நிலையாம்... வீட்டின்பம் வழங்கும் வள்ளன்மையுடைய கடவுள் நிலையே வள்ளிநிலை எனப்படும்' (அன்புநெறியே தமிழர் நெறி, பக். 237-238) எனச் சமய அடிப்படையில் விளக்குவார்.

மு. இராகவையங்கார் தம் 'தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி'யில் திருக்குறளில் கடவுள் வாழ்த்தினைத் தொடர்ந்து வரும் வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் மூன்று அதிகாரங்களில் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் மூன்-றினைப் பொருத்திப் புதுப்பொருள் காண்கின்ருர். 'இங்ஙனம் மேகம் நீத்தார் அறக்கடவுள் என்ற மூன்றும், முதற் கடவுளை முதலாகக் கொண்டு வாழ்த்தப்படுதலும் இப் பாடாண் பகுதியாகும் என்பது சூத்திரப் பொருளாதல் கண்டு கொள்க' (ப. 144) என்பார்.

புத்துரை வழங்கிய பாரதியாரோ, வெட்சியிலுள்ள குடிநிலை அல்லது துடிநிலையைக் கொடிநிலையாகவும், காந்தளைக் கந்தழியாக-வும் பாடபேதம் கொண்டு, போரில் கொடியெடுத்துச் செல்வது; ஆடவர் முருகனை வாழ்த்துவது, மகளிர் முருகனை வாழ்த்துவது என்னும் மூன்றும் கடவுள் வாழ்த்தாய், மன்னனைச் சார்த்தியுரைக்கும்-போது பாடாணுகும் எனப் பொருள் காண்கின்ருர்.

இங்குக் கூறப்பட்டுள்ள அத்தனை உரைகளும் புறநானூற்றை மறந்து செய்யப்பட்ட ஆய்வாகக் கருதும் டாக்டர் ஆண்டியப்பன், அவற்றை நடுகல்லோடு சார்த்தி வேருெரு புதுப்பொருள் உரைக்-கிருர். வடமோதங்கிழாரின் புறப்பாடல் அவருக்குத் துணை செய்திருக்-கின்றது. ''கள்ளி நீழல் கடவுள் வாழ்த்தி காணலென்கொல் என வினவினை வருஉம் பாண! கேண்மதி; அவன் உனக்கென்று தந்த

நிலத்தை உழுதுண்பதும். அதை விடுத்து இரவலனாக வாழ்வதும் உன்கையில் உள்ளது. அண்மையில் நடந்த பூசலில் ஆனிரையை மீட்டுவந்தான். நிரையொடு வந்தவன் அரிதுசெல் உலகில் சென்றான். அவனுடலோ காணுற்றின் கரையிற் துளைபட்ட கம்பம்போல் அம்பொடு துளங்கி வீழ்ந்தது. புகழ் மிக்க அவனது பெயரோ, மயிற்பீலி சூட்டி, அச் சிறுவழியில் அமைந்த பந்தர்க் கல்மிசை காணப்படுகிறதுபார்.... இப் பாட்டில் கம்பமொடு துளங்கிய இலக்கம்போல் நின்று விழ்ந்தான் என்பதில் கந்தழி புலப்பட்டது. ... கேண்மதி யாணரது நிலையே என்று வள்ளன்மையைப் புகழ்வதால் வள்ளி ஆயிற்று. படம் செய் பந்தர்க் கல்மிசை என்பதால் கொடி-கட்டி, துணியால் பந்தலிட்ட செய்தியும் புலப்படுகிறது. அதுவே கொடிநிலை ... எனவே கொடிநிலை, கந்தழி, வள்ளி என்பன வீரக்கல்லோடு தொடர்புடைய செய்திகளே ஆகும்'' என்பார் காப்பியர் நெறி (அகத்திணையியல், புறந்திணையியல்) யில் (பக். 71–72).

இம் மூன்று துறை குறித்து இன்னும் எவ்வளவு விளக்கம் வருமோ நமக்குத் தெரியவில்லை.

வழிபாட்டு நிலைகள்

பண்பாடு என்பது மனிதனின் அகவாழ்வு, புறவாழ்வு என்ப-வற்றிலிருந்து பெறப்படும் ஒன்றாகும். கடவுளைப் பற்றிய மனிதச் சிந்தனையை உணர்ந்துகொண்டாலும் பண்பாட்டின் ஒரு பகுதியை நன்கு உணர்ந்துகொள்ளலாம். புறப்பொருளைப் பேசும் இரு இலக்கண நூல்களாலும் சங்க கால, இடைக்கால வழிபாட்டு நிலைகளை ஓரளவு உணரலாம்.

1. கடவுள் வழிபாடு

சங்ககால வாழ்வியல், கடவுட்கொள்கை, உலகக் கண்-ணோட்டம் ஆகியவற்றால் அக்கால மக்கள் உயர்ந்த பண்பாடு உடை-யவர்களாக வாழ்ந்தார்கள் என்பர் அறிஞர். பரம்பொருளைப்பற்றிப் பண்டைத் தமிழர்கள் புரிந்துகொண்டிருப்பதை, அதற்கு அவர்கள் இட்ட தெய்வம், கடவுள் முதலாய பெயர்களால் உணரமுடிகின்றது. அகப்பொருளில், 'ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்' எனக் **கடவுள்** என்ற சொல்லை மிக அரிதாகக் கையாளும் தொல்காப்பியர் **தெய்வம்** என்ற சொல்லைப் பலவிடங்களில் பயன்படுத்தியுள்ளார். 'தெய்வம் உணாவே' எனச் கருப்பொருளைச் சுட்டுமிடத்தும், 'மன்னு நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்' என நற்றாய் கூற்றைக் கூறுமிடத்தும் 'உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலமெனக் கொள்ளும்' என

உள்ளுறையை விளக்குமிடத்தும், தெய்வம் வாழ்த்தலும்' என்னும் களவில் செவிலி கூற்றின்போதும், 'அற்றம் இல்லாக் கிழவோட் சுட்டிய தெய்வக் கடத்தினும்' என்னும் கற்பில் தோழி கூற்றின்-கண்ணும் தெய்வமெனும் சொல் வருவது காணலாம். புறத்திணை-யியலுள் தெய்வம் என்ற சொல்யாண்டும் காணப்படவில்லை. கடவுள் என்னும் சொல்லும் பாடாண்திணையில் மட்டும் 'காமப்பகுதி கட-வுளும் வரையார்' 'கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றும் கடவுள் வாழ்த்தொடு வரும்' என்னும் இரண்டிடங்களில் மட்டும் கையாளப்-பட்டுள்ளது. இங்குள்ள கடவுள் என்னும் சொற்கு அரசன் எனப் பொருள் கொள்வோரும் உளர்.

ஆனல், வெண்பாமாலைப் பாடாண் படலத்தில் வரும் கடவுள் வாழ்த்து, கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்த பக்கம், கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் என்னும் துறைகளை நோக்கும்போது, தொல்காப்பியரின் கடவுள் மன்னனைக் குறிப்பிட-வில்லை என்பது போதரும்.

2. இயற்கை வழிபாடு

புறப்பொருள் நூலிரண்டில் பேசப்படும் விரிச்சி, உன்னநிலை என்னும் துறைகள் இரண்டும் தமிழர் இயற்கையிலிருந்து தெய்வ நிமித்தம் கண்டு போற்றியதைக் குறிப்பிடுகின்றன.

3. பெண் தெய்வ வழிபாடு

'இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (சங்க காலம்)' என்னும் நூலில் டாக்டர் சி. இலக்குவனர், சங்க காலத் தமிழர் வரலாற்றை ஆய்ந்து தமிழகத்திற்கே உரிய சில வரலாற்றுச் செய்திகளைக் கூறு-கிருர். அவற்றுள் ஒன்று, வெற்றி பெறுவதற்குத் துணைபுரிபவள் கொற்றவை என்று கூறப்பட்டிருத்தலின் கடவுளைப் பெண்ணுக வழிபடும் முறை தமிழகத்திற்கே உரித்து என்பதாகும். இலக்குவனர் ஆய்வுப் பண்பினை ஆராய்ந்த வீ. முத்துச்சாமி, எம்.ஃபில். ஆய்வேட்-டில், சிந்துவெளி நாகரிகத்தைக் குறித்து ஆய்ந்து 'விந்தை மிகுந்த இந்தியா' (The wonder that was India) என்னும் நூலெழுதிய ஏ. எல். பாசியம், கீழ்த்திசை நாகரிகங்களின் சமயச் சடங்குகளை ஆய்ந்து, 'கோல்டன் பௌ' (The golden Bough) என்னும் நூலெ-ழுதிய வரலாற்ருசிரியர் ஃபிரேசர் என்னும் இருவரும் இந்தியாவில் பெண் தெய்வ வழிபாட்டு முறை காணப்பட்டதைக் குறிப்பிடுவதாகக் கூறியுள்ளார் (ப. 135). "ஆனல் இலக்குவனர், கடவுளைப் பெண்ணுக வழிபடும் முறை தமிழகத்திற்கே உரியது என்று கூறுகிருர். 'கொற்-

றவை' என்னும் வெற்றித் தெய்வ வழிபாட்டைச் சுட்டி அக்கருத்தைக் குறிப்பிட்டிருத்தலை நோக்குமிடத்து, வெற்றிக்கு உரிய பெண்தெய்வமாகக் கடவுளை வழிபட்ட முறை தமிழகத்தில்தான் நிலவியது என்று அவர் எண்ணியிருக்கக் கூடும் என்று கொள்ள இடமுண்டு'' (ப. 136) என்றும் கூறுகிறார். இதனால் சங்ககாலத்து வீரர்கள் வெற்றி வேண்டிக் கொற்றவையை வழிபட்டதை நம்மால் உணரமுடிகின்றது. இக் கொற்றவைநிலை வெண்பாமாலையின் வெட்சிப் படலத்தோடு, வஞ்சிப் படலத்திலும் இடம்பெற்றிருப்பதை நோக்குமிடத்து அக் கொற்றவை வழிபாடு தொடர்ந்து நிலவி வந்ததை நன்கு உணர முடிகின்றது.

தொல்காப்பியர் வெட்சிப் பொதுவில் கூறும் வள்ளிக் கூத்து பற்றிய செய்தி, ஐயனாரிதனார் மறவரது வினைமுடிய வாலிழையோர் வேலனொடு வள்ளியின் வேடம் பூண்டு வெறியாடிய செய்தி ஆகியவற்றால் முருகனின் வள்ளி போற்றப்பட்டதை நாம் உணர்கிறோம்.

அகப்பொருளுள் எங்கும் குறிப்பிடப்படாத கொற்றவை, வள்ளி வழிபாடு புறத்திணையியலில்தான் காணமுடிகின்றது.

4. திணைத் தெய்வ வழிபாடு

திணைத் தெய்வங்களாக முருகன், மாயோன் ஆகிய ஆண் தெய்வங்கள் தொல்காப்பியப் புறத்திணையியலுள் குறிப்பிடப்பட்டிருப்பது நோக்கத்தக்கது. குறிஞ்சி நிலத்தெய்வம் முருகன். 'மறைந்தவற் காண்டல்', 'களவு அலராயினும்' எனத் தொடங்கும் களவியல் நூற்பாக்களில் வரும் வெறியாடல் பற்றிய அகப்பொருள் செய்திகளில் முருக வழிபாட்டினைக் காணும் நாம், புறத்திணையியலுள் 'காந்தள்', வெண்பாமாலையுள் 'வெறியாட்டு' (வெட்சி), 'வள்ளி' (பாடாண்) என்னும் துறைகளால் உணர்ந்துகொள்கிறோம்.

முல்லைநிலத் தெய்வம் திருமால். 'மாயோன் மேய காடுறை உலகம்' என அகத்திணையியலுள் திருமால் வழிபாட்டைக் குறிப்பிடும் தொல்காப்பியர், பூவைநிலை (வெட்சிப் பொது), கந்தழி (பாடாண்) ஆகிய புறத்துறைகளில் அதைச் சுட்டிக் காட்டுகிறார். புறப்பொருள் வெண்பாமாலையுள் கந்தழி (உழிஞை, பாடாண்), பூவைநிலை (பாடாண்) முதலிய துறைகளுள் அதைப் பேசியுள்ளார் ஐயனாரிதனார்.

சிவ வழிபாடுபற்றித் தொல்காப்பியர் பிற இடங்களில் பேசினாலும் புறத்திணையியலுள் எங்குமே குறிப்பிடவில்லை. ஆனால் வெண்பாமாலையுள் சிவனின் கோட்டைப் போர் 'முற்றுழிஞை' யுள் மட்டும் குறிப்பிடப்படுவது நோக்கத்தக்கது.

5. நடுகல் தெய்வ வழிபாடு

இரு நூல்களிலுமுள்ள காட்சி, கல்கோள், நீர்ப்படை, நடுதல், பெரும்படை (இற்கொண்டு புகுதல்), வாழ்த்தல் ஆகிய துறைகள் மறம் கந்தாக நல்லமர் வீழ்ந்த வீரர்களுக்கு எடுத்த நடுகல்லைத் தெய்வமாக வழிபட்ட வழக்கமுண்மையை நன்கு பறைசாற்றுகின்றன. டாக்டர் நாகசாமியின் நடுகற்கள் குறித்த நூலை நோக்கினும் இக் கூற்றின் உண்மை நன்கு புலனாகும்.

6. துறக்கநிலை

தொல்காப்பியத்துள் வீட்டுலகம் அல்லது வீடுபேறு எப்படி இருக்கும் என்பதைப் பற்றிய செய்தி எதுவுமில்லை. ஆனால்வெண்பா மாலை காலத்தில் சமய எண்ணம் மேலோங்கி விட்டதை எடுத்-துரைப்பதுபோல் 'புலவர் ஏத்தும் புத்தேள் நாடு' என ஒரு துறை கூறப்பட்டுள்ளது. அதற்குச் சான்றாகத் தரப்பட்டுள்ள பாடலில் பகலின்றி, இரவின்றி, பற்றின்றி, துற்றின்றி (வினைநுகர்ச்சியின்றி), இகலின்றி, இளிவரவுமின்றி இருக்கும் என மேலுலகம் விளக்கப்-பட்டுள்ளது. அத்தகு வீடுபேறு அடைவதையே அடியவர்கள் முழு-நோக்கமாகக் கொண்டனர் என்பதை இடைக்கால இலக்கியங்கள் உணர்த்துகின்றன. 'வீடும் வேண்டா விறலின் விளங்கினார்' என்னும் பெரியபுராண அடியிலுள்ள உம்மை வீட்டுலகின் உயர்வைக் காட்டுகின்றது என்பதை மறக்கக் கூடாது.

முடிவுரை

இவ்வாறு, புறப்பொருள் நூலிரண்டிலுள்ள பல்வேறு துறை-களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. உரையாசிரியர்களும், திறனாய்வாளர்களுமே இவ்விளக்கங்களுக்குக் காரணமாவர். அப் பல்வேறு அறிஞர்களின் சிந்தனைக்கு விருந்தா-கிச் சிக்கல் தீராத துறைகளாகத் தெய்வத் துறைகள் அமைகின்-றன எனின் மிகையன்று. தெய்வம் ஒரு விளக்கத்திற்குள் அடங்கு-வதில்லையே! சமயவாதிகள் கடவுளுக்குத் தரும் விளக்கங்கள் ஒன்றாக இருப்பதில்லையே! தெய்வம் உண்டென்று சொல்வோரும், இல்லை-யென்று சொல்வோரும் உண்டல்லவா? உண்டோ இல்லையோ என்-னும் சீதையின் சிற்றிடையைக் குறிப்பிட வந்த கம்பரும், தெய்வம் உண்டு இல்லை எனக் கூறும் சமயவாதிகளைக் குறிப்பிடுவதும் நோக்-கத்தக்கது.

9

கைக்கிளை—மரபு மாற்றமும் வளர்ச்சியும்

ந. சாந்தா ஆப்தே

தொல்காப்பியர் அகத்திணையியலில்,

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப" (தொல். பொ. 1)

என்று கூறுவர். 'கை' என்பதற்குச் சிறிய, தனிமை, பக்கம் என்ற பொருள்கள் உண்டு. கிளை என்பது உறவு என்ற பொருளில் அமையும். கைக்கிளை என்பது தனித்த ஒருவரிடம் சிறிய அளவில் கிளைக்கும் உறவு என்பதாகும். அது ஒருதலைக் காமம் எனப்படும். பொதுவாக இக் கைக்கிளை இழிந்தது என்று பலரால் கருதப்பட்டது. இழிந்த காமத்தன்மை கருதிக் 'கை' 'பெரு' என்ற அடைகளைக் கைக்கிளையும் பெருந்திணையும் பெற்றிருக்கின்றனவோ என ஐயுற வேண்டாம்

ஐந்திணையானது அன்பின் ஐந்திணை என்று கூறுமளவிற்குச் சிறப்புடையதாகிறது. அங்கு ஆண் பெண் இருபாலாரிடை உள்ளப் பரிமாற்றத்திற்கு இடமுண்டு. கைக்கிளையான ஒருபாற் காதல் ஒருவர் மட்டும் பாராட்டுவதற்குரியது. அது தோன்றியவர் உள்ளத்தளவில் தூய்மையானது; அன்பில் குறைவில்லாதது. ஆயினும் இருபாலாரின் 'அன்புடை நெஞ்சந்தாம் கலந்தனவே' என்ற நிலை அங்கு இல்லை. ஐந்திணைபோல் இருவர் தம் உள்ளப் புணர்ச்சிக்கு அங்கு இடமில்லை - ஒத்த அன்பிற்கு இடமில்லை என்ற காரணங்களால், எண்ணும்போது முதலிடம் பெற்ற கைக்கிளை பொருள் கூறும்போது அகத்திணையியலின் இறுதிப் பகுதியில் தனிச் சூத்திரத்தில் இடம் பெற்றதோ என எண்ணுவதற்குரியதாகிறது.

ஏனைய ஐந்திணைகளும் அற நலத்தவை, உலகத்தாரால் ஏற்கப்பட்டவை, இலக்கியத்திற்கு இயைந்தவை என்ற காரணங்களால் அகத்திணையியலில் விரிவான இடம் பெற, கைக்கிளையோ மிகச்சிறிய அளவில் இடம் பெற்றது போலும். மேலும் விளக்கமாகப் பேசுவதற்குரிய நிலையில் அது இல்லை. குறிப்பாகச் சுட்டப்படுவதற்குரியது என்ற காரணங்களால் தான் 'கைக்கிளைக் குறிப்பு' என்ற தொடரைத் தொல்காப்பியரே பயன்படுத்தினர் போலும். பாலை தவிர்த்த ஐந்திணை உரிமை வகையால் நிலம் பெறும். அத்தகு நிலங்களிடைப் பொது வகையால் நிகழ்வன கைக்கிளையும் பெருந்திணையும் என்பர். ஆக, கைக்கிளை நிகழுமிடம் ஐந்திணையின் முதற் பொருள் நிலையைச் சார்ந்து இருப்பதால் அது விரித்துப் பாடும் உரிமையுடையது அல்ல என்ற நிலையில் கைக்கிளைக் குறிப்பு எனக் குறிக்கப்பட்டிருக்கலாம்.

"காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெருஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே" (தொ.995)

என்பர் தொல்காப்பியர்.

இந்நூற்பாவிற்கு விளக்கம் காணுபவர்கள் 'காமஞ்சாலா' என்பதற்குப் பருவம் எய்தப் பெருத பெண் என்பர். 'சாலா' என்பது முற்ருத, நிரம்பாத, மிகுதியில்லாத என்ற பொருள்களை ஏற்கும் வகையில் 'காமஞ்சாலா' என்பது 'காமவுணர்வு நிரம்பப் பெருத' என்ற பொருளைப் பெறும். ஆடவன் செலுத்தும் காமவுணர்வை அறியாத, உணராத நிலையில், அத்தகு உணர்வைத் 'தான்' அவனிடம் வெளிப்படுத்தவும் முடியாதவளாக அப்பெண் அமைகிருள். காமஞ்சாலா என்பதற்கு வயதிற்கு வராத சிறுமி என்ற பொருளில் இலக்கியத்திலும் சான்று காண முடியவில்லை. கைக்கிளைக்குரிய கலித்தொகைப் பாடல்களின் தலைவியின் உருவப் பொலிவு அவள் சிறுமியல்லள் என்பதைத் தெளிவாக்கும். 'முழங்கு நீர்ப்புணை' என அவளது தடமென் தோளும், 'வால் எயிற்றினள்' என அவளது பல் அழகும், 'முதிர் கோங்கின் முகை' என அவளது மார்பழகும் (கலி.55), 'சுடர் நுதல்' என அவளது நெற்றிப் பொலிவும் பருவம் வரப்பெற்ற, அல்லது பருவம் வருவதற்குரிய நிலையில் இருக்கின்ற பெண் என்பதனை விளக்கும்.

பருவம் வரப்பெற்றும் காமவுணர்வை உணராத வெளிப்படுத்த இயலாத பெண்ணாக மணிமேகலை இருந்தமையை இளங்கோவடிகள் 'செவ்வரி ஒழுகிய செழுங்கடை மழைக்கண் அவ்வியம் அறிந்தன; அதுதான் அறிந்திலள்' என்று சுட்டுவது இங்கு நினைத்தற்குரியது. பருவமுற்ற அல்லது பருவத்தை நெருங்கும் இத்தகு பெண்ணின்மீது காதலுற்றவன் 'இளமையான் உணராதாய்', 'மடமையான் உணராதாய்', 'சொல்லினும் அறியாதாய்' எனக் கூறி வருந்துவதைக் கலித்தொகைப் பாடல் (57) விளக்கும்.

காதல் உணர்வை அறிதற்கு இயலாதவளிடம் தன் காதல் உணர்வை வெளிப்படுத்தும் தலைவன் எத்தகு காதல் எதிர்மொழியும் தலைவியிடத்திருந்து பெறுமல் துன்புறுவான். தன் காதல் உணர்வைத் தன்னேடும் அவளோடும் இயைபு படுத்திப் பலமுறை சொல்லிச் சொல்லி இன்புற்று நிற்பான். இத்தகு நிலையில் அவ் ஆடவன் கொண்ட காதல் கைக்கிளை என்பது தொல்காப்பியர்தம் கருத்து. 'அகமாவது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனவும், கைக்கிளை, பெருந்திணை எனவும் எழுவகைப்படும்' என்பர் இளம்பூரணர். அவர் கருத்தின்படி அகத்திணையியலில் கூறப்படும் இக் கைக்கிளை அகக் கைக்கிளை எனப்படும்.

ஆண்பாற் கைக்கிளை பற்றிப் பேசும் தொல்காப்பியர், பெண்பாற் கைக்கிளை பற்றிக் குறிப்பிடவில்லை. அது பொற்புடை நெறியன்று என அவர் நினைத்திருக்கலாம். இழிந்த நடப்பியல் நெறியையும் நாகரிகமாகச் சுட்டும் வகையில் புனையலாம் என்பதை,

> ' மிக்க பொருளினுள் பொருள்வகை புணர்க்க
> நாணுத்தலைப் பிரியா நல்வழிப் படுத்தே' (தொ. 1165)

என்பர் அவர். அந்த அடிப்படையில் பெண்களுக்குப் பொற்புடையன அல்லாதவை எவை என்னும்போது, 'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை', 'மகடூஉ மடலேறல் பொற்புடை நெறியில்லை' என்றெல்லாம் சுட்டும் அவர் பெண்பாற்கைக்கிளை பொற்புடையது அல்ல என வெளிப்படையாகச் சுட்டியிருக்கலாம். அவர் கூறிய கைக்கிளை இலக்கணப்படி காமஞ்சாலாத இளமையோன்வயின் காமஞ்சான்ற பெண் காதல் கொள்வதுதான் பெண்பாற் கைக்கிளையாக முடியும். பெண் உளவியல் நிலையில் இது அமைய இயலாதது என அவர் கருதி இதனைப் பொற்புடை நெறியல்ல எனச் சுட்டவும் தேவையில்லை என நினைத்திருக்கலாம்.

உளவியல் அடிப்படையிலும் கைக்கிளையுணர்வு மனத்துள் பதிவதும் விரைவாகஅதை வெளிப்படுத்துவதும் ஆடவர்க்கே இயல்பு. நாணும் மடனும் உடைய பெண்கள் காமம் கூறல் என்பது பொருத்த-மில்லை எனத் தொல்காப்பியர் நினைத்திருக்கலாம். நற்றிணையிலும், 'காமம் செப்பல் ஆண்மகற்கு அமையும் யானே பெண்மை தட்ப நுண்ணிதின்' தாங்குகிறேன் (94) எனத் தலைவி கூறுவாள். ஆக, கைக்கிளைக் காதல் உணர்வில் புலம்பிக் கூறல் பெண்களுக்குரியதல்ல என்பதை இலக்கியம் மரபாக ஏற்றது என்ற காரணத்தால் இலக்-கணத்தில் அதனைப் பொற்புடையதல்ல எனச் சுட்ட வேண்டாம் என அவர் நினைத்திருக்கலாம். மேலும் மடலேறல், முந்நீர் வழக்கம் முதலியவை சமுதாயத் தொடர்பான சிக்கல்கள் எனவே அச்செயல்-களை அழுத்தி மறுத்துக் கூற வேண்டியதாயிற்று. பெண்பாற் கைக்-கிளை தனி மனிதச் சிக்கல். எனவே, அதை மறுத்துக்கூற வேண்டிய தேவை ஏற்படவில்லைபோலும்.

'முன்னைய நான்கும் முன்னதற் கென்ப' (தொ. 55) என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு விளக்கம் தரும் நச்சினார்க்கினியர், இயற்கைப் புணர்ச்சிக்கு முன்பு காட்சி, ஐயம், தெரிதல், தேறல் என்ற குறிப்பு நான்கும் கைக்கிளைக்குரியன என்பர். இந்நான்கை-யும் கைக்கிளைக்குரியனவாகத் தொல்காப்பியர் வெளிப்படையாகக் கூறவில்லை; எனினும் பின்னால் தோன்றிய நம்பியகப்பொருள் அவ்-வாறு கூறும். நம்பியகப்பொருளை மனத்திற்கொண்டு நச்சினார்க்-கினியர் அவ்வாறு உரை செய்திருக்கலாம். கலித்தொகையில் கைக்-கிளைக்குரியனவாகக் குறிப்புள்ள பாடலிலும் (56), இந்நான்கு நிலை-களையும் காணமுடியும். பெண்ணைக் கண்ட அவ் இளைஞன் யார்-கொல்? பாவைகொல்? கூற்றங்கொல் என ஐயுறுகிறான். பிறகு செல்வ மகள் எனத் தெளிகின்றான். இறுதியில் 'சொல்லாடிக் காண்பேன்' என்று குறிப்பறிய முற்படுகின்றான். காட்சி முதலானவற்றை அன்-பின் ஐந்திணைக்குரிய களவிற்குத் தொடக்க நிலைகளாகக் கொள்ள-லாம். அந்த அடிப்படையில், ஐந்திணையாய் மலர்வதற்குக் கைக்கிளை உதவவும் கூடும் என எண்ணுவதற்கு இடமுண்டு.

'முன்னைய நான்கும் முன்னதற்கென்ப' என்பதற்குப் பெருந்-திணைக்குரிய ஏறிய மடல்திறம், இளமைதீர் திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்க காமத்து மிடல் ஆகிய நான்கு நிலைகளுக்கு முந்தைய நிலைகளைக் குறிப்பிடுவர் இளம்பூரணர். இவர் கருத்துப்-படி ஏறாமடல் திறம், இளமை தீராத் திறம், தேறுதல் ஒழிந்த காமத்து

மிகாத்திறம், மிக்க காமத்தின் மாருகாத்திறம் நான்கும் கைக்கிளைக்-குரியன. தோழியின் அனுதாபம் பெற அவளிடம் மடலேறும் செய்தி கூறும் குறுந்தொகைப் பாடலை (17) ஏருமடல் திறத்திற்கு விளக்க-மாக ஏற்கலாம். தீம்பால் நிலத்தில் சிந்தியதுபோல் இளமை அழி-வதற்கு வருந்தும் வெள்ளிவீதியார் (27) கூற்று இளமைதீராத் திறத்-தது. 'முட்டுவென்கொல், தாக்குவென்கொல்' என்று தன் ஆற்ரு-மையைச் சொல்லளவில் கூறிப் புலம்பும் ஔவையார் (28) பாடல், தேறுதல் ஒழிந்த காமத்து மிகாத்திறத்தது. 'தலைவன் நயவார் ஆயி-னும் பல்கால் காண்டலும் உள்ளத்துக்கினிதே' என ஆறுதலடையும் தலைவி (குறு. 60) மிக்க காமத்தின் மாருகாத் திறத்திற்கு எடுத்துக் காட்டாக அமைகிருள்.

தொல்காப்பியர் 'முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே' (105) என்பதற்கு, உரையாசிரியர்கள் மன்றல் எட்டனுள் ஆசுரம், இராக்கதம், பைசாசம் மூன்றும் கைக்கிளைக்குரியன என்பர். இக் கருத்து எந்த அளவிற்குப் பொருந்தும் என்பது சிந்தனைக்குரியது பெண்ணை வலிதிற் கொள்ளும் இராக்கதமும், மூத்தோர் முதலி-யோருடன் கூடும் பைசாசமும் கைக்கிளைத் தலைவனின் மிகுதியான உணர்வு காரணமாக நடைபெற இடமுண்டு என்றகாரணத்தால் கைக் கிளைக்குரியனவாகச் சொல்லப்பட்டிருக்கலாம். கொல்லேறு தழுவிய-வனே, வில்லேற்றினனே இப்பெண்ணை மணத்தற்குரியவன் என்ற நிலையில் அமையும் ஆசுரம், கைக்கிளைக்குரியதாக ஏற்கத்தக்கது. ஆயினும் ஆசுர வகைக் கைக்கிளைக்குரிய முல்லைக் கலிப்பாடல்கள் சில (101, 102), ஏறு தழுவ முற்படும் ஆடவனின் உள்ள உணர்வுகளை விவரிப்பதாக இல்லை.

கைக்கிளைக்குரிய மக்கள் வினைவலர், அடியோர் என 'அடி-யோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும், கடிவரையில புறத்தென்-மனூர் புலவர்' (23) என்னும் தொல்காப்பியர் கூற்றிற்கு விளக்கம் தருவர் உரையாசிரியர்கள். தொல்காப்பியரும் பொதுவாக மக்களைப் பற்றிப் பேசுகின்ருரே தவிர, குறிப்பிட்ட திணைக்குரிய மக்கள் இவர் என்று கூறவில்லை. நச்சினூர்க்கினியர் எடுத்துக் காட்டாகக் கூறும் கலித்தொகைப் பாடல்களில் (94, 62) இடம் பெறும் அடியோர் கைக்கிளைக்குரியவராக இல்லை. தலைவன் தலைவியர் இருவரும் இறுதி-யில் இசைந்து கூடினர் என்ற நிலையில் அப்பாடல்கள் உள்ளன.

'முதற்பொருள் கருப்பொருள் இல்லாக் கைக்கிளை பெருந்திணை' என இளம்பூரணர் (ப. 21) கூறுவர்; தமக்கென்று அப்பொருள்கள்

இல்லையெனினும், அப்பொருள்கள் இல்லாமல் அவ்விருதிணை ஒழுக்கங்களும் நடைபெறமுடியாது. ஆகையால் கைக்கிளையும் பெருந்திணையும் ஐந்திணையினைச் சார்ந்தே முதற்பொருள் கருப்பொருள் பெறும் என்பது தெளிவாகும். கைக்கிளை எல்லா நில மாந்தரிடத்தும் நடைபெறக்கூடியது என நாம் ஏற்கலாம்.

அகத்திணையில் மாந்தர்தம் பெயர் சுட்டப்படாது. மாந்தர்தம் பெயர் சுட்டப்பட்டால் அது புறமாகும் என்பர் தொல்காப்பியர். இதனைப் பொதுவிதியாக ஏற்கலாம், சிறப்பு விதியாக,

'மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்' (54)

எனக் கூறுவதை ஏற்கலாம். இங்கு 'மக்கள்' என்பதை ஒத்தவுணர்வுடைய மக்கள் என்று பொருள் கொண்டு, ஒத்தவுணர்வுடைய அகனைந்திணை மாந்தர்தம் இயற்பெயர் சுட்டிவரல் கூடாது எனத் தெளியலாம். ஆக, ஒத்தவுணர்வு இல்லாக் கைக்கிளைமாந்தர்தம் இயற்பெயர் சுட்டியும் சுட்டாமலும் வரப்பெறும் எனலாம். பெயர் சுட்டா நிலையில் அகக்கைக்கிளை எனவும், பெயர் சுட்டிய நிலையில் அது அகப்புறக் கைக்கிளை எனவும்படும் என்பர் நச்சினார்க்கினியர்.

இதுவரை விளக்கப்பட்ட கைக்கிளை தொல்காப்பியத்தில் திணைநிலையில் அமைந்ததாகும். இது தவிரத் துறைநிலையில் கைக்கிளையைப் புறத்திணையில் பேசுவர் காப்பியர்.

'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே' (80)

என்ற அவரது கருத்திற்கு விளக்கம் தரும் நச்சினார்க்கினியர் 'ஒரு தலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்ட ஒரு புலவன் வீடுபேறு முதலிய பரிசில் வேண்டலின் அவை தம்மின் வேறாகிய ஒருதலைக் காமமாகிய கைக்கிளையோடு ஒத்தலின் பாடாண்திணை, கைக்கிளைப் புறனாயிற்று' என்பர். ஆக, பாடாண் என்பது கைக்கிளையிலும் அமையும் என்பது தெளிவாகிறது.

பாடாண்திணையின் துறைகளுள் ஒன்றாகக் 'கைக்கிளை வகை'யைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இக்கைக்கிளைவகையை ஆண்பாற்கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை என்பர் இளம்பூரணர். பெண்பாற் கைக்கிளையை அகத்திணையியலில் தொல்காப்பியர் சுட்டவிரும்பவில்லை ஆதலால் புறத்திணையியலில் குறிப்பிடப்பெறும் இக்கைக்கிளை ஆண்பாலாரிடத்துத் தோன்றும் கைக்கிளை போல் அல்லாமல்

பெண்பாலாரிடத்துத் தோன்றும் கைக்கிளையாக இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. ஒத்த அன்புடைய தலைவி, தலைவனைத் துறந்த நிலையில் பாடுவனவற்றை இவ்வகையில் சேர்க்கலாம் என்று கூறும் நச்சினார்க்கினியர் கூற்று சிந்திக்கத்தக்கதாகும். இவைதவிரக் கடவுள்மாட்டும் நிகழும் ஒருதலைக் காமம் இப்புறநிலைக்குரிய கைக்கிளையில் அடங்கும் என்றும் கூறுவர்.

இதுகாறும் கூறியவற்றால் தொல்காப்பியர் கூறும் கைக்கிளை அகக் கைக்கிளை அகப்புறக் கைக்கிளை எனப்படும் என்பது புலனாகும். திணை நிலையில் அகக் கைக்கிளையும், திணை நிலையிலும் துறை நிலையிலும் அகப்புறக் கைக்கிளையும் அடங்கும்.

இனி, கி. பி. 6 அல்லது கி. பி. 8-ஆம் நூற்றாண்டினது எனக் கருதப்படும் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் கைக்கிளை-பற்றி அறிவோம். தொல்காப்பியர் கைக்கிளையையும் பெருந்திணை-யையும் அகப்பொருள் திணைகளாகக் கூற, புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனாரோ அவற்றைப் புறத்திணைகளாக ஏற்கின்றார். புறச்சார்புடையதாகும் கைக்கிளையின் இந்நிலை தொல்காப்பியர்தம் மரபு நெறியிலிருந்து மாறுபட்டதாகும். தொல்காப்பியர் ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை என்ற நிலையில் அகத்திணையியலில் விளக்கிட இந் நூலாசிரியர் கைக்கிளைப் படலத்தில் ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை, பெண்பாற் கூற்றுக் கைக்கிளை என விளக்குகிறார். இதனை மரபு நிலை வளர்ச்சியாகக் கருதலாம். மேலும் தொல்காப்பியர் பாடாண் திணையில் குறிப்பிடும் கைக்கிளைத் துறை-யினை, ஐயனாரிதனார் பாடாண்திணைத் துறையாகவே குறிப்பிடுவர். இங்குத் தொல்காப்பிய மரபு போற்றப்படுகிறது.

ஆண்பாற்கூற்று நிலையில் காட்சி, ஐயம், துணிவு, உட்கோள், பயந்தோர்ப் பழிச்சல், நலம் பாராட்டல், நயப் புற்றிரங்கல், புணரா இரக்கம், வெளிப்பட இரத்தல் என ஒன்பது பொருள்களில் கைக்-கிளை நிகழும் என்று கைக்கிளைப் படலத்தில் ஐயனாரிதனார் குறிப்பிடு-கிறார். பெண்பாற் கூற்று நிலையில் காண்டல், நயத்தல், உட்கோள், மெலிதல், மெலிவொடு வைகல், காண்டல், வலித்தல், பகல் முனிவுரைத்தல், இரவுநீடுபருவரல், கனவின் அரற்றல், நெஞ்சொடு மெலிதல் என்ற பத்துப் பொருள்களில் நிகழும் எனவும் கூறுவர். இவையெல்லாம் திணை நிலையில் நிகழ்வனவாகும். துறைநிலையில்,

‘ தண்டாக் காதல் தளரியல் தலைவன்
வண்டார் விரும்பிய வகையுரைத் தன்று’

(பாடாண். 45)

என்று கைக்கிளைக்கு விளக்கம் தருகிறது புறப்பொருள் வெண்பாமாலை. 'கெடாத அன்பினையுடைய தலைவி, தலைவனுடைய மாலையை விரும்பும் தன்மையைக் கூறுவது' என்பது இதன் பொருளாகும். தொல்காப்பியர் பாடாண்திணையில் குறிப்பிடும் கைக்கிளை வகை புறப்பொருள் வெண்பாமாலையில் இவ்வாறு விரிவான நிலையில் விளக்கம் பெறுகின்றது எனலாம். பாட்டுடைத் தலைவனை ஒருத்தி காமுறுவதாகக் கூறும் இக்கைக்கிளைக் காதலைப் பிற்காலத் தூது போன்ற சிற்றிலக்கியங்களில் காணமுடியும்.

'காமப் பகுதி கடவுளும் வரையார்' என்ற தொல்காப்பியர் கருத்து, பிற்காலத்தே கடவுள்மாட்டு செலுத்தும் ஒருதலைக் காமத்திற்கு வழிகோலியது எனலாம். அக்காமம் 'கடவுள்மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்த பக்கம்' 'கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்' என்று ஐயனாரிதனார் பாடாண் படலத்தில் சுட்டுவர். இந்நிலை மரபு வளர்ச்சியாக அமைகிறது.

தொல்காப்பியர் புறத்திணையியலில், 'குழவி மருங்கினும் கிழவதாகும்' (84), 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' (85) என்று குறிப்பிடுவனவற்றைப் பெண்பாற் கைக்கிளைக்குரியனவாக ஏற்கலாம். ஐயனாரிதனாரும் அவற்றை முறையே 'குழவிக்கண் தோன்றிய காமப் பகுதி' (50), 'ஊரின்கண் தோன்றிய காமப்பகுதி' (51) என்பர். இதுவும் மரபு வளர்ச்சியே.

அடுத்து நம்பியகப் பொருளில் கூறப்படும் கைக்கிளைபற்றிக் காண்போம். இது அகத்திணையியல், களவியல், ஒழிபியல் என்னும் இயல்களில் கூறப்படுகின்றது. தொல்காப்பியர் குறிப்பிடும் முற்படக் கிளந்த எழுதிணையும் இந்நூலில் விரிவான விளக்கம் பெறுகின்றன.

'கைக்கிளை யுடையது ஒருதலைக் காமம்' (3)

'ஐந்திணை யுடைய தன்புடைக் காமம்' (4)

'பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்' (5)

தொல்காப்பியர் குறிப்பிடும் அகக் கைக்கிளையினை நம்பியகப் பொருள் அகப்புறக் கைக்கிளையாக ஏற்கிறது. இது மரபு மாற்றமாகும். இம்மரபு மாற்றத்திற்குப் பன்னிருபடலம் அகப்புறத்திணையாகக் கைக்கிளையை ஏற்றது காரணமாக இருந்திருக்கலாம். ஐந்திணையின் முன்னும் பின்னும் வைத்து எண்ணப்படும் கைக்கிளையும் பெருந்திணையும் அகப்புறம் என இளம்பூரணர் குறிப்பாக உணர்த்திய கருத்தை இங்கு நம்பி விரித்துள்ளாரோ என எண்ணவும் தோன்றுகிறது.

அகப்புறக் கைக்கிளையை,

‘ காமஞ் சாலா இளமை யோள்வயிற்
குறிப்பறி வுறுது குறுகியாங் கவளோ
டிறப்பக் கூறுவ தகப்புறக் கைக்கிளை’ (241)

என்று ஒழிபியலில் கூறுவர்.

நம்பியகப்பொருள் குறிக்கும் அகக் கைக்கிளை, காமவுணர்வு-களை அறிந்து வெளிப்படுத்தும் பெண்ணிடத்து ஆடவன் காமங் கொள்வதாக அமையும். இது தொல்காப்பியர் கருத்திற்கு முற்றும் மாறுனது.

‘ காமஞ் சான்ற இளமை யோள்வயிற்
குறிப்பறி காறுங் குறுகாது நின்று
குறிப்படு நெஞ்சொடு கூற லாகும்’ (29)

என்பர் நம்பி. மேலும் நம்பி அகக்கைக்கிளையை அகத்திணையியலிற் கூறி அகப்புறக் கைக்கிளையை ஒழிபியலில் குறித்தது களவும் கற்பு-மாக மாறுகின்ற கைக்கிளையை அகத்திணை என்று தொல்காப்-பியர் கருதிய போக்கில் அமைந்த மனநிலையைச் சுட்டும் என்பர்.

காந்தருவர்தம் களவிற் புணர்ச்சி முன் கைக்கிளை நிகழ்தல் கடன் என்பது நம்பியின் கருத்து. அகக்கைக்கிளை காட்சி ஐயம் துணிவு குறிப்பறிதல் என்ற நான்கு நிகழ்வுகளில் நடைபெறுவதாய்க் களவியலில் விரித்துப் பேசுகிருர் அவர். தொல்காப்பியர் களவியலில் காட்சி ஐயம் முதலானவற்றைக் குறிப்பிட்டாலும் அவற்றைக் கைக்-கிளைக்குரியனவாகக் குறிப்பிடவில்லை. நம்பியாரின் இக்கருத்து,தொல்-காப்பியரால் கூறப்படாத நிலையில், உரையாசிரியர் நச்சினர்க்கினிய-ரால் ஒத்துக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.

கைக்கிளைக்குரிய மாந்தராகத் தொல்காப்பியர் எவரையும் குறிப்பிட்டுச் சொல்லாத நிலையில் எழுதிணைக்கும் உரிய மாந்தரில் வேறுபாடு இல்லை என்று தெரிகிறது. ஆயின் நம்பியாரோ கைக்-களைக்குரிய மக்களைச் சுட்டுவர். இந்நிலை மரபு மாற்றமாகக் கருதப்-படுகின்றது நம்பியார், அகக்கைக்கிளைக்குரிய மக்களாக மறை-யோர், மன்னர், வணிகர், சூத்திரர், ஐநில இழிமக்களுள் தலைமைப் பாடு உடையோர் (30) ஆகியோரைக் குறிப்பர். அகப்புறக் கைக் கிளைக்குரியவராகத் தலைமைப்பாடு இல்லாதோரையும் இழிந்த குலத்-தாரையும் சுட்டுவர்.

காமஞ் சாலாதவளிடம் காமவுணர்வு கொள்பவர்களைப் பெருமையில்லாத தலைமக்கள் என்று இளம்பூரணர் கருதுவதும், அம்மக்கள் இழிந்த குலத்தவர் என்று நம்பி குறிப்பிடுவதும் ஒரே தன்மையன.

இவ்வாறு தொல்காப்பியர் காமஞ் சாலாதவளைக் குறித்து நிகழ்வதாகக் குறிப்பிட்ட கைக்கிளைபற்றிப் பின்னால் தோன்றிய புறப்பொருள் வெண்பாமாலை, நம்பியகப்பொருள் ஆகியன விரித்தும் மாற்றியும் விளக்குவதை உணர்கிறோம். அவ்வகையில் பிற்காலத்தில் தோன்றிய பல இலக்கியங்களில் காமஞ்சான்றவளைக் குறித்தும், பெண்பால் மட்டுமன்றி ஆண்பாலைக் குறித்தும் கைக்கிளை அமைவதைக் காணமுடிகின்றது. உலா அமைப்பைக் காப்பியங்களில் அமைத்துத் தன்னிகரில்லாத தலைவன் புகழ் பாடவும், ஆழ்வார்கள் நாயன்மார்கள் முதல் பாரதியார் வரை இறைவனை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் பாவித்து இறைவன் புகழ் பாடவும் கைக்கிளை உத்தியைத் தமிழ் உலகம் மேற்கொண்டு வெற்றி கண்டது என்றும் அறியலாம்.

கைக்கிளையுணர்வைத் தூண்டும் வகையில் பாலுணர்வே தலைமையிடம் பெற்றாலும் சில துணைக் கூறுகளும் அதற்குக் காரணமாக இருப்பதை இலக்கியம் வழிக் காண்போம்.

1. அழகுப் பொலிவு

குறிஞ்சிக்கலிப் பாடல்களில் (55, 56. 57) இடம் பெறும் கைக்கிளைக்குரிய தலைவி காமஞ்சாலாதவள் எனினும் அவளது அழகுத் தோற்றம் அவ் ஆடவனை வருத்தியது. முழுமதிமுகத்தினள், பொற்பாவை போன்றவள், அயன் அமைத்த சித்திரம் ஆவாள் என்று மயங்கும் அவன் அவளுடைய வெண்பற்கள், மூங்கில் தோள், மானையும் தோற்கடிக்கும் மருண்ட பார்வை, மயிலின் சாயல் ஆகியவற்றால் அறிவை இழந்தான்.

> 'வேய் எனத் திரண்ட தோள் வெறிகமழ் வணர் ஐம்பால்
> மாவென்ற மடநோக்கின் மயில்இயல்' (கலி. 56)

என்று ஏங்குகிறான்.

2. செல்வச் செழிப்பு

மேற்கூறிய பாடல்களில் குறிப்பிடப்பெறும் தலைவி செல்வக் குடும்பத்தினள் என்பது கைக்கிளை ஆடவனின் வாய்ச்சொற்கள் குறிப்பிடும். அவள் மேகலை தவழப் பூக்கரையிட்ட கலிங்கத்தை உடுத்தவள் என்றும், சிலம்பின் உள்ளீடு பரல்கள் ஒலிமுழங்க ஆபரணம் ஒளிவீச அணிந்தவள் என்றும், பொன்குழை, முத்துவடம்,

முத்துத்தொடி, தலைப்பாளை அணி, வகைவகையான அணி அணிந்தவள் என்றும் பாராட்டப்படுகின்றாள்.

'நல்கூர்ந்தார் செல்வமகள்', 'வளமைசால் உயர் சிறப்பின் நுந்தை' 'செல்வத்தால் போத்தந்த நுமர்' 'தம் உடைமையால் போத்தந்த நுமர்' (57) என்ற தொடர்கள் அவள் செல்வச் செழிப்புடைய குடும்பத்தினள் என்பதை உறுதிப்படுத்தும். அவனது கைக்கிளையுணர்வைத் தூண்டும் கருவியாகச் செல்வம் இருந்தமை புலனாகும்.

3. மறச் சிறப்பு

புறநானூற்றுப் பாடல்களில் சில (83 - 85), நக்கண்ணையார் பாடியவை. போரவைக் கோப்பெரு நற்கிள்ளி என்பவனை நக்கண்ணையார் விரும்பிய நிலையில் அவனது காதலைப் பெறாது தொடி கழல, மேனி பசப்புற வாடுவதாய் உள்ள பாடல்கள் பெண்பாற் கைக்கிளைக்குரியன. தொல்காப்பியர்தம் மரபுநிலை இங்கு மாறுகிறது. தலைவனது மறமாண்பால் அவள் ஈர்க்கப்பட்டமையை அவள் வாய்ச்சொற்கள் தெளிவாக்கும். 'அடிபுனை தொடுகழலுடையன், பெருந்தோளன், மையணற் காளை அடுதோளன் என்ற தொடர்கள் தலைவன்தன் மறச்சிறப்பினை உணர்த்துவன. தலைவன் ஆடாகுதலைக் கண்டு காமமுற்றுப் புலம்புகிறாள் நக்கண்ணையார்.

4. மயக்குறச் செய்யும் நோக்கு

பரிபாடலில் (11) தைந்நீராடலை மேற்கொள்ளும் கன்னிமை கனியாப் பெண்டிர்தம் நோக்கினாலேயே மயங்கும் ஆடவர் ஏமஞ்சாலா இடும்பை எய்தி அப்பெண்களிடமிருந்து சொல்லெதிர் பெறாத நிலையில் சொல்லியின்புற்றமை விளக்கப்படுகிறது. கைக்கிளைக் காமத்தால் வருந்தும் அவ் ஆடவர், 'கண்டார்க்கு இக்காரிகை தாக்கணங்கு காண்மின்'. 'உவள்கண் காமன் பண்டாரம் படை காண்மின்' என்று ஒருவர்க்கொருவர் சுட்டிக் காட்டுகின்றனர்.

5. இளமை துய்க்கப்பெறா ஏக்கம்

குறுந்தொகையில் (27) வெள்ளிவீதியார் பாடல் இதன் விளக்கமாக அமையும். தன் அழகு நலம் தனக்கும் ஆகாமல், தான் விரும்பும் தலைவனுக்கும் பயன்படாமல் வீணே பசலை பாய்ந்து கெடுகிறதே எனத் தலைவி வருந்துவது பெண்பாற் கைக்கிளைபாற்படும்.

'கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்கு'

இளமையழிகிறதே என்று இரங்கும் அவளது ஏக்கம் கைக்கிளைக் காமத்திற்குக் காரணமாகிறது,

6. காணும் வேட்கை

தலைவன் தலைவியிடம் அன்பு பாராட்டாத நிலையில், தலைவி அவனை நினைத்துப் புலம்புகிறுள். குறுந்தொகையில் (60) பெண்பாற்-கைக்கிளைத் தலைவியான இவள் தலைவன் அருளாராயினும், விரும்-பாராயினும் பலகாலும் அவனைக் காண்டலும் உள்ளத்துக்கு இனிதே எனக் கூறுகிறுள். உயிர்ப்போடு கூடிய அவன் காட்சித் தோற்றம் அவள் கைக்கிளைக்குக் காரணமாகின்றது.

7. தெய்வீகப் பொலிவு

தெய்வீகச் சிறப்புகள் கைக்கிளை உணர்வைத் தூண்டும் போக்கினைச் சுந்தரர் பரவையார் வாழ்வில் காணமுடிகிறது. அவர்கள் இருவர்தம் உள்ளங்கள் புணர்வதற்கு முன் நிகழும் இருவர் உள்ளப் போராட்டங்கள் அவரவர் தெய்வீகத் தோற்றங் காரணமாய் எழும்பி-யவை. பரவையார் புற்றிடங் கொண்ட பெருமானை வணங்க வந்த-போது சுந்தரர் அம்மங்கையைக் கண்டவளவில் காதலுற்ருர்.கற்பகத்-தின் பூக்கொம்பாக, காமன் தன் பெருவாழ்வாக, மதிபூத்த விரைக்-கொடியாக காட்சி தந்த அவளைப் புண்ணியத்தின் புண்ணியமோ அற்புதமோ, சிவனருளோ என வியந்தார். (தடுத்தாட். 140)

சுந்தரரைக் கண்டதும் அவளும் அவரது தெய்வீக எழிலால் கவரப்பட்டாள்.

> 'முன்னேவந் தெதிர் தோன்றும் முருகனே! பெருகொளியால்
> தன்னேரில் மாரனே! தார்மார்பின் விஞ்சையனே
> மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனே
> என்னே! என் மனந்திரித்த இவன் யாரோ!' (தடுத் 144)

எனப் புலம்பினுர்.

'காண்டல், ஐயுறல், துணிதல், வியத்தல்' என்ற நான்கு துறை-களும் தலைவியின் கருத்தை அறிவதற்கு முன் நிகழ்வன. ஆகையால் கைக்கிளைத் திணைக்குரியன. ஆண்பாற் கைக்கிளையே இங்குக் குறித்த நான்கு துறைகளையும் அடக்கி நிற்பது' என்பர் கா. சுப்பிரமணிய-பிள்ளை. 'ஐயக் கிளவி ஆடுஉவிற் குரித்தே' எனத் தொல்காப்பி-யரும் கூறுவர். ஆயின் இங்குப் பரவையார் உள்ளத்தில் இத்தகைய ஐயம் ஏற்படுவதாகக் குறிப்பிடும் இம் மரபு மாற்றம் காப்பிய காலத்தில் தோன்றியது எனலாம்.

இவ்வாறே இராமனது தெய்வீகத் தோற்றத்தால் சித்தம் கலங்கிப் புலம்பினுள் சூர்ப்பணகை. பெண்பாற் கைக்கிளை நிலையில் புலம்பும் அவள் அவனது வடிவழகு மன்மதனே, இந்திரனே, ஈசனே, திருமாலோ என ஐயுறுமாறு இருப்பதாகக் குறிப்பிடுவதைக் கம்பர்,

'சிந்தையின் உறைபவர்க்கு உருவம் தீர்ந்ததால்
இந்திரற்கு ஆயிரம் நயனம் ஈசற்கு
முந்திய மலர்க்கண் ஓர்மூன்று ; நான்குதோள்
உந்தியின் உலகு அளித்தாற்குஎன்று உன்னுவாள்'

(சூர்ப். படலம் 2840)

என்பர்.

கைக்கிளையில் தலைவனைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டு பாடுவதுண்டு இதுவே உலா, கோவை முதலிய சிற்றிலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படையாகும் என்பர் டாக்டர். நா. செயராமன். இந்நிலையில் உலா வரும் காப்பியத் தலைவர்களாகிய இராமன், சீவகன் போன்றோர் தம் மேம்பாட்டை விளக்கப் பெண்பாற் கைக்கிளைக்குரியவர்களாகப் பெண்கள் படைக்கப்பட்டு அவர்களை விரும்பியதாகச் சொல்லப்படுகின்றனர். இங்கு அவர்களது கைக்கிளையுணர்விற்கு அத் தன்னிகரில்லாத தலைமக்கள் தம் தெய்வீக வடிவழகு காரணமாகிறது.

கம்பராமாயணத்தில் உலாவியற் படலத்தில் இராமனது தோற்றத்தைக் கண்ணுற்ற பெண்கள், 'மானிடற்கு எண்ணுங்கால் இவ் இலக்கணம் எய்திட ஒண்ணுமோ, இவன் கண்ணனே' (26) எனப் புலம்பினர்.

இலக்கணையார் இலம்பகத்தில் சீவகனை உலா வரக் கண்ட பெண்கள்,

'முந்துசூர் தடிந்த முருகனம்பி யென்பார்
ஐந்துருவ அம்பின் அனங்கன் என்றயர்வார்' (171)

என்று சுட்டப்படுகின்றனர்.

8. திருக்கல்யாணப் பண்பு நலன்கள்

பொதுவாக ஆழ்வார்கள் நாயன்மார்கள்தம் இறைப் பாடல்கள் சில, நாயகி பாவத்தில் பாடப்பெறுவன. தம்மைத் தலைவியராகவும், இறைவனைத் தலைவராகவும் கருதிப் பாடும் இப் பக்திப் பாடல்களுள் சில, பாடாண் திணைக் கைக்கிளைப் பாடல்களாக ஏற்கத்தக்கன. இவையெல்லாம் உரையாசிரியர் கூறும் 'கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்' என்னும் பொருள் நிலையில் அமைவன.

இக்கைக்கிளைப் பாடல்களில் இறைவனின் திருக்கல்யாணப் பண்பு நலன்கள் கைக்கிளைக் காமத்திற்குத் தூண்டுகோல்களாக இருப்பதைக் காணமுடியும். 'மங்களம் பொருந்திய எல்லா நற்குணங்களையும் உருவமாகவுடைய' வனை சர்வேச்வரன் என்று விளக்கம் செய்கிறது திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம். அவனுடைய இத்தகு கலியாண குணங்களே ஆன்மாக்களைக் கவர்ந்து அவனுக்கு அடிமையாக்கும்.

'அமரர் முழுமுதல் ஆகிய ஆதியை
அமரர்க் கமுதீந்த ஆயர் கொழுந்தை
அமர அழும்பத் துழாவியென் ஆவி
அமரத் தழுவிற்(று) இனிய கலுமோ?'

நம்மாழ்வார். (திருவாய்மொழி 2156)

என நாயகி, நாயகனை நினைத்துப் புலம்புகிருள்.

துணை நூல்கள்

1. அருணசலம். ப., பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, '73.
2. ஆண்டியப்பன்.தே., காப்பியர்நெறி (அகத்திணையியலும் புறத்திணையியலும்) முத்துப்பதிப்பகம், மதுரை, '80,
3. இராகவையங்கார். மு., தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, மூன்ரும் பதிப்பு, 1960.
4. சுப்பிரமணியபிள்ளை. கா., பழந்தமிழ் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து, தமிழ்நெறி விளக்கப் பதிப்பகம், 1939.
5. செயராமன். நா., சங்க இலக்கியத்தில் பாடாண்திணை, மீனுட்சி புத்தக நிலையம், மதுரை, '75.
6. பழனியப்பன். வெ. (பதிப்), அகப்பொருள் விளக்கம், அண்ணமலைப் பல்கலைக் கழகம், 77.
7. புருஷோத்தம நாயுடு, திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம், (முதற்பத்து) சென்னைப் பல்கலைக் கழகம், '71.
8. பெரியபுராணச் சொற்பொழிவுகள் அறிஞர் பதின்மூவர் ஆற்றியன, கழக வெளியீடு, 1975.
9. மணிவேல். மு., தமிழ் இலக்கியத்தில் கைக்கிளை. பி எச். டி. பட்ட ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,'79.
10. மாணிக்கம், வ. சுப, தமிழ்க் காதல், பாரி நிலையம்,சென்னை, '60.
11. வெள்ளை வாரணன். க., தொல்காப்பியம் (வரலாறு) அண்ணமலைப் பல்கலைக்கழகம், '70.

10

அகப்பொருளில் பிரிவுகளுக்கும் கூற்றுகளுக்குமுள்ள இயைபு

அ. விநாயகமூர்த்தி

அகப்பொருட் பிரிவுகளைக் களவின்கண் நிகழ்வன, கற்பின்கண் நிகழ்வன எனப் பிரிக்கலாம். ஒருவழித் தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் என்பன களவில் நிகழ்வன. பரத்தையிற் பிரிவு, ஓதற் பிரிவு, நாடு காவற்பிரிவு, தூதிற் பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு என்ற ஆறும் கற்பில் நிகழ்வன.

ஒருவழித் தணத்தலைத் தொல்காப்பியர் கூறவில்லை. ஆயினும் நம்பியகப் பொருள் விளக்கம்,

"செலவு அறிவுறுத்தல் செலவு உடன்படாமை
செலவு உடன்படுத்தல் செலவு உடன்படுதல்
சென்றுழிக் கலங்கல் தேற்றி ஆற்றுவித்தல்
வந்துழி நொந்துரை என்று எழுவகைத்தே
ஒன்றக் கூறிய ஒருவழித் தணத்தல்" (167)

என இதன் கிளவித்தொகை கூறுகின்றது.

பின்பு, "தன்பதிக்கு அகற்சி தலைவன் சாற்றலும் மென்சொற் பாங்கி விலக்கலும், தலைவன் நீங்கல் வேண்டலும்," என்பன போன்ற "ஆறிரு கிளவியும், ஒருவழித் தணத்தலின் விரியெனப் படுமே" (168) என்று கூறுகின்றது.

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் தொல்காப்பியத்திலும் நம்பியகப் பொருளிலும் கூறப்படுகின்றது. எனினும் கிளவித் தொகை என்றும், விரி என்றும் வகுத்துக் கூறும் பாங்கினை நம்பியில் காண்கிறோம்.

"ஓதல் பகையே தூதிவை பிரிவே" (அகத். 27) என்றும்,

"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையான்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே" (30) என்றும்,
"பொருள்வயிற் பிரிதலும் அவர்வயின் உரித்தே" (35)

என்றும், தொல்காப்பியர், கற்பிற் பிரிவுகளைக் கூறுகிறார். பரத்தையிற் பிரிவையும் பலவிடங்களில் கூறுகின்றார். நம்பி இவற்றையெல்லாம் ஒருங்கு தொகுத்து ஒரே நூற்பாவில்,

" பரத்தையிற் பிரிதல் ஓதற்குப் படர்தல்
அருட்டகு காவலொடு தூதிற் ககறல்
உதவிக் கேகல் நிதியிற் கிகத்தல் என்று
உரைபெறு கற்பிற் பிரிவறு வகைத்தே" (62)

என்று கூறுகின்றார். தேவர்ப் பிரிவினைத் தொல். கூற, நம்பி அதனைக் காவற் பிரிவில் சேர்த்துக் கூறுகின்றார்.

இருநூல்களிலும் பரத்தையிற் பிரிவிற்குக் காலவரையறை விதந்து சொல்லவில்லை. தலைவியின் அடுத்த பூப்பின் புறப்பாட்டின் போது இப்பிரிவு முடிவுறும் ஆதலின் அவ்வெல்லையே வரையறை; பிறவற்றில் ஓதலுக்கு மூன்றாண்டுகளும், மற்றவற்றிற்கு ஒவ்வோராண்டுகளும் உயர்ந்த எல்லை.

இப்பிரிவுகளுக்கும், இப்பிரிவுகளின்போது நிகழும் மாந்தர்தம் கூற்றுகளுக்கும் உள்ள இயைபினை இக்கட்டுரை நோக்குகின்றது.

பிரிவுகளின்போது நிகழும் செய்திகளைக் கூற்றின் அடிப்படையில் தொல். கூறுகின்றது. அதாவது தலைவிக்குக் கூற்று நிகழ் இடங்கள் இவை; தோழியை நோக்கியும், தலைவனை நோக்கியும், வாயில்களை நோக்கியும் இன்னின்ன கூறுதல் உடையாள் தலைவி எனத் தொல். கூறுகின்றது. களவிலும் கற்பிலும் உள்ள பிரிவுகளையும், அப்பிரிவு நிகழ்ச்சிகளின்போது எழும் கூற்றுகளையும் இங்ஙனம் தொகுத்துக் களவியலிலும், கற்பியலிலும், சிறுபான்மை முன்னுரை போல அகத்திணையியலிலும் தொல். கூறுகின்றது. கிளவித் தொகை எனவும், விரி எனவும் கூறும் பாங்கு நம்பியில் காண்கிறது.

நிகழ்ச்சியின் பெரும் பகுதிகளைக் கிளவித்தொகை என்றும், அவற்றின் உட்பிரிவுகளைக் கிளவிவிரி என்றும் நம்பி கூறுதல் காணலாம். கிளவித் தொகைகளுக்கு மேற்கோள் செய்யுள்கள் தருவது இல்லை.

கிளவி விரியாகிய துறைகளுக்கே மேற்கோள் செய்யுள்கள் தரப்படு கின்றன. தொல்காப்பியம் கூற்று எனத் தந்தவையும் இத்துறையமைப் பிற்குரியவையாகி உரையில் மேற்கோள் செய்யுள்கள் பெற்று-விளங்குகின்றன.

சுருங்கக் கூறின், "தலைவன், தலைவி, தோழி, செவிலி, கண்டோர் என்பாருடையு கூற்றுகள் இன்னின்ன நேரங்களில் நிகழும்" எனத் தொகுத்துக் கூறுவது தொல்காப்பியம். அக் கூற்றுகளை வைத்துக் கொண்டு, மேலும் சில கூற்றுகளையும் படைத்துக் கொண்டு, அவற்றைக் காட்சியமைப்பில் வகுத்துக் கூறுவது நம்பி-யகப் பொருள். காட்சித் தொகுதியைக் கிளவித் தொகை என்றும், காட்சி விரியைத் துறை என்றும் இது வழங்குகின்றது.

இத் துறையடிப்படையில் எழுந்தவைதாம் கோவை நூல்கள்.

எடுத்துக்காட்டாகப் பரத்தையிற் பிரிவையும், அந்நிலையில். நிகழும் கூற்றுகளையும் காணலாம்.

தலைவன் பரத்தையிற் பிரிந்த போது, தோழிக்கு நிகழும் கூற்றுக்களைக் கற்பியல் 9-ஆம் நூற்பாவில் தொல்.,

" அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை
அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்,
பிழைத்து வந்த கிழவனை நெருங்கி
இழைத்தாங்கு ஆக்கிக் கொடுத்தற் கண்ணும்,
வணங்கியல் மொழியான் வணங்கற் கண்ணும்,
மாண்நலம் தாஎன வகுத்தற் கண்ணும்,
பேணு ஒழுக்கம் நாணிய பொருளினும்,
பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து
பெறுதகை இல்லாப் பிழைப்பினும்"

என இவ்வாறு தொகுத்துச் சொல்கிறது.

இப்பிரிவில் தலைவனுக்குரிய கூற்றுக்களைக் கற்பியல் 5-ஆம் நூற்பாவில்,

" பயங்கெழு துணைஅணை புல்லி, புல்லாது
உயங்குவனள் கிடந்த கிழத்தியைக் குறுகி
அல்கல் மன்னிய நிறைஅழி பொழுதின்
மெல்லென் சீறடி புல்லிய இரவினும்
மடம்பட வந்த தோழிக் கண்ணும்"

என்பது முதலாகத் தொல். கூறுகின்றது.

தலைவிக்குரிய கூற்றுகளைக் கற்பியல் 6–ஆம் நூற்பாவில்,

" தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால்
அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும் ..."
" தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி
எங்கையர்க்கு உரையென இரத்தற் கண்ணும்"

என்பன போன்ற கூற்றுகளைத் தொல். குறிக்கின்றது

இங்ஙனம் அகப்பொருள் உறுப்பினர் (பாத்திரம்) முறைப்படி தொல். கூற்றுகளைத் தனித்தனித் தொகுத்துக் கூறுகின்றது. நம்பி இவற்றையெல்லாம் முதலில் ஒருங்கு தொகுத்துக் கொள்கிறார். பின்பு அந்த நாடக பாணிக்கு முழு வடிவம் தருகின்றார். கிளவி என்ற முறையில் அங்கங்களாகவும், துறை என்ற முறையில் காட்சி-களாகவும் வகுக்கின்றார். சில துறைகளைப் புதியனவாகவே படைக்கின்றார். ஆயினும், உயிர்ப்பான நிகழ்ச்சிகளையோ கூற்றுக்களையோ நீக்கவுமில்லை, மாற்றவுமில்லை.

எடுத்துக்காட்டாக, தொல். கூறிய உணர்த்த உணரும் ஊடல், உணர்ப்புவயின் வாரா ஊடல் என்ற நுட்பங்களை நம்பி அப்படியே கைக்கொள்ளுதலைக் காணலாம்.

" வாயில் வேண்டல் வாயில் மறுத்தல்
வாயில் நேர்வித்தல் வாயில் நேர்தல் என்று
ஆய பரத்தையின் அகற்சிநால் வகைத்தே" (204)

என்று, பரத்தையிற் பிரிவுக்குக் கிளவிகளை வகுத்துக் கொள்கின்றார்.

பின்பு அவற்றின் விரிவுகளைக் கூறுபவராகி,

" காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு
ஏதுஈதாம் இவ்விறைவிக்கு என்றலும்,
தனித்துழி இறைவி துனித்துஅழுது இரங்கலும்,
ஈங்குஇது என்எனப் பாங்கி வினவலும்
இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தலும்"

என்பன முதலாகப் பதினொன்றை நம்பி (205) கூறுகின்றார்.

இறைவி வருந்துதல், தோழி வினவல், தலைவியைத் தேற்றல் ஆகியவை தொல். கூறுவனவே. தலைமகனுடைய புறத்தொழுக்-கத்தைக் கண்டோர் கூற்றாக நம்பி கூறுவது தொல். கூறாதது. 'இப் புறத்தொழுக்கம் தலைவி அறியின் புலவிக்கு ஏதுவாகுமே' எனத் தம்முள் உரையாடிக் கொள்வதாக, நாடகப் பாங்கிற்கு நம்பி தோற்றுவாய் செய்து கொள்ளப் படைத்த கூற்றாகும்.

உயிர்ப்பான சில கூற்றுக்களை நம்பி மாற்றுமல் மேற்கொள்கிருர் என்றும் எடுத்துக்காட்டாக உணர்ப்பு வயின் வாரா ஊடலின் போது நிகழ்தல் காட்டலாம். தலைமகன் புறத்தொழுக்கினின்று மீண்டு தலைவியைக் கண்டு வணங்கிச் 'சீறேல்' என்று அவள் சீறடி தொழும்போது நிகழும் தலைவியினது கூற்றினைத் தொல். கற்பியல் 6-ஆம் நூற்பா,

" அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
'காதல் எங்கையர் காணின் நன்று' என
மாதர் சான்ற வகையின் கண்ணும்"

எனக் கூறுகின்றது.

இதனை அப்படியே வழிமொழிபவராகி, நம்பி,

" சீறேல் என்றவள் சீறடி தொழலும்,
'இஃது எங்கையர் காணின் நன்றன்று' என்றலும்"

என நூற்பா (206) அமைக்கின்ருர்.

எடுத்துக்காட்டிற்காகப் பரத்தையிற் பிரிவின் கூற்றுகளில் சில மட்டுமே இங்குத் தரப்பட்டன ஓதற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு முதலியவற்றிலும், தொல்காப்பியத்தைப் பெரும்பாலும் அடியொற்றியே கூற்றுக்களைக் கிளவிகளாக (துறைகளாக) அமைக்கும் பாங்கினை நம்பியிடம் காண்கிறோம்.

இப்பிரிவுகளின்போது தலைமகனுக்குரிய கூற்று நிகழ் இடங்களை, அகத்திணையில் 45-ஆம் நூற்பாவில் தொல்காப்பியம்,

" பாசறைப் புலம்பலும், முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்"

தலைவனுடைய கூற்று நிகழும் என்கின்றது.

தலைமகளது உருவு வெளிப்பாடு கண்டு தலைமகன் சொல்லியது, பாசறை முற்றி மீண்டு ஊர்வயின் வந்த தலைமகன் பாகற்குச் சொல்லியது, என்று துறைகளை அமைக்கக் காணலாம். பிரிவுகளுக்கும் கூற்றுகளுக்குமுள்ள இயைபு மாருதவாறு நம்பி பேணிவந்துள்ளார்.

இதுவரை கூறிய செய்திகளைப் பின்வருமாறு தொகுக்கலாம்

(1) தொல்காப்பியத்தில் பல நூற்பாக்களில் சொல்லப்பட்ட பிரிவுவகைகளை நம்பி அகத்திணையியலில் ஒரே நூற்பாவில் கூறுகின்ருர்.

(2) ''மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய'' என்ற தொல்-நூற்பாச் செய்தியை நம்பி தனிப் பிரிவாகச் சொல்லாமல், காவற் பிரிவில் கொள்கின்ருர்.

(3) மாந்தர்தம் கூற்றுகளைத் தொகுத்துத் தொல். தனித்தனி வைக்க, அக் கூற்றுகளைப் பிரித்து, நிகழ்ச்சியமைப்பின் போது ஒன்றன் பின்னென்ருக வருமாறு நம்பி அமைக்கின்ருர்.

(4) கூற்று எனத் தொல். கூறியவற்றை உளங்கொண்டா-ராயினும் நம்பி, கிளவித்தொகை கிளவிவிரி எனக் களமாகவும் காட்சியாகவும் வைக்கின்ருர். கிளவி விரிவே துறை எனப்பட்டது. இந்தப் பாங்கு தொல், நாடக உத்திக்கு மேலும் மெருகூட்டுகின்றது.

(5) துறைகளை அமைக்கும் இயைபுக்கு, நம்பி (கி.பி.13-நூ) யகப்பொருளுக்கு முன்னர் எழுந்த திருச்சிற்றம்பலக் கோவையார் (கி.பி. 8. நூ. இறுதி) இவ்வகையில் நம்பிக்கு உதவியிருக்கக் கூடும். (இது பற்றிய ஆய்வு மேலும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்)

11

காஞ்சித்திணை-ஓர் ஆய்வு

பிலமிஞமேரி

திணை விளக்கம்

1. திணை வெளிப்பாடு - நிலையாமை

அகத்தோடு தொடர்புபடுத்திப் புறத்தைச் சுட்டிச் செல்கின்றார் தொல்காப்பியர் என்பதனை, "வெட்சி தானே குறிஞ்சியது புறனே"[1] என்பனபோன்ற அவரது தொடர்கள் புலப்படுத்தி நிற்கின்றன. எனவே அவர். "காஞ்சி தானே பெருந்திணைப் புறனே"[2] என்று காஞ்சித்திணையையும் பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறனாகக் குறித்துள்ளார். இக் காஞ்சித்திணையை இரு நூற்பாக்களைக் கொண்டு விளக்கிச்செல்கின்றார் அவர்

"காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறி யானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே"

என்னும் நூற்பா, காஞ்சித்திணை என்றால் என்ன என்பதற்கு விடையாக விளங்குகின்றது. "மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமையும்"[3] என்று தொடங்கும் நூற்பா இத் திணையின் துறைகளுக்குரிய விளக்கம் தருகின்றது.

வெட்சித்திணையின் வாயிலாகப் போர் நிகழ்வதற்குரிய முன்னறிவிப்பினை உணர்த்தி வஞ்சி, உழிஞை, தும்பை ஆகிய திணைகளின் வாயிலாகப் போர் புரியும் நிலைகளை விளக்கியுள்ளார்

---

1. தொல், பொருள்.-இளம்,-நூற், 59, 64, 66, 70, 73, 76, 78.
2. ,, ,, ,, ,, — 76.
3. ,, ,, ,, ,, — 77.

தொல்காப்பியர். வாகைத்திணையின் வாயிலாக ஆற்றல்மிக்க மறச்-செயல்களோடு கூடிய வெற்றியைக் குறிப்பிடுகின்றார்; இத்தகைய வாகைத் திணைக்கு அடுத்தே, காஞ்சித்திணையை அமைத்துள்ளார்; இத் திணைதான், "பாங்கருஞ் சிறப்பின் பன்னெறியானும் நில்லா உலகம் புல்லிய நெறியை" உடையது என்கின்றார்; அதனால் அவர் நிலையாமையை உணர்த்துகின்றார்.

வீரத்திறனின் வெளிப்பாட்டால் வெற்றிப்புகழ் வெளிப்பட்டு விட்டது. ஆனால், போர்க்களத்தில் பல உயிர்கள் மாய்க்கப்பட்ட பின்னரே வெற்றி வீறு பெறுகிறது. பல வீரர்களின் அழகிய உடல்-கள் அழிக்கப்பட்ட நிலையிலும் அவ் வீரர்களுடைய தாய் முத-லாகிய சுற்றத்தாரின் கண்ணீர்[1] அலையலையாகச் சிந்தப்பட்ட நிலை-யிலும் வெற்றி ஒருவனை வந்தடைவதற்கு ஏதுவாகிய போர்க்களக் காட்சியானது, தொல்காப்பியர் பார்வையில் ஆழப் பதிந்திருக்க வேண்டும். எனவே, ஒருவன் எவ்வாற்றானும் சிறப்போடு விளங்கி-னாலும் அவனது இவ்வுலக வாழ்வும் நிலையற்றதே என்னும் தத்து-வத்தைப் போர்க்களக் காட்சியின் வாயிலாக உணர்ந்து தொல்-காப்பியர், காஞ்சித் திணையை அமைத்திருக்கவேண்டும். அதனா-லன்றோ 'மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை" என்கின்றார்.

2. **நிலையாமையை உணர்த்தும் பிறர்**

1. "நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
   பெருமை யுடைத்திவ் வுலகு"[2]

   என்கின்றார் வள்ளுவர்.

2. மதுரைக்காஞ்சியில் மாங்குடி மருதனார் பாண்டியனது பெருமைகளையெல்லாம் கூறுமுகத்தான் நிலையாமையைச் சுட்டிக்காட்டுகின்றார்.[3]

3. சங்க இலக்கியப் புறப்பாடல்கள் பல, நிலையாமையைப் பற்றிக்-குறிப்பிடுகின்றன.[4].

4. மணிமேகலை நூலில் நிலையாமை ஆதிக்கம் பெறுகின்றது.

---

1. தொல்—பொருள் - இளம். — நூற். 77 "பேர் இசை மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம் மாய்ந்த பூசல் மயக்கம்"
2. திருக்குறள். 336.
3. பத்துப்பாட்டு - மதுரைக் காஞ்சி. 6
4. புறநானூறு 363, 195.

5. பாரசீகக் கவிஞர் உமார்கய்யாம், 'இவ்வுலக வாழ்வு நிலையற்றது. எனவே, நிலத்துள்ள நாட்களில் அவரவர் தத்தம் மனப்பாங்கிற்கு ஏற்ப அனுபவிக்க விழைவனவற்றை அனுபவித்துக் கொள்ளலாம்'' என்னும் பான்மையில் நிலையாமையை எச்சரித்துள்ளார்.[1]

இன்னும் இவைபோன்ற பிற இலக்கியங்களும்[2] நிலையாமையை எடுத்துரைக்கின்றன.

6 புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியரும்,

"மலையோங்கிய மாநிலத்து
நிலையாமை நெறியுரைத்தன்று''[3] என்கின்றார்.

3 நிலையாமை வெளிப்படும் சூழல்

"பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறி யானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே''

என்று துன்பச் சூழலின் அடிப்படையில் நிலையாமையை உணர்த்துகின்றார் தொல்காப்பியர். பெருந்திணைபோலக் காஞ்சித்திணையும் மிக்க துயருடையது[4] என்பதால்தான் அவர், "காஞ்சிதானே பெருந்திணைப் புறனே'' என்கின்றார். எனவே, இவ்வுலகியலைப் பற்றிக்கொண்டு வாழ முற்படுவோரைப் பல்வேறு துன்பங்களும் பற்றிக்கொள்ளும் அல்லவா? வெற்றி பெற விழைவு கொண்டு மாபெரும் மன்னரெல்லாம் தம் திறமிக்க மறங்காட்டி வெற்றி பெற்றாலும் அவரிடம் விஞ்சிநிற்பது துயரமே[5].

4. உரையாசிரியர்கள் கூற்று - இளம்பூரணர்

"காஞ்சி என்னும் திணை, பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறனாகும். அது, ஒருவனுக்குத் துணையாகாமை என்னும் சிறப்பினால் பல நெறியானும் நில்லாத உலகத்தைப் பொருந்திய நிலையை உடைத்து'' என்கின்றார் இளம்பூரணர்[6]. அவர், "ஏறிய

1. உமார்கய்யாம் பாடல்கள்.
2. சிலப்பதிகாரம், பெருங்கதை, பக்தி இலக்கியங்கள்.
3. ஐயனாரிதனார் - புறப்பொருள் வெண்பாமாலை -பொதுவியற் படலம் நூற். 31, பக். 272.
4. டாக்டர் தே. ஆண்டியப்பன் - காப்பியர் நெறி-பக். 58.
5. ஷை பக் 58-59.
6. தொல். பொருள் — இளம் - பொருள் - நூற். 76.

மடற்றிறம்'' (அகத்திணை, 54) முதலிய துன்ப மிகுதியையுடைய காமப்பகுதியாகிய பெருந்திணை அகத்திணை ஐந்தற்கும் புறனாயவாறுபோல, இக் காஞ்சித்திணையும் புறத்திணை ஐந்திற்கும் (வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை) புறனாகலானும் பெருந்திணை போல நிலையாமையாகிய துன்பம்பற்றி வருதலானும் அதற்கு, இது புறனாயிற்று'' என்று காஞ்சித்திணை, பெருந்திணைக்குப் புறனாகிய நிலையை விளக்கியுள்ளார்.[1]

வெட்சி முதல் வாகைத்திணைவரை போரைப்பற்றிய செய்திகளையே உணர்த்திவந்த தொல்காப்பியர், காஞ்சித்திணையில் நிலையாமையை நிலைநாட்டுவதால், அப் புறத்திணைகளுக்கு இது புறனாயிற்று என்பது பொருந்துவதாகும். எனவே, இக் காஞ்சித்திணை, புறத்திணைகளுக்கெல்லாம் ஒரு திருப்புமையமாகவும் விளங்குகிறது.

இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை,யாக்கை நிலையாமை என நிலையாமை மூவகைப்படும்[2] என்கின்றார் இளம்பூரணர். ஆனால் தொல்காப்பியர் பெரும்பான்மையும் யாக்கை நிலையாமையைப்பற்றியே[3] கருதுகிறார் என்பதற்கு அவர் காட்டும் காஞ்சித்திணைத் துறைகளே சான்றாக[4] நிற்கின்றன. 'கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமை' என்னும் துறை இளமை நிலையாமையைச் சுட்டுகிறது என்பது நச்சினார்க்கினியர் கருத்து. இதற்கு, அவர் 'இனிநினைந்திரக்க மாகின்று' (புறம். 243) என்னும் தொடித்தலை விழுத்தண்டினாரின் பாடலைச் சான்றாகக் காட்டுகின்றார்.[5] ஆனால் இத் துறைக்கு இளம்பூரணர் சான்றாகக் காட்டும் 'பல்சான்றீரே பல்சான்றீரே' (புறம்.195) என்னும் நரிவெரூஉத்தலையார் பாடலும் யாக்கை நிலையாமையைச் சுட்டுகின்றது.

நச்சினார்க்கினியர்

இளம்பூரணர் ஒன்றாகக் காட்டும் காஞ்சித்திணைக்குரிய நூற்பாவை, நச்சினார்க்கினியர் இரண்டாகக் கொள்கிறார்.[6]

---

1. தொல். பொருள். இளம். விளக்கம் - நூற். 76.
2. தொல்·பொருள்—இளம்.—பொருள் விளக்கம் – நூற், 76.
3. டாக்டர் நா.செயராமன் சங்க இலக்கியத்தில் பாடாண்திணை, பக். 231.
4. தொல்.— பொருள் — இளம். நூற்:77 துறைகள் 1, 2. 3,4,5,7, 8,1011, 13,14, 15,16, 17, 18.
5. தொல்.—பொருள் — நச்சி. நூற். 79.
6. தொல். —பொருள்—நச்சி. நூற். 77, 78.

நிலையாமையை உணர்த்துவதன் வாயிலாக நிலைபேறுடைய வீடு பேற்றுக்கும் வழிவகுத்துக் காட்டுகின்றார் தொல்காப்பியர் என்பது நச்சினார்க்கினியர் கருத்து. எனவே அவர், "தனக்குத்துணை-யில்லாத வீட்டின்பம் ஏதுவாக, அறம் பொருள் இன்பமாகிய பொருட் பகுதியானும் அவற்றுப் பகுதியாகிய உயிரும் யாக்கையும் செல்வமும் இளமையும் முதலியவற்றானும், நிலை பேறில்லாத உலகியற்கையைப் பொருந்திய நன்னெறியினை உடைத்து காஞ்சி என்றவாறு" என்கின்றார்.[1] இதற்கு, "மயங்கிரும் கருவிய விசும்பு முகனாக"[2] என்னும் மார்க்கண்டேயனார் பாடல்,வீடு பேற்றினை உணர்த்துவதாகச் சான்று காட்டுகின்றார். 'மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை', 'கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமை' ஆகிய துறைகளுக்குச் சான்று காட்டும் பாடல்களின் கீழும் முறையே 'இது வீடேதுவாகவன்றி வீடு பேற்று நெறிக்கட் செல்லும் நெறியேதுவாகக் கூறியது' என்றும் 'இது வீடு பெறுதற்கு வழி கூறியது' என்றும் கூறியுள்ளார் அவர்.[3] எனவே வெள்ளைவாரணரும், "நில்லாதவற்றால் நிலையுடையதனை அடையும் முயற்சியே காஞ்சித்திணையாகும்" என்கிறார்[4]

5. பிற இலக்கண நூல்கள் கூற்று

"வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறே" என்று பன்னிரு படலம் காஞ்சித்திணையைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளது. இக் கூற்றினை நிலைக்களனாகக் கொண்டு புறப்பொருள் வெண்பாமாலை,

"வேஞ்சின மாற்றான் விடுதர, வேந்தன்
காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று"[5]

எனக் கூறுகிறது. இக் கூற்றுக்களை வலியுறுத்தும் பான்மையில், சிலப்பதிகாரம், "தென்றிசையென்றன் வஞ்சியொடு வடதிசை நின்றெதிரூன்றிய நீள்பெருங்காஞ்சி"[6] என்று இத் திணையைப்பற்றிப் பேசுகிறது. எங்ஙனமாயினும் இத்திணையின் வாயிலாக அழிவின் நிலை வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே, இதில் நிலையாமை உணர்த்தப்படுகின்றது.

---

1. தொல். பொருள் - நச்சி. நூற். 78.
2. புறநானூறு. 365.
3. தொல். பொருள் - நச்சி. நூற். 79.
4. க. வெள்ளைவாரணர் - தொல்காப்பியம் (தமிழிலக்கிய வரலாறு) இரண்டாம் பாகம், பக் 103.
5. புறப்பொருள் வெண்பாமாலை - காஞ்சி, 1.
6. சிலப்பதிகாரம் - வஞ்சிக் காண்டம் — காட்சிக் காதை அடி, 135–36.

துறை அமைப்பு முறை

காஞ்சித்திணைக்குரியனவாக இருபது துறைகள் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன.

''காடு வாழ்த்தொடு நிறையருஞ் சிறப்பின் துறையிரண்டு உடைத்தே'' (நூற்பா. 77) என்பதனை அடிப்படையாகக் கொண்டே இளம்பூரணர் முதலியோர் முதற்பத்தையும் ஒருவகையாகவும் பின்னேயுள்ள பத்தையும் மற்றொரு வகையாகவும் கருதியிருக்கவேண்டும். இத்தகைய அடிப்படையில் நச்சினார்க்கினியரும் இருவகையாகக் கொண்டாலும், முதற்பத்தையும் ஆண்பாற் காஞ்சி என்றும் அடுத்த பத்தையும் பெண்பாற் காஞ்சி என்றும் கருதுகின்றார்.[1] ஆனால், ஆண்பாற்றுறைகள் என்பனவற்றில் பெண்பாற்குரிய நிலைகளும் (7,8,9,10) பெண்பாற்றுறை என்பனவற்றில் ஆண்பாற்குரிய நிலையும் (16) உணர்த்தப்படுகின்றன.[2]

2. வீரத்தின் வழி - நிலையாமை

புறத்திணைகளிலும் அவற்றின் துறைகளிலும் வீரத்திற்குரிய செய்திகள் விஞ்சி நிற்கின்றனவன்றோ? எனவே, காஞ்சித்திணைத் துறைகளும் (3,5,6,7,8,9,) வீரத்தைப்பற்றி உணர்த்தத் தவறவில்லை. வீரர்களின் புண்ணைப்பற்றிப் பேசுதல் (37), புண்ணோனைப் பேய் ஓம்புதல் (4), அம்பொடு வேல் நுழை வழியெல்லாம், நிற்கும் வீரன் மாய்ந்ததற்கு இரங்குதல் (5), 'சிறுசொல்லிய சினங்கெழு வேந்தரை அருஞ்சமஞ் சிதையத்தாக்கி முரசமொடு ஒருங்ககப் படேனாயின் பொருந்திய என் நிழல் வாழ்நர் செல்நிழற் காணாது, கொடியன் எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக் குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக' என்பது போன்ற வஞ்சின மொழி கூறுதல் (6), மனைவி புண்ணோனைக் காத்தல் (7), நீத்த கணவன் தீர்த்த வேலின்

---

1. தொல்காப்பியம் — பொருள் - நச்சி-விளக்கம். நூற். 79.பக். 251. ''தொகை ஈரைந்து ஆகுமென்ப-தொகை பெற்று காஞ்சி பத்து வகைப்படும் என்று கூறுவர் ஆசிரியர்'' ''நிறையருஞ்சிறப்பிற் றுறையிரண்டு உடைத்தே - ஆதலான் அக்காஞ்சி நிறுத்தற்கு எதிர் பொருளில்லாத பெரியசிறப்பினையுடைய ஆண்பாற்றுறையும் பெண்பாற்றுறையுமாகிய இரண்டு துறையினை உடைத்து என்றவாறு'' என்பது நச்சினார்க்கினியர் கூற்று.
2. டாக்டர் தே. ஆண்டியப்பன்-காப்பியர் நெறி

நிலை (8), நிகர்த்து வந்த வேந்தன் வீரம் (9) ஆகிய இவை வீரத்தை யன்றோ சுட்டி நிற்கின்றன? ஆயினும், இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் காஞ்சித்திணைத் துறைகளுக்குச் சான்றாக் காட்டும் பாடல்கள் அறக் கருத்துகளையும் அறிவுரைகளையும் புலப்படுத்தி நிற்கின்றன. கையறு நிலைத்துறை மனித மனத்தின் ஆழ்துயரை வெளிப்படுத்துகிறது. எனவே, மனப்பக்குவம் அடைவதற்கொரு வழிகாட்டி என்றும் இத் திணையை இயம்பலாம்.

காஞ்சித் திணையைப்பற்றி வெளிப்படுத்தும் கருத்தில், தொல்காப்பியரோடு ஐயனாரிதனார் மாறுபடுகின்றாரன்றோ? ஆயினும், தொல்காப்பியர் குறித்துள்ள காஞ்சித்திணைத்துறைகள் பலவற்றைத் தம் பொதுவியல் படலத்தில் அமைத்துள்ளார் அவர்.

முடிவு

இதுகாறும் கூறியவாற்றான், போரால் வெளிப்படும் அவலநிலையின் நிலைக்களத்தில் நிலையாமையை உணர்த்தி, அதன் வாயிலாக வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வழியையும் வகுத்துத் தருகின்றார் தொல்காப்பியர் என்பது புலனாகின்றது.

கட்டுரை தோற்றுவிக்கும் கருத்துக்கள்

1. துயரத்தின் அடிப்படையில் நிலையாமை உணர்த்தப்படுதல்.
2. நிலையாமை - புறத்திணைகளுக்கொரு திருப்புமையம்.
3. யாக்கை நிலையாமையையே தொல்காப்பியர் உணர்த்துதல்.
4. அழிவின்வழி நிலையாமை.
5. நிலையாமை - செம்மை வாழ்விற்கு வழிகாட்டி.

துணை நூல்கள்

1.	புறப்பொருள் வெண்பா மாலை, (கழக வெளியீடு)		
2.	க வெள்ளை - வாரணன்,	தொல்காப்பியம் (தமிழிலக்கிய வரலாறு),	அண்ணுமலைப்-பல்கலைக் கழகம்
3.	டாக்டர் தே. ஆண்டியப்பன்,	காப்பியர்நெறி,	முத்துப்பதிப்பகம், மதுரை.
4.	டாக்டர் நா. செயராமன்,	சங்க இலக்கியத்தில் பாடாண் திணை,	மீனுட்சி புத்தக நிலையம், மதுரை–1
5.	புலவர் குழந்தை,	தொல்காப்பியம் பொருளதிகாரம், குழந்தையுரை	வேலாபதிப்பகம், ஈரோடு-1.

12

இறைச்சி எனும் இலக்கிய உத்தி

துரை. சீனிச்சாமி

நோக்கம்

'இறைச்சி எனும் இலக்கிய உத்தி' என்ற இக்கட்டுரையின் நோக்கம், 'இறைச்சி' என்று பேசப்படும் ஒன்று என்ன என்பது பற்றிய ஓர் ஆய்வு. இந்த ஆய்வு தொல்காப்பியச் சூத்திரங்களடிப்படையிலேயே அமைந்துள்ளது,

இறைச்சி பற்றிய தொல்காப்பியச் சூத்திரங்கள்

இறைச்சி பற்றிய சூத்திரங்கள், தொல்காப்பியத்தில் இலக்கிய இயல் (poetics) பற்றிய பொருளதிகாரப் பகுதியில் இடம் பெற்றுள்ளன. இப்பகுதி சார்ந்த ஒன்பது இயல்களில் ஐந்தாவதான பொருளியலில் இடம்பெற்றுள்ளன. 33, 34 ,35- ஆம் சூத்திரங்களாக உள்ளன. அவை :

1. இறைச்சி தானே உரிப்புறத் ததுவே

   அல்லது

   இறைச்சி தானே பொருட்புறத் ததுவே

2. இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
   திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே

3. அன்புறு தகுவன இறைச்சியிற் சுட்டலும்
   வன்புறை யாகும் வருந்திய பொழுதே

சூத்திரங்கள் வரும் இடம்

தொல்காப்பியர் கவிதை இலக்கியத்தின் பல்வேறு உறுப்புக்களை விளக்குகிறார்; "கவிஞனின் அகஎழுச்சிவெளிப்பாட்டின் பல்வேறு

கூறுகளாக, ஒருமுழுமைக்குள் பங்குபெறும் கூறுகளாக அவற்றை விளக்குகிறார். மொழியின் தொடரமைப்போ, கவிதைப்பொருளோ, பல்வேறுமரபுகளோ எவையாயினும், அவற்றை ஒரு முழு உயிரின் உறுப்புக்களாகவே தொல்காப்பியர் விளக்குகிறார். இலக்கியக்கலைபற்றிய இவ்விளக்கத்தை உயிரமைப்பியல்(organic conception of art) என அறிஞர் விளக்குவர்.[1] தொல்காப்பியரும் பொருளதிகாரத் தொடக்கத்தில், அகத்திணையியலில், இந்தமுறையிலான உள்ளாய்வு அணுகு முறையினை (analytical approach)த் தன் சொற்களிலேயே கூறி விடுவார்.

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை"

பாடலுட் பயின்றவை பற்றிய உள்ளாய்வு நெறியில் செல்லும் தொல்காப்பியர், கற்புநிலைக் கவிதைகளினைப் பற்றிய விளக்கம் தரும் ஓரிடத்தில் இறைச்சி பற்றிய செய்திகள் வருகின்றன.

சங்கப் பாடல்களில் அகப்பாடல்கள் ஒருவருரையாக(monologue) அமைந்தவை. குறிப்பிட்ட சில பாத்திரங்களின் பேச்சுக்களாக அமைபவை. களவு, கற்பு என்ற பொருள் பற்றியன. இப்பேச்சுக்கள் எந்நெறியில் அமையவேண்டும் என்பதை ஆய்ந்து அமைக்கிறார் தொல்காப்பியர். இவ்வாறு அமைக்கும் போது பொருளியலில், வருத்தம் மிகுதியைச் சுட்டும் முறை, மனைவி உயர்வு கிழவோன் பணிவு இடம் பெறும் முறை, கற்பினுள் புகழ் தகை நிலை—ஆகியவற்றை விளக்கிவிட்டு அடுத்ததாக,

---

1. T. P. Meenakshisundaran, Aesthetics of the Tamils, page : 11, University of Madras, 1977.

(There is the aspect of sentence, the aspect of subject-matter, and the various conventions; but all these are merely organs of the one unit of literary composition in which each one of them finds a place, a significance and inspiration known to the vision. It is his (Tolkappiyar) message, message which the artist is expressing through these various aspects of verses. This is the organic conception of art with reference to literature. But this idea that every thing finds its place and significance in relation to the whole which is artistic creation is important.)

"இறைச்சி தானே உரிப் (பொருட்) புறத்ததுவே"

என்கிறார். தொடர்ந்து அடுத்த இரண்டு சூத்திரங்களும் வருகின்றன.

'வரும்இட' அடிப்படையில் தொல்காப்பியச் சூத்திரங்களை ஆராய்வதில் சிக்கல் உண்டுதான். (ஏனெனில் சூத்திரங்களின் அமைப்பு முறையையே மாற்றி அமைக்கவேண்டும் என ஆய்வாளர் கூறுவர்) ஆயினும், இறைச்சி பற்றிய இச்சூத்திரங்களுக்கு முன்புள்ள மூன்று சூத்திரங்களும் கற்புக்கால வாழ்க்கைக் கவிதைகள் பற்றியனவாக உள்ளன. எனவே இல்லற வாழ்க்கையைக் காட்டும் கற்பியல் கவிதைகளுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய ஓர்உத்தியோ என எண்ணத் தோன்றுகிறது. தொடர்ந்து வரும்,

"அன்புறு தகுவன இறைச்சியிற் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே"

என்றசூத்திரம் இதை உறுதிப்படுத்துவது போல அமைந்துள்ளது. மேலும் இறைச்சி பற்றிய சூத்திரங்களுக்குப்பின்,

"செய்பொரு ளச்சமும் வினைவயிற் பிரிவும்
மெய்பெற உணர்த்துங் கிழவி பாராட்டே"

"கற்புவழிப் பட்டவள் பரத்தையை ஏத்தினும்
உள்ளத் தூடல் உண்டென மொழிப"

போன்ற கற்பியல் சூத்திரங்களே வருகின்றன. எனவே, கற்பியல் கவிதைகளில் இடம்பெறும் ஓர் உத்தியோ என எண்ணத் தோன்றுகிறது. அகத்திணையியலில் பொதுவாகவரும் உள்ளுறையைப்பற்றி விளக்கியவர் அங்கு விளக்காது விட்ட, கற்பியலுக்கேயுரிய ஓர் உத்தியை, ஒழிபியல் போல இருக்கும் பொருளியலில் விளக்குகிறாரோ?

[இதுபோலவே, பொருளியலில் இறுதியாக, கிளவி முறைகளை விளக்கும்போது உள்ளுறையின் ஐந்து வகைகளை விளக்குகிறார். அதாவது, ஐந்து வகைப் பேச்சு முறைகளை விளக்குகிறார்].

எனவே, தொல்காப்பியர் எந்த இடத்தில் இந்த உத்தியைப் பற்றிப் பேசுகிறார் என்ற அடிப்படையில் பார்த்தால், இது கற்பியல் கவிதைகளுக்கே உரியதோ - கற்பியல் கவிதைகளிலேயே இந்நெறி இருந்ததோ என்ற முடிபுக்கு வரத் தோன்றுகிறது. ஆனால் இவ்விதி முறை, பிறவகைக் கவிதைகளிலும்கூட இடம் பெற்றிருக்கிறது. இதில், கவிஞனைக் கட்டுப்படுத்த முடியாது. தொல்காப்பியர், மரபு

வகுப்பவராதலின் இந்நெறியைக் காட்ட எண்ணியிருக்கலாம். மேலும் இது ஆய்வுக்குரியது. சங்கப்பாடல்கள் அத்தனையையும் பார்க்க வேண்டும். இனி, இவ்வுத்தியின் தன்மை என்ன என்பது பற்றிப் பார்க்கலாம்.

இறைச்சி — சொல்லும் பொருளும்

'இறைச்சி' என்பதைக் கருப்பொருள் என்று கொள்ளலாம். சிறப்பாக, மனிதனைச் சுற்றியுள்ள பிற உயிர்கள் போன்றவற்றை இறைச்சி என்று சொல்லலாம். தொல்காப்பியரோ இறைச்சியைக் கருப்பொருள் என்ற பொருளில், (சிறப்பாக விலங்கிற்கு) சொல்லதிகாரத்தில் கையாண்டுள்ளார்[1] பொருளதிகாரத்திலும் கையாண்டுள்ளார்.

"புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து
இடைச்சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி
அன்புறு தக்க கிளத்தல் தானே
கிழவோன் செய்வினைக்கு அச்ச மாகும்"
(கற்பியல்-7)

"ஆற்றது பண்பும் கருமத்து வினையும்
ஏவன் முடிபும் வினவுஞ் செப்பும்
ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியும்
தோற்றஞ் சான்ற அன்னவை பிறவும்
இளையோர்க் குரிய கிளவி என்ப"

இவற்றில் "ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியும்" என்பதில் பொருள் என்பதற்கு உயிரில்லாத பொருள் என்றும் இறைச்சி என்பதற்கு விலங்குகளாகிய உயிரினங்கள் என்றும் தெளிவாகப் பிரித்துப் பொருள் கொள்ள முடிகிறது. ஆகவே, "இடைச்சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி" என்பதற்கு விலங்குகளும் அவற்றிற்குரிய வினையும் எனப் பொருள் கொள்ளுவது பொருத்தமாக இருக்கிறது. சொல்லதிகாரத்திலும் இறைச்சி என்பது விலங்குகள் என்றே பொருள்படுகிறது.

"இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கில் தோன்ற லான"
(சொல். பெயரியல். 42)

---

1. தொல்காப்பியம், சொல்லதிகாரம், பெயரியல், சூத் : 42

எனவே, 'இறைச்சி' என்பது விலங்குகளைக் குறிப்பதே எனலாம். பேச்சு வழக்கில் ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி போன்ற தொடர்கள் விலங்குமாமிசத்தையே குறிப்பது நினையத்தக்கது.

இறைச்சி பற்றிய சொற்பொருள் ஆராய்ச்சி இக்கட்டுரைக்கு முக்கியமானது. இச்சொல்லின் பொருள்காணல் இவ்வுத்தியை அறிவதற்கு முக்கியமானது என ஆய்வாளர் கூறியுள்ளனர்.[1]

இனி, சூத்திரப் பொருளைக் காணலாம். முதலில்,

"இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே"
"அன்புறு தகுவன இறைச்சியிற் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே"

என்ற சூத்திரங்களைப்பார்ப்போம். இவற்றில், 'இறைச்சி' என்றசொல்லுக்குக் கருப்பொருளான விலங்கு என்ற பொருள் மிகச்சரியாக அமைகிறது எனலாம். "விலங்கினம் மூலமாகப் பிறக்கும் பொருளும்' உண்டு" "அன்புறுதகுவன விலங்கினம் மூலமாய்ச் சுட்டலும்" என்று பொருள்கொண்டால் விலங்கினம் மூலமாகச் சொல்லுதல் என்ற ஓர் உத்தியே நமக்குப் புலப்படுகிறது

அப்படியானால் இறைச்சி என்றசொல் எப்படி ஓர் உத்தியின் பெயராகும்? விலங்குகள் மூலமாகவே விளக்கப்படும் கவிதை நெறிக்கு, அதாவது இறைச்சி மூலமாக வந்த நெறிக்கு இறைச்சி என்ற பெயர் வந்திருக்கலாம்.

இனி, இதில் இன்னொரு சிக்கல் வருகிறது. அது,

இறைச்சிதானே உரிப் / பொருட் } புறத்ததுவே

என்ற சொல்லுக்குப் பொருள் காண்பதில் வருகிறது. உரிப்புறம், பொருட்புறம் என்ற பாட வேறுபாடுகளும் இருக்கின்றன. இறைச்சி என்பது விலங்கினம் என்ற பொருளில் அணுகினால்,

பொருட் / உரிப் } புறத்தது விலங்கினம்

என்றாகிறது. இதில் தெளிவில்லை ஆனால், இறைச்சி என்பது விலங்கினம்மூலம் வெளிப்படுத்தும் ஓர்உத்தியே என்றுகொண்டால் தெளிவாகி விடுகிறது.

---

1. டாக்டர் தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, பக் : 158. (இறைச்சியின் சொற்பொருள் விளக்கமுறின், அதன் கொள்கை விளக்கமும் புலனாகிவிடும்.)

இச்சூத்திரங்களுக்கான பொருளில் வேறுபாடுகள் உள்ளன. உரிப்புறத்து என்று பொருள் கொள்ளும் இளம்பூரணர், "கருப் பொருளாகிய நாட்டிற்கும் ஊர்க்குந்துறைக்கும் அடையாகி வருவது" என்கிறுர். இவர் உரைப்படி, இறைச்சி என்பதற்குத் தொல்-காப்பியரின் கருத்துக்கு மாருன பொருளே கிடைக்கிறது. "ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியும்" என்பதன் மூலமும், "அன்புறு-தகுவன இறைச்சியிற் சுட்டலும்" என்பதன்மூலமும் சொல்லதிகாரச் சூத்திரம் மூலமும் இறைச்சி என்பதற்குத் தொல்காப்பியர் விலங்கினம் என்றே பொருள் கொள்ளுகிருர் என்பது தெளிவாக இருக்கிறது. எனவே, இளம்பூரணர் விளக்கும் 'கருப்பொருளாகிய நாட்டிற்கும் ஊர்க்குந் துறைக்கும்' என்பது பொருத்தமில்லை.

இனி, 'உரிப்பொருளின் புறத்தாகி' எனப் பாடம் கொள்கிருர் இளம்பூரணர். அவர் சான்று காட்டும் "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று" என்ற குறுந்தொகைக் குறிஞ்சிப் பாடலின் உரிப்பொருள் கூடல். கூடலின் புறத்தாகி என்ன பொருள் தோன்று கிறது? தெளிவில்லை. இதை விளக்காது இளம்பூரணர், அடையாகி வருவது என்கிருர். அதுவும் மேற்கூறிய பாடலில், 'நாட்டிற்கு அடையாகி வந்த குறிஞ்சிப் பூவுந் தேனும் இறைச்சிப் பொருள்' என்-கிருர். அதாவது அவையே கருப்பொருள். இதோடு இறைச்சி முடிந்து விடுகிறது. இவ்விளக்கங்களில் இறைச்சி என்பது கருப்-பொருள் என்ற அளவோடு நின்று, அடையாக வரலாம் என்ற கருத்தே வெளிப்படுகிறது. அப்படியாயின் இறைச்சி ஒரு இலக்கிய உத்தியாக உயரவில்லை. அடைமொழிக்கும் உரிப்பொருளுக்கும் தொடர்புண்டா? இதற்கு இளம் பூரணரிடம் விளக்கமில்லை. அவருடைய உரிப்புறத்ததுவே என்ற பாடம் பொருந்தாமல், தெளி-வில்லாமல் அமைந்து விடுகிறது. இனி,

"இறைச்சி தானே பொருட்புறத் ததுவே"

என்ற பாடத்தை நோக்குவோம். நச்சிஞர்க்கினியர் கொள்ளும் பாடம் இது. டாக்டர். மு. வரதராசஞரும் இப்பாடத்தையே மேற் கொண்டு இறைச்சியை வடமொழியில் கூறப்படும் 'தொனி' போன்-றது என்பர்.[1] தொனி அல்லது குறிப்பு (Suggestion) என்ற கருத்தை ஏற்று இந்த அடிப்படையிலேயே விரிவாக வேறுசில பேராசிரியர்களும்

1. டாக்டர் மு. வ. அணியிலக்கணம், Professor P. Sundaram Pillai Commemoration Volume, Kazhagam, 1957.

ஆராய்ந்துள்ளனர்.[1] நச்சினார்க்கினியர் கூறுகிறார்:

கருப்பொருட்கு நேயந்தான், "கூறவேண்டுவதோர் பொருளின் புறத்தே புலப்பட்டு, அதற்கு உபகாரப்படும் பொருட் தன்மை உடையது." கூறவேண்டுவதோர் பொருளைப் புலப்படுத்தத் துணையாகும் பொருட் தன்மையுடன் இறைச்சி இருக்கும்" என்ற நச்சரின் இக்கூற்றில், (இறைச்சி என்பதைக் கருப்பொருள் என்று பொதுவாக அவர் கொண்டாலும்) இறைச்சியாகிய கருப்பொருள், கவிதைப் பொருள் புலப்பாட்டிற்குரிய உத்திநிலையில் செயல்படும் என்பது தெளிவாகவே இருக்கிறது. மேலும், பொருள் என்பது அகப்பாடலில் உரிப்பொருள் தானே! அப்படியானால் உரிப்புறத்துவே, பொருட் புறத்ததுவே என்பதற்குரிய பொருள் வேறுபாடு என்ன?

உரிப்பொருள் என்பது கவிதையின் அடிக்கருத்து; கவிஞனின் அகக்கருத்து. ஆனால் வெறும் பொருள் என்பது கவிதையின் பொழிப்புரை எனலாம், உளவியல் ரீதியாகச் சொன்னால் உரிப்பொருளைக் கவிதையின் நோக்கம் (intention) என்றும், வெறும் பதப் பொருளைக் கவிதையின் புறக்கருத்து (sense) என்றும் கூறலாம். இப் புறக்கருத்துநிலை இன்னொரு கருத்தை விளைவிக்குமானால் அதுவே இறைச்சி எனலாம். புறக்கருத்துப்பகுதிகள் பிறிதொன்றைக் குறிப்பிடும்; அதாவது பிறிதொன்றின் விளக்கமாக அமையும் கவிதையின் அகநோக்கம் புறக்கருத்திலிருந்து குறிப்பாகப் பெறப்படும். இதுவே குறிப்புநிலை; இதுவே இறைச்சி. இவ்வாறு கவிதைப் புறநிலைக் கருத்து மூலமாக, உணர்த்தப்படும் உத்தியே இறைச்சி. ஆகவே,

1. விலங்குகள் மூலமாகச் சுட்டலும்
2. கவிதையின் புறக்கருத்தே பிறிதொன்றைக் குறிப்பாய் உணர்த்தலும்

என இரண்டு நிலைகளைக் காண்கிறோம். இவற்றில் கவிதையின் புறக்கருத் (Sense) தின் புறமாக இன்னொரு பொருள் தோன்றும் என்பதை 'இறைச்சிதானே பொருட்புறத்ததுவே' என்ற சூத்திரத்தில் கூறுகிறார் தொல்காப்பியர்.

விலங்குகள் மூலமாகச் சுட்டல் என்பதை, "இறைச்சியிற்

---

1. Dr. T. P. Meenakshi Sundaram, Aesthetics & Tamil
Dr. G. Sundaramoorthy, Early Literary Theories in Tamil, Sarvodaya Ilakkiya Pannai, Madurai, 1974.

பிறக்கும் பொருளுமாருளவே'' என்ற சூத்திரத்தில் பொதுப்படக் கூறிவிட்டு, விளக்கமாக "அன்புறு தகுவன இறைச்சியிற் சுட்டலும் வன்புறையாகும் வருந்திய பொழுதே'' என்கிறார் எனலாம்.

இரண்டு நிலைகளிலும் குறிப்பாகவே சுட்டப்படும். சான்றுகள்:

1. "அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்தனரே''

இப்பாடலில் அன்புறுதகுவன இறைச்சியிற்சுட்டல் அமைந்-துள்ளதைக் காணமுடிகிறது.

2. "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே''

இப்பாடலில் குறிஞ்சிப்பூக் கொண்டு பெருந்தேன் இழைத்தல், இப்-பாடலின் உரிப்பொருளான கூடலைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டி இறைச்சியாகி நிற்கிறது.

3. "இலங்கு மருவித் திலங்கு மருவித்தே
வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை''

இப்பாடலில் சூள்பேணான் பொய்த்தான் மலையில் அருவிவீழும் என்பது, எதிர்நாளில், விரைவில் நலம்நிகழும்; காத்திருக்க வேண்டும் என்ற பொருள் கிடைக்கிறது. பாடலின் முழுப்பொருள் புறத்தே வேறொரு பொருள் குறிப்புப்பொருள் சுட்டப்படுவதைக் காணலாம்.

சான்றுகள் பெரும்பாலும் களவியல் கவிதைகளாகவே இருக்கின்றன. இறைச்சி, களவியல், கற்பியல் கவிதைகளில் இடம் பெறக்கூடிய பொதுவான உத்தியாகவே இருக்கிறது. ஆனால் பொருளியலில் கற்பியல் கவிதையை விளக்கும் இடத்தில்தான் தொல்காப்பியர் இறைச்சியைப்பற்றி விளக்கியுள்ளார்.

இறைச்சியும் உள்ளுறை உவமும்

உள்ளுறை ஐந்து வகைப்படும். உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு எனப்படும். இவற்றில் உள்ளுறை உவமம் அகத்திணையியலில் விளக்கப்படுகிறது. இவ்வுள்ளுறை உவமையை அறிந்து கொள்-

வது திணையை உணர்ந்திடும் வகையாகும். மேலும் இவ்வுள்ளுறையும் குறிப்பாய்ப் பொருள் சுட்டும் ஓர் உத்தியே.

"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக்
கொள்ளும் என்ப குறிஅறிந் தோரே"

தெய்வம் தவிரப் பிற கருப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு அமைவது உள்ளுறை. இச் சூத்திரத்திலுள்ள, 'குறி அறிந்தோரே' என்ற பகுதி முக்கியமானது. குறி என்பது suggestion என்ற சொல்லுக்கு நிகராக அமைந்துள்ளது. குறிவகையில் பல உண்டு என்பதும் அதில் உள்ளுறையும் ஒன்று என்பதுநன்கு புலனாகிறது. 'குறி' என்பதை ஓர் இலக்கியக் கலைச் சொல்லாகப் பயன் படுத்தலாம்.

உள்ளுறை என்றால் என்ன? இதைத் தெளிவாக விளக்கிவிடுகிறார் தொல்காப்பியர்.

"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்"

இதற்கு நச்சினார்க்கினியரின் விளக்கம் மிக அருமையாக அமைந்துள்ளது. அவர் கூறுகிறார்: "யான்: புலப்படக் கூறுகின்ற இவ்வுமத்தோடே புலப்படக் கூறாத உவமிக்கப்படும் பொருள் ஒத்து முடிவதாக என்று புலவன் தான் அங்ஙனம் கருதும் மாத்திரையே அன்றியும் கேட்டோர் மனத்தின்கண்ணும் அவ்வாறே நிகழ்த்துவித்து அங்ஙனம் உணர்த்துவதற்கு உறுப்பாகிய சொல்லெல்லாம் நிறையக் கொண்டு முடிவது உள்ளுறை உவமம் என்றவாறு". இதற்குரிய சான்று:

"வீங்குநீ ரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தந் தூர்புகுந்த வரிவண்
டோங்குய ரெழில்யானைக் கனைகடாங் கமழ்நாற்ற
மாங்கவை விருந்தாற்றப் பகலல்கிக் கங்குலான்
வீங்கிறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினு ளரும்பவிழ் நறுமுல்லை
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டுதா மரீஇய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புலணிநல் லூறி"

(கலி)

இதனுள் வீங்குநீர் பரத்தையர் சேரியாகவும், நீலப்பூ பரத்தையராகவும், பகர்பவர் பாணராகவும், வண்டு தலைவனாகவும் — என வர்ணனையின் ஒவ்வொரு பொருளும் இதனோடு இது என்று உள்ளுறுத்திப்

பொருந்துகின்ற முறையில் அமைந்துள்ளது. இவ்வாறு இதற்கு இது என்று கணிதவியல் பாங்கில் அமையும் உவமையே உள்ளுறை உவமமாகும். இதனை algebraical application என்பார் தெ.பொ.மீ. இவ்வாறு இது இதனெடு ஒத்து என அமையாமல், பொதுவாகக் கவிதையின் அடிக்கருத்து அல்லது அகநோக்குடன் புறக்கருத்து (Sence) முழுமை அளவில் இணைந்து நிற்பதே இறைச்சியாகும். உள்ளுறை உவமையை allegory எனப்படும் தொடர் உருவகம் என்பர். ஆயின், allegory என்பது நீண்ட, தொடர்நிலைக் கவிதைகளில் மட்டுமே வருவது என மேற்கு நாட்டவரால் கணிக்கப்பட்டுள்ளது. நீண்ட எடுத்துரை கதைப் பாங்குடைய படைப்புக்களில் (Narratives) பல்வேறு சமுதாய, ஆன்மிகக் கருத்து வெளிப்பாட்டிற்குத் தொடர் உருவகப்பாணியில் அமைக்கப்படுவது. பனியனின் மோட்சப்பயணம், கலிவரின் யாத்திரைகள் போன்ற உரைநடைப் படைப்புக்களிலும், Farriequeen போன்ற கவிதைப் படைப்புக்களிலும் உண்டு. எனவே, கட்டமைப்பு முறையில் (Structurally) தமிழில் உள்ள உள்ளுறை உவமம் வேறுபட்டது எனலாம் அடிப்படையில் இதற்கு இதுஎன ஓர் உவமிப்புக் கணக்கு இருந்தாலும் வடிவநிலையில் முற்றிலும் வேறுபட்டது. மேலும், Allegory மேற்கு நாட்டுப் பாடல்களில் சிறிய பாடல்களில் இடம் பெறுது. தமிழிலோ சிறிய பாடல்களிலும் இவ்வுத்தி வரும். குறிப்பாய் உணர்த்தல் என்ற பொதுப் பண்பு இறைச்சிக்கும், உள்ளுறை உவமைக்குமிடையே இருந்தாலும் மேற்கூறிய இதற்கிது என்ற கணிப்பு முறையால் உள்ளுறை உவமை வேறுபடுகிறது.

உடனுறை

இனி, இறைச்சி போன்ற இன்னொரு உத்தியையும் நோக்க வேண்டும். அது உடனுறை எனப்படுவது. உடனுறையும் ஓர் உள்ளுறை வகையே. (a variety of suggestion) இது இறைச்சியே என்று விளக்குகிறார் நச்சினார்க்கினியர். ஆனால் பேராசிரியர் சுந்தரமூர்த்தி கூறுவது போல,[1] வேறுவகையில் விளக்கும் இளம்பூரணர், உடனுறைக்குக் கூறும் விளக்கம் தெளிவாக இல்லை. உடனுறையை இறைச்சியாகக் கொண்டால், ஒரே உத்திக்கு இரண்டு பெயர்கள் ஏன் என்பதற்கு விளக்கம் இல்லை. வேறு வேறு என்-

1. G. Sundaramoorthy, page : 133. [We may notice that Ilampuranar's explanation is no explanation at all.]

பதற்கும் விளக்கமில்லை. மேலும் சான்றுகள் கிடைக்கும்வரை இப்போதைக்கு உடனுறையும் இறைச்சியும் ஒன்றே என்பதை ஏற்றுக் கொள்வோம் என்று பேராசிரியர் சுந்தரமூர்த்தி கூறுவார்.* இவர் கருத்தை இப்போதைக்கு ஏற்றுக் கொள்ளலாம்.

முடிபுகள்

1. இறைச்சி என்ற சொல் விலங்கினத்தைக் குறிப்பது. அதனால் கருப்பொருள் என்று பொதுவாகவும் சில சமயம் பொருள் பெற்று விடலாம்.

2. விலங்கினம் மூலமாக அகப்பொருளைச் சில குறிப்பிட்ட சூழல்களில் சுட்டும் முறை பழங்கவிதைகளில் காணப்படுகிறது.

3. இறைச்சி(மூலமாக) பிறிதொன்றைச் சுட்டியதால் நாளடைவில் இதுவே ஓர் உத்தியின் பெயராயிற்று.

4. விலங்குகள் மூலமாக மட்டுமன்றிக் கருப்பொருள் மூலமாக, கவிதையின் புறக்கருத்து பிறிதொரு கருத்தைத் தன் புறத்தே குறிப்பாக்கி நிற்பதுமுண்டு. இக் குறிப்பு முறைக்கும் இறைச்சி என்றே பெயர்.

5. 'இதற்கு இது உவமிப்பு' என்ற கணிதப்பாங்கு உள்ளுறைக்கு இருக்க, கவிதைப் பொருளின் பொது அமைப்போடு சார்ந்து, குறிப்புப் பொருளாவது இறைச்சி.

6. தொல்காப்பியர், இறைச்சியைக் கற்பியல் கவிதை பற்றிப் பேசும்போது விளக்குகிறார். ஆகவே இது கற்பியல் கவிதைக்கு மட்டும் உரிய உத்தியோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் இக் கருத்தை வலியுறுத்த இன்னும் சான்றுகள் தேவை.

* G. Sundaramoorthy, p. 134.

13

அகமும் புறமும்—ஓர் ஒப்பீடு

கதிர். மகாதேவன்

பழந்தமிழர் வாழ்க்கையினை முழுமையாகக் காண விழை-வோர் அகம், புறம் ஆகிய பகுப்பினை ஒத்தும் உறழ்ந்தும் காண வேண்டும். தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் எனும் மூன்றதிகாரத்துள் எழுத்தும் சொல்லும் தமிழ் மொழியின் அமைதியை விளக்குவன ஆயின், பொருளிலக்கணமோ தமிழ் வழக்கிற்கு நிலைக்களனாய் விளங்கும் தமிழரது ஒழுக்கத்தை நிலை நாட்டுவது ஆகும். ஒரு காலத்தில் தொல்காப்பியப் பொருளதிகாரம் கிடைக்க-வில்லை என்பதை அறிகிறோம். 'எழுத்தும் சொல்லும் பெற்றும் பெற்றிலம்' எனப் பாண்டியன் வருந்துகிறான். தொல்-காப்பியப் பொருளதிகாரம் சில காலம் கிடைக்காத காரணத்தால் 'இறையனார் களவியல்' தோன்றியது எனலாம்.

புறத்திணை இல்லாத களவியல்

இறையனார் களவியலை இறைவனே எழுதினார் என்பதை ஏற்றுக் கொள்ள இயலாது. ஒன்று, இறைவன் நூல் எழுதினான் என்பதை அறிவியல் உலகம் ஏற்காது. பிறிதொன்று, இறைவனே 'களவியல்' எழுதியிருப்பின், அது தொல்காப்பியப் பொருளதிகாரத்-தைக் காட்டிலும் சிறந்ததாகவன்றோ அமைதல் வேண்டும். மேலும், இறையனார் களவியல், அகத்திணையின் ஒரு பகுதியையே விளக்கு-கிறது; புறத்திணையைப் பற்றி அந்நூல் ஒன்றும் கூறவில்லை. பழந்-தமிழர் புலனெறி வழக்கினை உணர்த்தும் அகம், புறம் என்ற செம்மை நெறிகளில் ஒன்று இன்றிப் பிறிதொன்று முழுமை ஆகாது

என்பதை,

"அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணந் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே"

என்பர் தொல்காப்பியர். இப்புறத்திணையியல் நூற்பாவினை விளக்க வந்த நச்சினார்க்கினியர், "இதனானே அகத்திணைக்கு உரியனவெல்லாம் புறத்திணைக்குங் கொள்க" என்றார்.

திணை

"முற்படக் கிளந்த எழுதிணை என்ப' என்று அகத்திணையாகிய ஒழுக்கத்தை ஏழென்று கூறுவர் தொல்காப்பியர். 'எழுவகையகத்திணையுள் உரிமை வகையால் நிலம் பெறுவன இவையெனவும் அந்நிலத்திடைப் பொதுவகையால் நிகழ்வன கைக்கிளை பெருந்திணை பாலையெனவுங் கூறலானும் ... ... புறத்திணையேழென்றதென்னையெனின் அகங்கை இரண்டுடையார்க்குப் புறங்கை நான்காகாது இரண்டாயவாறு போல, அகத்திணை யேழற்குப் புறத்திணை யேழென்றலே பொருத்தமுடையதாயிற்று" என மேலும் நச்சினார்க்கினியர் விளக்குவர்.

ஒப்புநோக்கு × உறழ்நோக்கு

புறத்திணையில் காணப்படும் பல நூற்பாக்கள் அகத்திணையை ஒப்புநோக்கி இயற்றப்பட்டுள்ளன; அகத்திணையில் காணப்படும் சில நூற்பாக்கள் புறத்திணையை உறழ்ந்து நோக்கி இயற்றப்பட்டுள்ளன.

அகத்திணை புறத்திணை ஆகிய இரண்டும் உரிமைவகையால் நிலம் பெறுவன; பண்பு வகையால் நிலம் பெறாத ஒழுக்கம் இருதிணையிலும் உண்டு.

பாடலுட் பயின்றவை மூன்று: அவை முதல், கரு, உரி என்பனவாம். இம்மூன்றும் அகம், புறம் ஆகிய இருதிணைக்கும் உரியன என்பதில் ஐயமில்லை!

களமும் நிலமும்

புறத்திணை காட்டும் களம், நில அடிப்படையில் மலர்வது ஆகும். 'புறம்' பெரிதும் களவாழ்வினை அடிப்படையாகக் கொண்டது எனலாம். 'அகம்' மனைக்குரிய காதல் வாழ்வினை விளக்குவது. இரண்டிற்கும் நிலம் (திணை) பின்னணியாகும். அகமும் புறமும் ஒன்றில் ஒன்று உறவுடையது என்பது தொல்காப்பியரின் உறுதி-

யான எண்ணம். காதல் எங்கெங்குக் கருவாகிறதோ அங்கங்குப் போராட்டம் உருவாகிறது என்பது பொது நியதி; காதல் மலராத நிலமில்லை. ஆகலின் போராட்டம் நிகழாது நிற்க வழியில்லை. முதலில் தொல்காப்பியர் நிலத்தின் சிறப்பையும் அதில் சிறக்கும் காதல் உணர்ச்சியையும் அகத்திணையியலில் விளக்குவர். ஆயின், அகத்திணையில் புறநிகழ்ச்சியின் தாக்கம் குறிக்கப்படாமல் உரையாசிரியரால் விளக்கம் கூற முடியவில்லை. ஏனெனில், அக வாழ்வு சிறக்க அறம் பற்றியும், பொருள் பற்றியும் அதனால் வரும் இன்பம் பற்றியும் மறம் பற்றியும் கூறும்போது, புறத்தே நிகழும் களம் பற்றியும் குறிப்பிட வேண்டியுள்ளது.

பூ உணர்த்தும் அகமும் புறமும்

காதல் உணர்ச்சி நிலைகள் பூவினால் அகத்திணையில் மணம் பெறுகின்றன. களமுறைகள் பூவினால் அணி (decoration) பெறுகின்றன. நிலமுறைகள் வைப்பே களமுறை வேறுபாடுகளுக்கும் உணர்ச்சி நிலைக்கூறுபாடுகளுக்கும் காரணங்கள் ஆகின்றன.

உணர்ச்சி நிலை	—	நிலமுறை	—	கள முறை
புணர்ச்சி	>	குறிஞ்சி	<	வெட்சி
இருத்தல்	>	முல்லை	<	வஞ்சி
ஊடல்	>	மருதம்	<	உழிஞை
இரங்கல்	>	நெய்தல்	<	தும்பை

குறிஞ்சி — களவொழுக்கம் : வெட்சி

''வெட்சி தானே குறிஞ்சியது புறனே' என்ற நூற்பாவில் குறிஞ்சியது முதற் பொருள், கருப்பொருள் ஆகியவைகளின் தாக்கம் அகத் திணைக்கும் புறத் திணைக்கும் இயைபு காட்டுவதைக் காணலாம்.

நால்வகை நிலங்களுக்கும் நால்வகை அமர்முறைகள் காணப்படுகின்றன. பாலை, புறத்தில் வாகையாகிறது; அகத்தில் பாலை (பிரிவு) வெற்றியை நல்குகிறது; கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் நிலமில்லை; ஆகவே, நிலமில்லாத இடத்தில் உண்மை அமர்க்களப் போராட்டம் இல்லை; அகத்திலும் புறத்திலும் உள்ளத்தின் உணர்ச்சிப் போராட்டமே இவ்விருதிணைகளில் வருகின்றன.

புறத்திணையியலில் வெட்சிக்கு அகத்திணையோடு ஒப்புமை சுட்டும் நச்சினார்க்கினியர், "களவொழுக்கமுங் கங்குற் காலமும், காவலர் கடுகினுந் தான் கருதிய பொருளை இரவின்கண் முடித்து மீடலும் போல்வன ஒத்தலின் வெட்சி குறிஞ்சிக்குப் புறனென்றார்" எனக் கூறுவர். இளம்பூரணர், "வெட்சி குறிஞ்சிக்குப் புறனாகியது எவ்வாறெனின், நிரை கோடல் குறிஞ்சிக்குரிய மலை நிலத்தின்கண் நிகழ்தலானும், அந்நிலத்து மக்களாயின் பிறநாட்டு ஆனிரையைக் களவிற்கோடல் ஒருபுடை குறிஞ்சிக்குரியதாகிய களவொடு ஒத்தலானும் அதற்கு அது புறனாயிற்றென்க. சூடும் பூவும் அந்நிலத்திற்குரிய பூவாதலானும் அதற்கு அது புறமாம்' என்று கூறுவர்.

முல்லை – இருத்தல் : வஞ்சி

பகைவன் மண்ணாசையால் தம் மேற் படையெடுத்து வருவதற்கு முன்பே தான் அவனை வெல்லுவதற்கு ஏற்ற காலம், இடம்,வலி முதலியவற்றைச் சீர்தூக்கி அவனது நாட்டின்மேற் போர் கருதிச் செல்லும் வேந்தனது கடமையாகும். இக்கடமையினை உள்ளத்துக்கொண்டு நீங்காத மண்ணாசையுடைய பகை வேந்தனைப் பொருதழித்தல் கருதி அவன் அஞ்சும்படி படையெடுத்தல் வஞ்சித்திணையாகும். இத்திணையை விளக்கும்போது, "முதலெனப்பட்ட காடுறையுலகமுங் கார் காலமும் அந்நிலத்திற்கேற்ற கருப்பொருளும், அரசன் பாசறைக்கட் டலைவியைப் பிரிந்து இருத்தலும், அவன் தலைவி அவனைப் பிரிந்து மனைவயினிருத்தலுமாகிய உரிப் பொருளும் ஒப்பச் சேறலின் வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று" என்பர் நச்சினார்க்கினியர்.

முல்லைத்திணையின் தாக்கம் அந்நில அக வாழ்வாகிய 'இருத்தல்' எனும் பாடு பொருளுக்கு ஆக்கம் தருவதைத் தெளிவாகக் காணலாம்.

மருதம்— ஊடல்: உழிஞை

மருத நிலத்து மக்கள் நல் நகர் அமைத்தலும் அதனைக் காக்க அரண் அமைத்தலும் அந்நிலத்து இயற்கை ஆகும். படையெடுத்து வந்த வேந்தன் பகைவனது எயிலை (அரண்) வளைத்து முற்றுகை இடுவான். அரணின் உள்ளே இருக்கும் வேந்தன் அவ்வரணை நெகிழ விடாது பாதுகாத்தல் ஆகிய அவ்வியல்பினை உடையது உழிஞைத் திணையாம். இது மருதமென்னும் அகத்திணைக்குப் புறனாகும்.

மதிலை வளைத்துக் கொள்ளுவதற்கு வந்த வேந்தன் கோட்டை வாயிலைத் திறக்க முயலுவதும் மதிலுள் இருக்கும் வேந்தன் அதற்கு

உடன்படாது மறுத்தலும் புறத்திணையில் அமைய அகத்திணையில் தலைவன் வாயில் வேண்டத் தலைவி அதற்குடம்படாது, கதவடைத்துக் கொண்டு வீட்டினுள்ளே இருத்தல் அதற்கு ஒப்பாகிறது. மருதம்போல் இதற்குப் பெரும்பொழுது வரவின்மையாலும் அதற்குரிய விடியற்காலமே போர் செய்தற்குக் காலமாதலாலும் புலத்தலும் ஊடலும் மருதத்திணை ஆதல் போல அரணை முற்றியும் விடாது பற்றியும் அகப்புறப் படைகள் தம்முட் பொருதலே உழிஞைத் திணையாதலாலும் ஒன்றின் ஒன்று பாடுபொருளில் ஒட்டும் உறவும் உடையன.

நெய்தல் — இருத்தல் : தும்பை

தும்பை யென்பது சூடும் பூவினாற் பெற்ற பெயர். நெய்தற்குரிய பெருமணலுலகம் போலக் காடுங்கழனியு மல்லாத களரும் மணலும் பொருகளமாக வேண்டுதலாலும், இரக்கமுந் தலைமகட்கே பெரும்பான்மை உளதாயவாறு போலக் கணவனை இழந்தார்க்கன்றி வீரர்க்கு இரக்கமின்மையாலும், அவ்வீரக் குறிப்பின் அருள் பற்றி ஒருவர் ஒருவரை நோக்கிப் போரின்கண் இரங்குபவாகலானும் பிற காரணங்களாலும் நெய்தற்குத் தும்பை புறனாயிற்று. இதனால், தலைவிக்கு ஏற்படும். 'இரங்கல்' எனும் உணர்வு புறத்திணையில் தாக்கத்தால் ஏற்பட்டது என்பதை நச்சினார்க்கினியர் குறிப்பிற் புலப்படுத்துவதைக் காணலாம்.

பாலை—பிரிதல்: வாகை

அறிவு, ஆண்மை, பெருமை முதலிய ஆற்றல் மிக்க கூறுபாடுகளை ஏனையோரினும் மாறுபடவும் வேறுபடவும் மிகுத்து மேம்படுதல் வாகைத் திணையின் சிறப்பாகும். எல்லா நிலமும் அழிந்து பாலை ஆவது போலப் பகைநாடு அழிகிறது. வெற்றி பெற்றோர், தலைவனும் தலைவியும் புணர்ச்சியினின்று புகழ்ச்சி காரணமாகப் பிரியுமாறு போல அரசன் அமர்மேம்பட்டு வாகை சூடிப் பொருள் பெற்றுப்புகழ்ச்சி அடைவான். இதனால் பாலைக்கு வாகை புறனாயிற்று.

புறத்திணையில் உறழ்ச்சியாற் பெற்ற வெற்றியை வாகையெனவும் அகத்திணையில் இயல்பாகப் பெற்ற வெற்றியை முல்லையெனவுங் கூறுவர்.

முல்லை, காதல் வாழ்வில் வெற்றி பெறும் கற்பு எனும் பொற்புடைய நலத்தை உணர்த்தும் இயற்கைப் படிமமாய் மாறியது. இக்குறியீடு புறத்திணையிலும் வருகிறது. வல்லாண் முல்லை, ஏருண் முல்லை, மூதின் முல்லை என வருவன காணலாம். எந்தச் செயலிலும் ஒரு

முழுமையும் (perfetion), தனிச் சிறப்பும் இயல்பாகவும் இயற்கை-யாகவும் கிடைக்கிறதோ, அந்தச் செயலுடன் "முல்லை" புறத்தில் சேர்க்கப்படுதலைத் தெளியலாம். அதேபோல் பாலை எனும் படிமச் சுட்டும் அகம், புறம் ஆகிய இரண்டு நிலைகளிலும் வருதல் காண-லாம்.

பெருந்திணை : காஞ்சி

செம்பொருளை அடைய யாக்கை, இளமை, செல்வம் என்ப-வற்றால் நிலைபேறில்லாத இவ்வுலகியலைப் பற்றிக் கொண்டு அதனால் உளவாம் பலவகைத் துன்பங்களையும் பொறுத்து நிற்றலாகும். நிலை-பேறு இல்லாதவற்றைக் கொண்டு நிலையுடையதனை அடையும் முயற்சியே காஞ்சித் திணையாம்; பல்லாற்றானும் துன்பம் ஏற்படும் நிலையாமைக்கு நிலமில்லை, பாலை போலக் காஞ்சி அனைத்து நிலத்திலும் நிகழும் எனலாம்.

கைக்கிளை —பாடாண்

அகத்திணையில் கைக்கிளை ஒரு நிலத்திற்கு உரியது அன்று ஒருதலைக் காமம் ஆகி எங்கும் நிகழ்வது, ஒருபாற்குரித்தன்றி ஒருவனை ஒருவன் ஏதேனும் ஓர் பயன் கருதி மொழிந்து நிற்பது பாடாண். கைக்கிளை, பாடாண் ஆகிய இரண்டிலும் இயற்பெயர் கூறப்படுதல் உண்டு. கழிபேரிரக்கமல்லாத செந்திறத்தால் வருதல் இரண்டு நிலைகளிலும் காணலாம். தலைவனை ஏற்றிப் போற்றிப் புகழ்தலைப் புறத்தில் காண்கிறோம். அதுபோல ஒருதலைக் காமம் ஆகிய கைக்கிளைக்கும் போற்றுதலும் புகழ் சொல்லி இன்புறலும் உண்டு.

தொல்காப்பியப் பாடாண்திணை இயலை விளக்கும்,

"அமரர்கண் முடியு மறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்று மென்ப"

எனும் நூற்பாவிற்கு நாவலர் ச. சோ. பாரதியார் "புறத்திணை அகப்-பகுதியின்கண்ணும் மக்கள் ஒழுக்கம் பற்றி ஒன்றை ஒன்று சார்ந்து ஒவ்வொன்றின் சார்பாய் அமைவதைக் காட்டுகிறது" என்பர்.

'அமரர்' என்னும் சொல் அமர் என்பதன் அடியாகப் பிறந்த பெயராய்ப் போர் செய்வதலையே தமக்குரிய தொழிலாகக் கொண்டு வாழும் வீரரைக் குறித்து வழங்கும் தனித்தமிழ்ச் சொல்லாகும். அச்சொல்லுக்குப் போர் மறவர் எனப் பொருள் கொண்டு பின்வரும் உரை எழுதுவர் அவர்:

"போர் மறவர் (அஃதாவது பொருநர்) பாற் சென்றமைவன-வாக முன் இயலில் விரித்து விளக்கிய வெட்சி முதல் காஞ்சியீருன புறத்திணை வகையாறினும் (புரைதீர் காமம் புல்லிய வகையினும்) குற்றமற்ற அகப்பகுதியில் அன்பளைந்த காதல் திணை வகையிலும் எழுவகைத் திணைகளுள் இயல்பாக இதற்கேற்புடைய ஒவ்வொன்றின் கூறே பாடாணுய் அமையும் என்று கூறுவர் புறநூற் புலவர்" (ச.சோ. பாரதியார். தொல்காப்பியப் பொருட் படலம் - புத் துரை - புறத்திணையியல் மதுரை, 1975)

பண்புடைய உணர்ச்சிகளுக்கு அடையாளமாக அகப்புறத் திணைகளில் மலர்கள் சுட்டுப் படிமமாய் உள. காஞ்சித்திணையும் நிலையாமை எனும் சீரிய உரிமை உணர்ச்சியையும் புறநிகழ்ச்சியையும் குறித்தலின் மலர்ப் படிமம் பெறுகிறது. பண்பு இழிந்த கைக்கிளை, பெருந்திணை மலர்ப் படிமம் பெறவில்லை. 'பாடாண்' திணையில் பாடு-வோர் பாடப்படுவோர் ஆகிய இருவர் உள்ளத்தும் ஒத்த உணர்வு இருப்பதில்லை; எனவே, பாடாண் மலர்ப்படிமம் பெறவில்லை என-லாம்.

அகவாழ்வும் புறவாழ்வும் ஒருங்கு நோக்கும் இயல்பு, பண்-பாட்டு முழுமைக்கு இன்றியமையாதது.

முதல், கரு, உரி

அகப்பொருளுக்கு இம்மூவகைத் தன்மையும் காப்பியனுர் தெற்றெனக் காட்டுவர். ஆயின், புறத்திணைக்கு இவை உண்மை குறிப்பாற் புலனுகும். முக்காலத்தும் இம்மூவகை நிலை, செருக்-களத்தில் போற்றப்படுகிறது. (Appreciation is a mental review of a military situation based on all available information culminating into a plan of action to meet the situation - A Mannual of Military Science.)

இடம் (Place-ground Factor)
காலம் (Time Factor)
வலி (Strength Factor)

இதனைத் தொல்காப்பியர் முதல் (Place & time factor), கரு (Topography), உரி (Emotional Strength) என்று அகத்திற்குக் கூறிக் குறிப்பால் புறத்திற்கு உணர்த்துவதைக் காணலாம். முதற்பொருளை நிலமும் காலமும் என்று கொண்டால் கருப்பொருள் அந்நிலத்திற்-

களமுறை-எதிர்ப்பு வலியறிதல் (Strength factor)	முதற்பொருள் நிலம்	காலம்— காலமறிதல் (Time factor)	கருப்பொருள் (Topographical features)	உரிப்பொருள் (Emotion in war)
வெட்சி × (கரந்தை) (வேந்துவிடு முனைஞர்) —தொல். 57	குறிஞ்சி மலை	கங்குற் காலம் (கூதிர்பொழுது)	வெட்சிப் பூ கரந்தைப் பூ வாகை: வில்: வாள்	நிரை கவர்தல்
வஞ்சி × (காஞ்சி) (தும்பை) (அடல் குறித்-தன்றே) — தொல். 62 (உழிஞை)	முல்லை (காடுறை உலகம்)	கார் காலம்	வஞ்சிப்பூ காஞ்சிப் பூ கான்யாறு முல்லை (பத்து 24–28) வாள், வேல் முதலியன.	மண் நசை
உழிஞை × (நொச்சி) (கொள்ளார்தேஎங் குறித்த கொற்றம்) தொல். 67	மருதம் (தீம்புனல் உலகம்)	வைகுறு விடியல்	உழிஞைப் பூ நொச்சிப் பூ எந்திரப் படைகள் ஏணி, வேல்	முற்றலும் கோடலும்
தும்பை ×(வஞ்சி) (மைந்து பொருளாக வந்த வேந்தன்) தொல். 70	நெய்தல் (பெருமணல் உலகம்) களரும் மணலும்	பெரும் பொழுது வரைவின்மை எற்பாடு (போர் முடியும் காலம்)	தும்பைப் பூ கணையும் வேலும் வாளும் முதலியன	சென்ற உயிர் நின்ற யாக்கை-வீரர்க்கு இரக்கமின்மை

குரிய பூவைச் சூடலும் அந்நில இயற்கை (அல்லது) செயற்கை அரண்கள் போன்றவும் ஆகும். உரிப்பொருள் தாணையின் அளவினு-லும் வீரத்தாலும் அடுதொழிலில் ஏற்படும் உணர்ச்சியாகும் எனக் கூறலாம். இதனலன்றோ நச்சினர்க்கினியர், "புறத்திணைக்கு அங்ஙனம் பரந்து விரித்தோதாது தொகுத்து இலக்கணஞ் செய்தாராயினும் அவையும் அவ்வாறே பல பொருட் பகுதியும் உடையவென்பது உணர்த்துவதற்குத் துறையெனப் பெயராகக் கொடுத்தார். இதனுனே அகப்பொருட் பகுதி பலவாயினும் ஒரு செய்யுட் பல பொருள் விரா-அய்வரினும், ஒரு துறையாயினுற் போலப் புறத்திணைக்கும் அவ்வப் பொருட் பகுதி ஒரு துறையாதலும், ஒரு செய்யுட் பலதுறை ஒருங்கு-வந்தும் ஒரு துறைப் படுதலுங் கொள்க. இன்னும் இதனுனே அகத் திணைக்கு உரியனவெல்லாம் புறத்திணைக்கும் கொள்க" என்று கூறு-வர். புறத்தில் மூதின் முல்லை, வல்லாண் முல்லை, ஏருண் முல்லை முதலிய துறைப் பாடல்களால் அக்கால மகளிர் வீரத்தின்பால் கொண்ட அளவற்ற காதலை நாம் அறிந்து கொள்கிறேம்.

காதல்—தலைவன் வீரனே!

களவொழுக்கத்தில் தலைவி,சிறந்த வீரனைத் தனக்குத் தலை-வனுகை ஏற்றுக் கொண்டாள் எனலாம்; விளங்கச் சொன்னல், சிறந்த வீரர்களும், அக்கால மகளிரால் விரும்பப்பட்டனர். புறநானூற்றில் உள்ள நக்கண்ணையார் பாடல் இதற்குச் சிறந்த சான்ருகும். 'உடன் போக்கு' எனும் துறையை ஆழ்ந்து நோக்கின். அங்கு வீரனுக்கு அல்லால் பிறர்க்கு அச் செயல் எளிதன்று என்பது புலனுகும். தோழி உடன்போக்கிற்கு உடன்பட்டுத் தலைவியைத் தலைவனிடம் கையடுத்துத் தரும் காட்சியே தலைவன் பெரும் வீரன் என்பதற்குச் சான்று நல்கும். சிறந்த வீரன் சொன்ன சொல் தவறமாட்டான் என்று தோழி நினைக்கிருள். 'சிறந்த வீரனது வேல் எங்ஙனம் எய்யப்பட்ட இலக்கைப் பிழையாது சென்று தாக்குமோ அதுபோல நின் பிழையா நன்மொழி தேறிய என் தலைவியை இறுதிவரை வைத்துக் காக்க வேண்டும்' என்று தலைவனை வேண்டுகிருள். (நற். 10)

பாலைவழியே தலைவன் தலைவியைத் தேரிலே அழைத்துச் செல்-கின்ருன். அவ்வழி 'புலி பார்த்து உறையும் புல்லதர்ச் சிறுநெறி' என அறிகிறேம். (நற், 29 : 5) பாலை நெறி வழியே சிறந்த வீரனை அல்-லால் பிறரால் தலைவியை அழைத்துச் செல்லல் இயலாது அன்றே? சிறந்த வீரனைக் 'காளை' என்ற சொல்லால் குறிப்பிட்டனர். புற-நானூற்றில், 'ஆண்கடன்' பற்றிக் கூறிய பொன்முடியார், 'களிறு

எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' என்பர். (புறம். 312). 'மை-அணல் காளை' வீரனின் தோற்றத்தைக் குறிக்கும். (புறம். 83 :1) 'மையற் காளையோடு' என்றும் 'வன்கண் காளையோடு' என்றும் தலை-வனை 'உடன்போக்கில்' அகப்பாடலாகிய நற்றிணை சுட்டும். (நற். 179 : 8) தலைவனது தோற்றத்தைக் கபிலர் காட்டும்போது, கழல் அணிந்த கால்களும், மின் ஒளிர் நெடுவேலும் கொண்ட இளையோன் ஆகிய தலைவன் என்று காட்டுவது குறிப்பிடத் தக்கது. (நற். 362: 6 – 10) பிறிதோரிடத்தில் தலைவன் தன்னுடன் வரும் தலைவியை நோக்கி, "நீ விளையாடுக சிறிதே; யானே மழகளிறு உறிஞ்சிய பராரை வேங்கை மணல்இடு மருங்கின் இரும்புறம் பொருந்தி, அமர்வரின் அஞ்-சேன், பெயர்க்குவென் நுமர்வரின் மறைகுவென்" என்று கூறுவதின்-மூலம் அகத்தலைவன் வீரப்பண்பு மிக்கவனுய்க் காட்டப்படுகின்றுன். மேலும்'வஞ்சினக் காளை'(ஐங்.372:2)என்றும், 'அம்பு அமை வல்வில் விடலை' (ஐங்.373:5) என்றும், 'கடுங்கண் காளையோடு நெடுந்தேர் ஏறி' (ஐங்.385:1) என்றும், 'வெஞ்சின விறல் வேற்காளை'(ஐங்.391:5) என்றும், 'வெந்திறல் வென்வேல் விடலை' (ஐங். 393:5) என்றும், வீரனுக்குரிய தோற்றப் பொலிவையும் வினைமாண் திறனையும் காட்டிச் செல்வதால், உடன்போக்கு மேற்கொள்ளும் அகத்திணை சுட்டும் தலைவன் வீரனுய் இருத்தல் வேண்டும் என அறியலாம். "மகண் மறுத்தல்" என்னும் துறை இக்கருத்தினை மேலும் வலியுறுத்தும். முல்லைத் திணை காட்டும் மணமுறை இங்குக் கருதத்தக்கது.

அகத்திணை, புறத்திணை ஆகியவைகளை ஒப்பு நோக்குதல்-மூலம் மரபு, பண்பாடு, மரபில் மாறுதல், மரபில் முரண், அடிக்-கருத்துக்களின் அமைப்பு, வகை, வழக்கு ஆகியவைகளைத் தெள்ளி-தின் உணரலாம்.

14

தொல்காப்பியர் காட்டும் அகத்திணைக் கற்பனை மரபுகள்

மா. வண்ணமுத்து

முன்னுரை

கற்பனை மரபுகள் என்னும் இவ்வாய்வினை அடிப்படை மரபுகள், புனைவுமுறை மரபுகள், பொது மரபுகள் என்னும் மூன்று பகுப்புக்களில் காண்போம். ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் பொருளியலில் கற்று, அறிந்து, சிந்திப்பதற்கு உரிய அடிப்படையான மரபுகள் சிலவற்றைத் தெளிவுபடுத்தியுள்ளார். இலக்கிய நெறி, இலக்கியப் புனைவு முறை ஆகியன பற்றிய தம் கருத்துக்களையும் சில நூற்பாக்களில் அவர் வெளியிட்டுள்ளார். இதுபற்றிப் பொருளியலில் காணப்படும் காப்பியரின் கருத்துக்களைச் சுருங்கக் காண்போம்.

அடிப்படை மரபுகள்

உயர்ந்த மக்கள் கூறும் கூற்றும், வழக்கைப் பின்பற்றியே அமைகின்றன. எனவே வழக்கைப் பின்பற்றிச் செய்யுள் புனைதலே முறைமையாகும்.

> ‘உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின்
> வழக்குவழிப் படுத்தல் செய்யுட்குக் கடனே’
>
> (பொருளியல், நூ. 21)

என்பது தொல்காப்பியம். இலக்கியம் முன்னைய நூல்களைப் பார்த்தும் படைக்கப் பெறலாம்; உயர்ந்தோர் வாழ்வைப் பார்த்தும் புனையப்பெறலாம். இளம்பூரணர், “இன்னும் இந்நூலகத்து அகப்பொருளாகவும், புறப்பொருளாகவும் எடுத்தோதப்பட்டதன்றி, உயர்ந்தோர் வழக்கொடு பொருந்தி வருவனவெல்லாம் செய்யுட்குப் பொருளாகப் புணர்க்க என எஞ்சியது உணர்த்தியவாறுமாம்” என்று இதனைக் குறிப்பிடுகின்றார்.

உலகவழக்கில் அறத்தில் கழிவுடையனவாகிய தீய பகுதியும் உண்டு. தீயதின் தன்மையை இலக்கியத்தில் புனையலாமா? புனையலாம் எனில், எங்ஙனம் புனைவது? அறக்கழிவு உடைய பகுதிகள் பொருளுக்குப் பயன்பட வருமாயின்– 'புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்' —அவற்றையும் வழக்கு எனவே கொண்டு புனைவதில் தவறில்லை.

"அறக்கழிவு உடையன பொருட்பயம் படவரின்
வழக்கென வழங்கலும் பழித்தன்று என்ப"

(பொருளியல், நூ,22)

என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். சங்ககாலத்தில் பரத்தையிற் பிரிவும், தோழி தலைவியிடம் உண்மையை வரவழைப்பதற்காகத் தலைவன் தன்னை நயந்தான்போல் படைத்து மொழியும் இடங்களும் போல்வன அறத்திற் கழிவுடைய உலகவழக்குகளாகக் கருதப்பட்டன.

அறக்கழிவு உடையனவற்றை இலக்கியத்தில் புனையும் போது, எவ்வாறு புனைய வேண்டும் என்பதைத் தொல்காப்பியர் ஒரு நூற்பாவில் தெளிவுபடுத்துகின்றார்.

"மிக்க பொருளினுள் பொருள்வகை புணர்க்க
நாணுத்தலைப் பிரியா நல்வழிப் படுத்தே"

(பொருளியல், நூ. 23)

தொல்காப்பியர் விளக்கும் இவ் அடிப்படை மரபு என்றும் கைக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். அறக்கழிவு உடையவற்றை 'நாணுத் தலைப்பிரியாமல் நல்வழிப் படுத்துப் பொருள்வகை புணர்க்க' வேண்டுமாம். அதாவது, நாணத்தின் நீங்காத நல்வழிப்படுத்தி ஏற்ற பொருள் வகைகளைச் சேர்த்துக் கூற வேண்டுமாம்.

பரத்தையிற் பிரிவைப் புனையும்போது இரண்டு காட்சிகள் உள்ளன. ஒன்று, தலைமகன் பரத்தையுடன் ஆடிப்பாடி நகர்ப் புறத்தே சென்று பொழுதுபோக்கும் இன்பக்காட்சி. மற்றொன்று. அங்ஙனம் மகிழ்ந்த தலைமகன் தலைமகளிடம் வந்து நாணி நிற்கும் காட்சி. இலக்கியம் முன்னைய காட்சியில் புனைவைத் தொடங்கினும், பின்னைய கருத்தையே மையக் கருத்தாகப் புனைய வேண்டும். இங்ஙனம் புனைவதால் அறக்கழிவு உடையதையும் அறநெறிக்குள் கொண்டு வர முடிகின்றது. எனவே இலக்கியத்தில் **புனை பொருளைவிடப் புனைதிறமே** முக்கியமாகின்றது. இன்று எழுதப்படும் பாலியல் தழுவிய கதைகள் இது போல 'நாணுத்தலைப்

பிரியா நல்வழிப்படுத்திப்' பொருள் வகை புணர்த்துப் புனையப்படு-மாறல் குற்றமன்று. "சமுதாயச் சாய்க்கடையைக் காட்டுவதாகக் கூறுகிறார்கள்; அது சாய்க்கடையென்றே படிப்பவர் உணருமாறு புனைவதுதான் எழுத்தாளர் அறம் சந்தனம் என்று அதனைப் பூசிக் கொள்ளுமாறு இன்று சிலர் புனைகின்றனரே, அது தொல்காப்பிய-ருக்கு உடன்பாடன்று;"* என்பார் முனைவர் தமிழண்ணல்.

புனைவு முறை மரபுகள்

தொல்காப்பியர் பொருளியலில் தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி ஆகிய அகத்திணை மாந்தர்க்கு உரிய பொருண்-மைகளையும், இயல்புகளையும், இலக்கணங்களையும், திறன்களையும், மரபுகளையும் உணர்த்தியுள்ளார் பொருளியலில் குறிக்கப் பெறும் அகத்திணை மாந்தர் ஐவருள் தலைவியே சிறப்பிடம் பெறுகின்றாள். களவு, கற்பு ஆகிய இரு காலத்திலும் அவளுக்கு உரிய இயல்பு-களையும் இலக்கணங்களையும் மரபுகளையும் தொல்காப்பியர் பதினொரு நூற்பாக்களில் தெளிவுபடுத்தியுள்ளார். தலைவிக்கு அடுத்த நிலையில் தோழியும், தோழிக்கு அடுத்த நிலையில் தலைவனும் இடம் பெறுகின்-றனர். அவர்கள் இருவரையும் பற்றிய செய்திகள் முறையே ஐந்துநூற்-பாக்களிலும், மூன்று நூற்பாக்களிலும் இடம்பெற்றுள்ளன. நற்றாய், செவிலி ஆகிய இருவருக்கும் உரிய மரபுகளைத் தொல்காப்பியர் இரண்டு நூற்பாக்களில் உணர்த்தியுள்ளார். மேலும் அவர் தலைவனுக்-கும், தலைவிக்கும், தோழிக்கும் உரிய பொதுவான மரபுகளையும் சில நூற்பாக்களில் உணர்த்தியுள்ளார்.

தலைமகளுக்கு உரிய மரபுகள்

தலைமகள் பிரிவாற்றாமையால் மேனி பசந்து வருந்தும் காலத்து, தலைமகன் பிரிவைத் தன் உறுப்புக்கள் உணர்ந்தன போலப் பொருந்-தும் வகையால் கூறவும் பெறும்.

"வண்ணம் திரிந்து புலம்புங் காலை
உணர்ந்தது போல உறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையாற் புணர்க்கவும் பெறுமே"

(பொருளியல், நூ.7)

என்பர் தொல்காப்பியர். "காதும், ஓதியும்முதலியன கூறப்பெறு; கண்ணும் தோளும் முலையும் போல்வன புணர்க்கப் படும்

---

* தமிழண்ணல் டாக்டர் இராம. பெரியகருப்பன், சங்க இலக்-கிய ஒப்பீடு — இலக்கியக் கொள்கைகள், ப 108.

என்றற்குப் 'புணர்ந்த வகை' என்றார்'' என்னும் நச்சினார்க்கினியரின் உரை விளக்கம் இங்கே நினைந்து மகிழத்தக்கதாகும்.

'' தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்'' (குறள்: 1233)

காமத்துப்பாலில் 'உறுப்பு நலன் அழிதல்' என்னும் அதிகாரத்தில் வரும் குறள் இது! 'காதலரோடு கூடி இருந்த காலத்தில் மகிழ்ந்து பூரித்திருந்த தோள்கள், இப்போது மெலிந்து காதலருடைய பிரிவை நன்றாக அறிவிப்பவை போல் உள்ளன' என்பது இக்குறளின் பொருள். இதில் தலைமகன் பிரிவைத் தன் உறுப்புக்களுள் ஒன்றான தோளானது உணர்ந்து அறிவிப்பதாகத் தலைவி கூறுதல் காணலாம்.

தலைமகள் உயர்வும் தலைமகன் தாழ்வும் ஆராயுங்காலத்துப் புலவிக் காலத்து உரியதாகும். 'புலவிக் காலத்துத் தலைவன் பணிந்துழி உட்கும் நாணுமின்றித் தலைவி அதனை ஏற்றுக்கோடலும், தலைவன் தலைமைக்கு மாறாகத் தலைவியைப் பணிதலும் ஆராயுங்காலை இருவர்க்கும் உரிய' என விளக்கமாகக் கூறுவர் நச்சினார்க்கினியர். இக்கருத்தினைத் தொல்காப்பியர்,

''மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய'' (பொருளியல், நூ. 31)

என்னும் நூற்பாவால் உணர்த்துகின்றார். 'கற்புக் காலத்துத் தலைமகட்கு உரியதோர் மரபு உணர்த்திற்று' என இந்நூற்பாவினை விளக்குவர் இளம்பூரணர்.

பரிபாடல் ஒன்பதாம் பாடலில் குன்றம்பூதனார் தேவசேனையின் ஊடலை நயமாகச் சித்திரித்துள்ளார். வள்ளியின் நிமித்தம் ஊடல் கொண்டு சீற்றத்தோடு செல்கின்றாள் தேவசேனை. அவளது ஊடலும், சீற்றமும் கண்ட செவ்வேள், அத்தேவசேனையின் திருந்திய அடியின்மேல் தனது தலையில் சூட்டப்பட்ட மாலை தோயும்படி வணங்கி, தனது வணக்கமாகிய திறைப்பொருளை அவளுக்குக் கொடுக்கின்றான். அங்ஙனம் கொடுத்துத் தாழ்ந்து நிற்கும் முருகனிடம், 'நீ இனி வருந்தாதே' என்று ஆறுதல் கூறி, ஊடல்தீர்ந்து, அவனுக்குத் தன் மார்பினை அளிக்கின்றாள் தேவசேனை.

'பெண்டின்
இகலின் இசந்தானை அவ்வேள் தலைக்கண்ணி
திருந்துஅடி தோயத் திறைகொடுப் பானை
வருந்தல் எனஅவற்கு மார்புஅளிப் பானை' (பரி 9)

இவ்வரிகளுள் 'மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்' ஒருங்கே காணலாம். தலைவியினுடைய அருள்நோக்கு ஒன்றினாலேயேதான் உயிர்வாழ்வதாகக் கூறும் தலைவனுடைய பணிவான மொழியினை,

"ஆயிழாய், நின்கண் பெறினல்லால் இன்னுயிர் வாழ்கல்லா
என்கண் எவனோ தவறு" (கலி. 88)

என்னும் கலித்தொகைப் பாட்டால் அறியலாம்.

தலைமகனுக்கு உரிய மரபுகள்

களவொழுக்கத்தில் தலைவன் தனியே வந்து போவதன்றித் தேரும், யானையும், குதிரையும் பிறவும் ஊர்ந்து வருதலும் இயல்பே ஆகும். இக்கருத்தினைத் தொல்காப்பியர்,

"தேரும் யானையும் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப" (பொருளியல், நூ.17)

என்னும் நூற்பாவில் வெளியிட்டுள்ளார். 'இது தலைமகற்கு உரியதோர் மரபு உணர்த்திற்று' என இந்நூற்பாவிற்கு விளக்கம் தந்துள்ளார் இளம்பூரணர்.

களவுக்காலத்தில் தலைவியின் எழில்நலம் பாராட்டிய தலைவன், கற்புக்காலத்தும் அவளது எழிலைப் பாராட்டுதற்கு உரியன். இம்மரபினைத் தொல்காப்பியர்,

"நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியில்
புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே"
(பொருளியல், நூ. 32)

என்னும் நூற்பாவில் கூறியுள்ளார்.

"அணைமருள் இன்துயில் அம்பணைத் தடமென்தோள்
துணைமலர் எழில்நீலத்து ஏந்தெழில் மலருண்கண்
மண்மௌவல் முகையன்ன மாவீழ்வான் நிரைவெண்பல்
மணநாறு நறுந்தண் மாரிவீழ் இருங்கூந்தல்
அலர்முலை ஆகத்து அகன்ற அல்குல்
சிலநிரை வால்வளைச் செய்யா யோவெனப்
பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி"
(கலி. 14)

என்னும் பாடலில், தலைவியின் மூங்கிலையொத்த மெல்லிய தோளினையும், நீலமலர் போன்ற விழிகளையும், பச்சரிசி போன்ற பல்வரிசையினையும், கார்மேகம் போன்ற கூந்தலினையும், அலர் முலையினையும், அகன்ற அல்குலையும், அணிந்த வளையினையும் தலைவன் பலபடப் பாராட்டுவதை அறியலாம்.

சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியின் நலத்தைப் புகழ்ந்து பாராட்டும் மொழிகள் இரண்டு இடங்களில் அமைந்துள்ளன. ஒன்று, புகார்க் காண்டத்தில்‘மனையறம் படுத்தகாதை’யில் கோவலன் தீராக்காதலின் கண்ணகியின் திருமுகம் நோக்கிக்கூறும் குறியாக்-கட்டுரை. மற்றொன்று, ‘மதுரைக்காண்டத்தில்’ கொலைக்களக்காதையில் கண்ணகி தன் கையறி மடமையில் ஆக்கிய அமுதினை உண்டு இனிது இருந்த கோவலன், அவளது உயர்ந்த பண்புகளைப் போற்றிக்-கூறும் பாராட்டுரை. இவ்விருவகைப் பாராட்டுரைகளும் கற்புக்காலத்திலேயே நிகழ்வதுகருத்தில் கொள்ளத்தகுந்த-தாம்.

தோழிக்கு உரிய மரபு

அகத்திணை இலக்கியத்தில் தோழி வரம்பற்ற உரிமையுடையவள். ‘தாங்கருஞ் சிறப்பின் தோழி’ என்று தொல்காப்பியரும் தோழியைச் சிறப்பித்துக் கூறுவர். தலைவியின் உரிமையையும் செயலையும் தன் உரிமையும் செயலுமாகக் கொள்ளும் உறவுபடைத்தவள் தோழி. எனினும் தலைவியின் இசைவின்றி - குறிப்பின்றி - அறத்தோடு நிற்கும் உரிமை மட்டும் அவளுக்கு இல்லை இதனை,

“அறத்தொடு நிற்கும் காலத் தன்றி
அறத்தியல் மரபிலள் தோழி என்ப”

(பொருளியல், நூ. 11)

என்னும் நூற்பாவால் அறிகின்றோம். ‘தலைவி அறத்தொடு நிற்கும் காலத்தன்றித் தோழி தானே அறத்தொடு நிற்கும் மரபு இலள்’ என்பது இந்நூற்பாவின் பொருள். ‘இது, அறத்தொடு நிற்கும் நிலை மரபு உணர்த்திற்று’ என்பர் இளம்பூரணர்.

தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்குமாற்றினைக் கபிலரின் அகநானூற்றுப் பாடலால் அறியலாம்.

“உருவ வல்வில் பற்றிஅம்பு தெரிந்து
செருச்செய் யானை செல்நெறி வினஅய்
புலர்குரல் ஏனல் புழையுடை ஒருசிறை
மலர்தார் மார்பன் நின்தோள் கண்டோர்
பலர்தில் வாழி தோழி அவருள்
ஆர்இருள் கங்குல் அணையொடு பொருந்தி
ஓர்யான் ஆகுவது எவன்கொல்
நீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே” (அகம் 82)

‘மலர்ந்த மாலையை உடைய மார்பை உடையவனாய் நின்றவனைப் பார்த்த மகளிர் பலராவர்; அவருள் இருளையுடைய இரவின்கண்

பாயலிலே கிடந்து, நீர் ஒழுகுகின்ற கண்களோடு மெலிந்த தோள்களையும் உடையேன் யான் ஒருத்தியே ஆவதற்கு உரிய காரணம் யாதோ?' என்று வினவுவதின் வாயிலாகத் தோழிக்குத் தன் களவொழுக்கத்தினைப் பக்குவமாக வெளியிட்டு விடுகின்றாள் தலைவி.

"எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇய
ஏழு வகைய என்மனார் புலவர்" (பொருளியல், நூ. 12)

என்னும் நூற்பாவில் தோழி அறத்தொடு நிற்கும் முறைபற்றித் தொல்காப்பியர் சுட்டிக்காட்டியிருப்பதும் நோக்கத்தக்கதாகும்.

தலைமகனுக்கும் தலைமகளுக்கும் உரிய மரபு

தொல்காப்பியர் ஒருவர் தம்முன்பாக மற்றொருவர் இருக்கக் கூறுவதனைக் 'கூற்றுவகை'யில் அடக்கி, அங்ஙனம் யாரும் இல்லாமல் தாமே கூறுவனவற்றை 'ஒருபாற் கிளவி' என்கிறார். ஒருவர் தம் நெஞ்சிற்குக் கூறுவனவும், எதிர் மறுத்துப் பேசாதனவாகிய பறவை, விலங்கு ஆகியவற்றிடம் கூறுவனவும் இவ் 'ஒருபாற் கிளவி' யுள் அடங்கும்.

"நோயும் இன்பமும் இருவகை நிலையில்
காமம் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்
சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யா மரபின் தொழிற்படுத்து அடக்கியும்
....
இருவர்க்கும் உரிய பாற் கிளவி" (பொருளியல், நூ. 2)

என்பது தொல்காப்பியம்.

தலைவன் தலைவி ஆகிய இருவர்க்கும் ஒருபாற் கிளவி உரியது. காதலால் உளதாகும் துன்பமும் இன்பமும் விளங்க, மெய்ப்பாட்டுத்திறம் முழுவதும் பொருந்த இஃது புனையப் பெறும். நெஞ்சை உறுப்புடையது போல், உணர்வுடையது போல், மறுமொழி தருவது போல் கற்பனை செய்து பாடுவது இதன் மரபாகும். எதிர் மறுத்து உரையாடும் ஆற்றல் இல்லாத பறவைகள், விலங்குகள் ஆகியவற்றோடு பேசுவதாகவும் இவ் ஒரு பாற் கூற்றுகள் அமையும்.

" நன்னர் நெஞ்சம்
என்னொடும் நின்னொடும் சூழாது கைம்மிக்கு
இருளிடை மிதிப்புழி நோக்கிஅவர்
தளரடி தாங்கிய சென்றது இன்றே" (அகம். 128)

கபிலரின் அகநானூற்றுப் பாடலில் வரும் ஒரு தலைமகளின் கூற்று இது. இதில் தலைமகள் தன் நெஞ்சினை உறுப்புடையது போல் பேசுகிறாள்; அழுகை என்னும் மெய்ப்பாடு தோன்றத் தன் நெஞ்சம், தன்னையும் கேளாமல், உயிர்த் தோழியிடமும் சொல்லாமல், தன்னந் தனியே வரும் தலைவனின் தளரடியைத் தாங்குவதற்காகச் சென்று விட்டதாகக் கூறுகிறாள்.

பிறிதொரு அகநானூற்றுப் பாடலில் வரும் தலைமகள் தலைவனிடம் செல்லுமாறும், அவன்பால் செய்தியொன்று சொல்லுமாறும், நண்டினை வேண்டுகின்றாள். "கானலும் கழறாது; கழியும் கூறாது, புன்னையும் மொழியாது. நின்னையன்றி யான் பிறிதுயாதும் இலன். ஆதலின் நண்டே, நீ தான் துறைவனிடம் செல்ல வேண்டும்; 'பல்கால் நள்ளென் யாமத்து நின்னுறு விழுமம் களைந்தோள், தன்னுறு விழுமம் நீந்துமோ?' என்று சொல்ல வேண்டும்."

" கானலும் கழறாது கழியும் கூறாது
தேன்இமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது
ஒருநின் அல்லது பிறிதுயாதும் இலனே ...
துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமால் அலவ பல்கால் ...
நள்ளென் யாமத்து
நின்னுறு விழுமம் களைந்தோள்
தன்னுறு விழுமம் நீந்துமோ எனவே" (அகம். 170)

'சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச் செய்யா மரபின் தொழிற்படுத்து அடக்கியும்' என்பதற்கு இப்பாடலை மேற்கோளாகக் காட்டுவர் இளம்பூரணர்.

பொது மரபுகள்

தொல்காப்பியர் இலக்கியத்தில் இடம்பெறத்தக்க பொதுவான மரபுகள் சிலவற்றையும் பொருளியலில் விளக்கியுள்ளார். 'உண்டற்கு உரிய அல்லாப் பொருளும்', 'காட்டலாகாப் பொருளும்' போல்வன இவ்வகையில் கூறத்தக்கன.

உண்ணுதல் தொழிலை நிகழ்த்துதற்கு உரிய அல்லாத பொருளை, உண்டனபோலக் கூறலும் மரபேயாகும்.

"உண்டற்கு உரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே"

(பொருளியல், நூ. 18)

என்பது தொல்காப்பியம். 'இது, சொல்லின்கண் கிடந்ததோர் ஒழிபு' என்பர் இளம்பூரணர். 'இன்னும் உய்த்துக் கொண்டு உணர்தல் (666) என்பதனான் உண்ணப்படுதற்கு உரிய அல்லாத பொருளததனைப் பிறர் உண்ணப்பட்டது போலக் கூறலும் மரபாம் என்பது பொருளாகக் காண்க' என்பர் நச்சினார்க்கினியர்.

'பசலையால் உணப்பட்டுப் பண்டை நீர் ஒழிந்தக்கால் (கலி.15) என வரும் கலிப்பாடல் அடியில், தலைவியின் அழகைப் 'பசலை உண்டதாகக் கூறப்பட்டிருத்தல் காணலாம். பசலை என்பது பிரி-வாற்றாமையால் வரும் ஒரு நிற வேறுபாடு. இது உண்ணுதற்கு உரியது அன்று; எனினும் தலைவியின் அழகை உண்டதாகப் பாடலில் கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் கூறப்படுவதும் ஓர் இலக்கிய மரபேயாகும்.

'கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவைஎன்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று'

(குறள் : 1244)

காமத்துப்பாலில் 'நெஞ்சொடு கிளத்தல்' என்னும் அதிகாரத்தில் வரும் குறள் இது. 'நெஞ்சே! நீ அவரிடம் செல்லும் பொழுது என் கண்களையும் உடன் கொண்டு செல்வாயாக. அவரைக் காண-வேண்டும் என்று இவை என்னைப் பிடுங்கித் தின்கின்றன' என்பது இக்குறளின் பொருள். இதில் 'காதலரைக் காணவேண்டும் என்று என் கண்கள் என்னைத் தின்னும்' என்று தலைவி கூறுதல் காணலாம். கண்களின் தொழில் காண்பதே, தின்பது அன்று. எனினும் காதலியின் கண்கள் காதலரைக் காணவேண்டும் என்று அவளைத் தின்னுவதாகப் பாடுதல் ஓர் இலக்கிய மரபாகும்.

கண்ணினால் காணப்படாததால் 'காட்டலாகாப் பொருள்கள்' என்று தொல்காப்பியர் சில பொருள்களைக் குறித்துள்ளார். அவை மனவுணர்வால் உணர்வதற்கு உரியனவேயன்றிக் கண்ணினால் காண்-பதற்கு உரியன அல்ல.

'ஒப்பும் உருவும் வெறுப்பும் என்ரு
கற்பும் ஏரும் எழிலும் என்ரு
சாயலும் நாணும் மடனும் என்ரு
நோயும் வேட்கையும் நுகர்வும் என்ருங்கு
ஆவயின் வருஉம் கிளவி எல்லாம்
நாட்டியல் மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்டல் ஆகாப் பொருள என்ப'
(பொருளியல், நூ. 51)

என்பது தொல்காப்பியம்.

தொல்காப்பியர் காட்டலாகப் பொருள்களாக ஒப்பு, உரு-வெறுப்பு, கற்பு, ஏர், எழில், சாயல், நாண், மடன், நோய், வேட்கை, நுகர்வு ஆகிய பன்னிரண்டு பொருள்களைச் சுட்டிக் கூறியுள்ளார். அவர் 'ஆவயின் வருஉம் கிளவி எல்லாம்' என்றதனுல், உரையாசிரியர்கள் ஒளி, அளி, காய்தல், அன்பு, அழுக்காறு, பொறை, நிறை, அறிவு போன்ற சிலவற்றையும் காட்டலாகாப் பொருள்களாகக் குறித்துள்ளனர். இவையெல்லாம் ஆசிரியர் இது பொருள் என வேறுபடுத்திக் காட்டலாகாதவை; மாணுக்கர் தம் மனத்தினுல் உணரத் தக்கவை. இங்ஙனம், புறமாகிய பொறிகளால் உணரப்படும் பொருள் எனவும், அகமாகிய மனத்தால் உணரப்படும் பொருள் எனவும் பொருள்களை இரண்டாகப் பகுத்துக் கூறுதல் பழந்தமிழர் மரபாகும்.

"நாயும் பன்றியும் போலாது மயிலும் குயிலும் போல்வதோர் தன்மை" என்பது இளம்பூரணர் சாயலுக்குத் தரும் செவ்விய விளக்கம் ஆகும்.

முடிவுரை

பொருளியலில் 'மரபு' என்ற சொல்லாட்சி ஒன்பது இடங்களில் இடம் பெற்றுள்ளது. 'என்ப' 'எனமொழிப' 'என்மனுர் புலவர்' போன்ற சொல்லாட்சிகளும், 'தொன்னெறி முறைமை', 'நாட்டியல் மரபு' 'வழக்குநெறி' என்னும் தொடர்களும் இலக்கியத்தில் வாழையடி வாழையாக இடம் பெற்று வரும் மரபுகளைச் சுட்டி நிற்கின்றன. தொல்காப்பியர் அகப்பொருள் புறப்பொருள் என்னும் இரண்டினைப் பற்றியும் முன்னைய இயல்களில் கூருது எஞ்சி நிற்கும் மரபுகளைப் பொருளியலில் தெளிவுபடுத்தியுள்ளார்.

15

வரைவும் வரைவு நிமித்தமும்

மு. பாலகிருஷ்ணன்

வரைவு

வரைவு துறக்கத்திலே முடிவானது; உறவிலே உறுதி வாய்ந்தது; வாழ்நாளெலாம் வளமானது; வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு இன்றியமையாதது; தவிர்க்க முடியாதது.

வரைவு, வதுவை, மன்றல், மணம் என்பன ஒரு பொருட் கிளவிகளாக இன்றைய வழக்காறு இருப்பினும், இவற்றின் உண்மைப் பொருளை நுணுகி ஆராயின் நுட்பமான வேறுபாடுகளும் புலப்படும்.

எட்டுக்கு மேலாக வரும் சில மெய்ப்பாடுகளைக் கூறும் தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் நூற்பா எண் 12-இல் காணப்பெறும் 'வரைதல்' என்பதற்குக் 'காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம்' என்று பொருள் கொள்ளப் பெறுகிறது. காக்க வேண்டுவன இவை கடிய வேண்டுவன இவை என்று வரையறை செய்து ஒழுகுவது போலத் தலைவனும், தலைவியைத் தனக்கே உரியவளாக வரையறை செய்து ஒழுகும் ஒன்றும் வரைவு எனப்பட்டது போலும்.

வதுவை என்பது தாமே எதிர்ப்பட்டுக் கூடிய தலைவனையும் தலைவியையும் ஒன்றாக வதியச் செய்தல் என்று பொருள்படும்.

மன்று என்னும் ஊரவையில் மணமகள் வீட்டாரும் மணமகன் வீட்டாரும் கொடுப்போரும் அடுப்போருமாய் நின்று மணமகளை மணமகனுக்குக் கொடுத்து அவர்களை மனைவியும் கணவனுமாக இல்வாழ்க்கையில் ஈடுபடுத்தும் முறையே மன்றல் எனப்பட்டதாகக் கொள்ளலாம்.

தருக்க நூலோர் 'மணமுடையது மண்' என்பர். 'கந்தமுடையது பிருதுவி' என்று வடமொழியிலும் ஒரு வாசகம் உண்டு. பொருளாகிய மண் பண்பி எனப்படும்; மணம் அதன் பண்பாகும். மண்ணிற்குச் சிறப்பிலக்கணமாகிய மணம், நறுமணமேயாகும். மண் தன் இயற்கை-யான தூய நிலையில் இருக்கும்வரையில் அது நறுமணமே கமழா-நிற்கும் அது. மாசுடன் கலந்து நிற்குங்கால் அதன் இயற்கை நறுமணம் வெளிப்படுதற்குத் தடை உண்டாகும். எனவே, நறுமணம் குன்றுகிறது. மண்ணில் உள்ள மாசினைக் கழுவி விடுதலால், அது தன் இயற்கை நறுமணத்தை எய்தி நிற்கும்படி செய்யலாம் என்பது போதரும் இவ்வாறு செய்வது மண்ணுதல் எனப்படும். மண்ணல் என்பதும் அப்பொருட்டே ஆகும். நாளடைவில் 'எப்பொருளாயினும் அப்பொருளை, மாசு (அழுக்கு) போகக் கழுவுதல்' என்ற பொதுப் பொருளை உணர்த்தத் தலைப்பட்டதைத் தமிழ் இலக்கியங்களிற் காணலாம். 'கன்றுடை மடப்பிடி கயந்தலை மண்ணி' (அகம். 121) என்பது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

'மண்ணீர்ச் சிறுகுளம்' (அகம் 121) என்பது, 'அழுக்குப் போகக் குளித்தற்குரிய சிறுகுளம்' எனப் பொருள் தருவதைக் காணலாம். ஆகவே, மாசு நீங்கி மணம் பெறுவதற்காக இயைந்த இயைபே மணம் எனப்பட்டது. மணம் பெறுவதற்காகவே,—உயிர் தன் மாசு கழிந்து தன் இயற்கைத் தூய்மை பெறுதல் வாயிலாக மணம் பெறுதற்காகவே,— ஓருயிர் ஈருடல் பெற்ற ஒருவனும் ஒருத்தியும் ஊழை முந்துறுத்துத் தம்முள் கூடுவர் என்றும், அதுவே மணம் எனப் பட்டது என்றும் அறிஞர் மொ. அ. துரை அரங்கசாமி கருதுகிறார்.[1]

எண்வகை மன்றல்

ஒருவனும் ஒருத்தியும் கணவனும் மனைவியுமாக அமையும் மன்றல் முறை மறையோர் வழக்கில் எண்வகைப்படும்.

'மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்'

(தொல். களா. 1)

அவை பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், கந்தருவம், ஆசுரம்' இராக்கதம், பைசாசம் எனப்படும்

இவற்றுள் பிரமமாவது:ஒத்த கோத்திரத்தானுய் நாற்பத்தெட்டு ஆண்டு பிரமசரியம் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தாளாய்ப் பூப்பு எய்தியவளைப் பெயர்த்தும் இரண்டாம் பூப்பு எய்தா முன்னம் அணிகலன் அணிவித்துத் தானமாகக் கொடுப்பது,

பிரசாபத்தியமாவது: மகட் கோடற்கு உரிய (கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டி, தம் மகட்கு ஈந்து கொடுப்பது.

ஆரிடமாவது: தக்கான் ஒருவனுக்கு ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நிறுத்திப் பொன் அணிந்து நீரும் இவைபோற் பொலிந்து வாழ்வீர் என நீரிற் கொடுப்பது.

தெய்வமாவது: பெரு வேள்வி வேட்பிக்கின்றுர் பலருள் ஒத்த ஒருவனுக்கு அவ் வேள்வித் தீ முன்னர்த் தக்கிணையாகக் கொடுப்பது.

கந்தருவமாவது: கந்தருவ குமாரரும் கன்னியரும் தம்முள் எதிர்ப்பட்டுக் கண்டு இயைந்தது போலத் தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்டுப் புணர்வது.

ஆசுரமாவது: கொல்லேறு கோடல், திரிபின்றி யெய்தல், வில்லேற்றுதல் முதலியன செய்து கோடல்,

இராக்கதமாவது: தலைமகள் தன்னினும் தமரினும் பெருது வலிதிற் கொள்வது.

பைசாசமாவது: மூத்தோர் களித்தோர் துயின்ருேர் புணர்ச்சியும் இழிந்தோனை மணஞ்செய்தலும் ஆடை மாறுதலும் பிறவுமாம்.

இவற்றுள், ஆசுரமும் இராக்கதமும் பைசாசமும் கைக்கிளைக்கு உரியனவாகச் சுட்டப்படும்; பிரமமும் பிரசாபத்தியமும் ஆரிடமும் தெய்வமும் இயல்பாகவே பெருந்திணையின்பாற்பாடும்.

'முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே
பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே'

(தொல். கள. 14)

கந்தருவம் ஐந்திணைக்கு உரியதாகும்.

'இன்பமும் பொருளும் அறனும் என்றுங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே'

(தொல். கள.1)

'முதலொடு புணர்ந்த யாழோர் மேன
தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே'

(தொல். கள.15)

பிரமம் என்பதைத் தமிழில் அறனிலை என்பர்; பிரசாபத்தியத்தை ஒப்பு என்பர்; ஆரிடத்தைப் பொருள்கோள் என்பர். பிரசாபத்தியத்தைப் பொருள்கோளென்றல் தவறாகாது. கந்தருவமணத்தை யாழோர் கூட்டமெனவும், ஆசுரத்தை அரும்பொருள்வினை எனவும், பைசாசத்தைப் பேய்நிலை எனவும், இராக்கதத்தை வன்பு எனவும் கூறுதல் தமிழ் வழக்கு. கற்பு மணத்தையே அறனிலை என்பாரும் உளர். எனவே, களவு, கற்பு, ஒப்பு, பொருள்கோள், அரும்பொருள் வினை, வன்பு, பேய்நிலை, தெய்வம் என்னும் எட்டுமுறையும் தமிழ் நிலத்திற்கு உரியனவாயிருந்தன என்பது தவறாகாது என்கிறார் திரு. கா.சுப்பிரமணிய பிள்ளை.[2]

மகப்பேற்றிற்காக மறுமணம்

தலைவி எனற்கு உரிய முதல் மனைவிக்கு மகப்பேறு இல்லாத போது தலைவன், மகப்பேறு காரணமாக வேறு ஒருத்தியை மணம் செய்து கொள்வது தவறு இல்லை என்று கருதப்பட்டதால், தொல்காப்பியனார்,

'பின்முறை யாக்கிய பெரும் பொருள் வதுவை'(தொல்.கற்பு.31) எனப் பின்முறை வதுவையாளைக் குறிக்கின்றார். பெறுமவற்றுள், ஒப்பதும் மிக்கதுமற்ற செல்வம் மக்கட் செல்வமே யாதலால், அத்தகைய செல்வத்தைப் பெறுவதற்கென வதுவை செய்து கொள்ளப் பட்டவளைத் தொல்காப்பியனார், 'பெரும் பொருள் வதுவை' மனையாள் என்று கூறுவது சிறப்பாக அமைந்துள்ளது. அவளை 'மகன்தாய்' (தொல். கற்பு 33) என்றும் தொல்காப்பியனார் கூறுகிறார்.

பரத்தை மணம்

மெய்யுறு புணர்ச்சி ஒன்றையே குறித்துப் பரத்தையை வதுவை செய்து கொள்ளும் வழக்கமும் உண்டென்பது அகநானூறு-66 ஆம் செய்யுளால் அறியலாம். இவள் 'பின்முறையாக்கிய பெரும் பொருள் வதுவையர்' எனப்படார்.

திருமணச் சடங்கு

தொல்காப்பியர் கூறும் கற்பு, திருமணச் சடங்கோடு தொடங்குவது ஆகும். கற்பென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, சடங்கொடு பொருந்தி, கொள்ளுதற்குரிய மரபினையுடைய தலைவன், தலைவியைக் கொடுத்தற்குரிய தலைவியின் தமர் மணஞ்செய்து கொடுப்ப மணந்து கொள்வது ஆகும்.

'கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே''.

(தொல். கற்பு.1)

'மணச்சடங்கு நிகழுங்கால் இவளை இன்னவாறு பாதுகாப்பா-யெனவும், இவற்கு இன்னவாறே நீ குற்றேவல் செய்தொழுகெனவும் அங்கியங் கடவுள் அறிகரியாக மந்திரவகையாற் கற்பிக்கப்படுதலின் அம் மணச் சடங்கினைக் கற்பென்றார்' என்பது நச்சினார்க்கினியர் கருத்து. 'இக் கற்புக் காரணமாகவே பின்னர் நிகழ்ந்த ஒழுகலாறெல்லாம் நிகழ வேண்டுதலின் அவற்றையும் கற்பென்று அடக்கினார். இருவரும் எதிர்ப்பட்ட ஞான்று தொடங்கி உழுவலன்பால் உரிமை செய்து ஒழுகலிற் கிழவனும் கிழத்தியும் என்றார். தாயொடு பிறந்-தாரும் தன்னையரும் தாயத்தாரும் ஆசானும் முதலியோர் கொடைக் குரியர் என்றற்கு மரபினோர் என்றார்' என்பது அவரது கருத்தாகும்.

அகநானூறு 86-ஆம் செய்யுளில் பந்தல் அமைத்து, குளிர்ந்த மணல் விரித்து, விளக்கு வைத்து, மாலை தொங்கவிட்டு, மக்கட்பேறு-டைய நான்கு மகளிர் தலைவியைக் கற்பும் நன்மக்கட் பேறும் உடைய ளாகுக என வாழ்த்துதலும், ஈரிதழ் கலந்த நீரில் மூழ்குவித்தல், புத்-தாடை புனைவித்தல் முதலான மணச் சடங்குகளும் குறிக்கப்-பட்டுள்ளன.

கொடைக்கு உரிய மரபினோர் கொடுப்பதில்லாமல் மணச் சடங்கு நடைபெறுவதுண்டு, அது உடன்போக்கில் நிகழ்வது.

'' கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான''

(தொல் கற்பு. 2)

கரணமொடு புணர்தல், கொடைக்குரியோர் கொடுத்தல் என்ற கற்புக் கூறுகள் இரண்டனுள், பின்னது இல்லையேனும் நன்று; முன்னது இல்லாதிருத்தல் கூடாது என்பர் அறிஞர் வ.சுப மாணிக்கம்.[3]

கரணம் அதாவது சடங்கு இல்லாமல் மணம் நிகழ்ந்த காலமும் உண்டு. இல்வாழ்க்கை அடைவதற்கு முன் ஒருவன் ஒருத்தியை மறைவிற் கண்டு, தன்பாலுள்ள அன்பை அவளுக்கு வெளியிட்டுக் கூடி ஒழுகுதலும் அக் கூட்டம் வெளிப்பட்ட பின் பெண்ணின் பெற்-றோர் அதற்கு இணங்குதலும், இணங்காராயினும் அவரறியாமல்

அப் பெண்ணைக் கரந்தழைத்துச் சென்று தனக்குரிய மனையாளாகக் கொண்டு வாழ்தலும் ஒரு காலத்தில் நடந்ததுண்டு.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், தமிழ்ச் சான்றோர் (தலைமையுடையோர்) சடங்குகளை வரையறை செய்தனர் என்று சொல்லுவர்; பொய்யாவது செய்ததனை மறைத்தல்; வழுவாவது செய்ததன்கண் முடிய நில்லாது தப்பியொழுதல். கரணத்தொடு முடிந்த காலையின் அவை இரண்டும் நிகழாவாம். ஆதலாற் கரணம் வேண்டுவதாயிற்று.

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப'

(தொல். கற்பு.4)

திருமணச் சடங்கு நிகழும் காலத்தில் இருவர் கருத்திசை-வையும் கேட்டு அறிந்தபின் மணஞ் செய்வித்தல் கந்தருவவழக்-கத்தை உள்ளிட்ட கற்பெனவும், களவில்லாமல் கற்பு நிகழுங்கால் அவ்வாறு இணக்கம் தெரிதல் நிகழுமெனவும் உரையாசிரியர்கள் கருதினர்.

சடங்கு மூன்றுநாள் நிகழ அம் மூன்று நாளும் மதி, அங்கி, கந்-தருவரை மகிழச் செய்யும் வகையால் உடனுறைவு இல்லாதிருத்தல் மரபென்பது நச்சினார்க்கினியர் கருத்து

கரணத்துக்குரியாள் பெண் என்றும், அவளுக்குத் திருமணம் முடிந்த அடையாளம் வெளிப்படையாகத் தெரிய வேண்டும் என்றும், இல்லையேல், சமுதாயத்தில் சில தவறுகள் நேர்ந்து, பிறர் நெஞ்சு புகாக் கற்பை அவளால் காப்பாற்ற இயலாதென்றும், இக் காலத்தே கரண அடையாளமாகத் தாலி இருப்பது போலச் சங்க காலத்தில் சிலம்பு கழி நோன்பும், தலையில் மலர் சூடிக்கொள்ளுதலும் நிகழ்ந்-திருக்கலாம் என்று அறிஞர் வ. சுப. மாணிக்கம் கருதுகிறார்.[4]

வரைவு நிமித்தம்

வரைவு நிமித்தமாகக் களவின் துயரங்களைக் கொள்ளலாம். களவு என்பது, உரு, திரு, பருவம், குலம், குணம், அன்பு முதலிய-வற்றால் ஒப்புமையுடையராய தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்-பவும் அடுப்பவுமின்றி ஊழ்வலியால், தாமே எதிர்ப்பட்டு, மனத்தா-லாவது மெய்யாலாவது ஒன்று சேர்ந்து நிகழ்த்தும் ஒழுக்கம் ஆகும்.

தொல்காப்பியனார் களவியலின் முதல் நூற்பாவில் களவினை இன்பும் பொருள் அறன் என்பவற்றின் சார்புடையதாய் அன்பு

கலந்த ஐந்திணை யொழுக்கத்தில் காதலாற் கூடும் காமக் கூட்டம் எனக் குறித்தார். அது, வடநூலார் கூறும் எண்வகை மணத்துள் கந்தருவ மணத்தின் இயல்புடையது என்றார்.

எனினும், யாழோர் கூட்டத்துக்கும் இக் காமக் கூட்டத்துக்கும் உள்ள வேறுபாட்டை நச்சினார்க்கினியர், 'கந்தருவருக்குக் கற்பின்றி அமையவும் பெறும்; ஈண்டுக் கற்பின்றிக் களவு அமையாது' என்பதனால் விளக்கினார். ஏனெனில், புணர்ச்சியின்பின் தலைவனும் தலைவியும் இல்வாழ்க்கை நிகழ்த்தினாலொழியப் புணர்ச்சியை மட்டும் மணம் என்று கூறுதல் தமிழ் வழக்கன்று. மேலும், கந்தருவர்களுள் தலைவன் தலைவியர் பிரிவிலராகக் கருதப்பட்டனர். களவொழுக்கத்தில் பிரிவும் கூறப்படுதலின் களவுப் புணர்ச்சியொன்றே கந்தருவத்தோடு ஒத்ததாகும். தலைவன் தலைவியர் தாமே எதிர்ப்படுதலே கந்தருவமாகலின் களவினுட் காணப்படும் பாங்கற் கூட்டம் தோழியிற் கூட்டம் முதலியன களவிற்கே சிறந்தனவாகும். களவொழுக்கத்திற்கு இன்றியமையாதது தலைவன் தலைவியரின் ஒத்த அன்பு என்பதும், இன்பம் கருதியே ஒழுக்கந் தொடங்கிப் பொருள் துணையால் வலியுற்றுப் பின்னர் இல்வாழ்க்கையாக நடைபெறுதற்குரிய தென்பதும் நூற்பாவுள் வலியுறுத்தப் பெற்றுள்ளன.

இக் களவுக் கூட்டத்தைத் தொல்காப்பியனார், 'காமக்கூட்டம்' (தொல். களவு. 1) எனவும் 'காமப் புணர்ச்சி' (தொல். செய். 184) எனவும் கூறுகிறார். களவொழுக்கத்தில் முதற்கூறாக நடைபெறும் இக்கூட்டத்தை இளம்பூரணர் இயற்கைப் புணர்ச்சி என்பர். முன்னுறு புணர்ச்சி எனவும், தெய்வப்புணர்ச்சி எனவும் இது கூறப்பெறும். இக் குறியீடுகளுக்குக் காரணம் உணர்த்துவாராய் இறையனார் களவியல் உரைகாரர் கூறுவது ஈண்டு நோக்கத்தக்கது. "இயற்கைப் புணர்ச்சி எனப்பட்டது, புலவராற் கூறப்பட்ட இயல்பினால் புணர்ந்தார் ஆகலானும், கந்தருவ வழக்கத்தோடொத்த இயல்பினால் புணர்ந்தார் ஆகலானும் என்பது. தெய்வப்புணர்ச்சி எனப்பட்டது, இருவரும் தெய்வத் தன்மையால் புணர்ந்தார் ஆகலானும், முயற்சியும் உளப்பாடும் இன்றிப் புணர்ந்தமையானும் என்பது. முன்னுறு புணர்ச்சி எனப்பட்டது, இவள் நலம் இவனானே முன்னுற எய்தப்பட்டமையானும், இவன் நலம் இவளானே முன்னுற எய்தப்பட்டமையானும் என்பது. பல காரணத்தினாய பொருளை ஒரு காரணத்தாற் சொல்வது சிறப்புடைமை நோக்கி; நெல்முளைக்கு நெல் சிறப்புடைக் காரணம்; நிலனும் நீரும் பொதுக் காரணம். அது போலத் தெய்வமும்

இயற்கையும் முன்னுறவும் பொதுக் காரணமும், காமம் சிறப்புக் காரணமும் ஆதலாற் காமப் புணர்ச்சி எனப்பட்டது'' (இறை. களவு. 2) என்பது அவருடைய விளக்கம்.

இக் காமப் புணர்ச்சியும், இடந்தலைப் படலும், பாங்கற் கூட்டமும், தோழியிற் கூட்டமும் என்று சொல்லப்பட்ட நான்கு வகையானும், அவற்றைச் சார்ந்து வருகின்ற மொழியானும் வருவன களவென்று கூறுதல், மறையறிந்தோர் நெறியாம். (தொல். செய்யு. 184)

இந் நான்கு பெரும் பிரிவுகளே பல விகற்பங்களும் பகுதிகளும் உடையனவாக விரிந்து, ஒரு கதை போல வந்து அமையும். இக் களவுக் கதையில், பாத்திரங்களாக நின்று கூற்று நிகழ்த்தற்குரியார் அறுவர். அவர் : பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி ஆவர். (தொல். செய்யு. 187.)

களவொழுக்கம் இரண்டு மாதங்களுக்குள் நிகழ்ந்து முடிதற்குரியது என்பது,

'களவினுட் டவிர்ச்சி வரைவினீட்டந்
திங்கள் இரண்டின் அகமென மொழிப'

என்னும் களவியற் நூற்பாவால் அறியலாம்.

காமப் புணர்ச்சி

இப் புணர்ச்சி நிகழ்வதற்குமுன், ஒருதலைக் காமமாகிய கைக்கிளைப் பகுதிகள் நிகழும். அவை காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்பன.

தலைவன் தேறித் துணிந்தபின், புணர்ச்சி வேட்கையுண்டாகத் தலைவியைக் கூடக் கருதுதலும், அதன்பொருட்டு அவளை உடம்படுத்துதற்கு அவன் கண்களால் குறிப்பித்து உசாவுதலும் நிகழும். தலைவியும் அஃதறிந்து தன்னுறு வேட்கையை வெளிப்படக் கூறுது கண்களின் குறிப்பாற் கூறுவாள்.

இவ்வாறு தலைவியின் உடன்பாடறிந்து தலைவன் அவளைக் கூடக் கருதியதும், தலைவிக்குச் சில மெய்ப்பாடுகள் நிகழும். அவை மெய்ப்பாட்டியல் 13, 14, 15 ஆகிய நூற்பாக்களில் சொல்லப்படுகின்றன. அம் மெய்ப்பாடுகள் வருமாறு: புகுகின்ற முகத்தினை விரும்புதல், நெற்றி வியர்வை அடையப்பெறுதல், நகையுண்டாதலை மறைத்தல், மனமழிதலைப் பிறர்க்குப் புலனாகாது மறைத்தல், கூந்தலை விரித்தல், காதணியைக் கழற்றுதல், முறையாக அணிந்துள்ள அணிகளைத் தடவுதல், ஆடையைக் குலைத்துக் கட்டுதல், அல்குலைத் தடவல், அணிந்தவைகளை ஒழுங்கு செய்தல், இற்பிறப்புக் கூறி மறுத்தல், இருகையையும் மேலே எடுத்தல்.

தலைவிக்கு இம் மெய்ப்பாடுகள் தோன்றப் புணரும் காமப் புணர்ச்சியை இயற்கைப் புணர்ச்சி, தெய்வப் புணர்ச்சி, முன்னுறு புணர்ச்சி என்றும் குறிப்பிடுவர்.

இடந்தலைப்பாடு

இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்து இருவரும் பிரிந்த பின்னர் அப் பிரிவாற்ருது வருந்துகின்ற தலைமகன் தலைவியை மறுநாளும் கூட எண்ணிக் கூட்டத்திற்குத் தலைவி உடம்படுவாளோ என்று அறிய அவளை மெய்யுற்றுத் தீண்டிக் குறிப்பறிவான். இது மெய்தொட்டுப் பயிறல் எனப்படும். இம் மெய்தொட்டுப் பயிறலை அகப் பொருள் விளக்கம் முந்திய இயற்கைப் புணர்ச்சியின் வகைகளாகக் கொண்டு வழங்கும்.

'இயற்கைப் புணர்ச்சியில் கண்டு கலந்த தலைவனுக்கும் தலைவிக்கும் அவ்வளவில் மன நிறைவு ஏற்படுமா? பிரிந்த பின், புணர்ந்த நினைவும் புணர்ந்தார் உருவமும் நெஞ்சை அரித்தன. புதிய பெரிய உறவை மீண்டும் ஒருமுறை களித்துக் காண்பதே இடந்தலைப்-பாடு' என்கிருர் அறிஞர் வ. சுப. மாணிக்கம்.[5]

பாங்கற் கூட்டம்

காதல் வயப்பட்டு வருந்தும் தலைவனை ஆற்றுவித்தும் தலைவியோடு தலைவன் கூடுவதற்குத் துணைபுரிவதும் பாங்கற் கூட்டம் எனப் படும். [இன்றையத் திருமணங்களிலும் 'மாப்பிள்ளைத் தோழன்' இருப்பது, பண்டைய பாங்கற்கூட்டத்தின் மாதிரியாக இருக்கலாம்]. இனிப் பாங்கற் கூட்டம் என்பது (தோழியிற் கூட்டம் போலப்) பாங்கனும் தலைவிக்கு இடை நின்று உரையாடிக் கூட்டாமையின், இடந்தலைப்பாட்டுக்குப் பின்பு தலைமகன் பாங்கனைக் கூடும் கூட்டம் என்பதே பொருளென்பர் நச்சினுர்க்கினியர்.

தோழியிற் கூட்டம்

தலைவன் தோழியை இரந்து குறையுற்று அவள் வாயிலாக நிரந்தரந் தலைவியைக் கூட எண்ணுவான். இங்ஙனம் நிகழும் தோழியிற் கூட்டம் பல பிரிவுடையதாகத் தொல்காப்பியனுர் குறிப்பிடுகிருர். களவியலில் இப் பகுதியே மிகுதியாகப் பயின்று வரும். [இன்றையத் திருமணங்களிலும் தோழிப் பெண் இருப்பது கருதற்பாலது.] இத் தோழியிற் கூட்டத்தை, பாங்கி மதியுடம்பாடு, மடல் விலக்கல், குறியிடஞ் சேர்த்தல், வரைவு கடாதல், அறத்தொடு நிற்றல், உடன் போக்கு என்று வகைப்படுத்திக் கூறலாம்.

பாங்கி மதியுடம்பாடு

மதியுடம் படுத்தலாவது. தோழியினறிவை உடம்படச் செய்தல். தெளிவாகத் தன் குறை கூருது கரந்த மொழியால் தலைவன் தன் கருத்தறிவிக்க, அது கேட்டுத் தோழி இருவர் கருத்தினையும் தன் மதியோடு ஒன்றுபடுத்தி உணர்வாள். இவ்வாறு மூவர் மதியினையும் ஒற்றுமைப்படுத்தி உணர்தல் பற்றி, மதியுடம் படுத்தலாயிற்று என்பர் நச்சினுர்க்கினியர். இம் மதியுடம்பாடு (1) குறையுறவுணர்தல் (2) முன்னுறவுணர்தல் (3) இருவருமுள்வழி அவன்வரவுணர்தல் என மூவகைப் படும்.

குறையுறவுணர்தல்

தலைவன் புதியவன் போலப் 'புகுந்து நும் பதியும் பெயரும் யாவை' என உசாவும் போது, 'எம்மினுயதோர் குறையுடையவன் இவன்' எனத் தோழி கருதுவதாகும்.

முன்னுறவுணர்தல்

'இருவரது குறிப்பானே மிகவும் உணர்தல்' என்பர் நச்சினுர்க்கினியர். (முன்—குறிப்பு) அஃதாவது, முன் கூட்டங்களில் தலைவனைக் கலந்த தலைமகள் தோழிமுன்பு வந்துற்ற போது அவளது மெய் வேறுபாடு கண்டு, தலைவனேடு கூட்டமுண்மையால் இவளுக்கு வந்தது போலும் என்று உட்கொண்டு, அதனைப் பல்வேறு வகையாகச் சொல்லாடித் தோழி ஆராய்ந்தறிதல்.

இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல்

தலைவியும் தோழியும் தினைப்புனங் காத்து நின்றவிடத்துத் தலைவன் கையுறை கொண்டு வந்து நின்று, 'இத்தழை நுமக்கு உடையாதற்கு ஏற்றதெனவும் இவ்வணி நீவிர் அணிதற்குரிய தெனவும்' கூறி அவள்பாற் குறை வேண்டுவான் போல நிற்க, தோழி அப்போது நிகழும் அவ்விருவர் மெய்ப்பாடுகளையும் உணர்ந்து அவ்விருவர்க்கும் கூட்டமுண்மை துணிவாள்.

[இற்றைய திருமணங்களிலும் மணமகன் வீட்டார் மணமகளுக்கு நிச்சயத் தாம்பூல சேலையையும் திருமணச் சடங்கு நிகழும் போது உடுத்தும் கூறைச் சேலையையும் அணிகலன்களையும் கொடுப்பது கருத்தற்பாலது.]

நாட்டம்

இவ்வாறு தோழி மதியுடம்படுங்கால் அவள் ஆராயும் ஆராய்ச்சி 'நாட்டம்' எனப்படும், இந் நாட்டம் ஏழு வகைப்படும்.

அவை: நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினை மறைப்பு, செலவு, பயில்வு ஆகும்.

மடல் விலக்கல்

தலைவன் தன் குறை முடிக்க வேண்டித் தோழியை நெருக்கத் தொடங்குவான். தோழி அவனைத் தம்பால் நெருங்க விடாமல் விலக்கி நிறுத்துவாள். இங்ஙனம் நிறுத்தி அலைக்கும் பகுதியைச் 'சேட்படை' எனக் கூறிப் பல கிளவிகளால் விரிப்பர் பிற்காலத்தோர். அலைக்கழிக்கப்பட்டு மனம் நொந்த தலைவன் இறுதியில் மடலேறுவதாகக் கூறுவான். தோழி, 'இது பெரிதும் கவல்வதற்கு ஏதுவாம்' என்றஞ்சி, 'நீவிர் மடலேறத் தகாது; நுமக்கு இக்குறை முடித்துத் தருவன்' என்று தலைவனுக்கு உதவ முற்படுவாள். தலைவியைத் தலைவனொடு சேர்த்து வைக்கத் துணை புரிவாள்.

பகற்குறி இரவுக் குறிகள்

தலைவியாலும் தோழியாலும் முன்போலக் காட்டப் பெற்ற குறியிடத்தைத் தலைவன் அடைந்து பகலிலும் இரவிலும் தலைவியைச் சார்தல் பகற்குறி இரவுக்குறிகள் எனப்படும்.

இரவுக் குறியிலே, தலைவன் வருமிடத்தில் புனலொலிப் படுத்தல், புள்ளெழுப்புதல் முதலிய அடையாளங்களை நிகழ்த்துவான். ஆனால், அவன் செய்கையாலன்றிக் காய்கனிகள் காற்றால் விழுந்து நீரில் ஒலியெழும்பல், பறவைகள் கலைதல் முதலிய இயற்கைகளாலும் நிகழுமிடத்து அக் குறிகளைத் தலைவன் வரவு குறிப்பனவாகக் கொண்டு தோழி தலைவியை அல்லகுறிப்படுத்தித் தவறிப் போதலும் உண்டு. தாய்துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல் போல்வன இரவுக்குறிக்கு இடர்ப்பாடுகளாம்.

வரைவு கடாதல்

களவு வெளிப்படச் சுற்றத்தார் தலைவியை இற்செறிப்பாரோ என்றும், இரவுக்குறியிடத்தே வரும்போது வழியாலும் பொழுதாலும் தலைவனுக்கு ஏதம் வருங்கொல் என்றும் தோழி அச்சமுற்றுத் தலைவனை வரைவு கடாவத் தொடங்குவாள். (வரைவு கடாதல்—மணந்து கொள்ளுதலைப்பற்றி உசாவுதல்.) இது, குறிப்பு, வெளிப்படை என இருவகையிலும் வரும்.

அறத்தொடு நிற்றல்

களவுக்கூட்டம் சிறிதுசிறிதாகச் சிலர் பலர்க்கு வெளியாகிப் புறம் பழித்தல் நிகழ, அது காரணத்தை அன்னை முதலியோர் ஆராய்ந்து தலைவியை இற்செறித்தால் அவளுக்குத் தன் காதலனைக் காணப் பெறாத வருத்தம் ஏற்பட்டு அவள் மெய்வேறுபாடு அடைந்து வருந்துவாள். உண்மைக் காரணம் உணராத தாயர் முதலியோர் வேலனைக் கொண்டு வெறியாட்டயர்வித்துக் குறிகேட்கத் தொடங்கவும் அக் குறியால் 'தன் களவொழுக்கம் ஒருகால் வெளியாகுங்கொல்' என்று தலைவி அஞ்சுவாள். மேலும், தலைவிக்கு மணம் புரிதற்குரிய பருவமாதலின், ஏதிலார் மகட் பேச வருதலும் உண்டு என்றும் தலைவி வருந்துவாள். தலைவன் இரவுக்குறியிடத்தே வரும்வழி அவனுக்கு ஏதம் வருங்கொல் என்றும் தலைவி பெரிதும் வருந்துவாள். இவ்வாறு ஆற்றாமை பலவாகித் தலைவி வருந்துகின்ற நிலையில், தோழி இவற்றையெல்லாம் உணர்ந்து 'இனி இக்களவினைத் தமர்க்கு வெளிப்படச் செய்து அவரால் குறித்த தலைவனுக்கே கொடுக்கச் செய்தல் தக்கது' என்று கொண்டு, அவர்க்குக் களவொழுக்கத்தை மெல்ல வெளிப்படுத்தத் தொடங்குவாள். இங்ஙனம் வெளிப்படுத்தலையே 'அறத்தொடு நிற்றல்' என்பர். இதற்கு 'அறனழியாமை நிற்றல்' என்பதும், 'கற்பின் தலைநிற்றல்' என்பதும் பொருளாகும்.

அறத்தொடு நிற்கும் முறையில் தோழி கூற்றாகவும் செவிலி கூற்றாகவும் வரும் கிளவிகள் பலவாக உள்ளன.

உடன் போக்கு

வேற்றூர் அயலானுக்குத் தலைவியை மணம் பேசினும், தலைவனைக் காணப்பெறாவண்ணம் தலைவியைக் கடுங்காவற் படுத்தினும் தலைவிக்கு ஆற்றாமை கைம்மிக்குத் துயரம் பெருகுதலால், 'இனி இவள் இறந்து படவும் கூடும்' என்று தோழி உணர்ந்து தலைவனோடு தலைவியை உடன்போகச் செய்வாள். இங்ஙனம் தலைவி உடன் செல்லத் துணிந்ததற்கு ஏது, தான் இல்லறத்தினின்று நல்லறஞ் செய்ய முடியாமையாலும், அடுத்தடுத்துத் தலைவன் பிரிதலால் வருத்த மிகுதி நிகழ்தலாலும், அம்பலும் அலரும் பரந்து துன்பம் விளைத்தலாலும், தாய் முதலியோர் அயிர்த்தலால் தலைவனைக் குறியிடத்துக் கூடுதல் தடைப்படலாலும், இவையெல்லாம் நீங்கித் தலைவனுடன் இணைபிரியாச் சேர்க்கையைத் தலைவி விரும்புதலே எனக் கூறுவர்.

நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சி

'கரணத்தின் அமைந்து முடிந்த காலை
நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சி'

(தொல். கற்பு. 5)

என்று தொல்காப்பியனார், களவென்னும் மொட்டு கற்பாக மலர்ந்த விடுதலையைக் குறிப்பர். தலைவன் தலைவி நெஞ்சங்கள் களவுக் காலத்து ஊரறியுமோ என்ற அச்சத்தால் தளைப்பட்டுக் கட்டுண்டு கிடந்தன. அன்பிற்கும் அடைக்குந் தாழ் ஏற்பட்டிருந்தது பலரறிய மணச் சடங்கு முடிந்த பின்னர், அன்பு நெஞ்சங்களைப் பிணித்திருந்த தளைகள் தாமே அவிழ்ந்தன. காதலர்கள் கட்டற்ற கலவியின்பம் கற்பில் துய்க்கின்றனர் என்பது தொல்காப்பியக் கருத்து ஆகும். சடங்கு நிகழ்ந்து முடிந்த காலத்துக் களவுக் காதலர்கள் நெஞ்சிலிருந்த கட்டு அவிழப் பெற்றுப் புணர்வர் என்பது இந் நூற்பாவின் இயல்பான உரை என்பர் அறிஞர் வ. சுப. மாணிக்கம். (6)

இத் தன்மையையும் வரைவு நிமித்தமாகக் கூறலாம்.[6]

பிறப்பறுத்த பேரின்பப் பெருவாழ்வு

"தலைவியின் இன்பமே தன் இன்பம் எனத் தலைவன் கொண்டும், தலைவனின் இன்பமே தன் இன்பம் எனத் தலைவி கொண்டும் உலகியலில், தலைவன் புறத்தே சென்று பொருளீட்டி வரத் தலைவி அப் பொருளைக் கொண்டு மனையிலிருந்து தனக்கும் தலைவனுக்கும் மக்களுக்கும் விருந்தினர்க்கும் அடிசில் அட்டுப் படைக்க, அறவழியில் அவ்விருவரும் கண்ணுங் கருத்துமாக ஒழுகிவரல் அன்பின் பயிற்சிக்கே எனவும், தொன்று தொட்டுப் பயின்று வந்த அவ்வன்பின் பயிற்சியால் மாசு முழுதும் போகாமல் எஞ்சிநிற்க இப் பிறப்பிலாதல் அதைக் குறைவறப் பயின்று முடித்தல் மாசினை அடியோடு போக்கிக்கொண்டு உயிர்நிறைவு எய்தி யாண்டும் நீக்கமற நிறைந்திலங்கும் கடவுளொடு கலந்து நிறைவெய்திப் பிறப்பற்றுப் பேரின்பப் பெருவாழ்வு எய்துவதற்கே எனவும் வலியுறுத்தற்கே தொல்காப்பியனார்,

'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்
காமக் கூட்டம்'

(தொல். கள. 1)

என்றும்,

'ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப'

(தொல். கள. 2)

என்றும் பாடுவாராயினர்'' என்று அறிஞர் மொ அ. துரை அரங்கசாமி கூறுகிறார்.[7]

ஆகவே, பிறப்பறுத்துப் பேரின்பப் பெருவாழ்வு எய்துவதையும் கரைவு நிமித்தமாகக் கொள்ளலாம்.

அடிக்குறிப்புக்கள்

1. தொல்காப்பிய நெறி, பக். 197 — 205.
2. பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து, பக். 58 - 59, சேலம், 1939.
3. தமிழ்க் காதல், பக். 89 - 90, சென்னை, 1962.
4. — ஷை — பக். 148 - 165 ஷை
5. — ஷை — பக். 89 ஷை
6. — ஷை — பக். 92 ஷை
7. தொல்காப்பிய நெறி, பக். 190

16

"தொல்காப்பியர் குறிப்பிடும் அகத்திணைத் துணைமாந்தர்கள்

விசயலக்குமி நவநீதகிருட்டிணன்

அகத்திணைப் பாடல்கள் நாடகத்தனியுரையாடல் பாங்கின. எனவே அப்பாடல் மாந்தரைப் பாத்திரங்கள் என்று அழைப்பது மிகப் பொருந்தும். அகத்திணைப் பாடல் மாந்தரின் படைப்புப் பொதுவியல்புகள் குறித்துத் தொல்காப்பியர் நிரல்படத் தொகுத்து ஆராய்ந்துள்ளார். அவ்வடிப்படையில் அகத்திணைத் துணைப் பாத்திரங்கள் குறித்து இங்கு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

"முக்கியத்துவம் வாய்ந்த பங்கு ஏற்று நிகழ்ச்சியின் உச்ச நிலைக்குப் பெரிய அளவில் உதவுகிற பாத்திரங்களைத் தலைமைப்பாத்திரங்கள் எனலாம். பிற பாத்திரங்களைத் துணைப்பாத்திரங்கள் எனலாம்" என்று இரண்டையும் வேறுபடுத்துவர் பேராசிரியர் பி. வி. இராமச்சந்திரன் அவர்கள். [1] அவரே, "குறிப்பிட்டுச் சொல்லமுடியாத மிகச்சிறிய பங்கு ஏற்பவர்களைப் பாத்திரம் என்று அழைக்க வேண்டிய தேவை இல்லை. அவர்களை 'உறுப்பு' (person) என்று அழைத்தலே தகும்" என்றும் உரைப்பார். [2]

இவ்வகையில் தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவரையும் அகத்திணைத் தலைமைமாந்தர்களாகக் கொள்ளலாம். துணைமாந்தர்களாகக் கருதத் தகுந்தவர்கள் : 1) செவிலி 2) நற்றாய் 3) தந்தை 4) தன்னை 5) தமர் 6) கேளிர் 7) நொதுமலர் 8) ஆயத்தார் 9) ஊரவர் 10) அயலார் 11) சேரியார் 12) வேலன் 13) கட்டுவிச்சி [நோய்மருங்கறிவார்] 14) பாங்கன் 15) கண்டோர் 16) பார்ப்பார் 17) அறிவர் 18) அந்தணர் 19) இளையோர் 20) விருந்தினர் 21) பாகர் 22) புதல்வன் 23) கூத்தர் 24) விறலியர் 25) பாணர் 26) பாடினி 27) காமக்கிழத்தி 28) பரத்தை 29) பின்முறைவதுவை என்போர்.

உறுப்புக்களாவார் நிகழ்ச்சிகளில் பருப்பொருளாய்ப் பங்கேற்பர். ஆனால் குறித்துச் சொல்லத்தக்க பேச்சு, செய்கை பெறார். எடுத்துக்காட்டு-புதல்வன். இதனினும் சிறுதிறத்தநிலை சுட்டுக்குறிப்பாளர் நிலை (Referred persons). இவர்கள் நிகழ்ச்சிக்கே வருவதில்லை.

பொதுவாக, இருவகைக் கைகோள்படி, துணை மாந்தரை 1) களவிற்குரியவர் 2) கற்பிற்குரியவர் 3) இரண்டுக்கும் உரியவர் என்று பகுக்கலாம்.

இரண்டாவதாக, வாயிலாகப் பலதுணை மாந்தர்கள் செயல்படுவதால் 1) வாயில்களாகும் துணைமாந்தர் 2) வாயில்களல்லாத துணைமாந்தர் என்றும் பாகுபடுத்தலாம்.

மூன்றாவதாகப் பாத்திரப்படைப்பு அமைப்பினை நோக்கித் துணை மாந்தரை 1) அகழ்வுமாந்தர் (Round characters) 2) அகழ்வற்றமாந்தர் (Flat characters) என்று பகுக்கலாம்.

நான்காவதாகப் பாத்திரவளர்நிலை நோக்கி 1) இயங்குமாந்தர் (Dynamic characters) 2) இயங்கா மாந்தர் (Static characters) என வகுக்கலாம்.

ஐந்தாவதாகப் பாத்திர மனவியல் குறித்துப் பாத்திரங்களைப் பலவகைப் படுத்தலாம்.

ஆறாவதாக, ஒவ்வொருபாத்திரமும் ஏற்றுக்கொள்ளும் பங்கினைக் (Role)கருதி ஆட்படுபாத்திரம், அமைதிப்பாத்திரம், கருவிப்பாத்திரம் முதலிய பல வகையிற் பிரிக்கலாம்.

ஏழாவதாகத் தலைமைப் பாத்திரங்களுக்கும் துணைப்பாத்திரங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு நோக்கி ஒன்றிய பாத்திரம், ஒட்டியபாத்திரம், ஊன்று பாத்திரம் என்று பகுத்துக் காணலாம்.

இனி ஒவ்வொரு துணை மாந்தருடைய பாத்திரக் கட்டமைப்பையும் ஆராய வேண்டும். பின்னரே, அப்பாத்திரங்களை வகைமைப் படுத்தலைக் காணவேண்டும்.

செவிலி

செவிலியாவாள் தலைவியின் வளர்ப்புத்தாய்.

"ஆய்பெருஞ்சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாயெனப் படுபவள் செவிலி ஆகும்" (கள. 33. நச்.)

என்பதால் ஈன்ற தாயினும் சிறந்தவள் இவள் என அறியலாம்.

செவிலிக்குக் களவு, கற்பு இரண்டிலும் கூற்று உண்டு. தோழியின் தாய் செவிலி ஆதலால் தலைவியின் காதல் சதுரத்தில் நான்காவது புள்ளியாக அமைகிறாள் செவிலி. செவிலியின் களவுக் கூற்றால் (கள . 24. நச்.) அவளுடைய பண்பு நலன்களைக் கீழ்க்கண்டவாறு வகுக்கலாம்.

(1) தலைவிபால் ஊரலர் எழுந்தால் தாங்கமாட்டாள். எனவே தலைவிபால் அன்பும் சமூகத்தின்பால் அச்சமும் உடையவள்.

(2) தலைவியின் காமம் உடம்பில் வெளிப்பட அதை உணர்பவள்-எனவே கூர்த்த பார்வையினள்.

(3) தலைவி தலைவன் போக்குவரவை நுனித்துக் காண்பவள். கண்காணிப்பதால் செவிலி, நற்றாய் தந்தைக்குச் சார்பாளர்-போல் செயலாற்றுகிறாள்.

(4) கட்டு, கழங்கு, வெறி, தெய்வம் போன்ற சமூக நம்பிக்-கைகளில் ஊறிப்போனவள்.

(5) தலைவி பெயரைக் கனவில் அரற்றலாலும், தலைவி ஒழுக்கம் நன்னராக என்று தெய்வம் வேண்டலாலும், சமூகக்கட்டின் அச்சத்தைவிடத் தலைவிபால் அன்புக்கே அடிமையானவள் என அறியலாம்.

(6) தலைவியிடம் களவை வினவாது தோழியிடம் வினவுவதால் கூருணர்வுநலம் (delicacy) உடையவள்.

(7) தலைவன், தலைவி இருகுடியும் இயல்பாக நிரம்பிவரலை உவக்குங்கால் சமூகக் கட்டு, தலைவி காதல், நற்றாய்தந்தை எதிர்பார்ப்பு என்ற மூவேறுபட்ட புள்ளிகளை இணைக்கும் விரிகோணமாகிறாள்.

கற்புக் கூற்றின்கண் (கற். 12. நச்.) செவிலி,

(1) முக்காலத்தும் ஏற்புடைய கற்பு முதலியன கற்பிப்பதால் ஒரு முழுநிறைநல அன்னையாய், ஆசானாய்த் திகழ்கிறாள்.

(2) அல்லவை கடிதலால் அறிவுறுத்துபவளும் ஆகிறாள். செவிலி-யின் பல்வேறு பண்புநலனும் நுனித்து ஆராயப்படலால் அவளை ஒரு அகழ்வுப் பாத்திரம் (Round character) என-லாம் அறிவுறுத்து பாத்திரமாகவும் உள்ளாள்.

நற்றாய்

களவில் நற்றாயின் கூற்றுக்களை வகைப்படுத்தும் தொல்காப்பியர் (அகத். 36. நச்.) களவில் கூற்றுக்குரியர் வரிசையில் நற்றாயைச் சேர்க்கவில்லை.

1) தந்தை தன்னையர்க்குக் களவொழுக்கம் தெரிவிப்பவள் இவளே.

2) உடன் போக்கில் புலம்புதலால் மகள்மீது பாசம் மிக்கவள்.

3) நிமித்தம், மொழிப்பொருள், தெய்வம் - உரைத்தலால் பழைய சமூக நம்பிக்கைகட்குக் கட்டுப்பட்டவள்.

4) தோழியிடமும் கண்டோரிடமும் சொல்லிப் புலம்புவதால் அறிவைவிட உணர்வுகட்கு மிகுதியும் ஆட்படுபவள்.

இவள் தலைவியொடும், தலைவனொடும் கூற்று நிகழ்த்தலில்லை (செய். 184. இளம்). மருமகனிடம் நேர்முகமாகப் பேசுதல் என்பது தமிழ்ச் சமுதாயத்தில் இன்றளவும் மரபில்லை. ஆனால் தாய், தான் பெற்ற மகளோடு பேசும் சூழல் இல்லை என்பது எவ்வாறு? ஒருவேளை இது பாலியல் குறித்த செய்தி யாகலான் தாய் தன் மகளோடு பேச நாணுகிற நயநாகரிகமாயிருக்கலாம்.

நற்றாய், செவிலி—ஒப்பீடு

1) நற்றாய், செவிலி இருவருமே சமுதாயக்கட்டுக்கு மிகவும் உட்பட்டவர்கள் [கற். 26. நச்.]

2) செவிலியின்கூற்றுக்கள் உணர்வு உடன்பட்டால், நற்றாய்க்கும் உண்டு என்பர் தொல்காப்பியர். (கள. 25 நச்.) இதனால் இருவரும் உணர்வு வேறுபட்டவர்கள் என உய்த்துணரலாம். செவிலியே தலைவியை உற்றுநோக்குவாள். 'நற்றாய் இல்லறம் நிகழ்த்தும் கருத்து வேறுடையள் [கள. 25 நச். உரை], யாரிடத்தும் மக்களை வளர்ப்பவர் செவிலியர். நற்றாயர் தமக்குத்தம் இல்லற நிலைக்குக் கடவ பகுதியான அறம் பொருள் இன்பம் வேண்டுதலான் [கள. 26 இளம். உரை]' என்று உரை வல்லார் வேறுபடுத்தல் காண்க.

3) 'தலைவி உடன் போய காலத்து ஏமப்பேரூர்ச் சேரியும் சுரத்தும் செல்லும் தாயர் உளர்' (அகத் 37 நச்.). இதற்குச் சேரியிடைச் செல்வர் நற்றாயர்; சுரத்திடைச் செல்வர் செவிலியர் என வேறுபடுத்திக் காட்டுவர்.

அறத்தொடு நிற்றலில், தலைவி → தோழி → செவிலி → நற்றாய்→தந்தை, தன்னையர் என்ற முறை வழியே காணப்படுகிறது: தலைவி, தோழி, செவிலி, நற்றாய் நால்வரும்ஒருநீர்மையர். இருப்பினும், தந்தை தன்னையரிடத்தே நேரடித்தொடர்பு கொள்பவள் ற்றாயே என்பதால் சமூகத்தில் அவளது மதிப்பான கூறும் குடும்பத்தில் பொறுப்பான தகுதி நிலையும் புலப்படும். நாகரிகம் முற்றிய குடும்பங்களில் காணுமாப்போல் இக்குடும்பத்தில் எங்கெங்கே கனத்த திரை தொங்கின என்பதைக் கீழே காணலாம்

1 தலைவி < தோழி, செவிலி || நற்றாய் தந்தை, தன்னையர்

2, தலைவி ← < செவிலி, நற்றாய் || தந்தை, தன்னையர்

3. தலைவி, தோழி > செவிலி → நற்றாய் || தந்தை, தன்னையர்

தலைவி || தோழி, செவிலி > நற்றாய் → தந்தை, தன்னையர்

இதனாற்றான் நற்றாயின் பண்பு நலனில் பாசம் + கடமை→போராட்டம் எப்போதும் உண்டு என்று கருத நேர்கிறது.

பாசம்	பாசம்+கடமை	கடமை
தலைவி, தோழி, செவிலி	நற்றாய்	தன்னை, தந்தை

என்ற மூவகை வளர் நிலை நோக்கின், நிலைதட்டும் படிக்கட்டு நிலையே நற்றாய் நிலை என உணரலாம். ஆட்படு பாத்திரமாகவும், அகழ்வற்ற பாத்திரமாகவும் அமைகிறாள்.

தந்தை, தன்னை

தந்தை, தன்னை யாருடனும் கூற்று நிகழ்த்தப்பெறார். இதற்குச் சமூகத்தில் அவருக்கிருந்த பொது நிலை கடந்த மேம்பாடு காரணமாக இருக்கலாம். அல்லது மகளிடம் களவு பற்றித் தந்தை பேச இயலாத நயநாகரிகமாக இருக்கலாம். அல்லது தலைவனொடு நேரடிக் கூற்று நிகழ்த்தப் பெறின் உருவாகும் துன்பியல் நிகழ்ச்சியின் தவிர்ப்பாகவும் இருக்கலாம். தந்தை, தன்னைக்கு அறத்தொடு நிற்பவள் நற்றாயே. தந்தைதன்னை, இருவரும் கூற்றினுள் உரைக்கப் பெறாது குறிப்.

பின்னன் உய்த்துக் கொண்டு உணர்வர். (கள. 46) தந்தை, தன்னையர் கூற்றைப் பிறர் கொண்டு மொழிதலன்றி அவ்விருவருக்கு நேர்கூற்று இல்லை (செய். 182.இளம்). பெரும் நிலக்கிழார் குடும்பங்களில் பண்ணைத்தலைமை ஏற்றுள்ள குடும்பத் தலைவர்கள் யாருடனும் நேர் கூற்று இயற்றுமல் பணியாளர், தகவலாளர் மூலமாகவே கொண்டு மொழியப்பெறுதல் இன்றும் சில பகுதிகளில் உண்டு. இவ்விரு பாத்திரமும் அணுக முடியாத இரும்பு மனத்தவர் போல் படைக்கப்பட்டிருப்பதற்கு வேறு காரணம் இருக்கக் கூடும். புறத்திணையில் பங்கேற்கும் தந்தை, தன்னையரோடு இவரை ஒப்பிட்டுக் காண்பதால் சில உண்மைகள் காரணம் தெளிவாகின்றன. அங்கே, "போரிட்டு மாண்டாலும் புரை இல்லை; ஆனால் மகளை நிரல் அல்லாதவர்க்கு மணம் முடிப்பதில்லை" என்று மறுக்கும் மறவர் தலைவராய், மகட்பாற் காஞ்சியைச் சந்திக்கின்ற வீரக்குடியைக் காண்கிறோம். (புறத்.24.நச். புறம், 349, 345.) எனவே மகள் மணப்பருவத்தில், தந்தை, தன்னையர் மறமானம் பெரிதெனக் கருதும் வீரத் தலைமை கொண்டிருந்திருக்கலாம்.

தமர், கேளிர்

தமர் அல்லது கேளிர் என்னும் இவர், தலைவி அல்லது தலைவனின் சுற்றத்தாரே.

களவு அறியப்படும்போது 'தமர் தற்காத்த காரணம்' (கள. 20. நச்) சுட்டப்படுகிறது.

வரைவுடன்படாத தமர் 'ஒன்றுத்தமர்' (அகத். 44. இளம்) எனப்படுகின்றனர். உடன் போன தலைவி கற்பொடு புணர்ந்தமை உணர்ந்து அதற்கு உடன்பட்டுத் திரும்பிவரும் தமரும் (அகத். 44 இளம்) உண்டு. 'தமரின் பெறுதல்' (செய். 179. இளம்) 'வரைவு உடன் பட்டோர்' (கள. 24. இளம்) என்று வரைவு உடன்பட்ட தமர் சுட்டப்படுகின்றனர். தலைவியின் மெய்ப்பாட்டில் 'அவன் தமர் உவத்தல்' (மெய். 22. இளம்) உண்டு. வரைவு தொடர்பான நிகழ்ச்சிகளில் தமர் தலைமைப்பங்கேற்பர். வினை முற்றிய தலைமகனை வரவேற்க மனைவி மக்களுடன் கேளிரும் நிற்பர் (கற். 5. நச்) எனப்படுகிறது.

தமருக்குக் கூற்று இல்லை. ஆனால் நிகழ்ச்சிகளில் பங்குபெறும் இவரைக் குழுவினர் (chorus) எனலாம். கருவிப்பாத்திரங்கள் எனவும் கூறலாம்.

நொதுமலர்

'திருமண முயற்சி செய்யும் வேற்றூர்' என்று வரையறுக்கப்பட்ட பொருள் உடையது இது. நொதுமலர் என்ற பெயரைத் தொல்காப்பியர்

சுட்டா விடினும், இம் மாந்தரை உணர்த்தும் பிற சொற்கள் பயன் படுகின்றன. எ–டு: 'பிறன் வரைவு' (கள.23. நச்) 'வேற்றுவரைவு' (கள. 20. நச்) 'வரைவு உடன் படுதல் ஆங்கதன் புறம்' (கள. 16. நச்). இவர்களை, மறைப்பாவலுக்காக (Suspense) வந்து போகிற குறுகிய கால எதிர்நிலைத் தலைவர் (Villain) எனலாம். களவு தடைப்பட்டு ஒரு திருப்புமைய நிகழ்ச்சி நிகழ இவர் காரணத்தலைவர். அறத்தொடு நிற்றல், வரைவு, உடன் போக்கு என்ற இவற்றில் ஒன்று நிகழும். இவர்கள், களவுப் பாதையை வழி மறித்த அடைகதவு எனினும் அதன் மூலம் வேலியிட்ட கற்புவனம் அடையத் திறக்கும் திட்டிக் கதவினர். தம்மையறியாமல் தலைமாந்தர்க்கு எதிர் மாந்தராகித் திருப்பு மையத்திற்குத் திசை காட்டிகளும் ஆகின்றனர். நொதுமலரை வரைந்து வாழ்வெல்லாம் நொந்தாள் ஒரு தலைவி என்று காணப்படாமையால் இவர்களை மறைப்பாவல் தூண்டும் கருவிப் பாத்திரங்கள் எனலாம். இவர்கட்குக் கூற்று இல்லை. ஆகவே இவர்களைப் பேசா அவிநயர் (mime characters) எனலாம்.

ஆயத்தார், ஊரவர், அயலார், சேரியார்

ஆயம் என்ற சொல் பயன்படவில்லை யெனினும் சூழல் விளக்கத்தால் ஆயத்தாரைச் சுட்ட வேண்டி உள்ளது. 'ஒழுக்கம்' (கள. 23. நச்). 'வரையா நாளிடை வந்தோன் முட்டினும்' (கள. 20. நச்) போன்றவற்றில் ஆயத்தார் என்ற சொல், விளக்கத்தில், வரவழைக்கும் நிலை உள்ளது. இவ்வடிப்படையில் நம்பி 'ஆய வெள்ளம்' (நம். 133), ஆயத்து உய்த்தல்' (நம். 135) 'ஆயங்கூட்டல்' (நம் 143) என்ற ஆட்சிகளைப் பயன்படுத்துகிறார். ஊரவர், அயலார், சேரியார் என்னும் இவர் களவினும் கற்பினும் பங்கு பெறுவோரே. எனினும் இவர்க்குக் கூற்று இல்லையாதலால் இவரைக் குழுவினர் (chorus) என்றழைக்கலாம். இம்மூவரும் கொண்டெடுத்து மொழியப்படுதலல்லது பட்டாங்குக் கூறும் கூற்று இலர் (செய்.183. இளம்) என்பர் தொல்காப்பியர். இவர்களை (Stage audience) அரங்கப்பார்வையாளர்கள் என்றும் கூறலாம்.

வேலன், கட்டுவிச்சி, நோய் மருங்கறிவார்.

தலைவியின் மெலிவு குறித்துக் கட்டு, கழங்கு, வெறி நிகழ்த்துதல் உண்டு. 'களம் பெறக் காட்டினும்' (கள. 23. நச்) 'வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும்' (கள. 20. நச்) 'கட்டினும் கழங்கினும் வெறி என' (கள. 24. நச்) என்றெல்லாம் அவை குறிக்கப்பெறும். ஒரு சிறிய

உச்ச நிலைக்கு உந்தித் தள்ளும் மறைப்பாவல் நிகழ்ச்சியே (Suspense) இது.வேலன், கட்டுவிச்சி என்ற பெயர்கள் பயன் படுத்தப்படவில்லை. வரவழைக்கப்படுகின்றன. நோய் மருங்கறிவாருக்கு நேர் கூற்று இல்லை என்பதைத் தொல்காப்பியர் தெரிவிப்பதால் இவர்களுக்குக் கூற்று இல்லை. ஆனால் இவர்கள் கூறியதைத் தோழி கொண்டெடுத்து மொழிதல் உண்டு. வேலன், கட்டுவிச்சி என்ற இப்பாத்திரங்கள் இயற்கை இறந்த பாத்திரங்கள்.செவிலி, நற்றாய் ஆகியோர்க்கு இவர்கள் தெய்விகப் பாத்திரங்கள். ஆனால் தோழி, தலைவிக்கு அவ்வாறில்லை. ஆகவே இருமுரண் தோற்றமளிக்கும் இப் பாத்திரங்கள் அறத்தொடு நிற்கக் கருவிப் பாத்திரங்கள் ஆகின்றன. புறத்திணையிலும் 'வேலன்' பாத்திரமுண்டு. 'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறி' (புறத். 5 இளம்) என்று சுட்டப்பெறும்.

பாங்கன்

தலைவனின் தோழன். களவு, கற்பு இரண்டுக்கும் உரியன். தோழி, தலைவி உரையாடலில் உணர்வுகள் மேலாண்மை செய்ய பாங்கன் - தலைவன் உரையாடலில் அறிவாய்வும் தருக்கமும் மேலாண்மை செய்கின்றன. 'நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பவனு'கக் (கள. 11. நச்) காட்டப்படுகிறான். 'பாங்கன் நிமித்தம்' என்ற நூற்பாவில் 'இப்பாங்கன் பார்ப்பானும்' என்று உரை வகுப்பார் நச்சினார்க்கினியர். பாங்கன் வேறு, பார்ப்பான் வேறு என்பதைத் தொல்காப்பியர் (கற். 52. நச், செய். 18. இளம்) இருவரையும் தனித்தனியே சுட்டுவதால் உணர்த்துகிறார். 'பாங்கொடுதழாஅல்' (செய். 178 இளம்) 'பாங்கோர் பாங்கினும்' (அகத். 44 நச்) என்பதோடு, 'குற்றம் காட்டிய வாயில்' (கள. 11. நச்) என்று இவன் குறிக்கப்படுவதால் தலைவனைக் கழறி உரைப்பவனாகவே படைக்கப்படுகிறான். கற்பின்கண்ணும், அறிவாற்றல் தருக்கத்தினனாகவே காணப்படுகிறான். 'மொழி எதிர் மொழிதல்' (கற். 41. நச்) தலைவன் 'குறிப்பைக் கூறாதே கொண்டு எதிர் மொழி கொடுத்தல்' (கற். 42) பாங்கற்கு உண்டு. இவன் தொடக்கத்திலிருந்து இறுதிவரை மாறாத பண்பு நலன்களையுடைய பாத்திரம். களவின் போது தலைவனுக்கு நம்பிக்கை நண்பனாக (Confidant) இவன் இருக்கிறான்.

கண்டோர்

தொழில், இனம் வகுக்க முடியாத பொது மாந்தர் இவர். சாணும் களத்தால் இவரை இடைச்சுரத்துக் கண்டோர், சேரியின் கண்டோர் என்று வேறுபடுத்தலாம். இடைச்சுரத்துக் கண்டோரின்

கூற்றைத் தொல்காப்பியர் வகுக்கிருர். தலைவி, தலைவன், செவிலி என்ற இவரோடு கண்டோருக்கு உரையாடல் நிகழும். 'ஆர்வ-நெஞ்சம்' 'புணர்ந்த நெஞ்சம்' (அகத். 40. நச்) என்ற நூற்பாச் சொற்-கள் சுட்டத்தக்கன. புறத்திணையில் காணும் சுரத்துச் "செல்-வோரும்" (புறத். 19. இளம்) ஒருவகையில் இடைச்சுரத்துக் கண்-டோரே. ஆனல் அவர்கள் கையற்ற பார்வையாளராகவும், அகத்-திணையில் கண்டோரோ, செயல்படு உறுப்பினராகவும் அமைகின்-றனர். இத் துணைமாந்தர் வெறும் அரங்குப் பார்வையாளராக அல்-லாமல் உலகியல் உணர்ந்த அன்புச் சமுதாயத்தின் ஒரு கூருகத் திகழ்கின்றனர். இடைச்சுரத்துக் கண்டோர் களவிலும், வாயிலாக அமையும் கண்டோர் கற்பிலும் இடம் பெறுவர். இடைச்சுரத்துக் கண்டோர் கூற்றை வகைப்படுத்திய தொல்காப்பியர் களவில் கூற்-றிற்குரியோர் பட்டியலில் அவரைச் சேர்க்கவில்லை.

பார்ப்பார்

பார்ப்பாருக்குக் களவிலும் கற்பிலும் கூற்று உண்டு (செய். 181, 182. இளம்). பார்ப்பார் கூற்றை எல்லோரும் கேட்டற்குரியர் (செய். 189. இளம்). பார்ப்பாரின் செயல்களும் கூற்றும் விளக்கப் படுகின்றன (கற். 36. நச்). இளம்பூரணர் உரையின்படி நோக்கின், தலைவி காமம், தலைவன் குறிப்பு, காரணகாரியம், நிமித்தம் முதலி-யவற்றை எடுத்துரைக்கும், குடும்ப உறுப்பினனைப் போல், இல்லறத் துணையாகிருன் பார்ப்பான். நச்சினர்க்கினியர் உரைப்படி, இடித்துக் கூறலும், நிமித்தம் கூறலும் தலைமையாய்க் கொண்ட தொழில்வல்ல பார்ப்பான் அவன். புறத்திணையிலும் (புறத். 20. நச்) பார்ப்பார் இடம் பெறுவர். அரசனின் வேட்டலில் துணைபுரிவர். பாங்கனுக்கு அடுத்தபடி தலைவனை எதிர்மொழியவும், இழித்துரைக்கவும் உரிமை-யுடையர் பார்ப்பார். இவரும் அறிவுறுத்து பாத்திரமே.

அறிவர்

அறிவராவார் 'அறிந்தார்', 'துறவுள்ளத்தராகிய அறிவர்' என-லாம். நல்லவை உரைத்தல், அல்லவை கடிதல் செவிலிக்குரிய; அறி-வர்க்கும் உரிய. (கற். 12. நச்) ஆயின் செவிலிக்கும் அறிவருக்கும் வேறுபாடுண்டு. 1) செவிலிக்குக் களவு, கற்பு இரண்டிலும் கூற்-றுண்டு. அறிவருக்குக் கற்பில் மட்டும் கூற்றுண்டு. 2) செவிலிக்கு அல்லவை கடிதல் தலைவியிடம் மட்டும் நிகழும். அறிவர்க்கோ தலை-வன், தலைவி இருவரிடத்தும் நிகழும். 3) செவிலியின் கூற்று கடிதல்

என்ற அளவிலே நிற்கும். அறிவர்க்கோ 'இடித்து வரை நிறுத்த-லும்' உண்டு. இவ்வாறு அறிவுறுத்து பாத்திரங்களில் தலைசிறந்தவ-ராக நிற்கின்றனர் அறிவர்.

புறத்திணையிலும் 'அறிவன்' என்ற பாத்திரம் உண்டு. நச்-சினார்க்கினியர் அவரை, 'துறவுள்ளம் உடையோர். முக்காலம் முழுது உணர்ந்தோர்' என்பர். (புறத். 20. நச்). எனவே இவர் கருத்துப்-படி அவ் அறிவனும் இவ்வறிவரும் ஒன்றே. இளம்பூரணர் கருத்துப் படி புறத்திணை அறிவர் மீனும் கோளும் காணும் கணியர்; அகத் திணை அறிவர் இல்லறக்கிழமைக்கு வாயிலாம் சான்றோர்.

அந்தணர்

'அந்தணர்' (கற். 5. நச்) 'அந்தணாளர்' (மர. 71. 73,83 இளம்) என்ற பெயர்களும் பார்ப்பான் (செய். 181, 182) பார்ப்பார் (கற். 36. இளம், செய். 189. இளம்) என்ற பெயர்களும் சுட்டப்படுகின்றன. அந்தணர் வாயிலாவதில்லை; பார்ப்பார் வாயிலாகின்றனர். பார்ப்பார் நிமித்தம் கூறல், இழித்துரைத்தல், செலவு நேர்தல், அழுங்குதல் போன்ற அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கு உரியவர். அந்தணரோ, அரசர்க்கு இணையாகப் பேசப்படுகின்றனர். நூல், கரகம், முக்கோல், மணை கொண்டவர், தலைவன், தன்னையன்றிப் பிறரைத் தொழாத தலைவியிடம் 'அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்' ஒழுக்கம் கற்பிப்பதால், அவர் ஏற்புடைச் சமய உறுதி கொண்டவராய் (Ortho-dox) செந்தண்மை பூண்டவராய், வழிபடத் தகுந்தவராதல் வேண்-டும், அந்தணர் என்போர் துறவிகளே ... பார்ப்பான் வேறு; அந்-தணன் 'வேறு' என்ற ந.சி. கந்தையா பிள்ளையவர்கள் கூற்று இங்குக் கருதத்தக்கது.[3] அந்தணர் அமைதிப் பாத்திரமே.

இளையோர்

இளையோராவார் குற்றேவலர். குறுந்தொழில், போற்றீடு முதலிய பாதுகாவல் புரிபவர் (கற். 30. நச்.). இளையோர் வாயில்-களுள்ளே ஒருவராக எண்ணப்படுபவர். இவருக்குக் கற்பில் கூற்று நிகழும். இக் கூற்றை வகுத்துக்காட்டிய தொல்காப்பியர் கற்பில் கூற்றுக்குரியவர் வரிசையில் இவரைச் சேர்க்கவில்லை. குறுந் தொழிலும், காப்பும் பூண்டமையால் வாயிலாக வந்து நிற்ப-தும் ஒரு ஏவலே போலும்! இவர்கள் பணியாட்கள் போல், செய்தி-யாளர்போல் பங்கேற்கின்றனர்.

"பல மாந்தர்கள் பாத்திரங்களே அல்லர். அவர்கள் வெறும் பணியாளர்கள்"[4] என்பது இவர்க்குப் பொருந்தும்.

விருந்தினர்

விருந்தினர் என்ற இம்மாந்தர் களவில் விருந்து, கற்பில் விருந்து என இருவகைப்படுவர். களவு விருந்து வியப்பும் துடிப்பும் கொண்ட இளமை விருந்து. ஏனெனில் எதிர்பாராதவிதமாகத் தலைவி மனைக்கண் புகாக்காலத்துத் தவிர்க்க முடியாத விருந்தினனாகப் புகுகிறான் தலைவன். இவ்விருந்து தாயரைப் பொறுத்த மட்டில் கரவற்ற விருந்து. தலைவி, தோழிக்குக் கவர்வு விருந்து. (கள. 17. இளம்.) களவில் எதிர்பார்த்த விருந்தும் உண்டு. 'வேளாண் எதிரும் விருந்து' (கள. 17. இளம்) என்பர். கற்பு விருந்தோ இல்லறத்தின் உயிர்மூச்சுப் போன்றது. 'விருந்து புறந்தருதல்' தலைவியின் இன்னுயிர்ப் பண்பாம். அறத்தின் சார்பினால் அப்பண்பு பொறுப்பு மிக்கது. 'ஊடலைத் தணிக்கும் மனப் பக்குவத்திற்குக் கருவி வாயிலாகிறது அவ்விருந்து. வினை முடித்த காலை 'விருந்தொடுநல்லவை' (கற். 5 நச்) வேண்டுகிறான் தலைவன். வாயில்களுள் ஒருவராக விருந்தினர் காட்டப்படுவர். ஆனால் அவருக்குக் கூற்று இல்லை. அவர் வருகையே ஊடல் தணிவிக்கும் கருவியாய் அமைந்து விடுகிறது. எனவே இவரை அமைதிப் பாத்திரம் எனலாம்.

பாகர்

பாகராவார் ஊர்தி கடாவுநர். வினை முடித்துத் திரும்பும் போது தலைவன் பாகனிடம் விரும்பி உரையாடுவான் (அகத். 44. இளம்) என்று தொல்காப்பியர் வகுப்பார். மீண்டும் கற்பியலில் 'பேரிசை ஊர்திப்பாகர்' பால் (கற். 5 நச்) தலைவற்குக் கூற்று நிகழும். ஆனால் பாகன் மறுமொழி தராத—அதே போது—ஒத்துணர்வு மிக்க அமைதிப் பாத்திரமாகக் காணப்படுகிறான். தொல்காப்பியர் பாகனைக் கூற்றுக்குரியனாகவோ, வாயில் வேண்டுபவனாகவோ காட்டவில்லை. நம்பி, கற்பின்கண் பாகனை வாயிலாக்கிக் கூற்றும் வகுப்பார்.

புதல்வன்

புதல்வனைப் பாத்திரம் என்று கருத முடியாது. அவன் ஓர் உறுப்பாகவே பயன்படுகிறான், புதல்வர்ப் பேறு தலைவன், தலைவி இணைப்புக்குரிய சூழலாகிறது. ஊடலால், சிறந்த புதல்வனை வாயிலாகக் கொண்டு வரும் தலைவனுக்கு வாயில் நேராமையும் உண்டு (கற். 9.நச்). தந்தையர் ஒப்பர் மக்கள் என்றலின் மகவினைப் பழித்து நெருங்கல் (கற். 6 நச்) தலைவிக்கு உண்டு. மகனைத் தந்தையொடு

சார்த்திப் பேசலும் (கற் 6. நச்) இயல்பு. தலைவி புதல்வனைத் தலைவன்பாலும் பரத்தையர்பாலும் செல்ல ஒட்டாது சிறை செய்யும் உரிமைப்பாடும் உண்டு. (கற் 6. நச்). புதல்வனைத் தழுவியகாமக்கிழத்தியை ஏற்றுப் பேசலும் உண்டு. (கற். 6. நச்) புதல்வன் பேசுவதில்லை. எனவே அமைதிப்பாத்திரம். ஆனால் அவனை ஒட்டிச் சில நிகழ்ச்சிகள் நடப்பதால் கருவிப் பாத்திரமாகிறான். நம்பி, புதல்வனையும் வாயில் என்றே சேர்ப்பர்.

கூத்தர், விறலியர், பாணர், பாடினி

இப்பாத்திரங்கள் நால்வரும் கலைஞர்கள். வாயில்களுமாவர். முதல் மூவர் கற்பிற்கு மட்டும் கூற்றுக்குரியவர்கள். கற்பில் கூத்தர் கூற்றுக்கள் வகுத்துரைக்கப்படுகின்றன. கூத்தரும் பாணரும் தலைவன் தலைவிக்காக வரைந்து மீளுதலைக் கூறல் என்ற செய்தியாளர் பணியும் செய்வர். (கற். 28 நச்) 'நிலம் பெயர்ந்துரைத்தல்' (கற். 28.இளம்) என்று கொண்டு, பாசறைவரை சென்று தலைவனிடம் தலைவி நிலை கூறித் தூது செல்வர் என்றும் கூறலுண்டு. 'ஏனைவாயில்' (கற். 5. நச்) என்றது பாணரை என்பர் சிலர். பாணர், கூத்தர், விறலியர் மூவரும் தலைவற்காக வாயில் வேண்டியவழித் தோழி மறுத்தலும் உண்டு. (கற். 9. நச்) நம்பி, பாணரின் கூற்றுக்களையும் செய்கைகளையும் விளக்கமாகக் கூறுகிறது. பாடினியை வாயில்களுள் ஒருத்தியாகக் கொள்ளும் தொல்காப்பியம் அவளுக்குரிய கூற்றை வகுத்துக் கூறவில்லை. கற்பில் கூற்றுக்குரியவரில் பாடினியைச் சேர்க்கவும் இல்லை. புறத்திணையிலும் கூத்தர், பாணர், விறலியர்க்குப் பங்குண்டு. ஆனால் அங்கே வறுமையில் வாடும் பொருளாதாரப் போராட்டக் கலைஞர்களாய், ஆற்றுப்படைக் கவிஞராய்த் திகழ்வர். அகத்திணையிலோ இல்லற இன்பத்தைக் கலை உணர்வோடு போற்றுபவராகவும் தலைவன் தலைவியர்க்கு நல்லுணர்வூட்டுபவராயும் அமைகின்றனர்.

காமக்கிழத்தி

காமக் கிழத்தியாவாள் இற்பரத்தை. 'கடனறியும் வாழ்க்கை உடையராகிக் காமக் கிழமை பூண்டு இல்லறம் நிகழ்த்தும் பரத்தையர்' என்பர் நச்சினார்க்கினியர். காமக்கிழத்தி பற்றிய செய்திகளைத் தொகுப்பதால் இப்பாத்திரம் பற்றிய கீழ்க்கண்ட முடிவுகளைக் காணலாம்:

1. 'கண்ணிய காமக்கிழத்தி' (கற். 10. நச்) என்றமையால் ஒரு மனைத் தெருவின்கண் உரிமை பூண்டு இல்லறம் நிகழ்த்து-பவர் என அறியலாம்.

2. தலைவியைக் கூறும்போது "தாய் போல் கழறித் தழீஇக் கோ-டல்" (கற்.32. நச்) என்ற இயல்பும், காமக்கிழத்தியைக் கூறும்-போது "தாய் போல் தழீஇக் கழறி" (கற். 10. நச்) என்ற இயல்பும் சுட்டுவர் தொல்காப்பியர். இதனால் இருவரையும் தாய் நிலைக்கு உயர்த்தும் தரம் காணலாம்.

3) 'மனையோள் ஒத்தலின்' என்பதால் (கற்.10.நச்) இவளும் தலைவி-யைப் போல் ஒருவனைப் பற்றி ஓரகத்திருக்கும் கற்புடையவள்

4) பிரிந்து மீண்ட தலைவனிடம்தலைவியும் காமக்கிழத்தியும் ஏமுறு கிளவி சொல்வர் (கற்.5.நச்) என்பதால் தலைவியை ஒத்த அன்புரிமை உடையவள்.

5) ஆறும் குளனும் காவும் ஆடி நுகர்தலில் தலைவியைவிடப் பெரிதும் தலைவற்குத் துணை ஆவாள். (கற்.53.நச்)

6) பிறமகளிரொடு தலைவற்குக் களவு நிகழும் போது பொறுத்-தலின்றி வருத்தம் மிகுபவள். (கற்.10.) தலைவியைப் போல உரிமைப்பாடு எண்ணுபவள் (கற். 10).

7) 'மகன்றாய்' (கற்.33) என்பதை இளம்பூரணர் காமக்கிழத்தியைக் குறிப்பதாகக் கொள்வர். கொண்டால் தலைவி தன்மகற்குத் தாயாய காமக் கிழத்தியை உயர்வாகக் கருதுவள் என அறிய-லாம்.

8) காமக்கிழத்தி தலைவியின் புதல்வனைத் தழுவும் விளையாட்டிலும் காமக்கிழத்தியை நலம் பாராட்டலிலும் தலைவிக்கு நிகழும் கூற்றால் (கற்.6.நச்) தலைவிக்கு இவள்பால் அனுதாபம் உண்டு என உணரலாம்.

9) தலைவிபால் பெருமதிப்புடையவள். அதனால் தான் காதற் சோர்வில் கடப்பாட்டாண்மையால் தலைவி தலைவனை ஒன்று சேர்க்கிறாள். (கற்.10.நச்)

10) காமக்கிழத்தி தலைவியின் புதல்வரைத் தழுவுதல் (கற்.6.கற்.8 கற் 10) நான்கு இடங்களில் சுட்டப்படுகிறது.புதல்வனால் வாயில் நேர்தலும் குறிக்கப்படுகிறது. மகப்பேற்றினை மதிப்பவள் என்ப-தும் பிள்ளைப்பாசம் மிக்கவள் என்பதும் புலப்படும்.

11) தன்னை ஒத்த பிறமகளிரைவிடத் தன்னை மிகைபடக் கருது- வதால் சேரிப்பரத்தையினும் இவள் மேம்பட்ட நிலையினள் ஆதல் வேண்டும் (கற்.10).

காமக்கிழத்தியின் கூற்றை வகைப்படுத்திச் சுட்டிய தொல் காப்பியர் கற்பில் கூற்றுக்குரியவர் என்ற பட்டியலில் அவளைச் சேர்க்காது விடுத்தார். காமக்கிழத்தியை எதிர்நிலைத்தலைவி என்று கூறமுடியாது. அமெரிக்க நாடகாசிரியர் 'ஓ'நில் தமது நாடகத்தில் 'சிபெல்' என்ற பரத்தையைப் பூமித்தாய் என்று உயர்த்துவது போலக் காமக்கிழத்தியும் இங்கு ஓர் உயர்நிலை பெற்றவளாகவே காணப்படுகிருள்.

பரத்தை

பரத்தை காமக்கிழத்தியினின்று வேறுபட்டவள். காமக்கிழத்தி என்பதில் 'கிழத்தி' என்றது உரிமை குறித்தது. தலைவன் கூற்றைப் பொறுத்த வரையில் 'காமக்கிழத்தி' என்பவள் மிக இயல்பாக இடம் பெறுகிருள். பரத்தை ஓரிடத்தில் (அக.44.இளம்) வெளிப்படை- யாகவும் பிற இடங்களில் (கற். 5. நச்) குறிப்பாகவும் குறிக்கப்படு கிருள். தலைவி கூற்றில் காமக்கிழத்தி தனியேயும்,பரத்தை தனியேயும் தெளிவாக வேறுபடுத்தப்படுகின்றனர். காமக்கிழத்தியைத் தன் புதல்- வனெடு இணைத்தும் கருதும் தலைவி பரத்தைமையை ஒத்துக்கொள்- வதில்லை மாயப் பரத்தை (கற்.8 நச்)புதுவோர்(கற். 8. நச்)'கொடுமை ஒழுக்கம்' (கற். 6. நச்) 'கொடுமை ஒழுக்கம் கோடல்' (கற்.6. நச்) 'பரத்தைமை மறுத்தல்' (கற்.17. நச்) என்று பரத்தையும் பரத்தைமை- யும் கடியப்படுகின்றனர். தலைவி பரத்தையை ஏத்தினும் அது ஊடலே- யாம். (பொரு.39.இளம்)பரத்தையின் துன்பத்தை எடுத்துரைத்தலும் கலவியிலோ புலவியிலோ தான் நிகழும். பரத்தைமை காரணமாகத் தலைவிக்கு ஊடல் தோன்றுவது (களா. 5, 6, 9, 32, பொ. 39, 41) ஏறத்தாழ 16 இடங்களில் சொல்லப்பட்டுள்ளது. இவற்ருல் பரத்தை- யரின் கீழ்க்கண்ட இயல்புகள் வெளியாகின்றன.

1) பரத்தையர் காமவாழ்விற்குரியரேயன்றி அறவாழ்விற்குரியரல்லர்.
2) தலைவனுடன் வெளியிடங்கட்குத் துணை போகும் மகளிர்.
3) கூறுபோல் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் 'கொடுமை' எனக் கருதப்பட்ட நிலை.
4) தலைவி புதல்வனைத் தன் புதல்வனுகக் கருதும் தாய்மைக்குத் தவிப்பவள் காமக்கிழத்தி. அவ்வாறு பரத்தை சுட்டப்படவில்லை.

5) தாய் போல் கழறித் தலைவன் தலைவியரை இணைப்பவள் காமக் கிழத்தி. எனவே காமக்கிழத்தியையும் ஊடல் தீர்க்கும் வாயில் என்றார் நம்பி. பரத்தையோ 'தலைவிபால்' 'பேணு ஒழுக்கம்' உடையவள். இதனால் தலைவி வருந்துகிறாள்.

6) காமக் கிழத்தியுடன் தலைவன் ஆடும் விளையாட்டு அலராகாது. (கற். 10. நச்) பரத்தையோடு ஆடும் ஆட்டு அலராகும் (கற். 23. நச்).

7) காமக்கிழத்திபால் தலைவன் வாயில் வேண்டி நிற்கும் நிலை உண்டு. பரத்தையிடத்து வாயில் விடுதல் (பொரு. 30 நச்) இல்லை.

கற்பின்கண் பரத்தைக்குக் கூற்று உண்டு. ஆனால் தொல்காப்பியர் அதை வகைப்படுத்திக் காட்டவில்லை 'தலைவன் தலைவியரின் வாழ்வை நாசம் அல்லது அவப்பேறு செய்பவனே எதிர் நிலைத் தலைவன். பரத்தையால் தலைவன் தலைவியர்க்கு வாழ்வுக்கேடு வந்ததாகக் கூறப்படவில்லை. எனவே இவள் எதிர்நிலைத் தலைவி ஆகாள்.

பின்முறை வதுவை

இப்பாத்திரம் பற்றிய குறிப்பு ஓரிடத்தில் வருகிறது. தொன் முறை மனைவி, பின்முறை வதுவையை மங்கலங்களோடு எதிர்ப். படும்போது தலைவன் தன் பரத்தைமை எண்ணி நாணுவான்- (கற். 31. நச்) 'மகன் தாய்உயர்பு' என்பதும் (கற். 33 நச்) பின்முறை வதுவையையே என்பர் நச்சினார்க்கினியர். ஆகவே பின்முறை வதுவை உயர்வு தன்னுயர்வென்று தலைவி எண்ணுவதும், தலைவியைப் பின்முறை வதுவை மதித்தலும் இயல்பு. இவளைக் குறித்துச் சுட்டத்தக்க வேறு செய்திகள் இல்லை. இவள் நிகழ்ச்சி மாறுதல்களின் காரணகர்த்தா ஆவதில்லை. இவளுக்குக் கூற்றும் இல்லை.

சுட்டுக் குறிப்பாளர் (Referred Persons)

'வேந்தன்' (கற். 48. நச்) 'தாபதர்' (அக. 44 இளம்) 'ஐயர்' (கற். 5. நச்) 'அமரர்' (கற். 5. நச்) ஆகியோர் சுட்டப்படுகின்றனர். நேரடியாக இவர்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில்லை 'தெய்வம்' சில நிகழ்ச்சிகளின் ஏதுக்களமாகவும், சிலபேச்சுக்களின் கூற்றுக் களமாகவும் பயன்படுகிறது (கற். 5.5 24. நச்). எனவே இது பின்புல உறுப்பாகும். துணைப்பாத்திரம் ஆகாது.

பாத்திரப் பாகுபாடுகள்

1) களவு, கற்பு அடிப்படை

மேலே கண்ட துணைப்பாத்திரங்களைக் **களவுக்குரியர், கற்புக்குரியர், இரண்டுக்கும் உரியர்** என்ற வகையில் முதலில் காணலாம். களவில் மட்டும் பங்குபெறும் பாத்திரங்களாகத் தந்தை, தன்னை, தமர், நொதுமலர், ஆயத்தார், வேலன், கட்டுவிச்சி ஆகியோர் தோன்றுகின்றனர். கற்பில் மட்டும் பங்குபெறும் பாத்திரங்களாகப் பாகன், அறிவர், புதல்வர், பரத்தை, காமக்கிழத்தி, இளையோர், அந்தணர், பின்முறைவதுவை, கூத்தர், விறலி, பாணன், பாடினி ஆகியோர் தோன்றுகின்றனர். எஞ்சிய பாத்திரங்கள் களவு, கற்பு இரண்டிலும் பங்கு ஏற்பவர்கள்.

2) வாயில்கள் அடிப்படை

பெரும்பான்மையான துணைப்பாத்திரங்கள் தலைவன் தலைவிக்கிடையே வாயில்களாவதால் **வாயில்களாம் பாத்திரங்கள், வாயில்களல்லாத பாத்திரங்கள்** எனப் பகுக்கலாம். வாயில்களாம் பாத்திரங்கள் தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் என்ற பன்னிருவர். நம்பி, இவருள்ளே விறலியரை விடுத்து, மேற்கொண்டு பாகன், புதல்வன், காமக்கிழத்தி என்போரை இணைத்து மிகுத்துக் கொள்வர்.

வாயில்களல்லாத பாத்திரங்களாக நற்றாய், அந்தணர், பின் முறைவதுவை போன்றோரைக் காணலாம். களவில் மட்டும் இடம் பெறும் நொதுமலர், ஆயத்தார், வேலன், தன்னை போன்றோரும் கற்பின் வாயில்களாக முடியாதல்லவா?

வாயில்களின் இலக்கணம்

வாயில்கள் பலர் பொது உருமாதிரிப் பாத்திரங்களாக (Type characters) அமைகின்றனர். எனவே வாயில்கள் எல்லாவற்றுக்கும் பொருந்துகின்ற சில பொது இயல்புகள் பேசப்படுகின்றன. இவ் இயல்புகளால் வாயில்களின் உரையாடல் இலக்கணம் வகுக்கப்படுகிறது. 1) வாயில்களின் உரைமொழி மகிழ்ச்சிப் பொருண்மையதாய் இருக்க வேண்டும். தலைவிக்கு உறுதி பயக்குமாஞல் கையறு துயர்க் கூறு கலக்கலாம் (கற். 25, 37. நச்). 2) முன்னிலைப் புறமொழி 3) தமக்குள் நிகழ்த்தும் உரையாடல். இவை மூன்றும் நாடகப்

பாங்கின. தலைவி மாட்சிகளைத் தலைவனிடம் கூறலும் தலைவன் கொடுமைகளைத் தலைவியிடம் கூறுமையும் இவர்கள் சந்து செய்விப்பதற்குச் சான்று. தலைமை மாந்தரிடம் கொண்டுள்ள மதிப்பையும் காட்டும்.

வாயில்களுள் பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி இவர்கள் களவிலிருந்தே தொடர்ந்து வருபவர் எனவே கற்பில் தலைவனின் புறத்தொழுக்கம் கடிபவராக உள்ளனர். கற்பில் புதிதாய்ப் புகுந்தவர்கள் அறிவர், கண்டோர், விருந்தினர், பாணன், கூத்தன், விறலி, பாடினி ஆகியோரே. அறிவரும் கண்டோரும் நல்லவை உணர்த்திக் கடிபவர். விருந்தினர் தம்மை அறியாதே வாயிலாகின்றவர். எனவே எஞ்சி நிற்கும் பாணன், தகூத்தர், விறலி, பாடினி ஆகிய இவரே தலைவனின் புறத்தொழுக்கச் சார்பாளர் போலத் தோன்றுகின்றனர்.

3) பாத்திரப் படைப்பு அடிப்படை

பாத்திரப் படைப்பு நோக்கி,

1) அகழ்வு மாந்தர் (Round Character 2) அகழ்வற்ற மாந்தர் (Flat Character)எனப் பாகுபடுத்தலாம்.

அகழ்வு மாந்தர்

ஒரு பாத்திரம் 1) செய்கை 2) பேச்சு 3) நினைவு 4) உடல் தோற்றம் 5) மற்றவர் கணிப்பு ஆகியவற்றால் உருவாக்கப்படுகிறது. இக் கூறுகளில் பலவும் சுட்டப்பட்டு முழுமை செய்யப்பட்டு உயிர்த் துடிப்பான மனிதர் போல இயங்குவது அகழ்வுப் பாத்திரம்.[5] மூவளவு உடையதாய்ச் சிக்கல்நிறைந்ததாய்த் தன்னை முழுமையாக உணர்த்துகிற தனிப் பாத்திரமே அகழ்வுப் பாத்திரம்.[6]மனம்,நோக்கு ஆகியவற்றால் சிக்கல் நிறைந்த பாத்திரம். ஆதலால் வாழ்வில் உண்மை மாந்தரைப் போலவே புரிந்துகொள்ளக் கடினமானது.[7] இத்தகைய பாத்திரங்களே நம்மை வியக்க அல்லது திகைக்க வைக்க முடியும் என்பர் E.M. பாஸ்டர்.[8] எனவே பெரும்பாலும் தலைமை மாந்தர்களே இத்தகைய அகழ்வுப் பாத்திரங்களாக முடியும். தொல்காப்பியத் துணைமாந்தரில் செவிலி, காமக் கிழத்தி இருவரும் இத்தகைய மாந்தரே எனலாம்.

அகழ்வற்ற மாந்தர்

பாத்திரக் கூறுகளிலே சிலமட்டும் சுட்டப்பட்டு மிகச் சுருங்கிய அளவில் பண்பு நலப்படுத்தப் படுவதால் அகழ்வற்ற மாந்தர் ஈரளவு

உடையவர் ஆகின்றனர். இப்பாத்திரங்கள் செறிவு விளக்கமற்ற முறையில் எளிதாகத் தீட்டப்படுகின்றன. எனவே இவற்றைப் பொது உருமாதிரிப் பாத்திரம் என்றும் கூறுவர்[9]. இவை ஒரு கருத்து அல்லது தன்மையை வைத்துக் காட்டப்பட்ட பாத்திரம். எனவே ஒரு வரியில் அல்லது தொடரில் விளக்கி விடக் கூடிய பாத்திரம்[10]. இவை நம்மை வியக்க வைப்பதில்லை, திகைக்க வைப்பதில்லை என்பர் E.M. பாஸ்டர். இயற்கையாகவே துணை மாந்தர்களின் சில பண்பியல்புகள் மட்டுமே விளக்கப்பட முடியும். ஆதலால் இவை அகழ்வற்றவை ஆகின்றன. நற்றாய், அறிவர், பார்ப்பார், இளையோர், கண்டோர், பாங்கன், கூத்தர், விறலி, பாணர் போன்ற பலரும் இம்மாதிரியினரே.

உயிர்ப்புடைய பாத்திரங்கள் (Lifelike Characters)

அகழ்வுப் பாத்திரங்கள் சில உண்மையியலுக்கு ஒத்தவையாய் அமையும் போது அவை உயிர்ப்புடைய பாத்திரங்கள் ஆகின்றன. உயிர்ப்புடைய பாத்திரங்கள் யாவை?

'தன்னை ஒத்த-வாழ்கின்ற மனிதர் போலவே இயக்கமுடையவன்; வாழ்க்கையில் அவன் தரத்தில் அல்லது சூழ்நிலையில் உள்ள ஒரு மனிதனிடத்தில் எத்தகைய பேச்சு எதிர்பார்ப்போமோ அத்தகைய பேச்சு உடையவன்; தோன்றத்தகுந்த பொருத்தமான நினைவுகள், பதியத் தகுந்த சரியான உணர்ச்சிகள், அழவேண்டிய வேளையில் அழுதல், சிரிக்க வேண்டிய போது சிரித்தல், அச்சம், சினம், மகிழ்ச்சி, நம்பிக்கை, ஏமாற்றம்-என்று எதிர்பார்க்கப் படுகின்றவற்றையெல்லாம் காட்டுபவன்'–அவனே உயிர்ப்புள்ள பாத்திரம்[11].

அகத்திணைத் துணைப் பாத்திரங்கள் எல்லாவற்றையும் உயிர்ப்புடைய பாத்திரங்கள் என்று கூற இயலாது. எனினும் செவிலி, காமக்கிழத்தி முதலிய சில பாத்திரங்கள் உயிர்ப்புடையது போல் அமைந்திருக்கக் காணலாம்.

4) பாத்திர வளர்நிலை அடிப்படை

பாத்திரங்களின் வளர்நிலை அடிப்படையில் இயங்கு பாத்திரம் (Dynamic character) இயங்காப் பாத்திரம் (Static character) என்று பகுக்கலாம். சூழலுக்கேற்றபடி குறிப்பிடத் தகுந்த மாற்றங்கள் பெற்று வளர்வது இயங்கு பாத்திரம். சூழலில் மிகக் குறைந்த அளவே மாற்றமுடையது அல்லது மாற்றம் இல்லாதது இயங்காப் பாத்திரம் எனப்படும். இவ்வகையிலும் அகழ்வற்ற துணைப்பாத்திரங்கள் பல இயங்காப் பாத்திரங்களாகவே அமைகின்றன.

5) மனவியல் அடிப்படை

மனவியலின் அடிப்படையில் மெல்லுணர்வுப் பாத்திரமாக (Sentimental) செவிலி, தோழி ஆகியோர் காணப்படுகின்றனர். உணர்வு வேகப் பாத்திரமாகப் (Emotional) பரத்தை, காமக்கிழத்தி ஆகியோரும் அறிவுணர் பாத்திரங்களாக (Intellectual) அறிவர், கண்டோர், பாங்கன் ஆகியோரும் கலையுணர் பாத்திரங்களாகக் (Artistic) கூத்தர் முதலியோரும் தோன்றுகின்றனர். அறிவு + உணர்வு வேகம் + கலை என்ற முக்கூட்டுத் துணைப் பாத்திரங்களின் ஈர்ப்பாற்றல் நடுவே புலனுணர்வுப் பாத்திரமாகிய (Sensual) தலைவனின் நிலை நிகழ்ச்சிகளுக்குக் களன் அமைக்கிறது. தெய்விகம் என்பதை ஒப்புக்கொள்ளா விட்டால் மிகையுணர்வுப் பாத்திரமாக(Hysteric) வேலன் தோன்றுவான்.

6) பங்கு அடிப்படை

ஒவ்வொரு பாத்திரமும் ஏற்கும் பங்கின் அடிப்படையில் துணைப் பாத்திரங்களைக் கீழ்க்கண்டவாறு வகுக்கலாம். அறிவுறுத்து பாத்திரங்கள் (Advisory role) முகவாண்மைப் பாத்திரங்கள் (Agent role) ஆட்படு பாத்திரங்கள் (Passive role) அமைதிப் பாத்திரங்கள் (Silent role) கருவிப் பாத்திரங்கள் (Instrumental role) இயற்கை இகந்தவை (Supernatural) அரங்குப் பார்வையாளர்கள் (Audience on the satge) பேசா அவிநயர் (mime characters) குழுவினர் (chorus).

செய்வதற்குக் காரணம் (cause) செய்ததன் விளைவு (effect) என்ற இரண்டும் சேர்ந்து தான் ஒரு பாத்திரத்தை உருவாக்க முடியும். அவ்வகையில் ஒவ்வொரு துணைப் பாத்திரமும் ஒரு பங்கு ஏற்றுச் சில செய்கைகள் செய்கின்றன. அவை செயல்படுமாற்றை வைத்தே மேற்கண்ட பாகுபாடு வகுக்கப்படுகிறது. செவிலி, பார்ப்பார், அறிவர், பாங்கன் ஆகியோர் அறிவுறுத்து பாத்திரங்கள். இளையர், கூத்தர், விறலி, பாணர் ஆகியோர் முகவாண்மைப் பாத்திரங்கள். செய்தியாளர், தூதுவராக வரும் நிலைகள் முகவாண்மையில் அடங்கும். பாகன், புதல்வன், நற்றாய் முதலியோர் ஆட்படு பாத்திரங்கள். தன்னை, தந்தை, பாகன், அந்தணர், புதல்வர் முதலியோர் உரையாடாப் பாத்திரங்கள் அல்லது அமைதிப் பாத்திரங்கள். தமர், நொதுமலர், வேலன், விருந்து, கண்டோர் முதலியோர் கருவிப் பாத்திரங்கள். வேலன், கட்டுவிச்சி இயற்கை இகந்த பாத்திரங்கள். கேளிர், ஊரவர், அயலார், சேரியோர், கண்டோர் ஆகியோர் அரங்குப் பார்வையாளர்கள். தந்தை, தன்னை, நொதுமலர், விருந்தினர், வேலன் ஆகியோர் பேசா அவிநயர்.

7) தலைமை, துணைமை அடிப்படை

சிலம்பில் துணைப்பாத்திரங்களை ஆராய்ந்த டாக்டர் கா.மீனுட்சி-சுந்தரம் அவர்கள் தலைவன் தலைவி வாழ்வில் தொடர்பு கொண்டு வாழ்வைத் திருப்புகின்ற பாத்திரங்கள் ஒன்றிய பாத்திரங்கள் என்றும், முதன்மைப் பாத்திரங்களைப் புரிந்துகொள்ளவும் விளங்க வைக்கவும் நிற்கும் பாத்திரங்களை 'ஒட்டிய பாத்திரங்கள்' என்றும் சிறிய பங்கே கொண்டு ஊன்றப் பயன்படும் பாத்திரங்களை ஊன்று பாத்திரங்கள் என்றும் மூவகை செய்வர்.[12] பாங்கன், காமக்கிழத்தி, பரத்தை, செவிலி, பாணன் ஆகியோர் ஒன்றிய பாத்திரம் எனலாம். பார்ப்பார், அறிவர், கண்டோர் போன்ருேர் ஒட்டிய பாத்திரங்கள் எனலாம். புதல்வர், இளையோர், தமர் போன்ருேர் ஊன்று பாத்திரங்கள் எனலாம்.

பாத்திரங்களை உணர்த்தும் முறை

தொல்காப்பியர் மேற்சுட்டிய துணைமாந்தரை உணர்த்தும் போது 1) அப்பாத்திரத்தின் தனிமனிதப் பண்புகளைத் (personalities) தானே நேரடியாக நின்று விளக்குதல். 2) ஒரு நிகழ்ச்சியில் அப்பாத்திரத்தை ஈடுபடுத்துவதன் மூலமாக அதன் செய்கையை வெளிப்படுத்தல். 3) குறிப்பிட்ட சூழலில் அது பின்னப்படும் போது அதன் மனத்தின் உள்மனத் தாக்கங்களும், உளவியல் விளைவுகளையும் அளித்தல் என்ற மூன்று முறைகளைக் கையாள்கிருர். பாத்திர விளக்கத்திற்கு இவ்வாறு முறையே புதினஉத்தி, நாடக உத்தி, சிறுகதை உத்தி என்ற உத்திகள் அவரால் கையாளப்படுகின்றன. பொதுவாகப் படிப்பவர்கள் பாத்திரங்கள் செயல்படுவதையும் பேசுவதையும் காட்சி போலக் காண விழைகிருர்கள். இதனுலேயே பாத்திரங்கள் படைப்பின் கருவுக்கு உயிர் போன்றவர்கள். அந்த அடிப்படையிலேயும் தொல்காப்பியர் பாத்திரங்களின் பேச்சு, செய்கைகளைக் காட்சி போலக் காட்டியுள்ளார். நிகழ்ச்சிகளை நிரல்படுத்திக் களங்கள் அமைத்துள்ளார். இலக்கணம் என்று கருதாமல் களவுக் காட்சியில் தொடங்கிச் சிறந்ததுபயிற்றலாம் துறவில் முடியும் நாடகம் என்று கருதினுல் துணைமாந்தரின் ஒப்பணையற்ற உண்மையியல் நடிப்புப் புலனுகும்.

அடிக்குறிப்பு

1. திரு. பி. வி. இராமச்சந்திரன் எம். ஏ; எம். லிட்; அவர்களுடன் கலந்துரையாடல் - நாள் - 21. 2.80.
2. ,, ,, ,, ,, ,, ,,
3. தமிழகம், பச். 159.
4. Abram, M. H., A. Glossary of Literary Terms. page 21.
5. Shaw Harry, Dictionary of Literary Terms, page 71.
6. The Encyclopedia Americana Vol. 6 . page. 290.
7. Abram. M. H., A Glossary of Literary Terms, page. 21
8. Institute of Correspondence Course and Continuing Education.M. A. II year 1979– 80. Br VII c,Essay Guidline 16, page 10.
9. The Encyclopedia Americana Vol. 6. page 290.
10. Abram, M. H.. A Glossary of Literary Terms, page 21.
11. Institute of Correspondence Course and Continuing Education, M. A. II year 1979 – 80, Br VII c, Essay, Guideline. 16, page 10
12. மீனுட்சிசுந்தரம். கா., சிலம்பில் துணைப்பாத்திரங்கள், பக். 11 - 12.

17

நெஞ்சொடு கிளத்தல்

இரா. மோகன்

ஒருபாற் கூற்று

தொல்காப்பியச் செய்யுளியலின் முதல் நூற்பா முப்பத்து நான்கு செய்யுளுறுப்புக்களைத் தொகுத்துக் கூறுகின்றது. அம் முப்பத்து நான்கு உறுப்புக்களில் ஒன்றே கூற்று வகை என்பது. 'கூற்று வகையென்பது, அச்செய்யுள் கேட்டாரை இது சொல்லுகின்ருர் இன்னுரென உணர்வித்தல்' எனப் பேராசிரியரும், 'கூற்றுவகையென்றது அச்செய்யுட் கேட்டோரைக் கூறுகின்ரேரின்னேரென அறிவித்தலை' என நச்சினுர்க்கினியரும் கூற்று வகை என்பதற்கு விளக்கம் தருகின்றனர். எனவே கூற்று வகையில் கூறுவோர், கேட்போர் என்னும் இருவரது பங்கு இடம்பெற்றிருத்தல் புலனுகின்றது.

தொல்காப்பியர் ஒருவர் தம் முன்பாக மற்ருெருவர் இருக்கக் கூறுவதனைக் 'கூற்று வகை'யில் அடக்கி, அங்ஙனம் யாரும் இல்லாமல் தாமே கூறுவனவற்றை 'ஒருபாற்கிளவி' எனக் குறிப்பிட்டுள்ளார். பொருளியலின் இரண்டாம் நூற்பாவில் அவர் ஒருபாற்கிளவி பற்றிய தம் கருத்துக்களை வெளியிட்டுள்ளார் :

'நோயும் இன்பமும் இருவகை நிலையில்
காமங் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்
சொல்லா மரபி னவற்ருெடு கெழீஇச்
செய்யா மரபின் தொழிற்படுத் தடக்கியும்
அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்

அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்றும் உரிய வாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்
ஒன்றிடத்தும் இருவர்க்கும் உரியபாற் கிளவி'

(பொருளியல்: நூ. 2)

1. ஒருபாற் கிளவி என்பது ஒரு கூற்றுக் கிளவி எனவும், தனிக்கிளவி எனவும், ஒருபாற் கூற்று எனவும் அழைக்கப்படும்.

2. அகத்திணை மாந்தருள் தலைவன், தலைவி ஆகிய இருவர்க்கே ஒருபாற்கிளவி சிறப்பாக உரியதாகும்.

3. காதலால் உளதாகும் துன்பமும் இன்பமும்ஆகிய இரு வகை நிலைக்களத்தும், நகை முதலிய எண் வகை மெய்ப்பாட்டுத் திறமும் விளங்குமாறு இவ் ஒருபாற்கிளவி புனையப்படும்.

4. உறுப்புடையது போல், உணர்வுடையது போல், மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு சார்த்திக் கற்பனை செய்து பாடுவதும், எதிர்மறுத்து உரையாடாதனவாகிய பறவைகள், விலங்குகள் போன்றவற்றோடு பேசுவதாகப் புனைவதும் இதனுள் அடங்கும்.

ஒருபாற் கிளவிகளில் கேட்பதற்கு உரியனவாகக் கற்பனை செய்து பாடப்படுவன எவை எவை என்று தொல்காப்பியர் செய்யுளியல் நூற்பா ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

'ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுதலிய நெறியால்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங்கு அமையும் என்மனார் புலவர்'

(செய்யுளியல்: நூ. 198)

"ஞாயிறு முதல் நெஞ்சீறாகக் கூறியனவும் அவை போல்வன பிறவும் மேற் 'செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்' (பொருளியல்-2) எனப் பொருளியலுட் பொதுவகையாற் கூறியவாற்றான் அவைதாங் கூறுவன போலவுங் கேட்பன போலவுங் கூறுமாறமையுமென்று கூறுவர் புலவர். கூற்றும் உடன் கூறினர் மேற்கூற்றிற்குரியன இவையென வரையறுமையின்... பிறவுமென்றதனால் புல்லும் புதலும் முதலியனவுங் கொள்க' என இந் நூற்பாவுக்கு நயமான விளக்கம் தருவார் நச்சினார்க்கினியர்.

இலக்கிய உத்தி

நெஞ்சு என்னும் சொல்லுக்கு மனம் (Mind), இருதயம் (Heart), மார்பு (Breast), நடு (Centre), தைரியம் (Bravery), தின்னக்கம் (Audacity), தொண்டை (Throat) என்றும் ஏழு பொருள்கள் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியில் (Tamil Lexicon) கொடுக்கப் பெற்றுள்ளன.[1]

உறுப்புடையது போல், உணர்வுடையது போல், மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு புணர்த்துப் பாடுவது என்பது இலக்கிய உலகில் காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் கற்பனை மரபுகளில் - இலக்கிய உத்திகளில் - ஒன்றாகும். இக் கற்பனை மரபு-இலக்கிய உத்தி-இயல்பாகக் கையாளப்படும் போது, இலக்கியம் குறிப்பிடத்தக்க அழகையும் அழுத்தத்தையும் பெறுகிறது; படிப்பவர் நெஞ்சமும் தனியொரு இன்பத்தினை அடைகின்றது.

'அவரவர் ஒட்டிய உறுப்புடையது போல் உணர்வுடையது போல் மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு புணர்த்தும்' என்னும் தொல்காப்பிய வரிகளுக்கு நச்சினார்க்கினியர், 'கூறுகின்ற அவரவர் தமக்குப் பொருந்திய உறுப்பெல்லாம் அதுவுடையது போலவும் உணர்வுடையது போலவும் மறுமாற்றந் தருவது போலவும் தந்நெஞ்சொடு புணர்த்துச் சொல்லியும்' என விளக்கம் தருகின்றார். மேலும் அவர், 'நெஞ்சென்னும் அஃறிணை ஒருமையைத் தெரிய விளங்கத் தலைவன் கூறும் வழி உயர்திணை ஆண்பாலாகவும், தலைவி கூறும் வழி உயர்திணைப் பெண்பாலாகவும், பன்மையாற் கூறும் வழிப் பன்மைப் பாலாகவும் கொள்க' என்றும் கூறுகின்றார்.

உறுப்புடையது போல் புனைதல்

முத்தொள்ளாயிரத் தலைவி ஒருத்தியின் காதல் அனுபவம் இது: நாணம் ஒரு பக்கம் இழுக்க, காதல் நலன் ஒரு பக்கம் மனத்தை இளக்கிட, கிள்ளியின் தோள் அழகினைக் கண்ட கண்கள் தூக்கம் வராமல் வருந்த, இரு பக்கங்களிலும் நெருப்புப் பற்றிக் கொண்டு எரியும் மூங்கிற் குழாயினுள் அகப்பட்ட எறும்பு இங்கு-மங்குமாக அலைந்து திண்டாடுவது போல, தலைவியின் நெஞ்சம் எல்லோரும் கண்ணுறங்கும் நள்ளிரவில் கிள்ளியைக் காணப் போவதும் வருவதுமாக அலைந்து கொண்டிருக்கிறதாம்.

' நாண்ஒருபால் வாங்க நலன்ஒருபால் உள்நெகிழ்ப்பக்
காமருதோள் கிள்ளிக்குஎன் கண்கவற்ற—யாமத்து

இருதலைக் கொள்ளியின் உள்எறும்பு போலத்
திரிதரும் பேரும்என் நெஞ்சு.'

(முத்தொள்ளாயிரம் : 84)

இது அவலம் பற்றி நெஞ்சினை உறுப்புடையது போல் கூறிய பெண்பாற் கூற்று ஆகும். இதில் நெஞ்சும் திரிதருதல், பெயர்தல் என்னும் செயற்பாடுகளை உடையது போல் பாடப்பட்டிருத்தல் காணலாம். 'நாணிப் பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல, வரும் செல்லும் பேரும் என் நெஞ்சு' என வரும் பிறிதொரு முத்தொள்ளாயிரப் பாடலும் (103) இங்கே நினைவுகூரத்தக்கது.

கல்லாடனார் காட்டும் அகநானூற்றுத் தலைவன் ஒருவன் 'செய்வினை முற்றிய செம்மல் உள்ள'மோடு ஊருக்குத் திரும்பி வருகிறான்; தனியே இருந்து வருந்தும் தலைவியைக் காண வேண்டும் என்னும் ஆவலோடு தேரில் விரைவாக வந்து கொண்டிருக்கிறான். ஆனால் அவன் நெஞ்சமோ தேரேறி வரும் அவனைக் காட்டிலும் மிக விரைவாகத்தலைவியை நாடிச் சென்று விடுகின்றது. அந்நிலையில் தேரின் மீது இருந்த தலைவன் பின்வருமாறு எண்ணிப் பார்க்கிறான்:

'துணைவியிடம் சென்று சேர்ந்த என் நெஞ்சம் என்ன செய்யும்? கைகளைக் கவித்தவாறே அவளை நெருங்கிச் சென்று அவளுடைய கண்களைப் புதைத்து, பின்னலைத் தொட்டு, அவளது அருமைக் கைகளால் தடவப் பெற்று - தழுவப் பெற்று - மகிழ்ந்திருக்குமோ?'

'கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை அன்ன பின்னகம் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ,
நாணொடு மிடைந்த கற்பின் வாள்நுதல்
அந்தீங் கிளவிக் குறுமகள்
மென்தோள் பெறநசைஇச் சென்றஎன் நெஞ்சே?'

(அகம். 9 : 21-26)

'இஃது, உறுப்புடையது போல் உவந்துரைத்தது' என்பர் நச்சினார்க்கினியர்.

உணர்வுடையது போல் புனைதல்

பொருள் தேடுவதற்காக ஊரையும் உயிரனைய தலைவியையும் விட்டுப் பிரிந்து வந்த ஒரு தலைவன் இடைவழியில் பலவாறு எண்ணி எண்ணி வருந்துகிறான். அவன் தன்னைப் பிரிந்து வீட்டில் தனித்திருந்து வாடும் தலைவியை நினைக்கிறான். அவளுடைய துன்பத்-

தைத் தீர்ப்பதே முதல் கடமை, ஆதலின் ஊருக்கே திரும்பிச் செல்லலாமா என்று எண்ணுகிருன்; உடனே தான் மேற்கொண்ட கடமையை முடித்தலே ஆண்மை, அதை முடிக்கத் தவறினுல் ஒரு புறம் துன்பமும் ஒரு புறம் இழிநிலையும் நேருமே என உணர்ந்து வருந்துகிருன். தலைவியிடம் விரைந்து செல்லும் அன்பு நெஞ்சம் ஒரு பக்கமும், கடமையில் முனைந்து ஈடுபடத் தூண்டும் அறிவின் துணிவு மற்ருெரு பக்கமுமாக அலைக்க அந்தத் தலைவன் வருந்திச் சோர்கிருன்; இவ்வாறு சோர்வுற்றுச் சோர்வுற்று உடம்பின் வன்மை மிகக் குறைந்து போவதாக உணர்ந்து பின்வருமாறு எண்ணிக் கலங்குகிருன்:

"என் உள்ளத்தைத் தன் அன்பால் பிணித்துக் கொண்ட தலைவியின் சார்பாக என் நெஞ்சம் நின்று, 'அவளுடைய துன்பத்-தைத் தீர்ப்பதற்காகச் செல்வோம்' என்று கூறுகின்றது. ஆனுல் என் அறிவோ உறுதிப் பொருளை ஆராய்ந்து தெளிந்து, செய்யும் கடமையை முடிக்காமல் இடையிலே விடுதல் அறியாமையோடு இழிவையும் தரும் என்று அறிவுறுத்தி, 'சிறிதும் அவசரப்படாதே' என்று கூறுகின்றது. இவ் இரண்டிற்கும் இடையில் அகப்பட்டு வருந்துகின்ற, என் உடம்பானது யானைகள் இரண்டு ஒன்ருேடொன்று மாருகப் பற்றி இழுக்கும் தேய்ந்த புரிகளை உடைய பழங்கயிறு இற்றுப் போவதுபோல், துன்பத்தால் வருந்திச் சோர்ந்து அழிய வேண்டியதுதானே?'

'உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்
செல்லல் தீர்க்கம் செல்வாம் என்னும்;
செய்வினை முடியாது எவ்வம் செய்தல்
எய்யா மையோடு இளிவுதலைத் தரும்என
உறுதி தூக்கத் தூங்கி அறிவே
சிறிதுநனி விரையல் என்னும்; ஆயிடை
ஒளிறுஏந்து மருப்பின் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல்என் வருந்திய உடம்பே'

(நற். 284 : 3–11)

'இஃது உணர்வுடையது போல் இளிவரல் பற்றி வந்த தலைமகள், கூற்று' என்பர் இளம்பூரணர். இதில் 'உள்ளம் பிணிக்கொண்டோள் வயின் செல்லல் தீர்க்கம் செல்வாம்' என நெஞ்சம் உணர்வுடையது போல் – தலைவியின் சார்பாக நின்று உரைப்பது போல் - புனையப்-பட்டிருத்தல் காணலாம்.

தலைவன் பிரிந்து சென்ற பின், அவனை நினைந்து வருந்தும் ஒரு தலைவி தோழியை நோக்கித் தன் துயரத்தை எடுத்துரைக்கிறாள்; அப்போது தான் வருந்துவதை மிகுதியாகக் கூறாமல், தன் பொருட்டுத் தன் நெஞ்சம் வருந்தி அலைவதாகக் கூறுகிறாள்:

''ஒளி பொருந்திய என் வளையல்கள் நெகிழுமாறு என்னை மெலிவித்த காதலர்க்கு யான் படும் துன்பத்தை அறிவுறுத்து–வதற்காகச் சென்ற என் நெஞ்சம், அங்கே அவர் செய்யும் வினைக்கு உசாத்துணையாக இருந்து, வினை முற்றியதும் அவரையும் அழைத்துக் கொண்டு ஒருங்கே வரலாம் என்னும் ஆசையால் உடனிருந்து வருந்துகின்றதோ? அல்லது, காதலர் அருள் செய்யாததால் கலங்கி இங்கே திரும்பி வந்து, அதற்குள் பழைய அழகினை எல்லாம்இழந்து விட்ட என் பசலை நிறத்தைப் பார்த்து, என்னை அறிந்து கொள்ள முடியாமல், 'இவள் யாரோ அயலாள்' என்று எண்ணித் துன்பம் மிகக் கொண்டு போய்விட்டதோ?''

'எல்வளை ஞெகிழ்த்தோர்க்கு அல்லல் உறீஇயர்
சென்ற நெஞ்சம் செய்வினைக்கு உசாவா
ஒருங்குவரல் நசையொடு வருந்துங் கொல்லோ?
அருளான் ஆதலின் அழிந்துஇவண் வந்து
தொன்னலம் இழந்தஎன் பொன்நிறம் நோக்கி
ஏதி லாட்டி இவள்எனப்
போயின்று கொல்லோ நோய்தலை மணந்தே'

(நற். 56 : 4-10)

'இஃது உணர்வுடையது போல் இளிவரல் பற்றி வந்த தலைமகள் கூற்று' என்பர் இளம்பூரணர்.

மறுத்துரைப்பது போல் புனைதல்

'மறுத்துரைப்பது போல்' என்பதற்கு 'மறுமாற்றம் தருவது போலவும்' என விளக்கம் தருவர் நச்சினார்க்கினியர்.

தன் நெஞ்சு எந்நேரமும் காதலரையே நாடி அவர் பின்னே சென்று அலைவதையும், தன் வழியில் நின்று தனக்குத் துணை–யாகாததையும் உணர்ந்து உள்ளம் உருகுகிறாள் வள்ளுவரின் காமத்துப்பாலில் வரும் ஒரு தலைவி. ஆழ்ந்த வருத்தத்திற்கு இடையே அவள் தத்துவஞானி போல் — மெய்யுணர்வு பெற்றவர் போல் — எண்ணிப் பார்க்கிறாள் :

"நெஞ்சே! காதலருடைய நெஞ்சம் அவரை விட்டு நம்மிடம் வருகின்றதா? இல்லையே! அவரிடமே தங்கி இருந்து அவர்க்கே துணையாக இருக்கின்றதே! நீ மட்டும் என் நெஞ்சமாய் என்னிடம் நில்லாமல், அவரையே எந்நேரமும் நாடி அலைவது ஏன்?"

'அவர்நெஞ்சு அவர்க்குஆதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக்கு ஆகா தது?'

(குறள் : 1291)

காமத்துப்பாலில் 'நெஞ்சொடு புலத்தல்' என்னும் அதிகாரத்தில் வரும் குறள் இது. 'இது மறுத்துரைப்பது போல் தலைவி கூற்று: இளிவரல் பற்றி வந்தது' என்பர் இளம்பூரணர். இதில் தலைவி, நெஞ்சினை மறுமாற்றம் தரும் ஆற்றலுடையதைப் போல் கருதிக் கொண்டு 'எவன் நெஞ்சே நீ எமக்கு ஆகாதது?' எனக் கேட்டல் காணலாம்.

பொருள் தேட வேண்டும் என்று துணிந்த தன் நெஞ்சை நோக்கி ஒரு குறுந்தொகைத் தலைவன் கூறுகிறான்: 'நெஞ்சே! இரவலர்க்குக் கொடுத்தலும் இன்பங்களை அனுபவித்தலும் பொருள் இல்லாத வறியவர்க்கு இல்லை என்று கருதி, பொருள் ஈட்டுவதற்கு உரிய செயல் குறித்து மிகவும் எண்ணிப் பார்க்கிறாய். அச் செயல் செய்வதற்குத் துணையாக அழகிய மாமை நிறத்தையுடைய தலைவியும் வருவாளோ? எம்மை மட்டும் செலுத்துகின்றாயோ? சொல்லுவாயாக!'

'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்எனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி! அவ்வினைக்கு
அம்மா அரிவையும் வருமோ?
எம்மை உய்த்தியோ? உரைத்திசின் நெஞ்சே!'

(குறுந். 63)

'இது, மறுத்துரைப்பது போல நெஞ்சினை இளிவரல் பற்றிக் கூறியது' என்பர் நச்சினார்க்கினியர்.

'பொருள் தேடச் செல்லின் தலைவியைப் பிரிய வேண்டும்; அவளைப் பிரிவது அரிது' என்று தன் நெஞ்சுக்கு உணர்த்திச் செலவழுங்குகிறான் தலைவன். "இங்ஙனம் அழுங்கியது செல்லாமலே இருத்தற்கன்று; தன் மனத்திலுள்ள பேரன்பைப் புலப்படுத்தி ஒரு வகையால் அவளை ஆற்றுவித்துப் பின்பு பிரிவதே அவன் (தலைவன்) கருத்து; இதுவே புலனெறி வழக்கமென்பது, 'செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே, வன்புறை குறித்தல் தவிர்ச்சி யாகும்' (தொல். கற்பு. 44) என்பதனால் அறியலாகும்"[2] என்னும் உ. வே. சா.வின் உரை விளக்கம் இங்கே மனங்கொளத்தக்கதாகும்.

சங்க இலக்கியத்தில் நெஞ்சொடு கிளத்தல்

1. தலைமகன் அல்லது தலைமகள் தன் நெஞ்சிற்குக் கூறியது என்னும் துறை பற்றி 117 பாடல்கள் சங்க இலக்கியத்தில் உள்ளன. அகநானூற்றில் 68 பாடல்களும், நற்றிணையில் 24 பாடல்களும், குறுந்தொகையில் 20 பாடல்களும், ஐங்குறுநூற்றில் 3 பாடல்களும், கலித்தொகையில் 2 பாடல்களும் இத்துறை பற்றியனவாக விளங்குகின்றன.

2. நெஞ்சொடு கிளத்தல் பாலைத் திணைப் பாடல்களிலேயே மிகுதியும் (72 பாடல்களில்) இடம் பெற்றுள்ளது; அதற்கு அடுத்த நிலையில் குறிஞ்சித் திணைப் பாடல்களில் (30) இடம் பெற்றுள்ளது; நெய்தல், முல்லை, மருதம் ஆகிய திணைகளைச் சார்ந்த பாடல்களில் (முறையே 6, 5, 4) மிகக் குறைவாகவே இடம் பெற்றுள்ளது. பாலைத் திணையின் உரிப்பொருள் பிரிதல் - அதாவது துன்பம்; குறிஞ்சித் திணையின் உரிப்பொருள் புணர்தல்—அதாவது இன்பம். தொல்காப்பியர் பொருளியலில் ஒருபாற் கிளவி பற்றிப் பேசும் போது 'நோயும் இன்பமும் இருவகை நிலையில் ...... இருவர்க்கும் உரிய பாற் கிளவி' எனக் குறிப்பிடுவது இங்கே மனங்கொளத்தக்கது.

3. சங்க இலக்கியத்தைப் பொறுத்த அளவில், தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறுவனவாக வரும் பாடல்களே எண்ணிக்கையில் மிகப் பலவாக (112) உள்ளன; தலைமகள் தன் நெஞ்சிற்குக் கூறுவனவாய் ஐந்து பாடல்களே (குறுந். 11, 306; அகம். 303; கலி. 87, 123) காணப்படுகின்றன.

4. தலைமகனும் தலைமகளும் என்னென்ன சூழல்களில் தம் நெஞ்சினை விளித்துப் பேசுகின்றனர் எனக் காண்பது சுவையான ஆராய்ச்சியாக அமையும்:

I. தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறுதல்

1. பாலைத் திணை

i) பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

ii) தலைமகன் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சினைக் கழறிச் செலவழுங்கியது.

iii) பொருள்வயிற் பிரிந்த தலைமகன் இடைச்சுரத்து அழிந்த தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

iv) பொருள்வயிற் பிரிந்த தலைமகன் பருவமுணர்ந்த நெஞ்சிற்கு உரைத்தது.

v) வினைமுற்றி மீளுந் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

vi) முன்னொரு காலத்துப் பொருள்வயிற் பிரிந்து வந்த தலைமகன் பின்னும் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.

vii) உடன்போகாநின்றான் மலிந்து தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

viii) தோழியால் தலைமகளை உடன்வருமெனக் கேட்ட தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லியது.

2. குறிஞ்சித் திணை

i) அல்ல குறிப்பட்டு மீளும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

ii) இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

iii) இரவுக் குறி வந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

iv) தலைமகன் இடந்தலைப்பாட்டின்கண் கூடலுறு நெஞ்சிற்குச் சொல்லியது.

v) குறை மறுக்கப்பட்டுப் பின்னின்ற தலைமகன் ஆற்றானாகி நெஞ்சிற்குச் சொல்லியது.

vi) தோழி செறிப்பறிவுறுப்ப, நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது.

vii) வரைவு மறுக்கப்பட்டு ஆற்றானாகிய தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லியது.

3. முல்லைத் திணை

i) பாசறைக்கண் இருந்த தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

ii) வினைமுற்று மறுத்தரா நின்றான் நெஞ்சிற்கு உரைத்தது.

4. **மருதத் திணை**

i) சேட்படுக்கப்பட்டு ஆற்றாளுய தலைவன் தோழி கேட்பத் தன் நெஞ்சிற்கு உரைத்தது.

ii) உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

5. **நெய்தல் திணை**

i) தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

ii) பொருள் வலிக்கும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.

II. தலைமகள் தன் நெஞ்சிற்குக் கூறுதல்

காப்பு மிகுதிக்கண்ணும் (குறுந். 306; கலி. 123), தலைமகன் பிரிவின்கண் வேட்கை மீதூர்ந்த நிலையிலும் (அகம். 11, 303) தலைமகள் தன் நெஞ்சினை விளித்துப் பேசுவாள்.

தொல்காப்பியர் பொருளியலில் துன்பம், இன்பம் என்னும் இரண்டையும் நிலைக்களன்களாகக் கொண்டு ஒருபாற் கிளவிகள் தோன்றும் எனக் கூறியுள்ளார். ஆயின் சங்க இலக்கியத்திலோ துன்பத்தை நிலைக்களனுகக் கொண்ட பாடல்களே மிகுதியாகக் காணப்படுகின்றன; இன்பத்தை நிலைக்களனுகக் கொண்ட பாடல்கள் எண்ணிக்கையில் மிகச் சிலவாகவே உள்ளன.

5. 'நெஞ்சே', 'நெஞ்சம்' என்னும் விளிச்சொற்கள் சில பாடல்களிலேயே வெளிப்படையாக இடம்பெற்றிருக்கக் காண்கிறோம்; செம்பாதிக்கும் மேற்பட்ட பாடல்களில் அத்தகைய விளிச்சொற்கள் எவையும் இடம்பெறவில்லை. அப்பாடல்களின் துறைக் குறிப்பினைக் கொண்டே அவை நெஞ்சிற்குக் கூறப்பெற்றவை என அறிந்து கொள்கிறோம்.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் 'உறுப்புடையது போல், உணர்வுடையது போல், மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு புணர்த்தும்' என்பதற்கு மேற்கோள்களாகக் காட்டும் சில சங்கப் பாடல்கள் 'நெஞ்சொடு கிளத்தல்' என்னும் துறையைச் சார்ந்தனவாக இல்லை; அப்பாடல்களின் துறைக் குறிப்புகள் வேறுக உள்ளன. காட்டாக 'மன்றுபாடு அவிந்து மனைமடிந் தன்றே' எனத் தொடங்கும்

கபிலரின் அகநானூற்றுப் பாடலை (128) 'இஃது உறுப்புடையது போல உவகை பற்றி வந்தது' என இளம்பூரணரும், 'உறுப்புடையது போல் உவந்துரைத்தது' என நச்சினார்க்கினியரும் விளக்கிச் செல்கின்றனர். ஆயின், இப்பாடலின் துறைக் குறிப்போ 'இரவுக் குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது' என அமைந்துள்ளது. உரையாசிரியர்கள் காட்டும் மேற்கோள்களில் பெரும்பாலானவை இவ்வாறே அமைந்திருக்கக் காண்கிறோம்.

6. சங்கச் சான்றோருள் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது என்னும் துறையில் மிகுதியான பாடல்களைப் பாடியவர் பரணர். அவர் இத்துறையில் 18 பாடல்களைப் பாடியுள்ளார். இரவுக் குறி வந்து நீங்கும் போதும், அல்ல குறிப்பட்டு அயர்வோடு மீளும் போதும், தோழி வாயிலாகத் தலைவியின் இற்செறிப்பினை அறிந்த போதும், வரைவு மறுக்கப்பட்ட போதும், இடைச்சுரத்தில் திரும்ப நினைக்கும் போதும் பரணரின் தலைவர்கள் நெஞ்சினை முன்னிலைப் படுத்திச் சொல்லாடுகின்றனர்.

பரணருக்கு அடுத்த நிலையில் இத்துறையில் தம் பெரும்பாலான பாடல்களைப் பாடியவர் எயினந்தை மகனார் இளங்கீரனார் ஆவார். அவர் இத்துறை பற்றி 12 பாடல்களைப் பாடியுள்ளார். ஆதலின் 'நெஞ்சிற்குப் பாடிய இளங்கீரனார் என்று இவரைப் பாராட்டுவோம். எல்லாம் ஒரு துறையாகப் பாடினும் புதுப்புது வனப்போடு யாத்திருத்தலின், இலக்கியச் சலிப்புத் தோன்றவில்லை... மனத்தை நோக்கிக் கூறுதொறும் கருத்துப் புதுவதாக அமைப்பர் இளங்கீரனார். அதனால் ஒரு துறையில் பல்வேறு உள்ளோட்டங்களை அறிகின்றோம்'[3] என்பர் டாக்டர் வ. சுப. மாணிக்கம். பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குக் கூறும் தலைவன், பொருள்வயிற் பிரிந்து போகின்ற நிலையில் நெஞ்சிற்குக் கூறும் தலைவன், இடைச்சுரத்துப் போகின்ற போது ஆற்றாது தன் நெஞ்சிற்குக் கூறும் தலைவன், முன்னொரு காலத்துப் பொருள்வயிற் பிரிந்து திரும்பி, பின்னும் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குக் கூறும் தலைவன் எனப் பல்வேறு தலைவர்களை இளங்கீரனாரின் பாடல்களில் சந்திக்கின்றோம்.

புலவர் பெயர் தெரியாப் பாடல்கள் மூன்றும் (நற்.126; 169; 190) இத்துறை பற்றியனவாக விளங்குகின்றன.

7. 'வாழிய நெஞ்சே' என்றும், 'வாழி என் நெஞ்சே' என்றும், 'வாழி என் உள்ளம்' என்றும் நெஞ்சினை வாழ்த்திக் கூறும் மரபு

பல பாடல்களில் பின்பற்றப்பட்டுள்ளது. நெஞ்சின் நல்ல பண்புகளையும் அல்ல பண்புகளையும் குறிக்கும் வகையில் சங்கப் புலவர்கள் கையாண்டுள்ள அடைமொழிகள் ஆற்றலும் அழுத்தமும் மிகுந்தவை. அகநானூற்றுப் பாடல் ஒன்றில் இடம்பெற்றுள்ள 'கவைபடு நெஞ்சம்' என்னும் அடைமொழி இவ்வகையில் குறிப்பிடத்தக்க சிறப்புடையது. "செல்லுதல் தவிர்தல் என்ற இரண்டில் ஒன்றிற் படாமையின், கவைபடு நெஞ்சமாயிற்று" [4] என இவ் அடைமொழிக்கு அழகிய விளக்கம் கூறுவர் உரையாசிரியர்.

'மட நெஞ்சே' (கலி. 123)
'மடங்கெழு நெஞ்சம்' (அகம். 303)
'மடங்கெழு நெஞ்சே' (அகம். 126)
'மருளி நெஞ்சே' (அகம். 361)
'துணிவில் நெஞ்சே' (அகம். 327)
'இருள்படு நெஞ்சம்' (அகம். 335)
'பொருண்மலி நெஞ்சம்' (நற். 308)
'பின்னின்று துரக்கும் நெஞ்சம்' (அகம். 3)
'வயவுறு நெஞ்சம்' (அகம். 338)

— இவை நெஞ்சின் அறியாமையையும் மயக்கத்தையும் உறுதியற்ற தன்மையையும், பின்னின்று தூண்டும் பண்பையும் குறிக்கும் சில அடைமொழிகள் ஆகும்.

'மீளி நெஞ்சே' (அகம். 379)
'ஆர்வ நெஞ்சம்' (அகம். 136)
'படிவ நெஞ்சம்' (அகம். 287)
'மா நெஞ்சே' (நற். 140)
'மாண் நெஞ்சம்' (அகம். 51)
'புகல்மலி நெஞ்சம்' (அகம். 351)

— இவை நெஞ்சின் வலிமையையும் பொருள் வேட்கையையும் மாண்பையும் தெரிவிக்கும் சில அடைமொழிகள் ஆகும்.

8. புறப்பாடல்களிலும் நெஞ்சை முன்னிலைப் படுத்திக் கூறும் கற்பனை மரபு—இலக்கிய உத்தி—இடம்பெற்றிருக்கக் காண்கிறோம். வெளிமான் துஞ்சிய பின் அவன் தம்பி இளவெளிமானைப் பரிசில் கொடுவென அவன் சிறிது கொடுப்பக் கொள்ளாது பெருஞ்சித்திரனார் பாடிய இரு புறப்பாடல்கள் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

'எழுஇனி நெஞ்சம் செல்கம்...
வருகெனல் வேண்டும் வரிசை யோர்க்கே
பெரிதே உலகம் பேணுநர் பலரே' (புறம் 207)

'மலிதிரைக்
கடல்மண்டு புனலின் இழுமெனச் சென்று
நனியுடைப் பரிசில் தருகம்
எழுமதி நெஞ்சே துணிபுமுந் துறுத்தே' (புறம்.237)

இளவெளிமான் வரிசையறியாமல் சிறிது பரிசில் கொடுத்ததால் மனத்தே கலக்கமும் சினமும் கொண்ட பெருஞ்சித்திரனர், 'எழு இனி செல்கம்' என்றும், 'துணிபு முந்துறுத்து எழுமதி' என்றும் நெஞ்சை ஒருப்படுத்திப் பாடியுள்ளார்.

'அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுஅது பொய்யா காதே
அருந்தஏ மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்க அவன் தாளே' (புறம்.101)

என்பது ஔவையாரின் புறப்பாடல். இதில் புலவர் 'அருந்த ஏமாந்த நெஞ்சம், வருந்த வேண்டா!' என நெஞ்சிற்குக் கூறுதல் காணலாம்.

9. நெஞ்சொடு கிளத்தல் சங்கப் புலவர்களின் நெஞ்சை அள்ளிய துறைகளுள் ஒன்று. அறிவும் உணர்வும் போராடும் களமாக, நல்ல உணர்ச்சிகள் பலவும் மோதிக் கொள்ளும் இடமாக இத்துறை அமைந்திருக்கக் காணலாம்.

'நெஞ்சே! நீ வன்சொல் கூறி ஒறுத்தாலும் ஒழியமாட்டாய்; இன்சொல் சொல்லி நிறுத்தினும் நிற்க மாட்டாய். உனக்கு யான் உறவினன் அல்லனோ? உள்ளம் ஒன்றிய நண்பரைப் போல் யான் கூறுவதனைப் போற்றுவாயாக' என அல்ல குறிப்பட்டு மீளும் ஒரு தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறுகிறான்.

'ஒறுப்ப ஓவலை நிறுப்ப நில்லலை
புணர்ந்தோர் போலப் போற்றுமதி நினக்கியான்
கிளைஞன் அல்லனோ நெஞ்சே!'
(அகம்.342)

தலைவி பெறுவதற்கு அரியள் என்று எவ்வளவோ எடுத்துரைத்தான் தலைவன். நெஞ்சம் கேட்கவில்லை; நாள்தோறும் தலைவி-

யைக் கண்டுதான் ஆக வேண்டும் என்று பிடிவாதம் செய்தது. 'வைகலும் இன்னு அருஞ்சுரம் நீந்தி'த் துன்புற்ற அந்தத் தலைவன், 'நீங்காத துன்பத்தினை எனக்குத் தந்த நீ, கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் சினத்தோடு செலுத்திய வேலானது நின் மார்பிலே தைத்து அழுந்திட, நினது மிக்க செருக்கு அழியப் பெறுவாயாக' என நெஞ்சிற்குச் சாபமிட்டான்.

'மறப்போர்க் குட்டுவன் ...
ஓங்குதிரைப் பௌவம் நீங்க ஓட்டிய
நீர்மாண் எஃகம் நிறத்துச்சென்று அழுந்தக்
கூர்மதன் அழியரோ நெஞ்சே ஆனது
எளியள் அல்லோள் கருதி
விளியா எவ்வம் தலைத்தந் தோயே'

(அகம். 212)

பிறிதொரு தலைவனின் நெஞ்சம் பொருள் தேட வேண்டும் என்று துணிந்தது: 'ஈதலால் வரும் இன்பம் தலைவியால் வரும் இன்பத்தினும் சிறந்தது' என எடுத்துக் கூறி, 'வெருவரு தகுந கானம் நம்மொடு வருக' என அழைப்பும் விடுத்தது. தலைவன் நெஞ்சம் விடுத்த அழைப்பை ஏற்கவில்லை; மாருக உறுதியான குரலில் 'வாரேன் நெஞ்சம், வாய்க்க நின்வினையே' என்ருன்.

'வெருவரு தகுந கானம் நம்மொடு
வருக என்னுதி யாயின்
வாரேன் நெஞ்சம் வாய்க்க நின்வினையே'

(அகம். 131)

'நாம் அண்மையில் இருக்கும் போதே இவ்வளவு வருந்துகின்ற தலைவி, நாம் பிரிந்து செல்லுவோமாயின் உயிர் வாழவே மாட்டாள். ஆகலின் நாம் பிரிவது எங்ஙனம்?' எனப் பொருள்வயிற் பிரியக் கருதிய தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்குகிருன் பாலை பாடிய பெருங்கடுங்கோ புனையும் ஒரு தலைவன்.

'அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே ஒண்டொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதும்நாம் எனினே'

(அகம். 5)

ஒரு குறுந்தொகைத் தலைவன் பொருள்வயிற் பிரியக் கருதினான். பாலை நிலத்தின் வெம்மை நினைவுக்கு வந்தது. 'தலைவியின் அழகிய மார்பை நினைந்தவாறே சென்றால், இன்னாக் கானமும் இனியதாகி விடும்' என்று அவன் தன் நெஞ்சிற்கு ஆறுதலாகக் கூறினான்.

'இன்னாக் கானமும் இனிய பொன்னொடு
மணிமிடை அல்குல் மடந்தை
அணிமுலை ஆகம் உள்கினம் செலினே'

(குறுந் 274)

ஒருமுறை காடு கடந்து போய்ப் பொருள் தேடி வந்த தலைமகன் மறுமுறை போக விரும்பவில்லை. பொருள் தொகுக்கப் போ, போ என்று அவன் நெஞ்சம் தூண்டுகின்றது. தன் நெஞ்சின் உறுதியை நம்பவில்லை அவன். தலைவியோடு உறையும் போது பொருள் தேடிப் புறப்படச் சொல்லும், புறப்பட்டுப் போகும் நடுவழியில் தலைவியின் கண்களை நினைவூட்டி வீட்டுக்குத் திரும்பச் சொல்லும். நெஞ்சின் மாறுபாட்டத்தை நன்கு அறிந்தவன் அவன். ஆதலின் 'நின் போலி மொழிகள் எனக்கு உறுதுணையாகா' என்று நேருக்கு நேராகக் கூறிச் செலவழுங்குகிறான் அவன்.

'கலம்தரல் உள்ளமொடு கழியக் காட்டிப்
பின்னின்று துரக்கும் நெஞ்சம் நின்வாய்
வாய்போற் பொய்ம்மொழி எவ்வம்என் களைமா ...
அந்தீங் கிளவி ஆயிழை மடந்தை
கொடுங்குழைக்கு அமர்த்த நோக்கம்
நெடுஞ்சேண் ஆரிடை விலங்கும் ஞான்றே'

(அகம். 3)

இவ்வாறு பல்வேறு தலைவர்களின் மனப்பான்மைகளைச் சங்கப் புலவர்கள் புதுப்புது வனப்போடு புனைந்து காட்டியுள்ளனர்.

குறிப்புக்கள்

1. Tamil Lexicon, Vol. IV, Part I, p. 2332.
2. உ.வே. சாமிநாதையர், குறுந்தொகை, பக். 137-38.
3. வ.சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், பக். 348-49.
4. ந.மு. வேங்கடசாமி நாட்டார் & ரா. வேங்கடாசலம் பிள்ளை, அகநானூறு: நித்திலக் கோவை, ப. 77.

பின்னிணைப்பு 1

சங்க இலக்கியத்தில் நெஞ்சொடு கிளத்தல்

1. அகநானூறு (68)

3; 5; 19; 21; 33; 43; 47; 51; 62; 77; 79; 83; 87; 93; 109.

121; 123; 126; 131; 136; 142; 149; 152; 162; 164; 167; 169; 174; 181; 191; 193; 198; 199; 208; 212; 214; 225; 230; 239; 245; 258; 262; 279; 280; 287; 289; 291; 297; 299.

303; 304; 322; 327; 335; 337; 338; 339; 342; 343; 351; 353; 361; 371; 372; 373; 377; 379; 381.

2. நற்றிணை (24)

3; 6; 16; 62; 77; 80; 103; 105; 126; 140; 141; 157; 169; 190; 204; 205; 209; 298; 308; 312; 346; 356; 366; 384.

3. குறுந்தொகை (20)

11; 29; 62; 63; 70; 71; 116; 120; 128; 151; 165; 168; 182; 199; 267; 274; 306; 312; 347; 376.

4. ஐங்குறுநூறு (3)

288; 323; 330.

5. கலித்தொகை (2)

87; 123.

பின்னிணைப்பு 2

வரிசை எண்	புலவர் பெயர்	பாடல் எண்ணிக்கை
1.	அம்மூவனார்	2
2.	ஆலம்பேரிச் சாத்தனார்	1
3.	இடைக்காடனார்	1
4.	இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார்	1
5	இளநாகனார்	1
6.	இளவேட்டனார்	1
7.	உகாய்க்குடிகிழார்	1
8.	உருத்திரன்	1
9.	எயினந்தை மகனார் இளங்கீரனார்	12
10.	எருங்காட்டூர்த் தாயங்கண்ணனார்	1
11.	ஒரோடோகத்துக் கந்தரத்தனார்	1
12	ஓதலாந்தையார்	2
13.	ஓரம்போகியார்	1
14.	ஔவையார்	2
15.	கடியலூர் உருத்திரங்கண்ணனார்	1
16.	கடுந்தொடைக் காவினார்	1
17.	கணக்காயனார் மகனார் நக்கீரனார்	2
18.	கபிலர்	3
19.	கருவூர் ஓதஞானி	1
20.	கல்லாடனார்	2
21.	கழார்க் கீரனெயிற்றியார்	1
22.	காலெறி கடிகையார்	1
23·	காவன் முல்லைப் பூதனார்	1
24.	காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்	1
25·	காவிரிப் பூம்பட்டினத்துச் சேந்தங்கண்ணன்	1
26.	குடவாயிற் கீரத்தனார்	2
27.	சல்லியங்குமரனார்	1
28.	சிறைக்குடியாந்தையார்	3
29.	தூங்கலோரியார்	1
30.	தொண்டி ஆமூர்ச்சாத்தனார்	1
31.	நரைமுடி நெட்டையார்	1
32.	நல்லந்துவனார்	1

வரிசை எண்	புலவர் பெயர்	பாடல் எண்ணிக்கை
33.	நொச்சி நியமங்கிழார்	1
34.	படுமரத்து மோசிக் கொற்றன்	1
35.	பரணர்	18
36.	பாண்டியன் ஏனுதி நெடுங்கண்ணனுர்	1
37.	பாலை பாடிய பெருங்கடுங்கோ	5
38.	பூதங்கண்ணனுர்	1
39.	பூதன்தேவனுர்	1
40.	பெருந்தேவனுர்	1
41.	பொருந்தில் இளங்கீரனுர்	2
42.	மடல் பாடிய மாதங்கீரன்	1
43.	மதுரை அளக்கர் ஞாழலார் மகனுர் மள்ளனுர்	3
44.	மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனுர்	1
45.	மதுரை இளஞ்கௌசிகனுர்	1
46.	மதுரை ஈழத்துப் பூதன்தேவனுர்	1
47.	மதுரைக் கணக்காயனுர்	2
48.	மதுரைத் தத்தங்கண்ணனுர்	1
49.	மதுரைத் தமிழ்க் கூத்தன் நாகன்றேவனுர்	1
50.	மதுரைப் பேராலவாயார்	1
51.	மதுரை மருதனிளநாகனுர்	9
52.	மதுரையாசிரியர் நல்லந்துவனுர்	1
53.	மருங்கூர்ப்பாகைச் சாத்தன் பூதனுர்	1
54.	மள்ளனுர்	1
55.	மாமூலனுர்	1
56.	மாறேக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனுர்	1
57.	முடத்திருமாறன்	1
58.	வடம வண்ணக்கன் பேரி சாத்தனுர்	1
59.	விற்றூற்று மூதெயினனுர்	1
60.	விற்றூற்று வண்ணக்கன் தத்தனுர்	1

[புலவர் பெயர் தெரியாப் பாடல்கள்: நற். 126; 169; 190]

தலைமை உரைகள்

திணை இலக்கிய உணர்வுகள்

அறிஞர் கு. திருமேனி,
எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச்.டி.,
முதுகலைப் பேராசிரியர்; தமிழ்த் துறைத் தலைவர்,
தேசீயக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

உலகம் படைத்து வழங்கும் மொழிகளுள் தமிழ் மொழியைப் போல் பல்லாயிரம் ஆண்டுகள் எழுத்து வழக்கும், பேச்சு வழக்கும் இணைந்து இறவாது சிதையாது நிலைத்து வாழும் வேறு ஒரு மொழி இன்று இல்லை எனலாம். இந்த மொழியின் பெருமையை அம்மொழிக்கு இலக்கணமாய் அமைந்த தொல்காப்பியம் விளக்குவதோடு அதன் காலப் பழமையையும் விளக்கி நிற்கின்றது.

உலகத்தில் மொழிக்கு இலக்கணம் உரைக்கும் வழக்கம் உண்டேயன்றி மக்கள் வாழ்க்கைக்கும் ஓர் இலக்கணம் அமைக்கும் தனித்தன்மை தமிழ் மொழிக்கே இருப்பதைக் காணலாம். இத்தகைய இலக்கணச் சிறப்பை மொழியும் நூல் தொல்காப்பியமாகும். இது எழுத்து என்ற ஒரு பகுதியில் ஒன்பது இயல்களையும், அவ்வெழுத்தால் அமையும் சொல்லுக்கு ஒன்பது இயல்களையும் மொழி இலக்கணம் கூறி நிற்பதே போன்று அவ்வெழுத்தும் சொல்லும் தாங்கிய பொருட்பாகுபாட்டிற்கும் ஒன்பது இயல்களைத் தாங்கி நிற்கின்றது. இந்தப் பொருட் பாகுபாடு என்பதுதான் தமிழ் மக்களின் வாழ்க்கையின் அகப்புற இலக்கணங்களாகும்.

பண்டு வாழ்ந்த தமிழ்ச்சான்றோர்கள் உலகியல் வழக்கை ஒரு நாடக வழக்காகக் கண்டு, ஆய்ந்து அதற்கு இலக்கியம் காண அவ்விலக்கியங்கட்குத் தொல்காப்பியர், அம்முந்தையோர் சென்ற வழக்கையே தாமும் கண்டு நாடகவழக்கிலும் உலகியல் வழக்கிலும் இலக்கண அமைதிகளை எடுத்துரைத்து இன்றுவரையில் அம்மொழியைக் காலவெள்ளம் அழிக்கமுடியாத ஒருகோட்டை மதில் போல அமைத்து வைத்திருப்பதைக் காணலாம்.

இன்று பழையன கழித்துப் புதியன புகுத்தும் மொழி அழிக்கும் பண்பினராகிய ஒரு குழு, தமிழர் நாகரிகத்தையும் இணைத்து அழிக்க ஒருப்பட்டுப் புதுமை பேணும் காரணங் காட்டி மொழி மரபோடு வாழ்க்கை மரபாகிய பண்பாட்டையும் அழிக்கக் குறிக்கொண்டு தொடர்ந்து செயல்படுவது வெளிப்படை.

இதுகாறும் தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், தமிழ்ப்பேச்சு என்ற மூவழக்கும் பிரிப்பறியாதனவாய்க் கிடந்த நிலை, இன்று கெடுக்கப்பட்டுத் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களும் சங்க இலக்கியங்கள் போன்ற பண்பாட்டுக் கருவூலங்களும் தமிழ்நாட்டு மக்களுக்குப் புறம்பானவையாகி, அவை யாரோ பண்டிதர்கட்கும் அம்மொழியைப் படிப்போர்க்கு மட்டும் உரியனவாகி ஒழிந்து விட்டதைக் கொண்டு இதுகாலை யான் குறித்த கருத்துக்களைப் பற்றிய தெளிவு கொள்ளலாம்

இக்கருத்தரங்கம்கூடப் பொது மக்கட்குரியதாக இல்லாததோடு அன்றி மொழி காக்கும் நோக்கத்தில்கூட அம்மொழி பயில்வோர்க்குக் கூட்டப்பட்டதன்று. தேர்வு மனப்பான்மையில் குறிப்பிட்ட காலக் கழிப்பிற்குக் கூட்டப்பெற்றது என்பதை மறத்தற்கில்லை. புதுமை என்னும் பெயரில் தமிழ் மக்களின் மடிமைக் குணத்தைப் பயன்படுத்தி மொழியின் அடித்தளத்தை ஒரு குழுவினர் பறிக்கும் போது ஒருவனுவது ''கற்சிறை போல நின்று மொழியழிக்கும் வெள்ளத்திணைத் தாங்கினுன் போலும்'' என்று வருங்காலம் கூறும் என்ற துணிபால் இதனைக் குறிப்பிடுகின்றேன்.

இக்கருத்தரங்கில் எனக்குத் தலைமையுரையாக அமைந்திருப்பது எழுத்து சொல் கடந்த பின்னர்த் தொடங்கும் பொருள்திகாரத்தைப் பற்றிய ஐந்து இயல்களைக் குறித்ததாகும். இப்பொருளதிகாரப் பகுதிதான் தமிழ் மக்களின் அகப்புற ஒழுக்கங்களின் கூறுபாடுகளைக் கூறுவன. முதற்கண் அவற்றில் அகத்திணைப் பகுதியைக் காண்போம்.

அகத்திணை என்னும்போது அது அகவொழுக்கமாகிய மனத்து நிகழ் ஒழுக்கமாகும். இது மெய்ப்பாட்டால் புலப்படுவதன்றிச் சொல்லால் புலப்படுத்துவதன்று. ஒன்பான் சுவைகளும் மனத்து நிகழ்ந்து மெய்ப்பாட்டான் புலப்படுவன எனினும் அகமென்று காமத்தைத் தனித்துக் கூறக் காரணமுண்டு. இது ஆண் பெண் என்ற இருவர் கூட்டுறவால் நிகழ்வது. இங்கும் மெய்ப்பாட்டால் புலப்படும் பகுதி-

கள் பலவுண்டு. அதில் ஒருவர் அகத்து நிகழும் இன்பத்திற்கு ஒருவரிடம் காரணம் எதுவுமின்றி நிகழும் ஓர் இன்பம். இது நினைந்தொறும், காண்டொறும், பேசுந்தொறும் எப்போதும் உயிர் தளிர்க்கச் செய்வதாகிய ஓர் உணர்ச்சி. இது அன்பு பற்றியா? அன்றி அழகு பற்றியா? செல்வம் பற்றியா? என்றில்லாது ஒருவர்க்கு ஒருவர் இன்றியமையாத ஒரு நிலையை உருவாக்கும். எக்காரணமும் கூறவொண்ணாது நெஞ்சுதனை அவிழ்க்கும் ஒன்றையே இங்கு அகத்திணை இன்பம் என்று குறிக்கின்றார். இது அவரவர் உணர்வதன்றி உணர்த்திக் காட்டமுடியாதது. ஒரு நிலையில் பேரின்பமும் இத்தகையதே. உவமை வகையால் அதுபோல், இதுபோல் என்று யானை பார்த்த குருடர் போல் கூறப்பெறுவதே அன்றி இவ்வண்ணம், இந்நிறம், இப்பெற்றி என்று சுட்டிக் காட்டப் பெறுவதொன்றன்று. அகத்தும் "[1] இனைய ளென்றவள் புனையளவறியேன்; அணை மெல்லியள் யான் முயங்குங் காலே" (குறுந். 70) என்பர். இது பற்றி இருபாலாராலும் காரணம் காட்டமுடியாது. ஒன்றித்து '[2] ஆரா இயற்கையோடு' '[3]ஒன்றில் காலை ஒன்று வாழாப் பெற்றியுடைய அன்றில் போல் வாழ்ச்சி பெற்று ஓருயிர் வாழ்க்கையராகித் "[4] தானே அவளே தமியர் காண" என்றாங்கு வாழ்வதை '[5]நற்பால் வினை' தந்ததாகவும் அவனும் அவளும் "அமிழ்தும் சுவையும் போலப் பிரிப்பறியாது ஒன்றித்தவர் என்றும் விளக்கிக் காட்டினர். இதனால்தான் வள்ளுவர் இதனை "[6] மலரினும் மெல்லிது காமம்" என்றார்.

அகத்து நிகழும் நிகழ்ச்சி—காமம்-காதல் என்ற இவை தம்முள்ளம் தம்மையறியாது இருவர்பாலும் மாறிப் புகுதல் ஆகும். இது களவெனப்பட்டது. இக் களவுப் பயிற்சியால் கற்றுக் கொள்ளப் பெற்றபின் இது கற்பாயிற்று. அறியாது இழந்தது களவு. அறிந்து இழப்பது ஏமாற்றம். களவிற்குக் கண்காட்சியோ அன்றி ஒருவர் கூறக் கேட்டுக் கொண்ட கற்பனைக் காட்சியோ அமையும். களவாயின் "[7] மதுமறைந்துண்டோர் மகிழ்ச்சி போல உள்ளத்துள்ளே மகிழ்ச்சி காட்டும் அவனின்றேல் '[8] புலம்பித் தோன்றும்'. அருகிருப்பின் உயிரோடிருக்கும் உணர்வு காட்டும். பிரிந்தால் உயிர் பிரிந்தாலன்ன பரிவு காட்டும். இக்களவுப் பழக்கம் கற்றுக்கற்றுக் கற்பாயின் தலைவன் பிரிய நேர்ந்துழி அவள் அவனிடம் "[9] செல்லாமையுண்டேல் எனக்குரை மற்றுப் பிரிவாயின் இருந்து காண்பார் யாரேனும் உளராயின் அவர்க்குரை யான் இறந்து படுவேன்" [குறள் 1151] என்று கூறச் செய்யும்.

இலக்கியங் கண்ட இவ்வுணர்வுகளையே தொல்காப்பியர் இலக்கண முறையில் அகத்திணை என்று பகுத்து அவற்றில் களவென்றும் கற்பென்றும் பகுத்துக் காட்டியுள்ளார். இவற்றிற்குரிய மெய்ப்பாடு முதலியவற்றை மெய்ப்பாட்டியலில் விளக்குவர். பலதிறப்பட்ட உணர்வுகளையும், மெய்ப்பாடுகளையும் உள்ளவாறு பெயரளவில் குறித்தால் புலனாகாது என்பதால் அவற்றிற்கு உவமை காட்டி உவமையியலில் உவமைகளைப் பாகுபடுத்தி அவற்றின் வழி உணர்த்துகின்றார்.

அடுத்துப் பொருளியலில் முற்கூறிய நான்கு திணைகளும் துணை புரிந்தவாற்றை விளக்கித் தாம் நூற்பயனாகக் குறித்த மெய்ப்பொருளை அறியும் நெறி கூறி விளக்கி அதன்பின் அந்நெறிகளைச் சான்றோர் செய்யுட்களில் போற்றி வைத்துள்ள முறையைக் காட்டச் செய்யுட் கூறுகளைக் கூறிப் பின் அச்செய்யுளில் ஓரெழுத்து ஒரு மொழி தொடங்கிப் பல எழுத்து மொழிகளின் பொருள் அமைந்த மரபு கூறிப் பொருட் பகுதியை முடிக்கின்றார்.

இனி, புறத்திணையியற்பகுதி என்னும் போது இப்பகுதியும் அகம் என்னும் மனமிறந்த ஒன்றன்று எல்லாம் மனத்தைப் பொறுத்தவையே. காமத்தின் இன்பச் செவ்வி மலரினும் மெல்லிது. சிலரே அதன் செவ்வி தலைப்படுதற்குரியோர். ஆனால் புறத்திலோ யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று தான் துய்த்துப் பிறர்க்கும் அளிக்க வல்லது. இங்கும் "[10]மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறம்" என்று மனம் வலியுறுத்தப் பெறும். அதனால் இங்கும் மனம் புறக்கணித்தற்கு உரியதன்று. அகத்தில் மனம் ஒன்றுமே அமையும். தலைவன் செய்யும் கொடுமைகளும் இன்பமாகும். அவனுக்கு "[11]அவள் கை தொட்டது வேம்பாயினும் கரும்பாகும்". காதலினால் உள்ளம் கசிவுறும். கண்ணீர் மல்கும். பசக்கும். '[12]பெயில் நந்தி வறப்பிற் சாம்' காப் போன்ற பண்புடையது அது. "[13]ஊர்ந்து இன்புறாது போயினும் ஈர்ந்து இன்புறஉம் இளையோர் போலச் செய்து இன்புற்று வளை செறிதல் உண்டு. இச் சிற்றின்பம் அத்துணையும் பேரின்பத்திற்குப் பொருந்தும். பூசலார் நாயனார் வரலாறும் அது. புறம் என்னும் போது அகத்தோடு பிறஉறுப்புக்களின் தொழிற்பாடு மிகுதி. அது வெறும் வீரங்குறித்ததன்று. ஒருவீரனுக்கு களிறெறிந்து பெயர்தல் கடனாதல்போல, சான்றோனுக்கும் பொறுப்பு தந்தைக்கும், ஈன்று புறந்தருதல் தாய்க்கும், வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்கும், நன்னடை நல்கல் வேந்தர்க்கும் எனப் பல தொழிலுடைமையால் ஆண்டு இல்லறமும், அதன்கண் அறவோர்க்

களித்தல், அந்தணர் ஓம்பல் முதலியனவும் உண்டு. அதனால் வீரர்க்கு இல்லறமில்லை என்றற்கில்லை. இல்லறம் என்னும்போது அதன் வழிப்படும் பிறதொழில்களும் அத்தொழில் வழிவரும் அறங்களும், மக்கட்பேறு போன்ற வழிமுறையினர் அளித்தலும் வாய்த்த பின்றை உயிர் நலம் பேணல் என்னும் இறந்தது பயிற்றச் சேறல் உண்டு

இதில் அந்தணர் தொடங்கி வேளாளர் வரையிலுள்ள நாற்பாற் குடிகளோடு செய்தொழில் வேறுபாட்டால் பெருகிய அனைத்துத் தொழிலுடையாரும் அவரவர் செய்தொழிலின் பீடுகாட்டி வாகைபெறுதலே வாழ்க்கையின் பெரும் பேருகக் கருதி அத்தொழிலின் மிகுதி காட்டி மேம்படுதலும் உண்டு.

புறம் என்பது அகத்திணை விளக்கம் தான். அதனால்தான் தொல்காப்பியர் அகத்திணை ஏழையும் புறத்திணை ஏழோடு சார்த்தி அகத்திணை ஒழுக்கங்களைப் புறத்திணைகளைக் கூறும் போது விளக்குகின்றார். இங்ஙனம் அறமும் புறமுமாகிய இலக்கணப் பகுதிகளை ஆய்ந்து தெளிவுறல் நம்கடமையாகும்.

எண்ணிட்ட மேற்கோள்

1. குறுந்தொகை 70.
2. திருக்குறள் 370.
3. நற்றிணை 124.
4. இறையனார் களவியல் 2-வது சூத்திரம்.
5. திருக்கோவையார்— 8.
6. திருக்குறள் 1289.
7. (தொல்) பொருளதிகாரம்—களவியல் நூற்பா 23—மேற்கோள்.
8. தொல்-மெய்ப்பாட்டியல் 18.
9. திருக்குறள் 1151.
10. திருக்குறள் 34.
11. குறுந்தொகை 196.
12. கலித்தொகை 78- (19-20)
13. குறுந்தொகை 61.

தொல்காப்பியரும் வீரமாமுனிவரும்

அறிஞர் வி.மி. ஞானப்பிரகாசம் அடிகளார்,
எம்.ஏ., பி.எச்.டி.,
தமிழ்த்துறைத்தலைவர்,
தூய சவேரியார் கல்லூரி,
பாளையங்கோட்டை.

1980-ஆம் ஆண்டில் வீரமாமுனிவரின் 3-ஆம் நூற்றுண்டு விழா எங்கும் கொண்டாடப்படுகின்றது. எனவே தொல்காப்பியக் கருத்தரங்கில், முனிவரின் படைப்புக்களில் தொல்காப்பியத்தின் கருத்-தும் மரபும் எத்தகைய இடம் பெறுகின்றன என்பதைச் சிறிதளவு சுட்டிக் காட்ட விழைகின்றேன்.

தேம்பாவணியில்

தொல்காப்பியர் கருத்துப்படி, இன்ப வாழ்வில், தலைவி தன் விருப்பத்தைத் தலைவனிடம் தெரிவிக்க நாணுவாள் :

'தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை'[1]

மரியன்னை வளனோடு இல்லறம் தொடங்கிய போது, பெண்களுக்-குரிய பொது விருப்பம் கொள்ளவில்லை; இல்லறத்தில் துறவறத்தை இணைக்கும் புது விருப்பம் கொண்டாள். பொது விருப்பம் தெரி-விக்கவே பெண் நாணுவாள் எனில், இப்புது விருப்பம் தெரிவிக்க நாணுவாள் எனக் கூறவும் வேண்டுமோ? மரியன்னை ஆடவருடன் உரையாடி அறியாதவள். பளிங்கில் ஆவி படினும் அது மாசடை-யும். பளிங்கொத்த தன் உள்ளத்தில் ஆடவரின் ஆவி படினும் அது மாசுறும் என்று அஞ்சிய மரியன்னை, இப்போது வளனிடம் தன் கருத்தைக் கூற நாணுகின்ருள் :

"மின்னியதா ரகைமுடியின் விளங்குஅரிய காட்சியினுல்
துன்னியதுஓர் ஆவிபட, தூயபளிங்கு ஆசுஉறும் என்று
உன்னியதால் ஆடவரோடு உரைப்பறியா மடவாளும்
மன்னியதார்த் துணையொடும், தன்மனம் காட்ட நாணுவளாம்"[2]

வழிகாட்டும்படி இறைவனை வேண்டினுள். அவன் ஏவுதலின்படி, வளன், "இந்தத் திருமண வாழ்க்கை நடத்தும் முறையை நீயே கட்டளையிடுவாய்" என மரியன்னையிடம் கேட்கிருன். அதன்பின் மரியன்னை தன் கருத்தைக் கூறி முடிக்க முனிவர் ஆறு பாடல்களைப் படைக்கின்ருர்.[3] இங்குப் பெண்ணின் மென்மை உணர்ந்து தமிழ் மரபுப்படி நடக்கும் முறை தெளிவாகின்றது.

மரியன்னை கருவுற்ருள். இறைவனின் தனி அருளால் கருவுற்ருள். இவ்வுண்மை உணராத வளன் ஐயமுற்ருன், மனங்கலங்கினுன். ஆனுல் வானவர் வழியாக உண்மை அறிந்து, தெளிவடைந்து, மரியாளைத் தன் மனைவியாக ஏற்றுக் கொண்டான். அச் சமயம், மரியாளிடம் மன்னிப்பு வேண்டும் சமயம், அவளது உயர்வை ஏற்றுக் கொள்ளும் சமயம், ஐயத்தினுல் ஏற்பட்ட வருத்தம் தீர்க்கும் சமயம் மரியன்னையின் முன் விழுந்து வணங்கினுன்.

"செழுந்திரு மாதுஅறை திறந்தபோது இவன்
எழுந்திருந்து ஐஎனஇதயம் துண்ணென
விழுந்துஇரு விழுந்திரு வடியை வேண்டினுன்
தொழும்திரு வடிமிசை மழைக்கண் தூவியே"[4]

பிறகும்கூட வளனிடம் இதே மனநிலை நீடித்தது. "வானகத்தில் வாழ்வோர் வணங்கும் உன் சிறப்பை நான் என் அகத்தில் ஏற்கவில்லையே" என்றுகூறி அவளைத் தொழுதான். "என்னைத் தொழ வேண்டா" என்று 'அழுதே அழுதே தொழுதாள், அமரர்க்கு அரசாள் என்பாள்."[5]

கணவன், மனைவிமுன் தொழுவது ஊடற்கால நிகழ்ச்சி எனத் தொல்காப்பியம் கூறும்.

'மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய'[6]

புலவிக் காலத்தில் மனைவியின் சிறப்பினை, உயர்வினைத் தலைவன் உணர்கின்ருன். தலைமைக்குத் தலைவணங்குகிருன். இங்கும் மரியின் தனிச்சிறப்பை உணர்ந்த வளன் தலைவணங்குகிருன்.

ஒரு கேள்வி எழலாம். வளன் மனம் வருந்தி வாடியபோது மரியன்னை தான் கருவுற்றதின் உண்மையினை நேரடியாகக் கூறி-

யிருக்கக் கூடாதா என்பதே அது! இதற்குத் தொல்காப்பியம் விடை தருகின்றது:

'தற்புகழ் கிளவி கிழவன்முன் கிளத்தல்
எத்திறத் தாலும் கிழத்திக்கு இல்லை'[7]

இறைவனே உண்மையை உரைக்குமாறு மரியன்னை வேண்டுகிறாள். 'வளப்படு விழி சிவந்து அழுது வேண்டினாள்'[8] வானவரின் வார்த்தையால் வளன் தெளிவடைந்த பின், மரியன்னை இதுபற்றிப் பேசுகிறாள். இறைவன் தந்த மாவரத்தை அவன் இசைவின்றி, அவன் ஏவலின்றி வெளிப்படுத்தல் தவறு என்று உரைக்கின்றாள்:

"மன்னர்ஆள் மன்னவன் வகுத்த மாவரந்
தன்னையான் மறைப்பது தகவ தாம்என
என்னைஆள் உடையவன் ஏவல் இன்மையால்
உன்னையான் சூல்வினை ஒளித்த தாம்என்றாள்."[9]

இறுதியாக, வளன் வாழ்ந்த புதுவாழ்வு, மனைவியின் இன்பம் துய்க்காத வாழ்வு, இல்லறத்தில் துறவறத்தை இணைத்த வாழ்வு நம்பமுடியாததாகத் தோன்றலாம். இது வீரமாமுனிவரின் வீணான கற்பனை என்று சிலர் எண்ணுகின்றனர். இது முனிவரின் கற்பனை அன்று. கிறிஸ்தவ மதத்தினரின் நம்பிக்கையாகும். இதற்கு மதம் தரும் விளக்கம் வேறு இருக்க, தொல்காப்பியம் தரும் விளக்கத்தைக் கருதுவோம்

வளன் தாவீதின் குலத்தில் தோன்றியவன். தாவீதின் போர்ச் சிறப்பு கோலியாத்தை வென்ற நிகழ்ச்சியில் துலங்குகின்றது.[10] இது புறப்போர். ஐம்புலன் அடக்கித் தன்னை வெல்லும் அகப்போரிலும் தாவீதன் சிறப்புற்றிருந்தான்.[11] தாவீதின் குலத்தில் தோன்றிய வளன் புறத்தில் தச்சுவேலை செய்து வந்தாலும் அகத்தில் போர் வீரனாக விளங்கினான். மாதரைக் கண்ட வளனின் கண்கள் 'மதி முகத்து எதிர் தாமரை மாறுமே'.[12]

உலகில் இருள் மொய்க்க, தீது மொய்த்தது. இதற்குக் காரணம் பேய்,கொடுங்கோல் ஆட்சி புரிதலே என்பதை வளன் உணர்ந்தான். இறைவன் பேயின் 'பகையைத் தீர்த்து அளிப்பச் சென்றால் ஆகாதோ'[13] என்று வேண்டினான். இறைவன் மனிதனாய்ப் பிறந்து பேயை எதிர்த்துப் போராடி மக்களைக் காக்க வேண்டும், மீட்க வேண்டும் என்று காத்திருந்த வளன், அந்த மீட்பரின் வளர்ப்புத் தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறான். மீட்பரின் அலுவலைத் தன்

கடமையாகக் கொள்ள வேண்டியவனுகின்ருன். பேயின் ஆதிக்கத்தை எகிப்து நாட்டில் கண்ட வளன் அதை அங்கு எதிர்த்துப் போராடினுன். இப்போரின் தன்மையும், பேய்களின் சூழ்ச்சியும், தோல்வியும் குணங்கு மந்திரப் படலத்திலும், சோகு தோல்விப் படலத்திலும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு வாழ்வெல்லாம் போர்க்கள வாழ்வு வாழ்ந்த வளன், இல்லற இன்பத்திற்கு எவ்வாறு இடந்தருவான்?'எண் அரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்'[14] என்று தொல்காப்பியம் கூறுகிறதன்ருே?

தொன்னூல் விளக்கம்

தொன்னூல் விளக்கம் ஐந்திலக்கணம் கொண்ட நூல்; ஆசிரியரின் உரையும் பெற்ற நூல். இதில் பல நூற்பாக்களின் உரையில் தொல்காப்பிய மேற்கோள் சுட்டப் படுகிறது.[15] தொன்னூல் விளக்கத்தின் 216-ஆம் சூத்திரத்தில் 'ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனுர்' என்ற தொடரையும் முனிவர் பயன்படுத்துகின்ருர்.

பொருளதிகாரத்தில் முனிவர் புதுமை புகுத்தியுள்ளார். பொருள் என்றதின் கீழ் இல்லற வாழ்வைப் பற்றியும் போர் வாழ்வைப் பற்றியும் மட்டும் கூறுவது விரிந்த ஒன்றைக் குறுகிய அளவில் அடக்குவதெனக் கருதினுர். "அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு. இவற்றுட் பொருணூற்றந்த செந்தமிழுணர்ந்தோர் மற்றையாவு மொழிய அகப்பொருளெனச் சிற்றின்ப மொன்றையும் புறப்பொருளெனப் படைச் சேவக மொன்றையும் விரித்துரைத்தார்- அங்ஙனம் பொதுப்படா துரைத்த நூல் சிறுபான்மை யாகலின் இங். ஙனம் அறமுதலுன்கிற் கேற்பப் பொது நூலாக இவ்வதிகார முடியுமெனவே கொள்க."[16]

மரபுப்படிகூறப்படும் அகப்பொருளையும் புறப்பொருளையும் ஒரே நூற்பாவில் கூறி, அவற்றின் திணைகளைத் தமது உரையில் விரிவாக விளக்குகின்ருர்.[17] பொருளதிகாரத்தில் வரும் மற்ற கூறுகள் (பருவம், இடம் முதலியன) தொன்னூல் விளக்கத்தில் உரிமை என்ற தலைப்பில் இடம் பெறுகின்றன. ஆறு பருவங்களில் இளவேனில் 'வசந்தம்'என்றழைக்கப் படுகிறது.[18] பருவங்கள் விரிவான வருணனை பெறுகின்றன.

(எ. கா) 'பின்பனிக் குரிமை பேசுங் காலை
உலவை வீசலே உளபல புறவினம்
வலிது கூய்க்கான வாரணங் களித்தலே

கோங்கில வலர்தலே குரவ நெடும்பனை
தீங்கனி யுதவலே சிதப்பரி வெடித்தலே'[19]

இது அகப்பொருள் இலக்கணத்தில் புது முயற்சி எனலாம். இம்முறை முத்து வீரியத்திலும் காணப்படுகிறது.[20]

செந்தமிழ் இலக்கணம்

செந்தமிழ் இலக்கணத்தின் முன்னுரையில் முனிவர் தமிழ் இலக்கிய வரலாறு கூறத் தொடங்குகிறார். பழைய, நம்மிடையே இல்லாத இலக்கண ஆசிரியர்களைக் குறிப்பிட்ட பின் — அகத்தியர், நட்டத்தனார், மாயேசுரர், காக்கை பாடினியார் போன்றவர்களைக் குறிப்பிட்டபின் — முனிவர், நம்மிடம் வழக்கில் இருக்கும் தொல்-காப்பியம் பற்றிப் பேசுகிறார். இந்நூல் மிகச் சுருக்கமாகவும் விளக்கமின்றியும் இருப்பதால், பவணந்தி — தொல்காப்பியத்தின் பக்தராகிய பவணந்தி, தொல்காப்பியம் கூறும் இலக்கணம் பற்றி விளக்கமாக எழுதத் தொடங்கினார் என்று முனிவர் உரைக்கின்றார்.

முடிவுரை

'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே'

என்ற மணிவாசகர் இறைவனைப் பற்றிப் பாடியதைத் தொல்காப்-பியத்திற்கும் பொருத்தலாம். சங்கநூல்கள் தொடங்கி எல்லாப் பழைய நூல்களுக்கும் தொல்காப்பியம் ஊற்றாக, வழிகாட்டியாக, தோன்றாத் துணையாக இருந்து வந்துள்ளது. இன்றைய நூல்களுக்கும் நடைமுறைப் பேச்சுக்கும் உயிர் ஊட்டுகிறது. 'அவன் கோட்டை-விட்டான்' 'உனக்குக் கல்எடுக்க நாள்வரவில்லையே' என்ற வாக்கி-யங்களில் தொல்காப்பிய மணம் கமழ்கிறது.

இத்தகைய தலைசிறந்த தொல்காப்பியத்தின் சிறப்புப் பகுதி-யான பொருளதிகாரம் பற்றி அறிஞர் பலர் ஆய்வுக்கட்டுரை வழங்க விருக்கின்றார்கள். இவர்கள் தொல்காப்பியத்தை உற்று நோக்குவார்-கள். ஒத்துநோக்குவார்கள். உற்று நோக்குவோர் 'தொட்டனைத் தூறும் மணற்கேணிபோல்' தொல்காப்பியம் புதுஅறிவினைச் சுரப்பதைக் காட்டுவார்கள். தொல்காப்பியத்தைப் பிற நூல்களுடன் ஒத்துநோக்கு-வோர், 'குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி' மிக்க கொள்வர்.

இந்த அரிய அறிவு விருந்தினை வழங்க உங்கள் சார்பில் அவர்களை அன்புடன் அழைக்கிறேன்.

அடிக்குறிப்புகள்

1) தொல்காப்பியம். 1063.
2) தேம்பாவணி. 6. 4.
3) தேம். 6. 10-15.
4) தேம். 8. 26.
5) தேம். 9. 14.
6) தொல். 1172.
7) தொல். கற்பு. 178.
8) தேம். 7. 95.
9) தேம். 8. 34.
10) தேம். 3. 9-31.
11) தேம். 3. 36.
12) தேம். 4. 19.
13) தேம். 5. 17.
14) தொல். கற்பு. 173.
15) தொன்னூல் விளக்கம், சூத். 65, 78, 82, 84, 89, 94-103, 105, 106, 131-134, 137-139, 198,216, 250.
16) தொ. வி சூத் 144 உரை.
17) தொ. வி. சூத். 199.
18) தொ வி. சூத். 166.
19) தொ. வி. சூத். 170.
20) L. Gloria Sundaramurthy, Porul — Essay read in the Seminar on 'Language and Grammatical Heritage of Tamils, 10—12, Aug. '79, Indian Institute of Tamil Studies, Adaiyaru, Madras.

தொல்காப்பியப் பொருளதிகாரம்

முதல் ஐந்து இயல்கள் - ஓர் ஆய்வு

அறிஞர் சி. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
தமிழ்த்துறைப் பேராசிரியர்–தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை–600 005.

தோற்றுவாய்

தமிழர்தம் தலைமைக்கும் தகைமைக்கும் தக்கதோர் காட்டாகத் திகழ்வது தொல்காப்பியனார் தந்த தொல்காப்பியம். இது எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களை உடையது. எழுத்துக்கு இலக்கணம் இயம்புவது எழுத்ததிகாரம். சொல்லுக்கு இலக்கணம் சொல்வது சொல்லதிகாரம். பொருளுக்கு இலக்கணம் மொழிவது பொருளதிகாரம். இம்முறை வைப்பினை ஆராய்கின்ற மு. இராகவய்யங்கார் தம் 'தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி' என்ற நூலில்,

> 'எழுத்துஞ் சொல்லும் ஆராய்ந்து அச்சொற்றொடர்கருவியாகப் பொருளுணர்ச்சி பெற வேண்டுமாதலால் அம்முறையில் வைத்துத் தொல்காப்பியம் கூறுவதாயிற்று"[1]

என்று கூறுகின்றார். பொருளதிகாரத்தின் இன்றியமையாமையை இறையனார் களவியல் உரைகாரரும்,

> 'எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே;
> பொருளதிகாரம் பெறேஎம் எனின் இவை பெற்றும் பெற்றிலேம்'[2]

என்று மொழிகின்றார்.

இப்பெற்றி வாய்ந்த பொருளதிகாரம் மக்கள்தம் ஒழுக்கநெறியை அகவொழுக்கம், புறவொழுக்கம் என்று இரண்டாகப் பிரித்துக் கொண்டு அவற்றிற்கு முறையே அகத்திணை, புறத்திணை என்று பெயர் வைத்து அவற்றை முறைப்படுத்திக் கூறுகிறது. அகவொழுக்கத்தை அகத்திணையியல், பொருளியல் என்ற பொதுவியல்களாகவும். களவியல், கற்பியல் என்ற சிறப்பியல்களாகவும் தொல்காப்பியனார் விரித்து ஓதுகின்றார். புறவொழுக்கத்தைப் புறத்திணையியல் என்ற ஓரியலாலேயே கூறுகின்றார். இரண்டொழுக்கத்திற்கும் வேண்டும் பொதுச் செய்திகளை மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என்னும் நான்கு இயல்ளாகலேயே கூறுகின்றார். இவற்றையெல்லாம் கருதித் தொல்காப்பியனார் அகவொழுக்கத்திற்கே முதன்மையும் சிறப்பும் தருகின்றார் என்பது புலனாகிறது. வெளிநாட்டுப் பழைய இலக்கியங்களில் புறவொழுக்கமாகிய வீரநிலையே முதன்மையும் சிறப்பும் வாய்ந்ததாக இருக்க, தமிழிலக்கியங்களில் அகத்திணையே சிறப்பிக்கப்பெற்று அகவொழுக்கமே சிறந்து இருந்தது என்ற உண்மையைத் தொல்காப்பியனார் புலப்படுத்துகின்றார். தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் இயல்களை,

'உயர்திணை அஃறிணை என்றிவ் வுலகை
மயர்வில் அறிவின் வளத்தால் செயிர்அற
நன்று பிரித்ததொடு நல்ல அகம்புறம்
என்னும் இருகூறு கண்டார் யார்?'

'களவுநெறி கற்புநெறி கட்டுரைத்துள் ளகத்தே
உளவாம் மெய்ப்பா டுவமைஓர்வித் - தளவையிலாச்
செய்யுளியல் நன்மரபும் தேற்றினர்கொல் காப்பியனார்
வையக மெங்கும் இல்லா வகை'

என்ற வெண்பாக்களும் வரிசைப்படுத்துகின்றன.[3] தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இவ்வொன்பது இயல்களில் முதல் ஐந்து இயல்கள் பற்றி ஆய்வதே கட்டுரையின் நோக்கம்.

பொருளதிகார உரைகள்

தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு உரை கண்டவர்கள் அறுவர். அவர்கள் வருமாறு:

1) இளம்பூரணர்
2) நச்சர்
3) பேராசிரியர்

4) சோமசுந்தர பாரதியார்
5) புலவர் குழந்தை
6) மு. அருணாசலம் பிள்ளை

இவர்களில் இளம்பூரணரும், புலவர் குழந்தையும் மட்டும் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை கண்டவர்கள். முன்னவர் காலத்தால் மூத்தவர். பின்னவர் காலத்தால் பிற்பட்டவர். இருவருக்கும் உள்ள இடைவெளி பல நூறு ஆண்டுகள்! குழந்தையுரை காலமாற்றத்திற் கேற்பச் சில மாறுபாடுகளைக் கொண்டுள்ளது. இவரது உரையில் நூற்பாக்கள் இடம் மாற்றி வைக்கப்பட்டுள்ளன. பிறரது உரைகளில் காணப்படும் பொருளியலை இவர் உரையில் காண முடியவில்லை. மாருகப் பொதுவியல் என்ற பெயரில் ஓர் இயல், அகத்திணையியலை அடுத்து வைக்கப்பட்டுள்ளது. இவர் வைப்புமுறைக்கேற்ப இவர் அமைத்துள்ள இயல் வரிசை பின்வருமாறு:

1) அகத்திணையியல்
2) பொதுவியல்
3) களவியல்
4) கற்பியல்
5) மெய்ப்பாட்டியல்
6) புறத்திணையியல்
7) உவமவியல்
8) செய்யுளியல்
9) மரபியல்

உற்று நோக்கும்போது தொல்காப்பியப் பொருளதிகார அமைப்பு குழந்தையுரையில் முற்றிலும் மாறுபட்ட ஒன்ருக அமைகிறது நச்சினார்க்கினியர், முதல் ஐந்து இயல்களுக்கும் செய்யுளியலுக்கும் உரை கண்டுள்ளார். ஆயினும் மு. இராகவய்யங்கார், தம் நூலில் நச்சர் முதல் ஐந்து இயல்களுக்கு மட்டுமே உரை கண்டுள்ளதாக மொழிவர்.

'அச்சேறிய பொருளதிகாரப் பதிப்பிலே செய்யுளியலுக்குள்ள பகுதி நச்சினார்க்கினியர் இயற்றியதன்றிப் பேராசிரியர் இற்றியதென்பது செந்தமிழ் வாயிலாக முன்னரே பிரசித்தமானது. இது போலவே இவ்வச்சுப் பிரதியிற் கண்ட மெய்ப்பாடு, உவமம்,மரபியல்களின் உரைப்பகுதிகளும் நச்சினார்க்கினியரதன்றிப் பேராசிரியர் இயற்றியதென்பது செந்தமிழ் வாயிலாக முன்னரே பிரசித்தமானது'

என்பது அவர் கூற்று.[4] பேராசிரியர் இறுதி நான்கு இயல்களுக்கும் மட்டுமே உரை கண்டுள்ளார். அருணாசலம் பிள்ளை அவர்கள் முதல் இரண்டு இயல்களுக்கு அகத்திணையியல் உரைவளம், புறத்திணையியல் உரைவளம் என்ற பெயர்களில் உரை கண்டுள்ளார். இவர் தம் நூலில் தம் முன்னோரின் உரைகளைத் தொகுத்துக் கூறி அவற்றைத் தழுவி-யும் மறுத்தும் உரை வகுக்கின்றார். 'தொல்காப்பியம் தமிழ் இலக்கிய வரலாறு' என்ற பெயரில் க. வெள்ளைவாரணன் தொல்காப்பியப் பொரு-ளதிகாரம் முழுமைக்கும் பொருள் கூறுகின்றார். இவர் பெரும்பாலும் இளம்பூரணர் உரையையே தழுவி உரைக்கின்றார். க. ப. அறவாணன் தொல்காப்பிய அகத்திணையியல், புறத்திணையியல் உரை வேறுபாடு-களை ஆய்ந்து கண்டுள்ளார்.

பொருளதிகாரம் — விளக்கம்

> 'பொருள் உணர்த்தினமையாற் பொருளதிகாரம் என்னும் பெயர்த் தாயிற்று. பொருள் என்பது யாதோ எனின் மேற்சொல்லப்பட்ட சொல்லின் உணரப்படுவது. அது முதல், கரு, உரி என மூவகைப் படும். இது பொருளதிகாரமாயின் உலகத்துப் பொருள் எல்லாம் உணர்த்தல் வேண்டுமெனின் அது முதல் கரு உரிப்பொருள் எனத் தொகைநிலையான் அடங்கும். அவ்வாறு வகுக்கப்பட்ட பொருளை உறுப்பினானும், தொழிலினானும், பண்பினானும் பாகுபடுத்தி நோக்க வரம்பிலதாய் விரியும். இக்கருத்தினாலே இவ்வாசிரியர் உலகத்-துப் பொருள் எல்லாவற்றையும் முதல், கரு, உரிப்பொருள் என ஓதினார் என்க'

என்பது இளம்பூரணர் காட்டும் விளக்கம்.

> 'நிறுத்த முறையானே பொருளினது இலக்கணம் உணர்த்தின-மையின் இது பொருளதிகாரம் என்னும் பெயர்த்தாயிற்று. நாண் மீனின் பெயர் நாளிற்கும் பெயராயினாற் போல்வதோர் ஆகு-பெயர்.
>
> பொருளாவன அறம் பொருளின்பமும் அவற்றது நிலையின்மை-யும், அவற்றின் நீங்கிய வீடுபேறுமாம். பொருளெனப் பொது-படக் கூறவே அவற்றின் பகுதியாகிய ஐம்பெரும் பூதமும் அவற் றின் பகுதியாகிய இயங்குதிணையும், நிலைத்திணையும் பிறவும் பொருளாம்'

என்பது நச்சரின் உரை.

'எழுத்துஞ் சொல்லும் செய்யுளுக்கு இன்றியமையாத உறுப்புக்கள் ஆதலின் அவற்றை முறையே முன்னிரண்டு பகுதிகளாக வகுத்துக் கூறின தொல்காப்பியர் புலவர்க்குரிய பொருட்பகுதியை மூன்றும் படலமாக வகுத்தார். மக்கள் கருத்துக்களை விளங்க வெளிப்படுத்துங் கருவியனைத்தும் செய்யுளெனப்படும். செவ்விதாய வளப்பாடு அதாவது உளத்துறுங் கருத்தைக் கேட்போருளத்துறக் கூறுதற்குரிய சொற்றொடர்கள் எல்லாம் செய்யுளாகும். பாட்டே செய்யுளென்பது பிற்காலப் பிழைவழக்கு. உரை, பாட்டு, நூல், பிசி, குறிப்பு மொழி, மறைமொழி, பழமொழி எனப் பலவகையாலும் பலவேருருவிற்குள்ளே நின்று பொருள் பயப்பன யாவும் செய்யுளேயாம். செய்யுளெல்லாம் பொருள் பற்றியனவேயாகலானும், பொருள் ஒன்றே மக்கள் குறியாகலானும் அப்பொருள் பற்றியும் அப்பொருள் உரைக்குங் கருவியாகும் செய்யுள் பற்றியும், அவையிற்றுக் குறிப்பும், துணையுமாவன பற்றியும் கூறுவனவற்றின் தொகுதி தொல்காப்பியரின் பொருட்படலமாகும்'

என்பது நாவலர் சோமசுந்தர பாரதியாரின் உரைவிளக்கம்.

'நிறுத்த முறையினுனே பொருளினது இலக்கணம் உணர்த்தினமையின் இது பொருளதிகாரம் என்னும் பெயர்த்தாயிற்று. இது புலியின் வடிவம் பொறித்த கொடியைப் புலிக்கொடி என்றாற்போலக் குணியாகு பெயர்... ... ...

'பொருளாவன அகப்பொருளும் புறப்பொருளும் அவற்றின் பகுதியாகிய முதல் கரு உரிப்பொருள்களுமாம். அகம், புறம் என்பனவே அறம், பொருள், இன்பம் என வேறு வகையால் வழங்கப்படுதலின் அவையும் இவையேயாம். இன்பம் அகத்தினும் அறமும் பொருளும் புறத்தினும் அடங்கும். இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு (களா. 1) என ஆசிரியர் கூறுதல் காண்க.

'இனி இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள், காட்சிப் பொருள், கருத்துப் பொருள், உயர்திணைப் பொருள், அஃறிணைப் பொருள், பொதுப் பொருள், சிறப்புப்பொருள் முதலிய பொருட்கூறுபாடுகளெல்லாம் இவ்விரண்டனுள் அடங்குமென்க. எல்லாப் பொருளும் அடங்கும் என்பது குறித்தே பொருளதிகாரம் எனப் பெயர் வைத்தனர்.

என்பது புலவர் குழந்தை கூறும் விளக்கம்.

பொருளதிகாரம் கிளத்தும்பொருள், என்பது இன்னது என்பது குறித்து விளக்குவதில் ஒவ்வொரு உரையாசிரியரும் வேறு-படுகின்றனர். குழந்தை தரும் விளக்கம் இளம்பூரணர் உரையையும் நச்சினார்க்கினியரின் உரையையும் உள்ளடக்கி நிற்கிறது. ஆழ்ந்து நோக்கும்போது குழந்தை தரும் அகம் புறம் என்ற விளக்கத்தை இளம்பூரணரே கூறிப்போந்தமை புலனாகிறது.

> ' முதல்கரு உரிப்பொரு ளென்ற மூன்றே
> நுவலுங் காலை முறைசிறந் தனவே
> பாடலுட் பயின்றவை நாடுங் காலை'

என்ற அகத்திணையியல் நூற்பா உரையில்,

> ' இச்சூத்திரத்துட் பாடலுட் பயின்ற பொருள் மூன்று என ஓதி அவற்றுள் உரிப்பொருள் என ஒன்றை ஓதினமையால் புறப்-பொருளும் உரிப்பொருளாகியவாறு கண்டு கொள்க'[5]

என உரைப்பதால் இதனைத் தெளியலாம். சோமசுந்தர பாரதியாரின் பொருளதிகார விளக்கத்தில் பொருள் என்பது இன்னது என்ற விளக்கத்தையே காண முடியவில்லை.

ஒன்பதில் ஐந்து

முதல் ஐந்து இயல்களில் நான்கு இயல்கள் மட்டுமே அகம் கிளத்துவன. ஏனைய ஓர் இயல் புறம் புகல்வது. அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற அகம் கூறும் நான்கு இயல்-களுள் முதலும் முடிவும் அகவொழுக்கத்திற்கு உரிய பொதுவான இலக்கணங்களை உணர்த்தி நிற்கின்றன. களவியல் தலைமகன், தலைமகள் இருவர்தம் களவு வாழ்க்கையின் விளக்கம். களவுவழிப்-பட்ட தலைமகன், தலைமகள் இருவரும் ஊரறிய, நாடறிய, வதுவை-யயர்ந்து இல்லறம் நடாத்தும் பாங்கினைக் கற்பியல் விரிக்கின்றது. புறத்திணையியல் போர் பற்றி விளக்குவது. முதலில் அகவொழுக்-கத்தின் விளக்கங்களான அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் இவற்றை முன்னர்க் கண்டு, பின் புறம் புகலும் புறத்-திணையியல் பற்றிக் காண்போம்.

அகத்திணையியல்

அகத்திணையியல் காதல் ஒழுக்கத்திற்குப் பொதுவிலக்கணம் கூறுவதாகும்.

> ' ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற
> காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்திற்குப்

பின்னர் அவ்விருவரும் தத்தமக்குப் புலனாக
இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும்
உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர்
பொருள் ஆதலின் அதனை அகம் என்றார்'[6]

என நச்சினார்க்கினியர் அகம் என்பது இன்னது என விளக்குவர்.

'அகமாவது காதலர் உள்ளக்கிடக்கையும் அவர் காதல் கதிர்த்து
வினைப்பட்டு அன்னோர் மனை வாழ்க்கையிற் றொடர்புறுவது-மாகும்'[7]

எனச் சோமசுந்தர பாரதியார் அகத்திற்கு விளக்கம் தருகின்றார். இனி இவ்வகத்திணையியல் கூறும் பொதுச் செய்திகளைக் காண்போம்.

திணை ஏழு

அகத்திணையியல் முதல் நூற்பாவில் தொல்காப்பியனார் அகத்-திணை ஏழு என்று குறிப்பிடுகின்றார்.

'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப'[8]

என்பது அவர் காட்டும் நூற்பா.

கைக்கிளை என்பது தொடக்க நிலைக் காமமாகவும், ஒருபாற் காமமாகவும், சிறிய காமமாகவும் அமைவது. இக் கைக்கிளையினைப் பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்பர் இளம்பூரணர்.

ஐந்திணை, காமம் நுகர்தலுக்கு ஏற்ற பருவமுடைய தலைவன் தலைவி என்னும் இருபாலாரிடத்தும் தோன்றும் அளவொத்த காமம். தொல்காப்பியனாரால் மிகவும் செப்பமுடையதாக விரிவாகப் பேசப்-படுவது இக்காமமே. இக்காமத்தை அவர் 'மக்கள் நுதலிய அகனைந்-திணை', 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை' என்றெல்லாம் சிறப்பித்துக் கூறுகின்றார். இவ்வைந்திணைக் காமத்தின் பகுதியாகிய களவு, கற்பு என்னும் இரண்டும் தலைவன் தலைவி இருவருடைய அன்பின் பெருக்-கத்தாலே அமைவதாதலின் இறையனார் அகப் பொருள் ஆசிரியர்-

'களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர்
உள நிகழ் அன்பின் உயர்ச்சி மேன'[9]

என்று கூறுவர்.

பெருந்திணை என்பது மிக்க காமமாகவும் காமம் நுகர்தலுக்கு ஏலாத முதியோர் காமமாகவும், பெருந்தாக் காமமாகவும் அமைவது.

ஐந்திணைப் பொருள்கள்

எழுவகைத் திணையுள் கைக்கிளை, பெருந்திணை ஒழிந்த ஐந்திணைக் காமத்தையே தொல்காப்பியனார் விரிவாகப் பேசுகின்றார். ஐந்திணைகளுக்கு உரிய பொருள்கள் முதல், கரு, உரி என்பதை,

'முதல்கரு உரிப்பொரு ளென்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை'[10]

என்ற நூற்பாவில் நுவல்கின்றார்.

முதற்பொருள்

ஐந்திணைப் பொருள்களில் முதற் பொருள் நிலமும் பொழுதும் என இருவகைப்படும்.

'முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே'[11]

என்பது தொல்காப்பிய நூற்பா.

ஐந்திணை— நிலங்கள்

ஐந்து திணைகளில் நான்கு மட்டுமே நிலம் பெறும் என்று குறிக்கின்றார்.

'நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே'[12]

என்ற நூற்பாவும் இதனை உறுதிப்படுத்துகின்றது. நிலங்கள் பற்றிக் குறிக்கும் போது, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு திணைகள் மட்டுமே நிலம் பெறும் என்பதை,

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'[13]

என்ற நூற்பாவில் நவில்கின்றார். நிலங்கள் பற்றிக் கூறும் இந்நூற்பாவில்தான் திணைகளின் பெயரையும் அறிமுகப்படுத்துகின்றார். ஐந்தில் நான்கு மட்டுமே நிலம் பெறுவனவாதலின் நான்கு திணைகளின் பெயரை ஈண்டுக் கூறினார். எனில் ஏனைய ஒரு திணையின் பெயர் யாது? இத்திணையின் நடுவண் ஐந்திணை நடுவணது என்று-

தான் குறிக்கின்றாரே அன்றி அகத்திணையியலில் இதன் பெயரை யாண்டும் கூறவில்லை. காலம் பற்றிக் கூறும் நூற்பாவில் கூட 'நடுவு நிலைத்திணை' என்றே குறிக்கின்றாரே ஒழிய இத்திணையின் பெயரை அங்கும் குறிக்கவில்லை. எனில் நடுவுநிலைத்திணை 'பாலை' என்ற வழக்காறு எவ்வாறு வந்தது? தொல்காப்பியனார் 'பாலை' என்ற பெயரையே சுட்டவில்லையா? உரையாசிரியர்களால் ஏற்பட்ட வழக்காறு? என்ற ஐயங்கள் அகத்திணையியலைப் பயில்வோர்க்குத் தோன்றுதல் இயல்பே. இந்த ஐயங்களை அறுக்கின்ற வகையில் தொல்காப்பியனாரின்,

'வாகை தானே பாலையது புறனே'

என்ற புறத்திணையியல் நூற்பா திகழ்கிறது. இந்நூற்பாவில்தான் பாலை என்ற சொல்லாட்சியினை முதன்முதலில் காணுகின்றோம். நடுவண் ஐந்திணை நடுவணது பாலை என்பதை உய்த்துணர வேண்டிய நிலையிலேயே தொல்காப்பியனார் அமைக்கின்றார்.

'வெட்சி தானே குறிஞ்சியது புறனே'[15]

'வஞ்சி தானே முல்லையது புறனே'[16]

'உழிஞை தானே மருதத்துப் புறனே'[17]

'தும்பை தானே நெய்தலது புறனே'[18]

'வாகை தானே பாலையது புறனே'[19]

'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே'[20]

'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே'[21]

என்ற புறத்திணையியல் நூற்பாப் பகுதிகள் அகத்திணை ஏழனுக்குப் புறனான புறத்திணை ஏழனை உணர்த்தி நிற்கின்றன. இவற்றுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பெருந்திணை, கைக்கிளை என்ற ஆறு அகத்திணைகளின் பெயர்களை அகத்திணையியலிலேயே அறிகின்றோம். எஞ்சி நிற்பது பாலைத்திணை ஒன்றே. எனவே தொல்காப்பியனார் அகத்திணையியலில் குறிப்பிடும் 'நடுவண் ஐந்திணை நடுவணது' ஆகிய 'நடுவுநிலைத்திணை' இப்பாலைத்திணையே ஆதல் வேண்டும்.

'குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம்
நெய்த லைந்திணைக் கெய்திய பெயரே'[22]

என ஐந்திணைக்குரிய பெயர்களை நாற்கவிராச நம்பியார் தொகுத்துக் கூறுதல் போன்று தொல்காப்பியனார் ஐந்திணைப் பெயர்களை யாண்டும் தொகுத்துக் கூறவில்லை உய்த்துணரும்படியே அமைக்கின்றார்.

காலம்

நிலம் பற்றிக் கூறியவர் மற்றொரு முதற்பொருளான காலத்தை ஏழு நூற்பாக்களில் கூறுகின்றார்.[23] காரும் மாலையும் முல்லைத்திணைக்கு உரியன. கூதிர்காலமும் யாமம், முன்பனியும் குறிஞ்சித்திணைக்கு உரியன. வைகறையும், விடியலும் மருதத்திணைக்குரிய பொழுதுகள். எற்படுபொழுது நெய்தல் திணைக்கு உரியது. நண்பகல் வேனில் என்பன நடுவுநிலைத் திணைக்கு - பாலைத்திணைக்கு உரியன.

திணை மயக்கம்

'திணைமயக் குறுதலும் கடிநிலை யிலவே
நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப
புலனன் குணர்ந்த புலமை யோரே'[24]

'உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே'[25]

'எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்'[26]

என்ற தொல்காப்பிய நூற்பாக்கள் திணைமயக்கம் பற்றிப்பேசுகின்றன இந்நூற்பாக்களுக்கு உரை வகுக்கும் உரையாசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் உரைகூறிச் செல்கின்றனர். திணைமயக்கம் என்பதில் திணை என்பதற்கு ஒழுக்கம் எனப்பொருள் கொண்டு 'திணைமயக்குறுதலும் கடிநிலையிலவே' என்ற நூற்பாவின் மூலம் உரிப்பொருள் மயக்கம் கூறப்பட்டது என்பர் நச்சர். இளம்பூரணர் இந்நூற்பா முதற்பொருள் மயக்கம் பற்றிப் புகல்கிறது எனப்புகல்வர். 'எவ்வொழுக்கம் எங்கு நிகழினும் நிலத்தியல் மாறாது. காடு புணர்ச்சி நிகழ்வதால் குறிஞ்சி ஆகாது. முல்லை நிலமேயாகும். பிரிவாற்றாக் குறமகளிர் இரங்குவதால் மலைநிலம் நெய்தல் ஆகாது. குறிஞ்சியேயாம்' எனப் பாரதியும் இந்நூற்பா உரிப்பொருள் மயக்கமே கூறிற்று என்பர்.

முதல் இரண்டு நூற்பாக்களை இணைத்து நோக்கும்போது உரிப்பொருள் மயங்கும் என்ற கருத்து தொல்காப்பியனாரின் கருத்துக்கு முரண்பட்ட ஒன்று என்பது தெளிவாகிறது.

'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே'

என்ற நூற்பா உரிப்பொருள் மயங்காது என்பதைத் திட்டவட்டமாகக் குறிக்கின்றது. இவ்வாறு இருக்க நச்சர் முதலிய உரையாசிரியர்கள் உரிப்பொருள் மயக்கம் கூறுவது 14ஆம் நூற்பா எனக் கூறுவது பொருத்தமற்றதாகத் தோன்றுகிறது.

உரிப்பொருள் அல்லன என்பதற்குக் கருப்பொருள் முதற்பொருள் என்றுரைப்பர் இளம்பூரணர். நச்சர், குழந்தை, அருணாசலம் பிள்ளை ஆகியோர் கைக்கிளை பெருந்திணை எனறனர். கொண்டுதலைக் கழிதல், கலந்த பொழுது எனப் பொருள் கூறுவர் சோமசுந்தரபாரதியார். 14ஆம் நூற்பாவில் முதற்பொருள் மயக்கத்தையும், எந்நில மருங்கில் என்ற நூற்பாவில் கருப்பொருள் மயக்கத்தையும் கூறியவர் மீண்டும் கூறியது கூறலாக உரிப்பொருள் அல்லாத முதற்பொருளையும், கருப்பொருளையும் சுட்டுதல் வேண்டா என்று கருதிய பாரதி புதுப்பொருள் நாடினர். எனினும் அவர் கூறும் முடிவு பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. சோமசுந்தரபாரதியாரின் கருத்துப்படி தொல்காப்பியனார் கூறியது கூறல் குற்றத்திற்கு ஆட்படவில்லை. அவர்தம் கருத்தைத் தெளிவாகவே கூறுகின்றார்.

தொல்காப்பியனார் தொகுத்துக் கூறிப் பின்னர் வகுத்துக்கூறும் உத்தியைக் கையாளும் இயல்பினர் என்பதற்கு அவர் நூலினுள்ளே பல சான்றுகள் விரவிக் கிடக்கின்றன. இவ்வாறே,

'திணைமயக் குறுதலும் கடிநிலை யிலவே
நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப
புலனன் குணர்ந்த புலமை யோரே'

என்ற நூற்பாவில் முதல் அடியில் திணைமயக்கத்தைக் தொகுத்துக் கூறிப் பின் தொடர்ந்து வரும் அடியில் நிலன் மயங்காது என்று கூறுகின்றார் எனக் கொள்ளலாம் இனி,

'எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்'

என்ற நூற்பாவில் வாராவாயினும் என்றதனுல் வரும் எனக் கருப்பொருள் மயக்கம் கூறுகின்றார்.

'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே'

என்ற நூற்பாலில் உரிப்பொருள் மயங்காது என்கின்றார். எனின் எஞ்சி நிற்பது காலம் மட்டுமே. எனவே உரிப்பொருள் அல்லன என இவண் தொல்காப்பியர் குறிப்பது காலத்தை மட்டுமே. இவ்வாறு கொண்டால் தொல்காப்பியனார் எந்த நிலையிலும் கூறியது கூறல் குற்றத்திற்கு ஆட்படவில்லை என வரையறுத்துக் கூறலாம்.

இருவகைப் பிரிவு

> ' இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்
> உரிய தாகும் என்மனூர் புலவர்'[27]

என்ற ஒரு நூற்பா அகத்திணையியலில் காணப்படுகின்றது. இவ்விருவகைப் பிரிவுகள் இன்னின்ன என்பதைத் தொல்காப்பியனூர் குறிக்கவில்லை. இளம்பூரணர் 'தலைமகளைப் பிரிதலும் தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதலும்' என்ற இரண்டைக் குறிப்பிடுவர். நச்சினூர்க்கினியர் காலிற் பிரிவு, கலத்திற் பிரிவு என்ற இரண்டைக் குறிப்பர். நாவலர் சோமசுந்தர பாரதியார் வேனிற் பிரிவு, பின்பனிப் பிரிவு என்ற இரண்டைக் கருதுவர். இருவகைப் பிரிவு என்ன என்பதைத் தொல்காப்பியனூர்வழி அறிய இயலாத நிலைமையும் இந்நூற்பா அமைப்பையும் நோக்கும்போது இந்நூற்பா இடம் பிறழ்ந்துள்ளதோ என்ற ஐயம் ஏற்படுகின்றது.

இங்ஙனம் இன்னேரன்ன பிறசெய்திகள் பலவும் கற்றுத் தெளியவேண்டும் கடப்பாட்டிற்குரியன.

அடிக்குறிப்புகள்

1. மு இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, பக்.3.
2. இறையனுரகரகப்பொருள் உரை, பக்.7.
3. ந. முருகவேள், இலக்கணத்திற் கற்பனைகள்.
4. மு. இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, பக்.4.
5. தொல். பொருள். இளம், அகத். உரை, பக். 8.
6. தொல். பொருள். நச். அகத். உரை, பக். 3.
7. நாவலர் சோமசுந்தர பாரதியார், தொல்காப்பியர் பொருட் படலம், பக்.2.
8. தொல். பொருள். இளம். அகத். நூற். 1.
9. இறையனூர் அகப்பொருள், சூத். 60.
10. தொல். பொருள். இளம். அகத். நூற். 8.
11. தொல். பொருள். இளம். அகத். நூற். 4.
12. தொல். பொருள். இளம் அகத். நூற். 2.

13. தொல் பொருள். இளம். அகத். நூற். 5.
14. தொல். பொருள். புறத். நூற். 73.
15. தொல். பொருள். புறத். நூற். 59.
16. தொல். பொருள். புறத். நூற். 64
17. தொல். பொருள். புறத். நூற். 66
81. தொல். பொருள். புறத். நூற் 70
19. தொல். பொருள். புறத். நூற். 73.
20 தொல். பொருள். புறத். நூற் 76.
21. தொல். பொருள். புறத். நூற். 78.
22. தொல். பொருள். நூற். 6.
23. தொல். பொருள். இளம். அகத். நூற். 6,7,8, 9,10, 11, 12.
24. தொல். பொருள். இளம். அகத். நூற். 14.
25. தொல். பொருள். இளம். அகத். நூற். 15.
26. தொல். பொருள். இளம். அகத். நூற். 21.
27. தொல். பொருள். இளம். அகத். நூற். 13.

பழம் பணியும் புதுப் பணியும்

அறிஞர் ம. ரா. போ. குருசாமி,
எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர்,
பூ. சா. கோ. கலைக்கல்லூரி,
கோயமுத்தூர்.

'தமிழினைப் போல் இனிமைமொழி தாரணியில் இல்லை இந்நாள்
தமிழரைப் போல் தாய்க்கொலையில் தலைசிறந்தார் எவருளரே'

எனத் தமிழ் முனிவர் திரு. வி. க. வேதனையால் குமுறினர். தாய்மொழிப் புறக்கணிப்புக்குத் தமிழரைப் போல் மடிதற்று முந்துறுவோர் இனிமேல்தான் தோன்ற வேண்டும். 'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின் பெரிதே' என்று அமைந்த அறிவுரை மொழிப் புறக்கணிப்புக்கும் பொருந்துவதே யாகும். 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்' என்ற குரலுக்கு இன்றுமட்டுமன்று–இக்குரல் போல் முன்னம் எழுந்த நல்லுணர்ச்சியலைகட்கும் தொன்று தொட்டே இடம் தாராத வன்னெஞ்சர்களைப் பெற்றுப் பேணி வளர்த்தது இந்தத் தமிழ் மண். 'பழம்பணி புதுக்கியும் புதுப் பணி குயிற்றியும்' தமிழன்னைக்குத் தொண்டு செய்தோர் மிக மிகச் சிலர்; அச் சிலரின் பணிகளும் புறக்கணித்து ஒதுக்கப்பட்டதே இவ்–வினத்தின் வரலாறு ...... பழம் பணி புதுக்கிய ஐயரவர்கள் பதிப்புக்கள் பற்றி இன்று நினைவார் எத்துணைப் பேர்! அவ்வகையில் பழந்தமிழ் யாழினை உருவாக்கினரே விபுலானந்த அடிகளார் .. ... அவர் அரிதின் முயன்று உருவாக்கிய யாழ்க் கருவிகளையேனும் சிதையா வண்ணம் சேமப் படுத்தியது உண்டா? நடைபெறும் புதுப்பணிகள் இன்னின்ன என்று விரல்விடத் தொடங்கினல் இரண்டாம் கையின் விரல்களுக்கு வேலை உண்டா?...

இந்த அவலப் பின்னணியிலே தொல்காப்பியக் கருத்தரங்கின் முன் நிற்கிறேன்.

உயிர்மெய்யாகுமிடத்து மெய்யின் தடிப்பே முன்னின்று ஒலிக்கும்; ஆயின் உயிர்மெய்யின் தரம் (அளவு) உயிரைப் பொறுத்தது... ... இவ்வகையில் எண்ணத் தொடங்கின் இலக்கணத்தில் மெய்ப்பொருள் சுட்ட முயன்ற தெல்லோர் திறம் துலங்கும்.

வடமொழி வாணர்கள் 'சிட்சை' என ஒரு வேதப் பிரிவினை நுவல்வர். வேத ஒலிகளை-மறையோசைகளை விளக்குவது அப்பிரிவு. பாரத நாட்டில் ஆன்மிகம் சுட்டாத முயற்சி எதுவும் இல்லை என்றும் குறிப்பாக இலக்கண நூல்கள் ஆன்மிகம் சுட்டுவனவே என்றும் கூறுவர். (இராமகிருஷ்ண பரம ஹம்சரின் நூற்றுண்டு விழாக் குறித்து வெளிவந்த Cultural Heritage of India காண்க.)

தமிழரும் இந்நெறி .கொண்டோரே யாவர். இலக்கணச் சொற்கள் மட்டுமன்றி இலக்கண அடிப்படையுமே ஆன்மிகம் என்று ஆராய்வதற்குத் தொல்காப்பியம் இடம் அளிக்கின்றது.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மந்திர ஓசைகளாம் மறைமொழிகளைத் தன்னகத்தே கொண்டது தொல்காப்பியம் எனத் தக்கார் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

எழுத்திலக்கணம் கூற வந்த தொல்காப்பியர்,

'எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்
சிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து
அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபின் கோடல் அந்தணர் மறைத்தே'

எனவும்,

'அஃதிவண் நுவலாது எழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளிஇசை அளபு நுவன் றிசினே'

எனவும் புறனடை நூற்பாக்களில் புகன்றுள்ளார்,

'அகத்தெழு வளி இசை' யாதென நாம் நாடி ஆராய்ந்தோமா? மெய்தெரி வளி இசையாம் ஓசைகளையேனும் முற்ற ஆராய்ந்தோமா? ஒரே வளி இசை அகத்தெழுமாயின் அந்தணர் மறைக்கண்ணதாகவும், புறத்திசைக்கும் தன்மைத்தாயின் எழுத்திலக்கத்தின்கண்ணதாகவும் சுட்டுகின்றுர் தொல்காப்பியர். இந்த மறைமொழிப் பொதுநாதம் எது? எண்ணிப்பார்க்க இனியேனும் முயலவேண்டும் என்பது என் வேண்டுகோள்.

தொல்காப்பிய இயல் அமைப்புப் பற்றியும் நுவல்பொருள் பற்றியும்கூட இன்னும் நாம் முழுமுயற்சி கொண்ட ஆய்வுகளில் ஈடுபடவில்லை என்றே கருதுகிறேன்.

அகப்பொருள் பற்றிய விதிகளையெல்லாம் தொடர்புபட அவ்வவற்றுக்குரிய இயல்களில் மட்டுமே தொல்காப்பியர் தெரிவித்துள்ளார் என்று கொள்ள முடியவில்லை. எடுத்துக்காட்டாகத் தலைவன், தலைவி முதலாயினோர் கூற்றுக்களைப் பற்றிய நூற்பாக்களைப் பார்க்கவேண்டுகிறேன்.

தொல்காப்பியத்தில் 'புறனடை' நூற்பாக்களைப் பற்றியும் எண்ணிப்பார்க்கஇடம் உள்ளது. சிலஇயல்களின் இறுதியில் புறனடை கூறுகின்றார்; பலஇயல்களிலே புறனடை இல்லை. கூறியது ஏன் கூறவிடுத்தது ஏன்? எழுத்ததிகார இறுதியிலும் சொல்லதிகார இறுதியிலும் புறனடைச் சூத்திரங்கள் வகுத்த தொல்காப்பியர் பொருளதிகார இறுதியிலே அதிகாரத்துக்கோ நூலுக்கோ புறனடைச் சூத்திரம் வகுத்திருக்க வேண்டுமே? வகுத்திருக்கின்றாரா? ஆம் என்றால், எப்படி? இல்லை என்றால் ஏன் வகுக்கவில்லை?

இன்றைய கருத்தரங்கின் ஆய்வுக்கு வருவன சிலவற்றை ஒருவகையில் சுட்டியும், இவற்றின் மேலும் ஆராய்தற்குரிய களன் விரிந்து, கிடக்கிறது என்பதைச் சற்று விரித்தும் கூறினேன்.

செயல்வழித் தொண்டர்களாகச் செந்தமிழ் சிறக்க — செந்தமிழ்த் திறம் சிறக்க — செம்பொருள் நலம் சிறக்க முயல்வோமாக!

தொல்காப்பியப் பொருளதிகாரம்

அறிஞர் முத்துச்சண்முகன்,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழியல் துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை.

தமிழில், ஏன் உலக மொழிகளில் உள்ள மிகப் பழமையான நூல்களில் ஒன்று தொல்காப்பியம். ஆசிரியர் பெயரால் நூல்கள் பெயர் பெறுவதும் ஒரு அதிசய வழக்குதான். மற்ற மொழிகளில் இத்தகைய வழக்கு மிக அருமையே. தமிழிலோ மிகச் சாதாரண ஒரு மரபு இது. தொல்காப்பியம் என்பது தொல்காப்பியர் உருவாக்கிய கோட்பாடுகளுக்குப் பெயராயிற்று, மார்க்கீசம், காந்தீயம், பெரியாரிசம் போல. ஆனால் இவர்களெல்லாம் அரசியல்வாதிகள். அவர்கள் உருவாக்கிய அரசியல், சமுதாயக் கோட்பாடுகளுக்கு அவர்களுடைய பெயர் உரியதாயிற்று. இது அண்மைக்காலப் போக்கு. ஆனால் ஒருவன் உருவாக்கிய இலக்கிய இலக்கண மரபுகளுக்கு அவன் பெயரே வழங்குவது ஒரு பழங்கால இந்திய மரபு. இம்மரபினைப் பின் பற்றியே நமது துணை வேந்தர் அவர்களும் 'வள்ளுவம்' என்று நூல் எழுதினர். ஆனால் இளங்கோவியம், கம்பம் என்றும் நூல்கள் வரவில்லை. தொல்காப்பியம், நேமிநாதம், வள்ளுவம் என்பது தமிழ் மரபு.

தொல்காப்பியர், தமிழ் மொழிக்கும் அக்காலத் தமிழ் இலக்கியத்திற்கும் இலக்கணம் கூறினர். எழுத்தும், சொல்லும் மொழியைப் பற்றியன பொருள் தமிழ் இலக்கியத்தைப் பற்றியது. இதுவும் ஒரு புதுமை - இலக்கியத்திற்கு இலக்கணம் எழுதியது. அந்தக் காலத்திலேயே, உலகிலேயே அவ்வளவு பழங்காலத்தில், இலக்கியத்திற்கு

இலக்கணம் கண்டவர்கள் இருவர்- தொல்காப்பியரும் அரிஸ்டாட்டி-லும். அரிஸ்டாட்டிலைப் பற்றி உலகெலாம் தெரியும். தொல்காப்-பியரைப் பற்றி? தமிழனாகப் பிறந்ததன் பாவம் அது. தொல்காப்-பியரைக் குறைகூற முடியுமா? தமிழ் மக்களைத்தான் குறைகூற வேண்டும். தொல்காப்பியரை-அவர் எழுதிய இலக்கணக்கோட்பாடு-களை- இலக்கியக் கோட்பாடுகளை உலகிற்கு அறிமுகப் படுத்த இந் நாள்வரை தவறிவிட்டோம். இப்பொழுதுதான் சிறிதுசிறிதாக அவரைப் பற்றி உலகெலாம் தெரிய வருகிறது; அதுவும் இக்கால-மொழியியலார் பலர் தமிழில் உருவாகியதால்.

இதற்குரிய காரணங்கள் இரண்டு, தொல்காப்பியம் பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்படாமை ஒன்று. தொல்காப்பியருக்கு மேல் சிந்திக்க மறுத்தமை மற்றொன்று. சிந்திப்பதோ, தொல்காப்-பியத்தைப் புதிய முறையில் விளக்குவதோ மாறுபட்ட கருத்துக்களைக் கூறுவதோ பாவம் என்று கருதித் தொல்காப்பியத்தை இருட்டடிப்புச் செய்துவிட்டோம்.

தொல்காப்பியர் தான் கண்ட முடிவுகளைக், கோட்பாடுகளைக் கூறுகிறார். அந்த முடிவுக்கு, கோட்பாடுகளுக்கு எப்படி வந்தார் என்ற முறையை அவர் விளக்கவில்லை. இப்பொழுது இத்தகைய இலக்கணங்கள் எழுதுவதென்றால் முடிவுகளை மட்டும் கூறினால் போதாது. அந்த முடிவுகளுக்கு எப்படி வந்தோம் என்றும் கூற வேண்டும். அவர் காலத்து வழங்கிய தமிழ் செய்யுட்களைச் சேகரித்து, வகைப்படுத்திக் கொள்கிறார். செய்யுட்கள் கூறும் செய்திகளை எல்லாம் வகைப்படுத்துகிறார். தற்காலத்தில் ஆராய்ச்சியில் Content analysis என்பார்கள். அதைத் தானே பொருள் அதிகாரத்தில் பல பகுதிகளில் கூறுகிறார்.

பிற்காலத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என இலக்கணத்தை ஐந்தாகப் பிரிப்பர். பின்னைய மூன்றும் தொல்-காப்பியருக்குப் பொருளாகும். யாப்பும் அணியும் — செய்யுளியலும், உவமவியலும்,தொல்காப்பியருக்குப் பொருளின் கூறே.பிற்கால இலக்-கணத்தார், எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் எழுதுவார்; ஆனால் யாப்பு, அணிகளுக்கு எழுதமாட்டார். யாப்பிற்கு எழுது வார்; வேறு எதற்கும் எழுதமாட்டார். புறத்திற்கு எழுதுவார். அகத்-திற்கு எழுதமாட்டார். அகத்திற்கு எழுதுவார், புறத்திற்கு எழுத-மாட்டார். இல்லையானால் ஒன்றற்கு எழுதிவிட்டு மற்றவற்றைத்

தொட்டுச் செல்வர். தொல்காப்பியர் ஒருவர்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அனைத்திற்கும் விரிவாக இலக்கணம் எழுதினர்.

பாக்களின் பொருளை அகம் புறமெனக் கண்டார். புறத்தை-விட அகத்தைப் பற்றியே அதிகம் கூறுகிருர். சங்கப் பாக்களிலும் அகப்பாக்கள் தானே மிகுதி. பாக்களின் பொருளை அடிப்படையாகக் கொண்டு அகப் பாக்கள், புறப்பாக்கள் எனப்பிரித்து, அகப்பாக்களில் கூறப்படும் முதல்,கரு, உரிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை எனப் பிரிக்கின்ருர். இந்த ஐந்திணைப் பாகுபாடு குறிஞ்சியில் தோன்றிய மனித நாகரிகம் மருதத்திலும் நெய்தலிலும் வளர்ந்து முதிர்ந்த வளர்ச்சியைக் காட்டுகிறது. ஒவ்வொன்றிலும் மக்கள் செய்கின்ற தொழிலைக் கண்டார். அங்கு வாழ்கின்ற மரஞ்செடி கொடிகளைக் கண்டார். அகவாழ்வின் நுட்பங்களைக் கண்டு வகைப்படுத்தினர். இலக்கிய ஆய்வென்ருல், இத்தகைய செய்திகளை மட்டும் கூறினுல் போதுமா? பாவினை வகைப்படுத்திச் செய்யுளியலை எழுதினர். கூறும் முறையை வகைப்படுத்தி அணியியலுக்கு அடிப்படையாக உவம வியலை எழுதினர். இவ்வளவு விரிவாக அந்தக் காலத்தில் உலகில் எங்காவது இலக்கிய ஆய்வு நிகழ்ந்திருக்குமா என்பது ஐயப்பாடே. இல்லை என்றே கூறலாம். எனினும் உலகம் இன்னும் தொல்-காப்பியரைத் தெரிந்துகொள்ளவில்லை. தமிழனுய்ப் பிறந்துவிட்ட பாவந்தான்.

ஆசிரியர் பெயர் அகர நிரல்

அகத்தியர் — 255

அரிஸ்டாடில் — 18; 278.

அருணசலம், ப. — 142

அருணசலம் பிள்ளை, மு. — 259; 267;

அறவாணன், க. ப. — 41

ஆண்டியப்பன், தே.—60; 112; 115; 124; 142; 151; 154; 156.

ஆளுடைய பிள்ளையார் — 51

இராகவையங்கார், மு.—75; 109; 113; 117; 124; 142; 259; 268.

இராமச்சந்திரன், பி. வி. 203; 223

இலக்குவனர், சி. 117; 126.

இளங்கோவடிகள் — 50; 115; 131.

இளம்பூரணர் (பூரணர்) — 29 மு.33; 34; 36; 45; 77; 85; 89; 108 மு. 111; 113 மு. 115; 117; 121 மு. 123; 132 மு. 134; 138; 151; 152; 154; 155; 162; 172; 179; 182 மு. 184; 186; 188; 195; 211; 212; 229; 230; 235; 258; 259; 260; 262; 263; 266; 267; 268.

இறையனர் — 169; 263.

இறையனர் களவியலுரைகாரர் —195; 257.

உமார் கய்யாம் — 151

எயினந்தை மகனர் இளங்கீரனர் — 235

ஐயனரிதனர் (வெண்பா மாலையார்) — 59 மு. 71; 107; 109; 113; 118; 120; 122; 127; 135; 136; 151; 155.

ஔவையார் — 237

ஃபிரேசர் — 126

கபிலர் — 178; 186

கல்லாடனர் — 228

கலிவர் — 166

காக்கை பாடினியார் — 255

காட்டுலசு — 54

குடவாயிற் கீரத்தனர் — 53

குமரகுருபரன்பிள்ளை — 58

குழந்தை (புலவர்) — 117; 156; 259; 261; 262; 267.

குன்றம் பூதனர் — 182

சங்கயாப் புடையார் — 31

சத்திமுற்றப் புலவர் — 53; 58

சம்பந்தர் — 58

சாம்பசிவனர், ச. — 57; 58.

சாமிநாதையர், உ. வே.(உ. வே. சா.) ஐயரவர்கள்—49; 57; 58; 61; 231; 239; 271.

சுந்தரமூர்த்தி, ஜி. — 166; 167; 273.

சுந்தரர் — 140

சுப்பிரமணிய பாரதியார் (பாரதியார்)—53;58.

சுப்பிரமணிய பிள்ளை, கா. (கா. சு. பிள்ளை) 111; 140; 142; 192.

சுப்பிரமணியம், ச. வே., — 58

செயராமன்,, நா., — 114, 117; 141; 142; 152; 156.

சோமசுந்தர பாரதியார் (பாரதியார்) —36; 60; 109 மு. 112; 114; 117; 124; 174; 175; 259; 261; 262; 263;267; 268

சோம சுந்தரனர், பொ. வே.-71.

தண்டியாசிரியர் — 19

தமிழண்ணல் (இராம. பெரிய கருப்பன்) 54; 58; 161; 181.

திருச்சிற்றம்பலக் கோவையார் - 148

திருப்பாற்கடனுதன் கவிராயர் — 58

திரு. வி. க., — 271
தும்பிசேர்கீரனுர் — 49
துரைசாமி, ஔவை — 123.
துரையரங்கசாமி (துரையரங்கனுர்) — 117; 124; 190; 202.
தொல்காப்பியர் (காப்பியர்)—17 மு. 20; 22 மு. 27; 38; 40; 43; 44; 52; 55; 56; 59 மு. 71; 73 மு. 76; 82; 84; 85; 87 மு. 93; 107; 108; 110 மு. 113; 115; 116; 118; 120 மு.122; 125; 127; 129 மு.140; 143; 144; 149; 150; 152; 153, 157 மு. 160; 162; 164; 165; 167; 170; 175; 179 மு. 186; 188; 192; 194; 195; 197; 201; 203; 206; 208 மு. 211; 213; 216; 222; 225; 226; 234; 248; 251: 254; 257; 258; 261; 263 மு. 268; 272; 273; 275; 277; 278; 279.
நக்கண்ணையார் — 139; 177.
நச்சினுர்க்கினியர் (இனியர்) — 30 மு. 34; 36: 80; 85; 89; 108 மு. 112; 114மு. 117; 122; 123; 132மு. 134; 137; 152 மு. 155; 162; 163; 165; 166; 170; 172;173; 177; 182; 187; 193 மு. 195; 197; 210; 211; 217; 226, 227; 230; 231; 258; 259; 260; 262; 263; 266; 267; 268.
நட்டத்தனுர் — 255
நம்மாழ்வார் — 51; 58; 142.
நல்லந்துவனுர் — 47
நாகசாமி — 128
நாற்கவிராச நம்பி (நம்பி)—52; 88 மு. 92; 137; 144; 146 மு. 148; 209; 214; 218; 265.
பரணர் — 235
பவணந்தி — 255
பழனியப்பன், வெ. 142
பனியன் — 166
பாசியம், ஏ. எல். — 126
பாலை பாடிய பெருங்கடுங்கோ- 238
பாஸ்டர், இ. எம்., — 219;220.
புருஷோத்தம நாயுடு - 142
பெருஞ்சித்திரனுர் — 236; 237.
பெருமாள், ஏ. என்., — 111.
பேராசிரியர் 31; 258;259;260.
பொன்முடியார் — 177
மணிவாசகர் — 255
மணிவேல், மு. — 142
மாங்குடி மருதனுர் — 150
மாணிக்கம், வ. சுப. —76;142; 193; 194; 197; 201; 235; 239.
மாயேசுரர் — 255
மீனுட்சிசுந்தரம்,கா.—222;223.
மீனுட்சிசுந்தரனுர், தெ. பொ. (தெ. பொ. மீ.) — 272
முத்துச்சாமி, வீ. — 126.
முருகவேள், ந. — 268
மெலீகர் — 54
யாப்பருங்கல ஆசிரியர் - 31
வரதராசனுர்,மு. (மு. வ.) —43; 57; 162; 273.
வள்ளுவர் (முதற்பாவலர்) — 43; 80; 150; 247; 273.
விபுலானந்த அடிகளார் — 271.
வீரமா முனிவர்(முனிவர்)—251; 254; 255.
வெள்ளிவீதியார் — 48; 139
வெள்ளைவாரணம், க., — 80; 117; 142; 153; 156; 260.
வேங்கடசாமி நாட்டார்,ந,மு - 239
வேங்கடாசலம் பிள்ளை — 239.
வையாபுரிப் பிள்ளை — 57; 58
Abram, M. H. — 223
Gloria Sundaramathy.L.—256
Hirsh, E. D. — 36
Meenakshisundaran, T. P.— 158, 163
Shaw Harry — 223
Sundaramoorthy, G. — 163; 166; 167

பொதிகை மணம்

- பல்கலைக் கழகம் உயர்ந்த கலை பலவற்றைக் கற்பிப்பதோடன்றி, கலைக் கூர்மைகளைக் காட்டவல்ல பல்லாய்வுக் கழகமாகவும் இலங்க வேண்டும். இதனை மனத்துட் கொண்ட மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் அஞ்சல்வழிக் கல்வித் தமிழ்த் துறையினர் ஆய்வு மணம் பொதிந்த பொதிகை மலர்களை வெளியிட்டு வருகின்றனர்.

- பல்வேறு மையங்களைப் பாடஞ்சொல்லும் மையங்களாகவே விட்டுவிடாமல் அரங்கு மையங்களாகவும் பயன்படுத்திக் கொள்ளும் புலமை சான்ற எம் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை மாந்தர்களைப் போற்றுவல்.

- 'பொதியிலாயினும் ஒடுக்கங்கூறார்' என்ற இளங்கோவடிகளின் பொய்யா மொழி தொடர்ந்து வரும் இப்பொதிகை மலர்களால் இன்றும் தொய்யா மொழியாகின்றதன்றோ?

—துணைவேந்தர் வ. சுப. மாணிக்கம்

பொதிகை
தமிழ்த் துறை வெளியீடு

அஞ்சல்வழி, தொடர்கல்வித் துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.